உ

சிவமயம்.

9

# சோதிடகிரக சிந்தாமணி

என்னும் பெரிய

# வருஷாதி நூல்.

இஃது

விருதுபட்டி ஸ்ரீமான்

இராமலிங்கக்குருக்களவர்களால்

சுத்தபாடமாகத்திருத்திய பிரிதிக்கிணங்க



தக்கோலம்

இராமசாமி நாயுடு & சன்ஸ்

அவர்களாற்றமது

சென்னை சூளை,

ஸ்ரீலட்சுமி நாராயண விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1917

கடவுள் துணை.

# முகவுரை.

இப்பரதகண்டத்தின்கண் ருக்கு - யஜுர் சாமம் அதர்வணம் என்னும் நான்குவேதங்களினும் முதன்மையாகிய ருக்கு வேதத்தின்சாரமான சோதிடசாஸ்திரத்தை எவர்களும்எளிதிலுணருதற்குச்சுலபமான அறிகுறி போன்ற பெரிய வருஷாதிநூல் என்னும் சோதிடகிரக சிந்தாமணி யாகிய இந்நூலை முன் அநேகர்கள் அச்சிட்டதில் எழுத்துக்களும், சொற்களும், பாக்களும், விஷயங்களும், எண்களும், பிறழ்ந்தும்-திரிந்தும் - மிகுந்தும் - குறைந்தும்வேறுபட்டிருந்ததால், இதைச் சுத்தபாடமாக அச்சிடவேண்டுமென்று அநேக சோதிடநண்பர்கள் விரும்பிய வண்ணம்.

விருதுபட்டி-பாலப்பாவென்றும்
இராமலிங்க சுவாமிகளென்றும்
வழங்குகின்ற

## ஸ்ரீமான்-இராமலிங்கக் குருக்கள்

அவர்களால்

சுத்தபாடமாகத்திருத்திசர்வஜநோபகாரமாகும்படி சொற்பக்கிரயம் ஏற்படுகிறது.

# கமலா கூந்தல் தைலம்.

இந்த சிங்காரமான 'கமலாகூந்தல் தைலம் எல்லா கூந்தல் தைலங்களையும் விட அதிசயிக்கக்கூடிய வாசனை கொடுக்கக் கூடியது;

மற்ற இதரமான தைலங்கள் இதற்கு சமானமானவையல்ல

இதில் கூடியிருக்கும் மூலிகைகள் உயர்ந்த குணங்களை கொடுக்கக் கூடியவை அந்த பலன்கள் விசேஷித்து எடுத்து சொல்லப்படாதது. இது வழுக்கையான தலை, சுண்டு, பால கரை, மயிர் உதிர்ந்து விழுதல், இன்னும் தலையிலுண்டாகும் இதர வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம். இது உபயோகிப்ப தால் தலைமயிர் கால்களுக்கு போஷணையாகின்றது.

இதை சதா உபயோகிப்பதால் புத்தியை விசாலப்படுத்தி கண்பார்வையை அதிகப்படுத்தி தலைமயிர் மிருதுவாயும், கரு ப்பு பட்டுக் கொப்பாகவும், தலைமயிர் விருத்தி யடைகின்றது, ஒரு புட்டியை உபயோகப்படுத்தினல் இதனுடைய அற்புத மான குணங்களை நம்பும்படி செய்யும். விலை அணு 12

# ராயல் போமேட்.

இது எரிச்சலுக்கும், வெடிப்புள்ள பாகத்திற்கும் மேல் பூசுவதற்கு சிரேஷ்டமான தைலம். இதை கூந்தலுக்குத் தட வினல் கூந்தல் கருப்புபட்டுக்கு நிகராக விருக்கின்றது. இது வுமன்றி திரேகத்தினுடைய மேல்பாகத்தை மிருதுவாக்கி மனதை களிக்கச் செய்கின்றது. இதுபனிகாலத்தில்புகழ்ந்து பேசுவதற்கு நிகரற்றது. இது பிரத்தியேகமாய் கைகளிலும், உதடுகளிலு முண்டாகும் வெடிப்புகளுக்கும் உபயோகப்படுத் தலாம் மேலும் புண்களுக்கும், காயங்களுக்கும், வெய்யலின் தீக்ஷணத்திற்கும், முகப்பருவுகளுக்கும், கண்கட்டிக்கும், சுண் டுகளுக்கும் இந்த ராயல்போமேடை அடிக்கடி உபயோகப் படுத்துவதால் மனதிற்கு சந்தோஷத்தை யுண்டாக்கும்படி யான பலன்களை யுண்டாக்கும். விலை அணு 8

**கஸ்டரன் போமேட் விலை அணு 6**

**எல்லா நோய்களுக்கும் ராயல்பாம்**

**விலை அணு-12**

**ராயல் பல்பொடி விலை அணு 4**

**டி. ஆர். கன்னைய நாயுடு அண்டு கோ,**

**துளை போஸ்டு, மதராஸ்**

உ

கடவுள் துணை,

# விஷய அகராதி.


| அ | பக்கம் |
|---|---|
| அகசுகணிக்க | 15 |
| அக்கினிநாள் | 55 |
| அக்கினியோகம் | 47 |
| அசுபசகுனங்கள் | 248 |
| அட்சயவருடபலன் | 288 |
| அட்சரங்களுக்குரிய பக்ஷிகள் | 103 |
| அட்டவர்க்கம் | 225 |
| அட்டவர்க்கசக்கரம் | 223 |
| அட்டவர்க்கபலன் | 230 |
| அட்டமராசிக்கூறு | 55 |
| அதிநீசம் | 145 |
| அதியுச்சம் | 145 |
| அந்தரம்பிரிக்க | 219 |
| அந்தராந்தரம்பிரிக்க | 219 |
| அபிசித்துநக்ஷத்திரம் | 55 |
| அமிர்தகடிகை | 78 |
| அமிர்தசித்தயோகம் | 45 |
| அமிர்தாதியோகம் | 43 |
| அம்மானுக்கரிஷ்டநாள் | 168 |
| அயனமாவன | 27 |
| அரசர்களுடைய ஆப்தங்கள் | 26 |
| அருக்கன்நிலை | 188 |
| அரைநாண்பூட்ட | 174 |
| அர்க்கபலன் | 207 |
| அர்த்தோதயம் | 266 |
| அர்த்தப்பிரகரன் | 138 |
| அர்த்தமூலநாழிகை | 56 |
| அவச்சாயை அடிகள் | 92 |
| அவமாகம் | 55 |
| அவமாசதோஷம் | 106 |

| அ | பக்கம் |
|---|---|
| அருபதுவருடபலன் | 279 |
| அனந்தாதியோகம் | 207 |
| அன்றையநட்சத்திரம் பார்க்க | 215 |
| அன்னப்பிராசனஞ்செ | 173 |
| **ஆ** | |
| ஆகாதமாசம் | 191 |
| ஆகுலம் | 55 |
| ஆங்கீரசவருடபலன் | 280 |
| ஆடிமீ 5உ பலன் | 208 |
| ஆடி உத்திராடக்காற்று | 208 |
| ஆடி பஞ்சமிக்குறி | 208 |
| ஆடிமீ திதிக்குறி | 289 |
| ஆக்ஷி உச்சசக்கரம் | 110 |
| ஆண்டுமிச்சம் | 277 |
| ஆண்பெண்ணறிய | 216 |
| ஆதாயமறியும்படி | 21 |
| ஆதித்தபார்வை | 51 |
| ஆந்தைக்காதல் | 246 |
| ஆபரணம்பூண | 178 |
| ஆயுட்சோதனைப்பொரு | 198 |
| ஆருடம் | 217 |
| ஆவணிமுழக்கம் | 207 |
| ஆவணிமூலம் | 207 |
| ஆவணிபொழுதுகட்டுக | 207 |
| ஆனந்தவருடபலன் | 286 |
| **இ** | |
| இங்கிலீஷ்மாசம் | 28 |
| இடவோட்டுநக்ஷத்திரம் | 155 |
| இடைநிலைநாள் | 37 |
| இரண்டாவதங்கம் வருஷநாமம் | 24 |

| இ | பக்கம். |
|---|---|
| இரண்டாவதங்கம் வாரநா | 25 |
| இராகுகாலக்கவி | 32 |
| இராக்குளிகன் | 34 |
| இராசி கண்விழிப்பு | 34 |
| கவிப்புகந்திரகதி | 120 |
| இராசிகளாவன | 26 |
| இராசிகளுக்குகிரகபல | 150 |
| இராசிக்கிரகபார்வை | 146 |
| இராசிகுணகாரம் | 228 |
| இராசிதூர்ப் பொசிப்பு கரேசம்கதிர் அசுப சுபராசி | 126 |
| இராசிப்பொருத்தம் | 196 |
| ஷை அதிபதிபொருத்தம் | 196 |
| இராசிமானசங்கியை | 15 |
| இராசியில்நக்ஷத்திரநிலை | 41 |
| இராசியின் ருவிகிர்தி குலம் வீதிசத்திரம் தாதுமூலம் பார்வை முதலிய | 117 |
| இராசிவடிவம் இராசிக்கால் ஒற்றை இராசி இரட்டைராசி | 115 |
| இராசி விசேஷம் | 187 |
| இராட்சசவருடபலன் | 286 |
| இராகுதிசைபுத்தி அந்தரம் | 271 |
| இராசிகளில் கிரகம் நிற்குங்காலம் | 148 |
| இராசிதானம் நிறம்நாழிகைமாரகஸ்தானம் | 114 |
| இராநாழிகைபார்க்க வகை | 95 |
| ஷை இன்னுமொருவிதம் | 97 |
| இருதுகளாவன | 27 |
| இலாடம் | 57 |
| இலக் னத்தியாச்சியம் | 78 |

| இ | பக்கம். |
|---|---|
| இலக்னஸ்புடம் | 13 |
| இலக்கனஸ்புட நிச்சயம் | 14 |
| ஈ | |
| ஈஸ்வரவருடபலன் | 280 |
| உ | |
| உக்கிரநாள் | 36 |
| உச்சநிலைநாள் | 36 |
| உடலற்றநாள் | 40 |
| உடலுதயராசி | 137 |
| உதயகாலமணியறியும் விபரம் | 94 |
| உதயஆரூடகவிப்புராசி | 216 |
| ஷை ஆரூடம் | 217 |
| உபநயனம் | 179 |
| உழவுசெய்ய | 178 |
| உஷ்ணம் | 57 |
| ஊ | |
| ஊர்ப்பொருத்தம் | 199 |
| எ | |
| எண்ணெயிடநாள் | 254 |
| ஷை பரிகாரம் | 254 |
| எழுத்தாணிநூல் | 251 |
| எழுத்துப்பட்சி | 253 |
| ஏ | |
| ஏகாதிபத்தியம் | 132 |
| ஏகாதிபத்தியசோதனை | 262 |
| ஏகார்க்களம் | 67 |
| ஷை சக்கரம் | 67 |
| ஏவிளம்பிவருடபலன் | 283 |
| ஐ | |
| ஐசிரசு | 97 |
| ஐந்தாவதங்கம் கரணமும் அவற்றினுருவநாமங்களும் | 26 |
| ஓ | |
| ஓதாதகாலம் | 175 |
| ஓலை எழுதவரிகணக்கு | 175 |

| க | பக்கம். |
|---|---|
| கசரயோகம் | 49 |
| கணப்பொருத்தம் | 185 |
| கண்டாந்தநாழிகை | 56 |
| கதிரறுக்க | 181 |
| கரவருடபலன் | 283 |
| கரிநாள் | 30 |
| கர்த்தாரியோகம் | 57 |
| கர்ப்பச்சடங்கு | 278 |
| கர்ப்போட்டம் | 209 |
| கலப்பைச்சக்கரம் | 178 |
| கலாங்கிசம் | 123 |
| ௸ | 239 |
| கலிதினங்கணிக்க | 7 |
| கலியுகவருடம்சென்ற | 6 |
| கலைஞானபாதநக்ஷத்திரம் | 55 |
| **கா** | |
| காஞ்சிமண்டலசரசா வாக்கியம் | 16 |
| காதுகுத்தல் | 172 |
| காரகர்கள் | 147 |
| காலவோரை | 68 |
| காலசக்கரபுத்தி | 155 |
| காலநேமிக்காலம் | 138 |
| காலற்றநாள் | 40 |
| காலன் அர்த்தப்பிரகரன் எமகண்டன்குளிகன் | 84 |
| காளகூடயோக | 133 |
| காளயுத்தி வருடபல | 287 |
| **கி** | |
| கிணறுவிழுமிடமறிய | 184 |
| கிணறுவெட்டகரைகட் | 184 |
| கிரகாவஸ்தை | 244 |
| கிரக ஆசனம் | 141 |
| கிரகஆண்பெண் | 139 |
| கிரகஉச்சவீடு | 144 |
| கிரகஉலோகம் | 141 |
| கிரகவூண் | 142 |

| கி | பக்கம் |
|---|---|
| கிரகசமித்து | 142 |
| கிரகசுவை | 143 |
| கிரகாங்கங்கள் | 146 |
| கிரககுணம் | 140 |
| கிரககுணகாரம் | 228 |
| கிரகங்களின் ஆட்சிவீடு | 143 |
| கிரகசமையம் | 244 |
| கிரசாதி | 139 |
| கிரகசுபக்கணக்கு | 152 |
| கிரகபாவக்கணக்கு | 153 |
| கிரகநட்பாக்ஷியுச்சபல | 153 |
| கிரகதானியம் | 141 |
| கிரகதிக்கு | 140 |
| கிரகநிறம் | 149 |
| கிரகநித்தியகதி | 151 |
| கிரகபகைவீடு | 149 |
| கிரகபாஷை | 139 |
| கிரகப்பிரவேசம் | 172 |
| கிரகபுத்திரர் | 138 |
| கிரகபுட்பம் | 142 |
| கிரகதிக்கு | 140 |
| கிரகதேவதைகள் | 143 |
| கிரகநட்புவீடு | 149 |
| கிரகவடிவம் | 139 |
| கிரகவலிகாலம் | 148 |
| கிரகவாகனம் | 142 |
| கிரகரத்தினம் | 141 |
| கிரகணதோஷம் | 56 |
| கிரகஉதைப்பு அல்லது வேதையின்பெபர் | 63 |
| கிரகத்திரயம் | 140 |
| கிரகங்களின் பலன் காலம் இடம் | 152 |
| **கீ** | |
| கீலகவருடபலன் | 285 |
| கீழ்கிலநாள் | 36 |
| கீழ்நோக்குநாள் | 37 |

| கு | பக்கம். |
|---|---|
| குசாதிபஞ்சக்கிரகங்கள் | 138 |
| கும்பபூர்த்திசக்கரம் | 75 |
| குரு அஷ்டவர்க்கபல | 235 |
| ஷை. திசாபுத்தி அந்திர | 272 |
| குருக்கிரகங்கள் | 140 |
| குரோதனவருடபலன் | 288 |
| குரோதிவருடபலன் | 285 |
| கூ | |
| கூகைதோஷம் | 64 |
| கூடாநாள் | 62 |
| கூட்டாளிப்பொருத் | 201 |
| கே | |
| கேதுதிசைபுத்தி அந்த | 275 |
| கோ | |
| கோடியுடுக்கநாள் | 176 |
| கோட்சாரத்தில்பார்வைகாலம் | 159 |
| கோட்சாரபலன் | 159 |
| கோட்சாரவேதை | 166 |
| கௌ | |
| கௌரிபஞ்சாங்கம் | 255 |
| ச | |
| சகடயோகம் | 49 |
| சகாவருடமறிய | 6 |
| சகுனம் | 247 |
| சகுனபரிகாரம் | 249 |
| சகுனபலன் | 249 |
| சங்கற்பமாதமாவன | 2 |
| சஷ்டியாங்கிசம் | 124 |
| ஷை | 239 |
| ஷை பெயர் | 125 |
| சதாசிவநாள் | 38 |
| சதுர்யுகம் | 23 |
| சத்தமாங்கிஷம் | 238 |
| ஷை | 123 |
| சத்தவருடங்கள் | 26 |
| சந்திரபலன் | 206 |

| ச | பக்கம். |
|---|---|
| சந்திரசாரத்தாலரிஷ்ட | 261 |
| சந்திரனஷ்ட வர்க்கபல | 233 |
| சந்திரபார்வை | 52 |
| சந்திரதிசைபுத்தி அந் | 269 |
| சமநோக்குநாள் | 37 |
| சயனராகு | 129 |
| சரநாள் | 36 |
| சரம்வாரஹூண் | 99 |
| சர்வஜித்துவருடபலன் | 282 |
| சர்வதாரிவருடபலன் | 282 |
| சலாவேதை | 60 |
| சனிதிசைபுத்தி அந்த | 273 |
| ஜயவருடபலன் | 283 |
| ஜலநாள் | 37 |
| ஜலராசிக்கூறு | 138 |
| ஜன்யாநுஜன்மநாள் | 38 |
| ஷை நாளில்கூடாக்காரியம் கூடுங்காரியம் | 64 |
| க்ஷணிகாதிதன் | 129 |
| க்ஷணிகசந்திரன் | 129 |
| க்ஷணிகராகு | 129 |
| சா | |
| சாதகப்பொருத்தம் | 194 |
| சாதாரணவருடபலன் | 286 |
| சாதிப்பொருத்தம் | 199 |
| சாத்வீகாதிகுணக்கிரக | 140 |
| சார்வரிவருடபலன | 284 |
| சி | |
| சிசுமரணமறிய | 260 |
| சித்தாத்திரிவருடபலன் | 287 |
| சித்திரபானுவருடபல | 281 |
| சித்திரைமாசப்பிறப்புகணி | 8 |
| சித்திரைமீ பிறப்பின்ப | 208 |
| சிறுபொழுதாவன | 27 |
| சீ | |
| சீதாசக்கரபடம் | 251 |
| சீமந்தம் | 171 |

சு — பக்கம்,
சுக்கிரனஷ்டவர்க்கபல 235
ஷை திசைபுத்திஅந்திர 276
சுக்கிலவருடபலன் 92
சுபயோகம் 45
சுபசகுனங்கள் 247
சுபகிருதுவருடபலன் 2[illegible]4
சுபாசுபவாரம் 51
சுபாசுபமாசாதிகள் 2[illegible]5
சுபவநாள் 36
சுபானுவருடபலன் 581
சுஷ்கநாள 37
சுஷ்கராசி 137

சூ
சூட்சமம்பிரிக்க 220
சூரியசந்திரவோரை 137
ஷை ஷை 222
சூரியஸ்புடம் 10
சூரியத்துருவம் 9
சூரியனஸ்டவர்க்கபலன் 232
சூரியன்வீதிமாதங்கள் 27
சூரியதிசைபுத்தி அந்த 268
சூலப்பிரகாரம் 33
சூலம்மகா சூலசக்கரம் 60

செ
செவ்வாய் அஷ்டவர்க்கபலன் 234
செவ்வாய்திசைபுத்தி அந்திரம் 270
சென்றநக்ஷத்திரப்பெயர் அவற்றினதிபர்குலம் 81

சே
சேவகன்பொருத்தம் 201

சோ
சோதிடகணிதமுதல்பிரிவுதிரியாங்கம் 23
சோதிமின்னல் 212
சோபகிருதுவருடபல 284

சௌ — பக்கம்
சௌமியக்கிரகங்கள் 140
சௌமியவருடபலன் 285
ஸ்திரநாள் 36
ஸ்திரிதீர்க்கப்பொருத்த 196
ஸ்ரீராமசக்கரம் 253
ஸ்ரீமுகவருட பலன் 280

த
தசவர்க்கம் 122
ஷை 237
தசாங்கிசம் 123
ஷை 239
தண்டாகாரமாகவணங் 252
தத்தயோகம் 48
தலையற்றநாள் 40
தறிக்கால் அதோமுகம் ஊர்த்தமுகம்புறமுக ராசிகளாவன 118
தனிஷடாபஞ்சமி 42

தா
தாதுவருடபலன் 280
தாய்சிசுமரணமறிய 259
தாரணவருடபலன் 281
தாராபலன் 204
தானியமிடஎடுக்க 181

தி
திசாபுத்தி அந்தரம் 268
திசாபுத்திபிரிக்க 218
திசைகள்விபரம் 153
திசையோனிநிலை 188
திதியமிர்தயோகம் 45
திதிச்சூலம் 34
திதித்தியாச்சியம் 87
திதித்தீது 135
திதித்தேவதை 133
திதிநாமங்கள் 25
திதிநாழிகைகாண 11
திதிப்புணர்ச்சிசக்கரம் 32

| தி | பக்கம் |
|---|---|
| திதிகண்டாந்தம் | 137 |
| திதிநக்ஷத்திரயோகங்களின் விர்த்திக்ஷயம் | 202 |
| திதிவிஷநிலை | 136 |
| திரிகோணசோதனை | 227 |
| திரிதினஸ்பிர்க் | 55 |
| திரிம்சாம்சம் | 124 |
| ஷை | 138 |
| திரிவிதஇராசிப்புணர்ச் | 31 |
| திரைக்காணம் | 238 |
| தினபலன் | 204 |
| **து** | |
| துந்துபிவருடபலன் | 288 |
| தும்மல் | 245 |
| துரிதநாள் | 36 |
| துருக்கர்மாதமாவன | 28 |
| துருவங்கள் | 2/8 |
| துவாதசலக்கனவிபா | 241 |
| துவாதசாங்கிஷம் | 123 |
| ஷை | 239 |
| துன்மதிவருடபலன் | 287 |
| துன்முகிவருடபலன் | 289 |
| **தூ** | |
| தூமாதிபஞ்சக்கிரகங்கள் | 138 |
| ஷை உச்சவீடு | 144 |
| **தே** | |
| தேங்காய்ச்சகுனம் | 250 |
| தேதிமழை | 212 |
| தேய்பிறை | 67 |
| தேவதாம்சப்பெயர் | 125 |
| தேவதாங்கிசமறியும்விப | 240 |
| தேவதாம்ச இயல்பு | 126 |
| தோஷநிவாரணம் | 65 |
| **ந** | |
| நடுக்கந்தாயம்கடைக்கந்தா | 23 |
| நட்சத்திர ஆதாயச்செல | 22 |
| நட்சத்திரகந்தாயபலன் | 215 |

| ந | பக்கம். |
|---|---|
| நட்சத்திரங்களின்பார்க்க | 40 |
| நட்சத்திரசூலம் | 35 |
| நட்சத்திரதாத்காலஜீவா ஜீவன் சூலமகா சூலமுதலியன | 53 |
| நட்சத்திரதியாச்சியத்துருவம் | 88 |
| நட்சத்திரபார்வைவேதை | 69 |
| நட்சத்திரப்பொருத்தம் | 195 |
| நட்சத்திரஅதிதேவதைக | 40 |
| நட்சத்திரமண்டலம் | 78 |
| நட்சத்திரமுச்சமாகுநாழி | 68 |
| நட்சத்திர மிருகம்பட்சி மரம்கணம் | 39 |
| நட்சத்திரமெடுக்க | 10 |
| நட்சத்திரயோகம் | 65 |
| நட்சத்திரரோகம் அவமி | 72 |
| நட்சத்திரவடிவுதொகை திசைச்சூலம் | 79 |
| நட்சத்திரவிழுமாதபல | 207 |
| நட்சத்திர தேவதைப்பெ | 200 |
| நட்டமுட்டிசிந்தனை | 112 |
| நட்சத்திரசமுகவேதை தட்சணவேதைவாம வேதைமுதலியன | 62 |
| நட்சத்திரங்களுக்கு இருப்பிடம்தேசம் | 70 |
| நட்சத்திரசத்துருமித்துருபஞ்சுபக்ஷிகெண்டாந் தடவிதவைநக்ஷத்திர | 71 |
| நட்பாக்ஷி புச்சம்பகைச்ச | 149 |
| நட்பாக்ஷியுச்சபலன் | 153 |
| நந்தனவருடபலன் | 289 |
| நவக்கிரகங்கள் | 138 |
| நவக்கிரகங்களாவன | 26 |
| நவக்கிரகங்கதேயம் | 144 |
| நவக்கிரகதெய்வங்கள் | 3 |

| ந | பக்கம். |
|---|---|
| நவக்கிரகவணக்கம் | 1 |
| நவநாயகர்கணிக்க | 16 |
| நவாங்கிசம் | 138 |
| ஷை | 138 |
| நளவருடபலன் | 287 |
| நா | |
| நாசயோகம் | 46 |
| நாமகரணம் | 172 |
| நாமநட்சத்திரங்கள் | 90 |
| நாளின்பகற்கூறு | 31 |
| நாள்விழிப்பு | 36 |
| நாற்றிசைச்சூலம் | 100 |
| நான்காவதங்கயோகநாம | 25 |
| நி | |
| நிஷேகம் | 171 |
| நித்தியோகினிநிலை | 201 |
| நித்தியகிரகவேதை | 61 |
| நித்தியமகாதிசை | 201 |
| நிலைச்சூலம் | 163 |
| நீ | |
| நீசபங்கராஜயோகம் | 144 |
| ப | |
| பகல்நாழிகைபாக்கவகை | 92 |
| பகற்குளிகன் | 34 |
| பஞ்சசகுனம்பார்க்கும்நா | 149 |
| பஞ்சகம்பார்க்க | 213 |
| பஞ்சகத்துருவம் | 214 |
| பஞ்சகோள்நின்றதோஷ | 54 |
| பஞ்சபக்ஷித்தொழில் | 100 |
| ஷை சக்கரம் | 104 |
| பஞ்சபக்ஷிநடப்படுபக்ஷி | 101 |
| பஞ்சபூதக்கிரகம் | 142 |
| பஞ்சாங்கமாவன | 25 |
| பட்சிப்பொருத்தம் | 198 |
| பட்சமாவன | 31 |
| படுபக்ஷீ | 104 |
| பணபரம் | 113 |

| ப | பக்கம் |
|---|---|
| பணிச்சக்கரம் | 179 |
| பதினாறுதிக்குப்பல்லிக்காதல் | 246 |
| பயநாள் | 36 |
| பராபவவருடபலன் | 285 |
| பரிதாவிவருடபலன் | 296 |
| பரிவேடக்குறி | 210 |
| பல்லிவிழும்பலன் | 253 |
| பல்லிகாக்கைமூஞ்சூறுதும்மல் | 245 |
| பவஷு சித்திரைமீ 21உ சூரியோதயமணிவிபர | 95 |
| பா | |
| பாடாவரிநக்ஷத்திரம் | 56 |
| பாட்டனுக்கரிட்டம் | 168 |
| பார்த்திபவருடபலன் | 282 |
| பார்வைகேந்திரம் | 113 |
| பாலாரிட்டம் | 256 |
| பாலாரிட்டபங்கம் | 262 |
| பாவகவிபரம் | 146 |
| பி | |
| பிங்கலவருடபலன் | 287 |
| பிதாவுக்கரிட்டநாள் | 168 |
| பிருதுமாதுருசிசுவுக்கரிஷடமறிய | 262 |
| பிரசோர்ப்பத்திவருடபலன் | 279 |
| பிரதிஷடைபண்ண | 182 |
| பிரமாதிவருடபலன் | 281 |
| பிரமாதீசவருடபலன் | 286 |
| பிரபவவருடபலன் | 279 |
| பிரமோதூதவருடபலன் | 279 |
| பிலவவருடபலன் | 284 |
| பிலவங்கவருடபலன் | 295 |
| பு | |
| புதனஷடவர்க்கபலன் | 234 |
| புதன்திசைபுத்திஅந்த | 274 |

| பு | பக்கம். |
|---|---|
| புதனேட்டராசியாம் | 128 |
| புருஷநாள் | 38 |
| பூமிசுக்கிரநிலே | 136 |
| பூமிவசியநாள் | 168 |
| **பெ** | |
| பெண்ணுள் | 38 |
| பெரும்பொழுதாவன | 27 |
| **ம** | |
| மகவோட்டம் | 211 |
| மகா திசைக்குப்போதகன் சக்கரம் | 158 |
| மகேந்திரப்பொருத்தம் | 195 |
| மகோதயம் | 266 |
| மடசுத்தம் | 188 |
| மயிர்கழிக்க | 174 |
| மரப்பொருத்தம் | 198 |
| மருந்துண்ண | 183 |
| மலமாதம் | 31 |
| மழைக்குறி | 212 |
| மழையரக்கால் | 18 |
| மறுமையிலடையுமிடம் | 150 |
| மனேகோலநாள் | 183 |
| மனே நூல் | 189 |
| மன்மதவருடபலன் | 283 |
| **மா** | |
| மாகேந்திரநக்ஷத்திரமண்டலம் பாவதினம் | 78 |
| மாதசூனியம் | 29 |
| மாதத்துப்பகல்நாழிகை | 93 |
| மாதத்தியாச்சியமாகிய தனியனுள் | 277 |
| மாதநாமங்களாவன | 24 |
| மாதபலன் | 204 |
| மாதமகா திசை | 202 |
| மாதம்ஒவ்வொன்றிற்கும் நாள்நாழிகைவிநாடி | 28 |
| மாதமழையறிய | 19 |
| மாதவருடதினத்துருவம் | 83 |
| மாதாபிதாவுக்கரிட்டநா | 168 |
| மாதாவுக்கரிட்டநாள் | 168 |
| மாரகஸ்தானம் | 114 |
| மாரிதோற்றமும்வரவும் | 20 |
| **மி** | |
| மிருதவேளே | 56 |
| மிருத்துநாள் | 36 |
| **மு** | |
| முகூர்த்தத்திரயம் | 50 |
| முகூர்த்ததோஷம் | 58 |
| முகூர்த்தவயது | 58 |
| முடிசூட்டபாகைபோட | 176 |
| முப்பிணிக்கிரகங்கள் | 140 |
| முழிநட்சத்திரம் | 16 |
| **மூ** | |
| மூலத்திரிகோணம | 10 |
| மூன்ருவதங்கம்நட்சத்திரநாமங்களாவன | 25 |
| மூன்றும்பிறை | 211 |
| **மே** | |
| மேகமறிய | 17 |
| மேகோற்பத்தியிடம் | 19 |
| மேனேக்குநாள் | 37 |
| **ய** | |
| யமகண்டகாலம் | 138 |
| யாத்திரை | 185 |
| யாத்திரைச்சூலம் | 186 |
| **யு** | |
| யுகவருடமறிய | 4 |
| யுகவருடபலன் | 280 |
| **யோ** | |
| யோகினிநிலே | 89 |
| யோகக்கியாதிகலே | 12 |
| யோனிப்பொருத்தம் | 196 |

| ர | பக்கம். |
|---|---|
| ரட்சப்பொருத்தம் | 197 |
| ரத்தாட்சிவருடபலன் | 288 |
| ரவிப்பாய்ச்சல் | 105 |
| ரவிமுதலானவர்களுக்கு ஆட்சி உச்சம்பகை நீசநட்பு | 108 |
| **ரா** | |
| ராட்சசவருடபலன் | 286 |
| **ரு** | |
| ருதுதிதி | 222 |
| ருதுநட்சத்திரம் | 220 |
| ருதுபாவம் | 222 |
| ருதுவாரம் | 220 |
| ருத்திரோக்காரிவருட | 288 |
| **ரௌ** | |
| ரௌத்திரிவருடபலன் | 287 |
| **வ** | |
| வசியப்பொருத்தம் | 196 |
| வணக்கவிதிகள் | 252 |
| வயற்மூலம் | 178 |
| வருடஆதாயச்செலவு | 21 |
| வருடநாமங்கள் | 24 |
| வருடமகாதிசை | 202 |
| வருந்தோஷம் | 175 |
| வலவோட்டுநக்ஷத்திரம் | 155 |
| வளர்பிறை | 67 |
| **வா** | |
| வாகனமேற ஆயுதம்பிடிக் | 177 |
| வாசற்படிவைக்க | 193 |
| வாரக்குளிகன் | 31 |
| வாரசூலதிக்கு | 33 |
| வாரசூலநாழிகை | 33 |
| வாரசூனியம் | 49 |
| வாரத்தியாச்சியம் | 68 |
| வாரநாமங்கள் | 25 |
| வாரபஞ்சபட்சி | 253 |
| வாரபஞ்சகதோஷம் | 107 |

| வா | பக்கம். |
|---|---|
| வாரமிச்சம் | 277 |
| வாரமுக்குணவேளை | 35 |
| வாரலக்கணம் | 107 |
| வாரவிசேடம் | 35 |
| வார்வர்க்கம் | 106 |
| வாணவிற்குறி | 212 |
| வாஸ்துபுருடன் | 267 |
| **வி** | |
| விகாரிவருடபலன் | 284 |
| விகுர்திவருடபலன் | 282 |
| விக்கிரமவருடபலன் | 281 |
| விசுவருடபலன் | 281 |
| விசுவாவிசுவருடபலன் | 285 |
| விசையவருடபலன் | 283 |
| விஷசூனியம் | 31 |
| விஷதோஷம் | 53 |
| விதிலபிதமுகூர்த்தம் | 82 |
| விதைவிதைக்கநாள் | 175 |
| வித்தியாரம்பம் | 175 |
| விநாயகவணக்கம் | 1 |
| விபரீதவேதனை | 167 |
| விபவவருடபலன் | 279 |
| வியவருடபலன் | 282 |
| வியாதிப்படின்தீராநா | 217 |
| வியாதிச்சக்கரம் | 217 |
| விருந்துண்ணநாள் | 182 |
| விரோதிவருடபலன் | 282 |
| விரோதிகிருதுவருடபல | 286 |
| விவாகம் | 169 |
| ௸ சக்கரம் | 170 |
| விளம்பிவருடபலன் | 286 |
| **வீ - வே - வை** | |
| வீரேசர்வணக்கம் | 1 |
| வேதைக்கயிறு | 77 |
| வேதைப்பொருத்தம் | 198 |
| வைகாசிநட்சத்திரம் | 56 |
| வைதிருதி | 58 |

உ

கணபதி துணை

# இலக்கினம் பார்க்கும்

# தினசரிக் கண்ணாடி

அந்தந்தமாதத்து இலக்கினத்திற்குள்ள விநாடி மொத்தத்தை அந்தந்த மாதத்திற் குண்டான தேதிக ளுக்கீந்து தேதி ஒன்றிற்கு ஏற்படும் விநாடியை சென் றதேதியில் பெருக்கி அவ்விநாடியைக் கழித்துபாக்கி நின்றவிநாடிகைக்குள்ள நாழிகைவரையில் அந்த தேதி காலையில் அந்த இலக்கினம் இருக்குமென்று தெரிந் துக்கொள்ளவும்.

இலக்கினம்.

| | | | |
|---|---|---|---|
| மேஷம் | $4\frac{1}{4}$-க்கு | விநாடி | 255 |
| ரிஷபம் | $4\frac{3}{4}$ | ,, | 285 |
| மிதுனம் | $5\frac{1}{2}$ | ,, | 315 |
| கடகம் | $5\frac{1}{4}$ | ,, | 330 |
| சிங்கம் | $5\frac{1}{4}$ | ,, | 315 |
| கன்னி | 5 | ,, | 30 |
| துலாம் | 5 | ,, | 30 |
| விருச்சிகம் | $5\frac{1}{4}$ | ,, | 315 |
| தனுசு | $5\frac{1}{2}$ | ,, | 310 |
| மகரம் | $5\frac{1}{4}$ | ,, | 315 |
| கும்பம் | $4\frac{3}{4}$ | ,, | 285 |
| மீனம் | $4\frac{1}{4}$ | ,, | 255 |

உ

சிவமயம்.

# திசா புத்தியின்

## வருஷமும் மாதமும் நாளும்

### சென்ற புத்திவரையில்

மொத்த வருஷமும் மாதமும் நாளும் அறிக.

சூரியமகாதிசை வருஷம் 6-க்கு

| புத்திகளின் பெயர். | ௵ | ௴ | நாள் | ஆக | மொத்தம் ௵ | மொத்தம் ௴ | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியன் | ... | 3 | 18 | ,, | 1 | 3 | 18 |
| சந்திரன் | ... | 6 | | ,, | 2 | 9 | 18 |
| செவ்வாய் | ... | 4 | 6 | ,, | 3 | 1 | 24 |
| இராகு | ... | 10 | 24 | ,, | 4 | | 18 |
| குரு | ... | 9 | 18 | ,, | 5 | 10 | 9 |
| சனி | ... | 11 | 12 | ,, | 6 | 9 | 18 |
| புதன் | ... | 10 | 6 | ,, | | 7 | 24 |
| கேது | ... | 4 | 6 | | | | |
| சுக்கிரன் | 1 | | | | | | |

சந்திர மகாதிசை வருஷம் 10-க்கு,

| புத்திகளின் பெயர். | ௵ | ௴ | நாள் | ஆக | மொத்தம் ௵ | மொத்தம் ௴ | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| சந்திரன் | | 10 | ... | ,, | 1 | 10 | ... |
| செவ்வாய் | | 7 | ... | ,, | 2 | 5 | ... |
| இராகு | 1 | 6 | ... | ,, | 4 | 1 | ... |
| குரு | 1 | 4 | ... | ,, | 5 | 3 | ... |
| சனி | 1 | 7 | ... | ,, | 7 | 10 | ... |
| புதன் | 1 | 5 | ... | ,, | 7 | 3 | ... |
| கேது | ... | 7 | ... | ,, | 8 | 10 | ... |
| சுக்கிரன் | 1 | 8 | ... | ,, | 9 | 6 | ... |
| சூரியன் | | 9 | ... | ,, | 10 | | ... |

| புத்தி களின் பெயர் | வரு | மா | நாள் | ஆ | வரு | மா | நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மொத்தம். | | |
| **செவ்வாய்மகா திசைவருஷம் 7-க்கு,** | | | | | | | |
| செவ்வாய் | | 4 | 27 | ,, | | 4 | 27 |
| இராகு | 1 | | 18 | ,, | 1 | 5 | 15 |
| குரு | | 1 | 6 | ,, | 2 | 4 | 21 |
| சனி | 1 | 1 | 9 | ,, | 3 | 6 | |
| புதன் | | 11 | 27 | ,, | 4 | 5 | 27 |
| கேது | | 4 | 27 | ,, | 4 | 10 | 24 |
| சுக்கிரன் | 1 | 2 | | ,, | 6 | | 24 |
| சூரியன் | | 4 | 6 | ,, | 6 | 5 | |
| சந்திரன் | | 7 | | ,, | 7 | | |
| **இராகுமகா திசை வருஷம் 18-க்கு** | | | | | | | |
| இராகு | 2 | 8 | 12 | ,, | 2 | 8 | 12 |
| குரு | 2 | 4 | 24 | ,, | 5 | 1 | 6 |
| சனி | 2 | 10 | 6 | ,, | 7 | 11 | 12 |
| புதன் | 2 | 6 | 18 | ,, | 10 | 6 | |
| கேது | 1 | | 18 | ,, | 11 | 6 | 18 |
| சுக்கிரன் | 3 | | | ,, | 14 | 6 | 18 |
| சூரியன் | | 10 | 24 | ,, | 15 | 5 | 12 |
| சந்திரன் | 1 | 6 | | ,, | 16 | 11 | 12 |
| செவ்வாய் | 1 | | 18 | ,, | 18 | | |
| **குருமகா திசை வருஷம் 16-க்கு,** | | | | | | | |
| குரு | 2 | 1 | 18 | ,, | 2 | 1 | 18 |
| சனி | 2 | 9 | 12 | ,, | 4 | 8 | |
| புதன் | 2 | 3 | 6 | ,, | 6 | 11 | 6 |
| கேது | | 11 | 6 | ,, | 7 | 10 | 12 |
| சுக்கிரன் | 2 | 8 | | ,, | 10 | 6 | 12 |
| சூரியன் | | 9 | 18 | ,, | 11 | 4 | |
| சந்திரன் | 1 | 4 | | ,, | 12 | 8 | |
| செவ்வாய் | | 11 | 9 | ,, | 13 | 7 | 6 |
| இராகு | 2 | 4 | 24 | ,, | 19 | | |

| புத்தி களின் பெயர். | ௵ | ௴ | நாள் | ஆ | ௵ | மொத்தம் ௴ | நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| **சனிமகா திசைவருஷம் 19-க்கு,** | | | | | | | |
| சனி | 3 | | 3 | ,, | 3 | 8 | 3 |
| புதன் | 2 | 8 | 9 | ,, | 5 | 9 | 12 |
| கேது | 1 | 1 | 9 | ,, | 6 | 11 | 21 |
| சுக்கிரன் | 3 | 2 | | ,, | 9 | 11 | 21 |
| சூரியன் | | 11 | 12 | ,, | 10 | 6 | 3 |
| சந்திரன் | 1 | 7 | | ,, | 12 | 7 | 3 |
| செவ்வாய் | 1 | 1 | 9 | ,, | 13 | 5 | 12 |
| இராகு | 2 | 10 | 6 | ,, | 11 | | 18 |
| குரு | 2 | 6 | 12 | ,, | 19 | | |
| **புதன்மகா திசை வருஷம் 17-க்கு** | | | | | | | |
| புதன் | 2 | 4 | 27 | ,, | 2 | 4 | 27 |
| கேது | | 11 | 27 | ,, | 3 | 4 | 24 |
| சுக்கிரன் | 2 | 10 | | ,, | 6 | 2 | |
| சூரியன் | | 10 | 6 | ,, | 7 | 1 | |
| சந்திரன் | 1 | 5 | | ,, | 8 | 6 | 27 |
| செவ்வாய் | | 11 | 27 | ,, | 9 | 5 | 15 |
| இராகு | 2 | 6 | 18 | ,, | 12 | | 21 |
| குரு | 2 | 3 | 6 | ,, | 14 | 3 | |
| சனி | 2 | 8 | 9 | ,, | 17 | | 27 |
| **கேதுமகா திசை வருஷம் 7-க்கு,** | | | | | | | |
| கேது | 1 | 2 | 27 | ,, | | 4 | 27 |
| சுக்கிரன் | | 4 | | ,, | 1 | 6 | 27 |
| சூரியன் | | 7 | 6 | ,, | 1 | 11 | 3 |
| சந்திரன் | | 4 | | ,, | 2 | 6 | 3 |
| செவ்வாய் | 1 | | 27 | ,, | 2 | 11 | |
| இராகு | | 11 | 18 | ,, | 3 | 11 | 18 |
| குரு | 1 | 1 | 6 | ,, | 4 | 10 | 24 |
| சனி | | 11 | 9 | ,, | 6 | | 13 |
| புதன் | | | 27 | ,, | 8 | | |

| சுக்கிரமகா தசை வருஷம் 20-க்கு, | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| புத்திகளின் பெயர் | வரு | மீ | நாள் | ஆ | மொத்தம். வரு | மீ | நாள். |
| சுக்கிரன் | 3 | 4 | ... | ,, | 3 | 4 | |
| சூரியன் | 1 | | ... | ,, | 4 | 4 | |
| சந்திரன் | 1 | 8 | ... | ,, | 6 | | |
| செவ்வாய் | 1 | 2 | ... | ,, | 7 | 2 | |
| இராகு | 3 | | ... | ,, | 10 | 2 | |
| குரு | 2 | 8 | ... | ,, | 12 | 10 | |
| சனி | 3 | 2 | ... | ,, | 16 | | |
| புதன் | 2 | 10 | ... | ,, | 18 | 10 | |
| கேது | 1 | 2 | ... | ,, | 20 | | |

## ஈஸ்டரன் போமேட்.

உயர்ந்த மூலிகை வஸ்துக்களால் செய்யப்பட்ட இத்தைலத்தை தலையில் தடவினால் மனோல்லாசமும் சரீரகுளிர்ச்சியும் உண்டாகும் தலைமயிர் வெகு மிருதுவாயும் பளபளப்பாயுமிருக்கும் சுண்டுப்படை நீங்கி கண்குளிர்ச்சிபெரும்! இரவில் நித்திரைக்கு போகுமுன்பு ஒருமுறை தலையில் தேய்த்துக்கொண்டால் ஆரோக்கியமான நித்திரையுண்டாகும்.

முகப்பருவு கண்கட்டி இவைகளுக்குத்தடவ நிவர்த்தியாகும் பிரதி தினமும் உபயோகித்து வருபவர்களின் முகம்வசீகரத்தையடையும். புட்டி 1-க்கு விலை 0 6 0

## புஷ்ப எண்ணைகள்.

| | |
|---|---|
| மல்லிகைப்பூ எண்ணெய் | மருக்கொழுந்து எண்ணெய் |
| மனோரஞ்சித எண்ணெய் | சம்பங்கி எண்ணெய் |
| சாமந்திப்பூ எண்ணெய் | ரோஜாப்பூ எண்ணெய் |
| தாழம்பூ எண்ணெய் | மகிழம்பூ எண்ணெய் |

இப்புஷ்ப எண்ணெய் முறைகள் சுதேச டாக்டர்கள் என்கிற பிரக்யாதிபெற்ற இந்திய நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்டு உலகமெங்கும் விற்பனைசெய்து வரப்படுகிறது இவைகளில் ஏதேனுமொன்றை கூந்தலில் ஒரு முறை பூசினால் சுமார் 10-நாள் பரியந்தம் பரிமளம் நீங்காமலே இருக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 12.

டி. ஆர். கன்னைய நாயுடு அண்ட் கோ,

கூளை போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

சோதிட

# கிரகசிந்தாமணி.

—)(*)(—

கணபதி தோத்திரம்.

தங்கமான மழுவோடேந்திற்
தண்மதிதலையிற் கொண்டோர்
மங்கையர் பதிக்குச்சொன்ன
மஹாமொழிப் பஞ்சாங்கத்தை
யிங்குநா முரைப்பதற்கோ
ரிமையெனும் பிழைவராமற்
செங்கண்மால் மருகன்யானைச்
சிரன்பதங் காப்பதாமே.

நல்லசொற்பொரு ளுளநடாத்தவும்
எல்லைகாணரும் பேரின்பமெய்தவும்
வெல்லும்யானை முகத்தினைமேவிவாழ்
வல்லபைக்குரி யானைவழுத்துவாம்.

ஐந்தாருவானதொடுக் காடர்சோதிடகிரக
சிந்தாமணிமாலை செப்பவே—கொந்தார்
குழலுமையாடந்த குலக்குஞ்சரமுங்
கழலணிவேன் வாணியுமே காப்பு.

வீமேசுரர்-வணக்கம்.

கதிரவனுமதியுமங் காரகன்புந்தியுங்
கருணையுள சுரர்க்குரவனுங்

காரவன்காரியு மிராகுவுங்கேதுவுங்
கருதும்வெகுசுப மாகநற்
பதினோராமிடமுவந் துச்சநிலைபாய்நின்ற
பரிவினின் மகிழ்ந்தருள்செயப்
பங்கயன்செங்கண்மான் முதலானதேவரும்
பாரதிபரிந்துகாக்க
மதிநுதலிகுமரிசங் கரித்ரியம்பகிசூலி
மலையரையன் மகளென்னுமோர்
வடிவுடையகவுரிநகை முசவல்லிபாகனே
மருமலர்ச் சடைமுடியனே [றெண
யதிகபெலனுடையமுய லகன்முதுகு நெறவெ
வாடியபதத்தழகனே
யடியவருளத்தமுத மேவீமநாதநின்
னருளளித்திடல் வேண்டுமே. (உ)

## சூரியபகவான் வணக்கம்.

காசினியிருளைநீக்குங் கதிரொளியாகியெங்கும் [ம்
பூசனையுலகோர்போற்ற புசிப்பொடுசுரத்தை நல்கு
வாசியேமுடையதேர்மேல் மகாகிரிவலமாய்வந்த
தேசிகாவெனைரட்சிப்பாய் செங்கதிரவனேபோற்றி

## சந்திரபகவான் வணக்கம்.

அலைகடலதனினின்று மன்றுவந்துதித்தபோது
கலைவளர்திங்களாகி கடவுள்ரெவருமேத்துஞ்
சிலைநுதலுமையாள்பங்கன் செஞ்சடைபிறையாய்
மேரு, மலைவலமாகவந்தமதியமேபோற்றிபோற்றி

## செவ்வாய் பகவான் வணக்கம்.

வசனநற்றைர்யத்தோடுமன்னர்சபையில்வார்த்தை
புசபலபராக்ரமங்கள் போர்தனிவெற்றியாண்மை

நிசமுடனவரவர்க்கு நீணிலந்தனிலளிக்கும், குசனி லமகனுஞ்செவ்வாய் குறைகழல்போற்றிபோற்றி.

## புதபகவான் வணக்கம்.

மதனனுன்முதலாநான்கு மறைபுகல்கல்விஞானம்
விதமுடனவரவர்க்குவிஞ்சைகளருள்வோன்றிங்கள்
சுதன்கனபவுசுபாக்கியஞ் சுகம்பலகொடுக்கவல்லன்
புதன்கவிப்புலவன்சீர்மால் பொன்னடிபோற்றி
போற்றி.

## குருபகவான் வணக்கம்.

மறைமிகுகலைநூல் வல்லோன் வானவர்க்காசான் மந்த்ரி, நறைசொரிகற்பகப்பொன் னாட்டினுக்கதிப னுகி, நிறைதனஞ்சிவிகைமண்ணி னீடுபோகத்தை நல்கு, மிறையவன் குருவியாழ மிருமலர்ப்பாதம் போற்றி.

## சுக்கிரபகவான் வணக்கம்.

மூர்க்கவான்சூரவாணன் முதல்வனோர் குருவாம் வையம், காக்கவான்மழை பெய்விக்கும் கவிமகன் கனகமீவோன், றீர்க்கவானவர்கள் போற்றச்செத தவர்தமையெழும்பும், பார்க்கவன்சுக்ராசாரி பாத பங்கமே போற்றி.

## சனிபகவான் வணக்கம்.

முனிவர்கடேவரேனும் மூர்த்திகண்முதலினோர் கள், மனிதர்கள் சகலவாழ்வுன் மகிமையதல்லாது ண்டோ, சனிவுளதெய்வநீயே கதிர்சேயே காகமே றுஞ், சனியனேயுனைத்துதிப்போன்றமியனேற்கரு ள்செய்வாயே.

## இராகுபகவான் வணக்கம்.

வாகுசேர் நெடுமான்முன்னம் வானவர்க்கமுதமீயப், போகுமக்காலையுன்றன் புணர்ப்பினுற் சிரமேயற்று, பாகுசேர் மொழியாள் பங்கன்பரன்கையில் மீண்டுபெற்ற, ராகுவேயுனைத்துதிப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே.

## கேதுபகவான் வணக்கம்.

பொன்னைய னூரத்திற் கொண்டோன் புலவர்தம் பொருட்டாலாழி, தன்னையேகடைந்துமுன்னந்தண்ணமு தளிக்கலுற்ற, பின்னையின் காவானுண்ட பெட்பினிற் சிரம்பெற்றுய்ந்தா, யென்னையாள் கேதுவேயிவ் விருவிலம் போற்றத்தானே.

## நவக்கிரக தெய்வங்கள்.

இரவிசங்கர னீசரி திங்கள்சே
யினியகந்தனி சைதிருமால்புதன்
குருவயன்சுரர் கோன்வெள்ளிசுன்னெமன்
சூலவீராகு குறிபத்திரகாளியா
மருவுசித்திரபுத்திரன் கேதவாம்
வானவர்முனி வோராசிமற்றுநா
ளரிமுதற்கிர கத்தாற்பரசிவ
னண்டபிண்டம் படைத்தளித்தாற்றுமேவ.

## யுகவருடம் அறியும்படி.

கூறுவேன்வீம நாதர்தாள்சென்னிமேற்
கொண்டுசுவாச மிருபத்தோராயிரத்
தாறுநூறுகிறே தாயுகமெண்பதி
னூற்பெருக்கத் திரேதமறுபதா

லெறுநாற்பதி லேற்றத்துவாபர
மிருபதாலே பெருக்கக்கலியுக
மீறிச்சென்றது மூவாயிரத்தொரு
நூறுமேழ்பத்து வொன்பதாய்மேவுமே

(இ-ள்) வீமேசுரர் திருவடியை சென்னிமேல் வைத்துக்கொண்டு சுத்தகணித பஞ்சாங்கம் பிறக்கும்படி அண்டநாயகனுக்குச்சரம் இரவிமுதலான கிரகங்கள் இராசி நட்சத்திரங்கள் ஒரு சுவாசமாக விடுகிறது பகல் 30-நாழிகையாம், உள்ளேவாங்குகிற சுவாசம் இராத்திரி 30-நாழிகையாம், இவை 60-நாழிகையாம் அண்டநாயகனுக்கு ஒரு சுவாசமென்றறிக. இந்த ஒருசுவாசம் பூலோகநாயகனுக்கு ஒருதினமென்றறிக. இப்படி அண்டநாயகனுக்கு 21600-சுவாசமும் ஒரு தினமென்றறிக. இந்த அண்டநாயகனுட சுவாசமே தேவர்களும், கிரகங்களும், ரிஷிமுனீசுரரும் மற்றுமுள்ளவைகளெல்லாம் இப்படி நடக்குமென்றறிக. இந்த அண்டநாயகனுடசுவாசம்ஒன்றும்பூலோகநாயகனுக்கு-21600 சுவாசமாய் நடக்கும் இந்த 21600-யும் 80-தில் பெருக்க 17-லட்சத்துக்கு 28000-வருஷம் கிரேதாயுகமென்றறிக. இனி திரேதாயுகம் 60-தில்பெருக்க 12-லட்சத்து 96000-வருஷமென்றறிக. இனி துவாபரயுகம் 40-ல் பெருக்க 8-லட்சத்து 64-ஆயிரம் வருஷமென்றறிக.இனிகலியுகம் 20-ல் பெருக்க 4-லட்சத்து முப்பத்திராயிரம் வருஷமென்றறிக. இப்போது கலியுகத்தில் சாலிவாகனன் ஆண்டதற்குமுன் சென்றது மூவாயிரத்து நூற்றெழுபத் தொன்பதுவருஷமாம் என்றவாறு.

கலியுகவருடம் சென்றதறியும்படி.

மேவுமேசாலிவாகனன் றோன்றிய
மிக்கவாண்டுமுந் நூறுமேழுமே
தாவுவட்டமறுநான் கறுபதாற்
றுக்கவாயிரம் நானூறுநாற்பதாம
பாவுநாலாயிரத் தொன்பநூற்றறு
பத்தெண்டாண்டுமே சென்றகலியுகந்
தேவர்கோன்வீம நாதர்பஞ்சாங்கமாய்ச்
செப்பும்பிரபவ முன்வட்டமாகுமே.

(இ-ள்) சாலிவாகனன் ஆண்டவருஷம் **349**-இதற்கு வாக்கியம் தைசீர்மீன் இதற்குமேல் **60**-சென்றது ஒருவட்டமாம் அப்படி நாளது சென்ற வட்டம்-**24**, சென்ற இந்த இருபத்து நான்கையும் **60**-ல் பெருக்க **1440**-வருஷம் சென்றதென்றறிந்து இதற்குமுன் சாலிவாகனன் தோன்றிய வருஷம் **346**-ஆக **1786**-அதற்குமுன் கலியுகவாக்கியமும் வைப்பேன் கண்மீன் என்கிறதை அத்துடன்கூட்டிக் கலியுகஞ்சென்றது வட்டம் இருபத்துநான்கறுதியாய் **4968**-வருஷமென்றறிக. இதற்குவாக்கியம் வேலாவென்றீரோ இந்தவாக்கியத்துக்குமேல் தேவர்கோன் தொடுக்காடுடைவீமநாதர் பஞ்சாங்கமாய் பிரபவருஷமுதல் நாளது சென்ற கலியுக வாக்கியத்துடன் கூட்டிக் கலியுகஞ்சென்ற வருடமென்றறிக.

சகாவருஷங்களறியும்படி.

முன்கவியில் கண்டிருக்கும் **1789**-இத்தொகையாகிய துருவத்தில் பிரபவாதி சென்ற வருஷம் கூட்டச் சாலிவாகன வருஷமாம்.

சாலிவாகன வருஷத்தொகையோடு

| | | |
|---|---|---|
| 3179 | கூட்ட | சாலிவாப்பதமாம் |
| 3180 | கூட்ட | பாண்டவாப்தமாம் |
| 38 | கூட்ட | போஜராஜாப்தமாம் |
| 128 | கூட்ட | விக்கிரமாதித்தாப்தமாம் |
| 78 | கூட்ட | இங்கிலீஷ்வருஷமாம் |
| 747 | கழிக்க | கொல்லமாண்டாம் |
| 1451 | கழிக்க | கிருஷ்ணராயாப்தமாம் |
| 1240 | கழிக்க | பிரதாபருத்திராப்தமாம் |
| 1185 | கழிக்க | இராமதேவரப்தமாம் |
| 506 | கழிக்க | இஜரியாம் |
| 513 | கழிக்க | பசலியாம் |

ஒரு பிரபவாதிவட்டமாகிய 60-ஆண்டு சென்றால் 1789-ஆகிய முன்துருவத்தோடு 60-கூட்டி வேறு துருவத்தொகை ஏற்படுத்திக்கொள்ளவும்.

சலிதினங்கணிக்க

சாலிவாகன வருஷத்தில் 1577 - வாங்கின சேடம் கலி புத்தியாம் வருஷப் பிரமாணமான 365-நாள் 15-நாழிகை 31 - விநாடி 15 - விசலைகளைக் கலிபுத்தியினால் இனமினமாகப் பெருக்கி விசலை 60-க்கு ஒருவிநாடியாகவும் விநாடி 60-க்குஒருநாழிகையாகவும், நாழிகை 60 - க்கு ஒருநாளாகவும் கணக்கிட்டுக்கூடிய நாள் நாழிகை விநாடி விகலைகளுடன் மூலத்துருவமாகிய 17 - லட்சத்து, 3768-நாளும் 8 - நாழிகையும், 13 - விநாடியும் ...டு-விகலையும் கூட்டி முன்போலக் கணக்கிட்டுக் ...டிய நாள் நாழிகை விநாடி விகலைகளே கலிசென்... ள் ஆதியாம்.

காடனையேழிற்றள்ளி வெள்ளிமுனயந்தவாரங்
கூடியதுருவமாகுங்கொண்டசங்கிராந்திக்கெல்லாம்
தேடியமாதவாக்கியந் தியதியுங்கூட்டிக்கண்டே
நீடியதினபஞ்சாங்க நிலவரமெல்லேகாணே.

(இ-ள்) சுத்ததினத்தை எழிற்கழித்து நின்ற துவெள்ளிமுதலாக அற்றைக்கிழமையென்றறிவது சேஷத்துகையே பனிரண்டு மாதத்திற்குஞ் சங்கிரமதுருவமாகும் இதில் மாதவாக்கியமுந் தியதியுங் கூட்டி தினபஞ்சாங்கமெல்லே காண்பது மாதவாக்கியமறியும் நூறுகோடி வைகாசி, போதாயாரூர் ஆனி, நூறுபிறை ஆடி, உண்டான் குலாலன் ஆவணி, வென்முன் தூதுவன் புரட்டாசி, நீருபூசேரல் ஐப்பசி, பேசீர் நூற்கற்றூர் கார்த்திகை, தையல் கூட்டீர்மால் மார்கழி, கோடீர் குண்டென்றூர் தை, பெற்றுருண்டாயின் மாசி, குருநீதிரில் பங்குனி, சூரமுன்கூறி சித்திரை, இந்தப்படி மாதவாக்கியங் கூட்டியறிவது எ-று.

சித்திரைமாதப் பியப்புக்கணிக்க.

கலிசென்றதினத்தையே 7-ல்கொடுத்துநின்ற நாள் நாழிகை விநாடி விகலேகளில் நின்ற நாளேச் சுக்கிரவாரமுதலாக வெண்ணிச் சேடநாழிகை எ ன்னவாரமாமோ அந்தவாரத்தில் நின்றநாழிகை விநாடி விகலேகளே சித்திரைமாதப் பிறப்பென்றறிவது 7-ல் கழித்து நின்றசேடனுமே சங்கிரமதுருவமாம் இந்தச் சங்கிரம துருவத்துடன் அந்தந்தமாத சங்கிரமத்தை தொகையைக்கூட்ட அந்தந்தமாத பிறப்பாம், சங்கிரமதுருவத்துடன் வைகாசிமாத ங்கிரம வாக்கியமுதலாகக்கூட்டவும் பங்குனிமா

தின் பின் சித்திரைமாத சங்கிரம வாக்கியங் கூட்டினல் மறுவருஷப்பிறப்பாம், பகலில் மாதம்பிறந்தால் அன்றுமுதல் தெய்தியாகவும் இரவில்மாதம் பிறந்தால் மறுநாள் முதல்தெய்தியாகவும் கொள்ளவேண்டும்.

| மாதம். | நாள். | நாழிகை. | விநாடி. |
|---|---|---|---|
| வைகாசி | 2 | 55 | 32 |
| ஆனி | 6 | 19 | 44 |
| ஆடி | 2 | 56 | 22 |
| ஆவணி | 6 | 24 | 44 |
| பிரட்டாசி | 2 | 26 | 44 |
| ஐப்பசி | 4 | 54 | 6 |
| கார்த்திகை | 6 | 46 | 13 |
| மார்கழி | 1 | 18 | 37 |
| தை | | 9 | 30 |
| மாசி | 4 | 6 | 46 |
| பங்குனி | 5 | 55 | 10 |
| சித்திரை | 1 | 15 | 31 |

## சூரியதுருவம்.

சென்றமாதத்தை இராசியாகவும் சென்றதெய்தியைப் பாகையாகவும் முதனுள் இரவிற்மாதம் பிறந்தால் பின்னின்ற நாழிகையை நாழிகை 1-க்கு ஒருகலை விழுக்காடு கலையாகவும் வைப்பது, பகலில் மாதம் பிறந்தால் முன்னின்ற நாழிகையைத் தள்ளி நாழிகை 60-ல் முன் தள்ளுண்ட நாழிகை போக மற்றநாழிகைகளை முன்போல நாழிகை 1-க்கு ஒருகலை விழுக்காடு கலையாகவும் வைப்பது சூரியதுருவமாம்.

## சூரியஸ்புடம்.

இச்சூரிய துருவத்தில் அந்தந்தமாதங்களுக்கு சொல்லிய யோக்கியாதிவாக்கியத் தொகைகளைக் கூட்டவேண்டிய மாதங்களுக்குக் கூட்டியும் கழிக்க வேண்டிய மாதங்களுக்குக்கழித்தும் நின்றது சுத்த சூரியஸ்புடமாம்.

## நக்ஷத்திரமெடுக்க.

எல்லையிற் றினத்தின் மன்னன் வீடுசூழ்குள மெடுத்துப் பல்லியோனிக்கரித்த பலம்முதலாகுஞ் சேடஞ், செல்விகேளேதீர்மா வென்றரித்தது விரு த்தஞ்சேடம் சொல்லிடி லற்றைநாட்குத் தோன் றுவாக்கியமதாமே.

(இ-ள்) கலிசுத்த தினத்தைவைத்து அதிலே சென்ற மாதமுந் திதியுங்கூட்டி இதிலே மன்னன் வீடுசூழ் குளமென்று பதினேந்துலட்சத்து அறுபத் தையாயிரத்து நானூற்றுப் பதினொன்று எடுத்து ஏழில் கழித்துச் சனிமுதலாக வாரங்கண்டு வல்லி யோனியென்று மூவாயிரத்து முப்பத்தொன்றுக்கு ஈய்ந்தது விருத்தபலன் சேஷம் அன்றைக்கு வாக் கியமென்றறிவது எ-று.

ஆமமுதத்தை மன்னேன் கரிசெற்றேனத்த னேத்தி, னேமமாம் விருத்தஞ்சூதோ வீர்கீர்செங் கால்பெருக்கி, தாமெனவிரண்டுங்கூட்டி தனிக்கிரிக் கோதமன்னன், வாமனக்கூட்டிக்கண்டால் வாக்கி யத்துருவமாமே.

(இ-ள்) அமுதபலத்தை மன்னேகரி செற்றே னத்தனென்று ராசி-11, பாகை-7, கலை-31, விஞ டி-1, வைதுப்பெருக்கி ஒருபுறம் வைத்துக்கொண்

டு இரண்டாவது வந்த விருத்தபலத்தைச் சூதோ ரீர்நீர் செங்கல்பாகை-27, கலை-44, விநாடி 6-ம் வைத்துப்பெருக்கி அமுதபலம் பெருக்கினதுங் கூட்டி அதிலேமூலத்துருவம் தனிக்கிறிக் கோதமன் னன் என்று இராசி-11, பாகை-10, கலை-34, விநாடி 31-ங் கூட்டில் வாக்கியத்துருவம்.

துருவமுந் தினத்தின்வாக்கியந் தொகைசேர்க் கவுதையசந்திரன், மருவிய பரிவாய்ச்சென்ற நாள் மட்டும் வருத்திமிச்சம், பொருள்களையெண்ணூர் வைத்துப் பொறித்ததை வாங்கிச்சேடம்வருகலையி னியத்தாக்கி வாக்கிய கெதிக்கீழ்நாடி.

(இ-ள்) கண்ட துருவமும் வாக்கியம் 248-ம் முடியும்வரையும் அதுவே துருவமாகும் அந்தத்து ருவத்தில் அந்தவாக்கியமுங் கூடிக்கண்டது வுதய சந்திரன் கண்டராசியை இரண்டேநாளில் பெருக் கி அசுபதிமுதல் நட்சத்திரம் சேடம் எண்ணூறு கலைவைத்து ஒருநட்சத்திரமாக முழுநட்சத்திரத் தொகைகண்டு சேஷத்தைக்கலையாக்கி எண்ணூறில் கழித்து நின்றகலையை சுன்னிட்டு ஆறில்பெருக்கி அன்றைய சந்திரகதிக்குக் கொடுக்கவந்த ஈவுநாழி கையாகவும் சேஷத்தைச் சுன்னிட்டு ஆறில்பெருக் கிகெதிக்கு ஈய்ந்தது விநாடியென்றறிவது எ-று.

திதிநாழிகைக்காண

நாடியும்விநாடிகண்டு நற்றிதிகாணவேண்டில்
சூடியமதியிலத்தைக் கதிர்களைதிதியின்சூழ்ச்சி
கூடியபாகையீரூர் திதிக்கொன்று குணிதஞ்சேடம்
வாடியகெதியிலத்தை ரவிகெதி வாங்கிக்காண்பாய்.

(இ-ள்) நாடியும் விநாடியுங் கண்டபின் திதி காணவேண்டி அன்றையில் உதைய சந்திரனை வைத்து அத்தேதியில் உதைய சூரியனைக்கொண்டு எடுத்து நின்ற சேடம் இராசி 1-க்கு இரண்டரை திதியாகவும், திதி 1-க்குப் பாகை 12-ஆகவுங் கணக்கிட்டு சேஷத்தை 720-கலைவைத்து அதிலேநின்ற கலையை யெடுத்துப்போட்டு சேஷத்தைச்சுன்னிட்டு ஆறில்பெருக்கி சந்திர கெதியைவாங்கி ஈவு கண்டு நாடி விநாடி காண்பது எ-று.

## யோக்கியாதிகலை.

உன்னுமேடாதி யோக்கியாதிக்குப்பன்
னொன்றுபன்னன்கி ரெட்டுப்பன்னேழுசே
யென்னும்பத்தொன் பதுவுமுருபத்தொன்
றிருபத்தோடிரண் டாயிருபத்துநான்
கின்னமானிமூ வெட்டிருபத்தோடைந்
தெய்துமையைந் திருபத்துநாற்குளி
ரன்னநாலா றிருபத்துமூன்றுமே
யைந்துநாலிரண்டிருபத்திரண்டதே.

தேனுவானவீ மேசரைத்தேடரி
தேறுபத்தொன் பான்பதினொன்றுமெட்
டானபன்மூன்று பெண்பதினொன்றுமெட்
டாறுமூன்று துலாமெட்டில்ரெண்டுதன்
றானமில்லொன்று மூன்றைந்துதன்கலை
யுற்றதேளாறெட் டொன்பதும்பத்துமே
வானவில்பத்துப் பன்னொன்றுமொன்றுமே
மருவுபன்னொன்ற தாமேன்மகரமே.

மேலதாம்வீம காதனைப்போற்றியே
மிக்கலைபன்னொன் றென்பதெட்டேழுமே

சாலிதொன்பது நாலிரண்டாகுஞ்சுன்
றக்கமீன்ரெண்டு நாலேழுபத்துமே
சிலசங்கிரம நாழிகைசென்றது
திவியில்கூட்டக் கழியிராசின்றது
காலஞ்செல்கத் மாதங்கத்தினங்
கழிப்பதோரை தினங்கழிபாகமே

| மாதம் | 8-தேதி | 16-தேதி | 24-தேதி | 32-தேதி |
|---|---|---|---|---|
| சித்திரை | 11 | 14 | 16 | 17 |
| வைகாசி | 19 | 21 | 22 | 24 |
| ஆனி | 24 | 25 | 25 | 24 |
| ஆடி | 24 | 23 | 22 | 22 |
| ஆவணி | 19 | 17 | 15 | 13 |
| புரட்டாசி | 11 | 8 | 6 | 3 |
| ஐப்பசி | 2 | 2 | 3 | 5 |
| கார்த்திகை | 6 | 8 | 9 | 12 |
| மார்கழி | 10 | 11 | 11 | 11 |
| தை | 10 | [illegible] | 8 | 7 |
| மாசி | 6 | 4 | 2 | 3 |
| பங்குனி | 2 | 4 | 6 | 8 |

இந்த யோக்கியாதி வாக்கியங்களை 8-நாளைக்கு ஒருவாக்கியமாக ஒவ்வொருநாளுக்குவந்த ஈவுப்படி பங்குனிமுதல் புரட்டாசிவரை சூரியதுருவத்தில் வாங்கவும் ஐப்பசிமுதல் மாசிவரை கூட்டவும்.

## இலக்கனஸ்புடம்.

அன்றைய சூரியஸ்புடத்திலுள்ள ராசிகளைப் புறம்பாகவைத்து மற்றையபாகை கலைகளை அந்த மாதராசியான சங்கியை கலைகளாற்பெருக்கிக் கண்டதொகையை அர்த்தாதிகத்தோடு கலை 60-க்கு

ஒன்றாகப் பாகையில்கூட்டி அவ்வாறே பாகையை 60-க்கு ஒன்றாக்கிக் கண்டது கலையாகும் இதற்கு உதையாபூர்வ விநாடியென்றுபெயர் இதை அந்த மாதராசியான சங்கியை கலையில் வாங்கி நின்றது உதயாபர விநாடியெள்று பெயர்,

ஜனனகாலவரை உதயாதிநாழிகையை 60-ல் பெருக்கிக்கலையாக்கி மேல்நின்ற கலைகளையுங்கூட்டி அதில் உதயாபர விநாடியை வாங்கி முன்புறம் பாக வைத்திருக்கும் சூரியஸ்புடராசியில் ஒன்று கூட்டி மற்றக்கலைகளில் அடுத்தராசியான சங்கியைகள் எத்தனை எடுபடுகிறதோ அதனையுமெடுத்து எடுபட்டராசி ஒவ்வொன்றுக்குஞ்சூரியஸ் படராசியில் ஒவ்வொன்று கூட்டிக்கொண்டு ராசியில் எத்தனை 12-எடுபடுகிறதோ அத்தனையுமெடுத்து நின்றதை இராசியாகவைத்துஎடுபடாதகலைகளை 40-ல் பெருக்கி அடுத்தராசியான சங்கியை கலைகளுக்கு கொடுத்து வந்த ஈவைப்பாகையாகவும் சேடத்தை 40-ல் பெருக்கி முன்போல்கொடுத்துவந்தஈவுடன் அத்தாதிகமுண்டானாற் கூட்டிக்கலையாகவைப்பது இலக்கனஸ்புடமாம் எ-று.

## இலக்கனஸ்புடத்தை நிச்சயிக்க.

இலக்கனஸ்புடத்தை 81-ல்பெருக்கிக்கலை 60-க்கு 1-ம் பாகை 30-க்கு 1-ம் ஆகமாற்றி ராசிபாகைகலைகளாக நிறுத்தி இராசித்தானத்தில் எத்தனை 12, இராசி எடுபடுகிறதோ அத்தனை ராசிகளையும் எடுத்துநின்ற ஸ்புடத்தில் நட்சத்திரங்காண்க அது சாதகனுக்கு ஜனன நட்சத்திரமாயாவது திரிகோண நட்சத்திரமாயாவது ஜனன லக்கினமாயாவது திரிகோண லக்கினமாயாவது வருமாயின் ல-

க்கின நிச்சயமாம் இல்லாவிடின் அவ்வாறு வரும்படி ஜனனநாழிகையில் கூட்டியாவது குறைத்தாவது வேறே லக்கினஸ்புடஞ் செய்துக் கொள்ளவும் ஜனனநாழிகையில்ஒருவிநாடிகுறைந்தால் 81-ல்பெருக்கின ஸ்புடத்தில் 6-பாகையும் முப்பத்திரண்டரை கலையுங் குறையும்.

இராசியானசங்கியை.

| | | |
|---|---|---|
| மேஷம் | மீனம் | 259 |
| இடபம் | கும்பம் | 284 |
| மிதுனம் | மகரம் | 317 |
| கர்க்கடகம் | தனுசு | 329 |
| சிங்கம் | விருச்சிகம் | 314 |
| கன்னி | துலாம் | 297 |
| | ஆக | 3600 |

அகசுகணிக்க.

கலிசென்ற வருஷத்தை 3-ல்பெருக்கி 200-க்குக்கொடுத்துவந்த ஈவுபாகையாகவும், சேடத்தை 60-ல் பெருக்கி 200-க்குக்கொடுத்துவந்தஈவுடன் அர்த்தாதிகம் உண்டானாற் கூட்டிக் கலையாகவும் வைத்துப்பாகையில் 54-வாங்கிக்கண்டது அயனசலனமாகும் இது அந்தவருஷமுழுமைக்கும்ஆகும்.

கணிக்கும் அன்றையசூரியன் புடத்தோடு அயன சலனங்கூட்டி மேடாதிதனம் துலாதிரணம் என்று குறியிட்டுக்கொண்டு 3-இராசிக் குள்ளிருந்தால் புசையென்றும் 1-இராசிக்குள் ளிருந்தால் கோடியென்று மறிந்து இப்படிப்புசைகோடி எத்தனை எடுபடுகிறதோ அத்தனையுமெடுத்து புசையா

கவரும்படி நிறுத்திக்கொள்வது கோடியாக ஒரு மாயின் கோடியாகிய மூன்றுராசிவைத்து அதில் கீழ்க்கிடக்கிற ராசிபாகை கலைகளை வாங்கி நின்றது புசையாகும், புசையில் ராசியில்லாவிட்டால் முதல் சரசாவாக்கியத்தினால் கீழிருக்கும்பாகை கலைகளை பெருக்கி, கலை 60-க்கு 1-ம்பாகை 30-க்கு 1-ம் ஆகக்கண்டது விநாடியாம், தனமானால் பகல் நாழிகையாகிய 30-ல் கூட்டவும் ரணமானால் கழிக்கவும் இப்படிக்கு.

புசையில் ஒருராசியிருந்தால் அதை எடுத்து நின்றபாகை கலைகளில் இரண்டாவது சரசாவாக்கியத்தால் முன்போற் கிரியை செய்து முதற் சரசாவாக்கிய லக்கத்துடன் கூட்டி மேடாதிகூட்டி துலாதிகழிக்கவும்.

புசையில் இரண்டு ராசியிருந்தால் அவைகளை எடுத்து நின்றபாகைக் கலைகளில் மூன்றும் வாக்கியத்தால் கிரியைசெய்து முன்னெடுபட்ட 2-ம் வாக்கிய லக்கங்களுடன் கூட்டி மேடாதிகூட்டி துலாகழிக்கவும் இப்படிக்கண்டது பகல் நாழிகையாகும்.

## காஞ்சிமண்டல சரசாவாக்கியம்.

1-வது 48, 2-வது 38, 3-வது 16.

நவநாயகர் கணிக்க.

பீனபூர்வப் பிரதமைராசன
 மேடமாசமுதல் வாரமந்திரி
சேனையாதிபன் சிங்கங்கடகமே
 செழித்தபைங்கூழ் சிலைதானியாதிப

ஹீனமில்லாத் துலேயேரசாதிப
னுற்றபாடண மோங்குமகரமே
யானதானியம் போக்குமியாழ்சூரிய
ஞதிரைப்பூணி மாரிலக்குமே.

இராஜா

பங்குனிமாதப் பூர்வபக்கப் பிரதமை வாராதிபதி
சித்திரைச்சங்கிரமவாராதிபதி மந்திரி
ஆனிச்சங்கிரமவாராதிபதி அர்க்காதிபதி
ஆடிச்சங்கிரமவாராதிபதி சசியாதிபதி
ஆவணிச்சங்கிரமவாராதிபதி சேனதிபதி
ஐப்பசிச்சங்கிரமவாராதிபதி ராஜாதிபதி
மார்கழிச்சங்கிரமவாராதிபதி தானியாதிபதி
திருவாதிரையில்ரவிவரும்வாராதிபதி மேகாதிபதி
தைச்சங்கிரமவாராதிபதி நிரசாதிபதி

மாதசங்கிரமம் 45-நாழிகைக்குள்ளானல் முதனளாகவும் மேற்படின் மறுநாளாகவுங்கொள்ள வேண்டும்.

மேகமறிய

சலிசகாத்தாண்டை யெட்டாற்பெருக்கியே
கழிப்பதொன்பதி லொன்றுறிலாவர்த்த
மிலகும்புன்மழை யேசங்கவர்த்தமு
மெய்துங்காற்றுப் பிரளயப்புட்கலங்
துலேதுரோணவெள் ளங்காளமேகமே
றுனிவளிநீலன் வஞ்சகத்தோயனு
மலேயினுநெல் விளேயும்வருணனே
வாயுத்தீது தாமோவெகுமாரியே,

(இ-ள்) மேகாதிபதிபார்க்குமடைவு அவ்வாண்டுக்குக் கண்டசகாத்தவருஷத்தை 8-ற்பெருக்கி 9-ற்கழிக்க 1-மீந்தால் ஆவர்த்தமேகம் புல்மழை பெய்யும், 2-மீந்தால் சங்கவர்த்தமேகம் காற்றடிக்

கும், 3-மீந்தால் புஷ்களமேகம் பிரளயமாய் வருஷம் வருஷிக்கும் 4-மீந்தால் துரோணமேகம் வெகுவெள்ளமாக வருஷிக்கும், 5-மீந்தால் காளமேகம் தூறலுந் துளியுமாய்க் காற்று மிகுதியாயடிக்கும், 6-மீந்தால் நீலமேகம் கண்டாவருஷம் 7-மீந்தால் வருணமேகம் வெகு வருஷம் வருஷிக்கும் மலையிலும் நெல்விளையும் நற்காலம், 8-மீந்தால் வாயுமேகம் அவ்வாண்டு பஞ்சமாம் 9-மீந்தால்தமோமேகம் வெகு மாரிபொழிந்து நற்காலமாம். எ-று.

### மழைமரக்கால்.

மாரனேக்கடிந் தோன்விழிமைந்தரு
  மன்னராகிற் குறுணிசெவ்வாய்பதக்
கார்புதன்மதிக் கேமுக்குறுணிநீர்
  கனகர்தூணி யகலநீளஞ்சத
தூரயோசனே பூமியினுன்குபாற்
  றய்யபர்வதக் கானகத்தாறுபால்
வாரியெங்கும் பொழியமீரைந்துபால்
  வள்ளல்சென்னிக் கதிர்கங்கைமன்னுமே.

(இ-ள்) இரவி-சநி இவர்கள் இராசாவாகில்அவ்வாண்டுக்கு மழைகுறுணி அங்காரகனகில் பதக்கு, புதன் திங்களாகில் முக்குறுணி, வெள்ளி வியாழமாகில் தூணி, மரக்கால் அளவு நூறுயோசனே தூரம் அகலமு நிகளமுமுள்ள மரக்கால் அந்தந்த வருஷங்களுக்குக் கண்டமழையில் 4-பங்கு பூமியிற் பெய்யும் 6-பங்கு மலையினுங் காட்டிலும் பொழியும் 10-பங்கு சமுத்திரத்திற் பொழியும் எ-று.

## மேகோற்பத்தியிடம்.

மேகாபதி சூரியனாயின் கிழக்கிலும் சந்திரனாயின் தென்மேற்கிலும் செவ்வாயாயின் தெற்கிலும் புதனாயின் வடக்கிலும் குருவாயின் வடகிழக்கிலும் சுக்கிரனாயின் தென்கிழக்கிலும் சனியாயின் மேற்கிலும் உற்பத்தியாம்.

## மாதமழையறிய.

குறுக்காக 7-வரையும் நெடுக்காக 7-வரையுங் கீறில் 28-முனையுண்டாகும், அவைகளுள் 4-மூலைகளிலுமுள்ள முனைகள் 8-ம் மலைகள் 4-பக்கங்களின் நடுவரி 4-ம் சமுத்திரம், சமுத்திரத்தின் இருபக்கங்களிலுமுள்ள முனை 8-ம் நதிகள், மற்றையமுனை 8-ம் குட்சிபாகும் இதில் கார்த்திகையைக் கீழ் பக்கச் சமுத்திரத்தில்வைத்து அபிச்சித்துடன் வலமாக மாதம்பிறந்த நட்சத்திரம்வரையில் எண்ண மலைகளில் வலமாயின் மழையில்லை, மனிதருக்குப் பீடை, சமுத்திரத்திலும் குட்சியிலும் வருமாயின் நல்லமழை சிலர் ஜலநாள் 12-ல் மாதம் பிறந்தால் மழையுண்டென்பர்.

---

☞ உ௰-ம் பக்கம் சக்கரம்.

## மாதமழையறியசக்கரம்,

மலை குச்சி நதி சமு நதி குச்சி மலை

உத்தராட திருவோண அவிட்ட சதயம் பூரட்ட உத்திர

| | | | |
|---|---|---|---|
| மலை | பூராடம் | ரேவதி | மலை |
| குச்சி | மூலம் | அசுவ | குச்சி |
| நதி | கேட்டை | பரணி | நதி |
| சமுத் | அனுஷம் | கார்த்தி | சமு |
| நதி | விசாகம் | ரோகணி | சமு |
| குச்சி | சுவாதி | மிரு | குச்சி |
| மலை | சித்திரை | திருவா | மலை |

புனர்பூச பூசம் ஆயிலியம் மகம் பூரம் உத்திரம் ஹஸ்தம்

மலை குச்சி நதி சமு நதி குச்சி மலை

### மாரிதோற்றமும் வரவும்.

தூரத்தில்சோதி தொடர்ந்தொருசத்தியா
யார்த்துநாத மணைந்தொருவிந்துவாய்ப்
பார்ச்சதாசிவம் பார்முதலைந்துக்கு
மார்த்திற்சத்தியோ டாரமிர்தாகுமே.

(இ-ள்) நிராதரவஸ்துவான பெருவெளியிலே அறிவென்னும் நிராதரப் பராசத்திதோன்றி பராசத்தியிலே நாதந்தோன்றி நாதத்திலே பாவித்து தோன்றி பாவிந்துவில் சத்திமுதலான பஞ்சமூர்த்திகளும் பஞ்சபூதமுந் தோன்றும் பரவிந்தாவது

அண்டத்துக்கு மனமென்றும், மதியென்றும்பேர் அந்த மதியென்னுஞ் சந்திரனிலே வாயுபிறக்கும் வாயுவினுடகடினத்திலே அக்கினிதோன்றும் அக்கினி என்னப்பட்ட மின்னலிலே நவமேகங்களும் பிறந்து அவையிடமாக வருஷித்து அந்த நீர்க்குழம்பிலே சிக்கென்று பிருதிவு என்னப்பட்ட பூமி தோன்றும் இப்படி அண்டத்திலுள்ளது பிண்டத்துக்குமாம் பிரம்மாந்தரத்திலே கங்கையென்றும் அமுதசங்கையாயிருந்து தேகத்தைவளர்க்கும் இப்படி அண்டவெளியே அடிமுடி நடுவுமாயிருக்கப்பட்ட வஸ்துவின் மனக்கண்ணுய் கங்காதேவியுமாய் அண்டத்திலுண்டான சீவாத்மாக்களைப் பாவித்து வளர்க்கும் எ-று.

## வருஷாதாயச்செலவு.

எந்தக்கிரகம் இராஜரவாகிறதோ அந்தக்கிரகத்தின் துருவத்தையும் அவனவன் சந்திரலக்கினுதிபதி துருவத்தையுங்கூட்டி 3-ல்பெருக்கி 5-ல்கூட்டி 15-ல் கொடுத்தடிச்சம் ஆதாயம் 5-ல் வந்த யீவை 3-ல் பெருக்கி 5-ல்கூட்டி 15ல் கொடுத்த மிச்சம் சிலவு முன்சொன்ன துருவங்களை 3ல்பெருக்கி 3ல்கூட்டி 7ல் கொடுத்த மிச்சம் ஆரோக்கியம் 7ல் வந்த ஈவை 3ல் பெருக்கி 3ல் கூட்டி 7ல் கொடுத்த மிச்சம் அநாரோக்கியம், 7ல் வந்த ஈவை முன்போற்செய்த மிச்சம் இராசபூசிதம், மறுபடியும் முன்போற் செய்தமிச்சம் சுகம். மறுபடியும் முன்போற்செய்த மிச்சம் துக்கம்.

## ஆதாயம் அறியும்படி.

இரவியாறுகதிரிந்திரண்டுசே
வெட்டுபன்னேழுபுந்திபத்தொன்றுமே

குருவுமூவேழ்புகர்சநிபக்ததாங்
குலவுமவ்வாண்டரசன்கதிருட
னரியராசிபதிபன்கதிருமொன்
றுக்கிமூன்றுற்பெருக்கித்தொகையுடன்
மருவுமோரைந்துன்கூட்டிமூவைந்துக்கி
மற்றிருந்ததாதாயமாய்ப்பார்ப்பதே.

(இ-ள்) இரவிக்குக்கதிர் 6, மதிக்குக்கதிர் 2, அங்காரகனுக்குக்கதிர் 8, புதனுக்குக்கதிர் 17, குருவுக்குக்கதிர் 19, சுக்கிரனுக்குக்கதிர் 21, சனிக்குக்கதிர் 10, இப்படி அவரவர்கதிரறிந்து அவ்வாண்டுக்கு இராஜன் எந்தக்கிரகமாவதோ அந்தக்கிரகத்துக்குச்சொன்ன கதிரும் யாதா மொருவர்பேர்வழிநாள் இராசி அதிபன் கதிரும் ஆகக்கூட்டி 3-ற் பெருக்கிக் கண்டதொகையுடன் அஞ்சு கூட்டி 15க்கீந்தசேடம் ஆதாயமொன்றறிவது எ-று.

நட்சத்திர ஆதாயம் செலவுமுதற் கந்தாயம்.

பாருமாதாயமிந்தப்பலன்றனைப்
பரிந்துமூன்றுபெருகைந்துகூடவைச்
சேருமுவைந்துக்கீந்தவைசேடமே
செலவுபாதிபஞ்சாத்திற்சென்றது
கூருமாமுன்னவரவர்நாட்களுங்
கூட்டியத்தொகைமூன்றிற்பெருக்கியே
தேருமெட்டினுக்கீந்தவைசேடமே
தெளியமுன்வருங்கந்தாயஞ்செப்புமே.

(இ-ள்) முன் ஆதாயத்துக்கு 15கழித்த வட்டமித்தனை என்றறிந்து அதனை 3ற்பெருக்கிக் கண்டதொகையுடன் 5க்கூட்டி 15க்கீந்த சேடஞ்செலவென்றறிக. இனி கந்தாயபலன் பார்க்கு மடைவு

பங்குனி யுகாதியினன்று திதிவார நட்சத்திரயோக கணங்கள் ஆகிய அஞ்சுவிதமும் அன்றுசென்ற நாளளவும் கூட்டி அசுவினி முதலாகவரவர் நாட்கள் சென்றதுங்கூட்டி இன்னவென்றுகண்டுகண்டதொகையை 3ற்பெருக்கி 8க்கீய்ந்து ஈயாதசேடம் முதற்கந்தாய மென்றறிவது.

நடுக்கந்தாயம் கடைக்கந்தாயம்.

செப்புமுன்றொகையேழிற்பெருக்கியே
தெரிந்துமூன்றிற்கழித்தவச்சேடமே
முப்பிலாநடுக்கந்தாயமாகுமே
மூன்றிலேற்றியைநதிற்கழிசேடமே
தப்பிலாக்கடைக்கந்தாயமாகுமே
சர்வசீவதயாபரமூர்த்தியா
மப்பர்வீமேசுரரருளாலேகந்
தாயலாபச்செலவுமறியுமே.

(இ-ள்) முன்கண்ட தொகையை 7ற்பெருக்கி 3ற்கழித்து மீந்தசேடம் நடுக்கந்தாய மென்றறிவது முன்கண்ட தொகையை 3ற்பெருக்கி 5ற்கழிக்கக் கடைக்கந்தாயமாம் இப்படி யானைமுதல் எறும்பீறுயுள்ள 84 லட்சஞ் சீவனுக்குள்ளும் இயங்கப்பெற்ற சர்வசீவதயாபரனுகிய வீமநாதனருளால் முக்கந்தாயலாபச் செலவுமறிவது.

அஷ்டாங்கத்தின் முதற்பிரிவு திரியாங்க விபரம்.

முதலாவதங்கம் சதுர்யுகம்.

கிரேதாயுகஅ 17 லட்சத்து 28000
திரேதாயுகஅ 12 லட்சத்து 96000
துவாபரயுகஅ 8 லட்சத்து 64000
கலியுகஅ 4 லட்சத்து 32000

இரண்டாவதங்கம் வருடநாமங்களாவன,

| | | |
|---|---|---|
| பிரபவ | சர்வஜித்து | பிலவங்க |
| விபவ | சர்வதாரி | கீலக |
| சுக்கில | விரோதி | சௌமிய |
| பிரமோதூத | விக்குருதி | சாதாரண |
| பிரசோற்பத்தி | கர | விரோதிகிருது |
| ஆங்கிரச | நந்தன | பரிதாபி |
| ஸ்ரீமுக | விஜய | பிரமாதீஷ |
| பவ | ஜய | ஆனந்த |
| யுவ | மன்மத | ராட்சச |
| தாது | துன்முகி | நள |
| ஈஸ்வர | ஹேவிளம்பி | பிங்கள |
| வெகுதானிய | விளம்பி | காளயுத்தி |
| பிரமாதி | விகாரி | சித்தாத்திரி |
| விக்கிரம | சார்வரி | ரௌத்திரி |
| விஷு | பிலவ | துன்முகி |
| சித்திரபானு | சுபகிருது | துந்துபி |
| சுபானு | சோபகிருது | ருத்ரோத்காரி |
| தாரண | குரோதின | ரத்தாட்சி |
| பார்த்திப | விசுவாவிசு | குரோதன |
| விய | பராபவ | அக்ஷய |

ஆக வருஷம் 60

இவற்றுள் முதல் 20 வருஷம் உத்தமம்
,, இடை 20 வருஷம் மத்திமம்
,, கடை 20 வருஷம் அதமம்

மூன்றாவதங்கம் மாசநாமங்களாவன.

| | | |
|---|---|---|
| சித்திரை | ஆவணி | மார்கழி |
| வைகாசி | புரட்டாசி | தை |
| ஆனி | ஐப்பசி | மாசி |
| ஆடி | கார்த்திகை | பங்குனி |

ஆகமீ 12.

பஞ்சாங்கத்தில் முதலங்கம் திதிநாமங்களாவன.

| | | |
|---|---|---|
| பிரதமை | சத்தமி | திரியோதசி |
| துவிதியை | அஷ்டமி | சதுர்த்தசி |
| திரிதியை | நவமி | பௌர்ணமி |
| சதுர்த்தி | தசமி | அல்லது |
| பஞ்சமி | ஏகாதசி | அமாவாசியை |
| சஷ்டி | துவாதசி | ஆக திதி-15. |

இரண்டாவது வாரநாமங்களாவன.

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | செவ்வாய் | வியாழம் | சனி |
| திங்கள் | புதன் | வெள்ளி | ஆகவாரம்-7, |

மூன்ருவதங்கம் நட்சத்திர நாமங்களாவன.

| | | |
|---|---|---|
| அச்சுவினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| உரோகணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசிரம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சோதி | சதயம் |
| புநர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயிலியம் | கேட்டை | ரேவதி |
| | | ஆக நக்ஷத்திரம்-27. |

நான்காவதங்கம் யோகநாமங்களாவன.

| | | |
|---|---|---|
| விஷ்கம்பம் | கண்டம் | பரீகம் |
| பிரீதி | விருத்தி | சிவம் |
| ஆயுஷ்மான் | துருவம் | சித்தம் |
| சவுபாக்கியம் | வியகாதம் | சாத்தியம் |
| சோபனம் | அரிஷணம் | சுபம் |
| அதிகண்டம் | வச்சிரம் | சுப்பிரமம் |
| சுகர்மம் | சித்தி | பிரமம் |
| திருதி | விதீபாதம் | ஐந்திரம் |
| சூலம் | வரியான் | வைதிருதி |
| | | ஆகயோகம்-27. |

ஐந்தாவதங்க கரணமும் அவற்றினுருவநாமங்களும்

| | | | |
|---|---|---|---|
| பவம் | சிங்கம் | பத்திரை | கோழி |
| பாலவம் | புலி | சகுனி | காக்கை |
| கௌளவம் | பன்றி | சதுஷ்பாதம் | நாய் |
| தைதுலை | கழுதை | நாகவம் | பாம்பு |
| கரசை | யானை | கிமிஸ்துக்கினம் | புழு |
| வனசை | எருது | | |

ஆககரணம்-11.

நவக்கிரகங்களாவன.

| | | |
|---|---|---|
| சூரியன் | புதன் | சனி |
| சந்திரன் | பிரகஸ்பதி | இராகு |
| அங்காரகன் | சுக்கிரன் | கேது |

ஆககிரகம்-9.

இராசிகளாவன.

| | | |
|---|---|---|
| மேஷம் | சிம்மம் | தனுசு |
| ரிஷபம் | கன்னி | மகரம் |
| மிதுனம் | துலாம் | கும்பம் |
| கர்க்கடகம் | விருச்சிகம் | மீனம் |

ஆக இராசி-12.

| சத்தவருஷங்கள். | அரசர்களுடையஆப்தங்கள் |
|---|---|
| பரதவருஷம் | பாண்டவாப்தம் |
| கிம்புருவருஷம் | விக்கிரமாதித்தாப்தம் |
| அரிவருஷம் | சாலிவாகனசகாப்தம் |
| இளாவிருதவருஷம் | போஜராஜாப்தம |
| ரம்மியதவருஷம் | கொல்லாப்தம் |
| ஐரணதவருஷம் | ராமதேவாப்தம் |
| குருவருஷம் | பிரதாபருத்ராப்தம் |
| ஆகவருஷம்-7. | கிருஷ்ணராயாப்தம் |

ஆக ஆப்தம் 8.

அயனமாவன.

உத்தராயனம் தட்சணாயனம் ஆகஅயனம்-2

தைமாசமுதல் ஆறுமாதம் உத்தராயனம்
ஆடிமாசமுதல் ஆறுமாதம் தட்சணாயனம்.

சிறுபொழுதாவன.

மாலை-யாமம்-வைகறை-விடியல்-நண்பகல் - எற்பாடு ஆக-6.

பெரும்பொழுது அல்லது இருதுக்களாவன.

| | |
|---|---|
| சித்திரையும்வைகாசியும் | இளவேனில்வசந்தருது |
| ஆனியும்ஆடியும் | முதுவேனில் கிரீஷ்மருது |
| ஆவணியும்புரட்டாசியும் | கார்வருஷருது |
| ஐப்பசியும்கார்த்திகையும் | கூதிர்சரருது |
| மார்கழியும்தையும் | முன்பனி ஏமந்தருது |
| மாசியும்பங்குனியும் | பின்பனி சசிருது |

ஆகமாசம் 12-க்கு இருதுக்கள்-6.

சூரியன்வீதிமாதங்களாவன.

மேஷவீதி வைகாசி ஆனி ஆடி ஆவணிமாதம்வரை
ரிஷபவீதி சித்திரை புரட்டாசி ஐப்பசி பங்குனி மாசம்வரை
மிதுனவீதி கார்த்திகை மார்கழி தை மாசிமாசம்வரை

மேஷவீதி உத்தராயனம்
ரிஷபவீதி பூர்ணாயனம்
மிதுனவீதி தட்சணாயனம்.

சங்கற்பமாசமாவன.

| | |
|---|---|
| சைத்திரம் | ஆஸ்வீயம் |
| வைகாசம் | கார்த்தீயம் |
| ஜேஷ்டம் | மார்க்கசிரம் |
| ஆஷாடம் | புஷ்யம் |
| சிராவணம் | மாகம் |
| பாத்ரபதம் | பால்குணம் |

ஆக சங்கற்பமாசம்-12.

## இங்கிலீஷ்மாதமாவன.

| | |
|---|---|
| ஜனவரி | ஜூலை |
| பிப்ரவரி | ஆகஸ்டு |
| மார்ச்சு | செப்டம்பர் |
| ஏப்ரல் | அக்டோபர் |
| மே | நவம்பர் |
| ஜூன் | டிசம்பர் |

ஆகமாதம்-12.

## துருக்கர் மாதமாவன.

| | |
|---|---|
| மொகரம் | ரஜப் |
| சவர் | ஷர்பான் |
| ரப்பில்வல் | ரஞ்சான் |
| ரப்பிசானி | ஷவ்வால் |
| ஜமாதிலவல் | ஜில்ஹாது |
| ஜமாதிசானி | ஜில்ஹேது |

ஆகமாதம்-12.

## மாதமொவ்வொன்றிற்குள்ள நாள்நாழிகை விநாடிகள்.

| மாதம். | நாள். | நாழிகை. | விநாடி. |
|---|---|---|---|
| சித்திரை | 30 | 55 | |
| வைகாசி | 31 | 24 | 12 |
| ஆனி | 31 | 36 | 38 |
| ஆடி | 31 | 28 | 12 |
| ஆவணி | 31 | 20 | |
| புரட்டாசி | 31 | 27 | 22 |
| ஐப்பசி | 29 | 54 | 7 |
| கார்த்திகை | 29 | 30 | 24 |
| மார்கழி | 29 | 29 | 56 |
| தை | 29 | 27 | 16 |
| மாசி | 29 | 48 | 24 |
| பங்குனி | 30 | 20 | 21 |

ஆகநாள்-366, நாழிகை-32, விநாடி-52.

கவி.

ஆடுநண்டிடபங்கன்னி யரிமுப்பத்தொன்றதாகும்
சேடில்கோல்தனுசுமாசி கிறந்தமுப்பானதாகும்
தேடுறமிதுனமுப்பா னிரண்டதாம்தேள்தைமாதம்
நீடும்விழியினுளை நீக்குமுப்பானிலொன்றே

மாத சூனியம்.

சித்திரையில் அஷ்டமி ஏகாதசி ரோகணி கும்பம்

வைகாசியில் துவாதசி சித்திரை சோதி உத்திராடம் மீனம்

ஆணியில் திரியோதசி புநர்பூசம் ரிஷபம்

ஆடியில் சஷ்டி அவிட்டம் மிதுனம்

ஆவணியில் அமாவாசை பூரணை பூராடம் மேஷம்

புரட்டாசியில் சத்தமி சதயம் பூரட்டாதி ரேவதி கன்னி
தனுசு

ஐப்பசியில் நவமி பூரட்டாதி விருச்சிகம்

கார்த்திகையில் பஞ்சமி கார்த்திகை பூசம் மகம் துலாம்

மார்கழியில் துதியை நவமி அனுஷம் உத்திரட்டாதி
விசாகம் தனுசு

தையில் பிரதமை அஸ்தம் திருவாதிரை ஆயிலியம்
கர்க்கடகம்

மாசியில் சதுர்த்தி தசமி மூலம் திருவோணம் மகரம்

பங்குனியில் சதுர்த்தி பரணி கேட்டை சிங்கம்

இப்படிவரின் சுபகாரியங்களுக்கு விலக்காம்.

*

## கரிநாள்.

சித்திரை-6-15
வைகாசி 7-16-17,
ஆனி 1-6,
ஆடி 2-10-20,
ஆவணி 2-9-28,
புரட்டாசி 16-26,
ஐப்பசி 6,
கார்த்திகை முதற்சோம வார
மும் 1-10-17,
மார்கழி 6-9-11,
தை 1-2-3-11-17,
மாசி 15-16-17,
பங்குனி 6-15-19,
ஆகமாசம் 12-க்குகரிநாள் 34.

சிலர்கார்த்திகையில் முதற்சோமவார நீக்கி ஐப்பசியில் 22-தேதியாகக்கொள்வர்.

## கவி.

இன்பமுறுமேடமதி லாறுபதினைந்தாம்
எறதனிலேழுபதினாறுபதினேழாம்
அன்புமிகுமானியொன்று மாறலவணிரண்டோ
டையிரண்டுமைந்நான்கு மாவணியிரண்டும்
ஒன்பதெழுநான்குகன்னி யுற்றபதினாறே
டொன்றொழிமுப்பான் றுலையிலோராறுதேளில்
முன்சோமவாரமொன்று பத்துபதினேழாம்
முனியாறுமொன்பதும் பன்னொன் றுமுதவாநாள்
உதவாதநாள்கலையி லொன்றிரண்டுமூன்று
மொருபதுடனொன்றுபதி னேழதுவுமாகா
துதிபெருகுமாசிபதி னைந்துபதினாறும்
சொல்லுபதினேழுகடை மாதமதிலாறும்
பதினைந்துமொன்றொழியைந் நான்குமிகுதீதாம்
பகர்ந்தமாதந்தோறுந் தெய்தியெனக்கொண்டு
கதிதருநற்பொதியைவரை முனிவனுரைத்திட்ட
கரிநாண்முப்பானான்குங் கண்டறிகுவீரே

## மலமாதம்.

ஒருமாதத்தில் இரண்டமாவாசியை யாவது இரண்டு பௌர்ணமியாவது வருமாதங்கள் பலமாதம்,

## பக்ஷமாவன.

பூர்வபக்ஷம் அல்லது சுக்கிலபக்ஷம் வளர்பிறை அமர பக்ஷம் அல்லது கிருஷ்ணபக்ஷம் தேய்பிறை.

## விஷ சூனியம்.

| | | |
|---|---|---|
| பிரதமையில் | துலாம் | மகரம் |
| துதியையில் | தனுசு | மீனம் |
| திரிதியையில் | மகரம் | சிங்கம் |
| சதுர்த்தியில் | கும்பம் | ரிஷபம் |
| பஞ்சமியில் | கன்னி | மிதுனம் |
| சஷ்டியில் | மேஷம் | சிங்கம் |
| சத்தமியில் | தனுசு | கர்க்கடகம் |
| அஷ்டமியில் | கன்னி | மிதுனம் |
| நவமிதசமிகளில் | சிங்கம் | விருச்சிகம் |
| ஏகாதசியில் | தனுசு | மீனம் |
| துவாதசியில் | துலாம் | மகரம் |
| திரியோதசியில் | ரிஷபம் | சிங்கம் |
| சதுர்த்தசியில் | மிதுனம், கன்னி, தனுசு, மீனம், | |

## நாளின் பகற்கூறு.

பூர்வான்னம், பரான்னம், மதியான்னம், அபரான்னம் சாயான்னம் ஆக அன்னம்-5.

அன்னம்-1க்கு நாழிகை-6.

சந்திரனாட் கூறுபாடாகிய திதிப்பிணர்ச்சி சக்கரம்.

| சந்திரன் கூறு | 1-ம்ப-ம் நந்தை | 2-ம்ப-ம் பதிரை | 3-ம்ப-ம் சபை | 4-ம்வ-ம் இருத் | 5-ம்பம் பூரணை |
|---|---|---|---|---|---|
| முதல் வட்டம் | பிரதை | துதியை | திரிதி | சதுர்த் | பஞ்சமி |
| 2-ம் வட்டம் | சஷ்டி | சத்தமி | அஷ்ட | நவமி | தசமி |
| 3-ம் வட்டம் | ஏகா தசி | துவாத | திரியோ | சதுர்த்த | அமாவா |

திரிவித இராசிப்புணர்ச்சி சக்கரம்.

| சரராசிகள். | ஸ்திரராசிகள். | உபயராசிகள். |
|---|---|---|
| மேடம் | இடபம் | மிதுனம் |
| கர்க்கடகம் | சிங்கம் | கன்னி |
| துலாம் | விருச்சிகம் | தனுசு |
| மகரம் | கும்பம் | மீனம் |

இராகுகாலம்.

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | உசூவ | வியாழம் | கஅதெ |
| திங்கள் | கஜ | வெள்ளி | ககவ |
| செவ்வாய் | உஉ௦ | சனி | எ௦ |
| புதன் | கடு | | |

செ, ல, பூ, ணீ, மு, டி, வா, 7, 2, 6, 4, 5, 3, 2,

இராகுகாலக்கவி.

அரியிருபத்தாறேகா
லம்புலிமூன்றேழுக்கால்

எரிவண்ணனிருபதோடு
  மிரண்டரைபுதன்மூன்வந்து
குருபதினெட்டே முக்கால்
  குளிர்வெள்ளிபதினொன்றேகால்
கரியனேழரையிராகு
  காலமென்றறிந்துகொள்ளே

## வார சூலத்திற்கு.

திங்கள்சனி கிழக்கு  செவ்வாய்புதன வடக்கு
வெள்ளிஞாயிறு மேற்கு  வியாழம் தெற்கு

| | |
|---|---|
| திங்கள்சனி | கிழக்கில் 8-நாழிகையும் |
| வியாழம் | தெற்கில் 20-நாழிகையும் |
| வெள்ளிஞாயிறு | மேற்கில் 12-நாழிகையும் |
| செவ்வாய் | வடக்கில் 22-நாழிகையும் |
| புதன் | வடக்கில் 19-நாழிகையும் |

ருத்திரமூர்த்தியின் சூலமிருப்பதால் அந்தந்த நாழிகைக்குமேல் சூலதோஷமில்லையாம்.

## வாரசூலநாழிகை.

திங்களுஞ்சனியுமிந்திரன் திசையிலோரெட்டதாகும்
பொங்குபொன்னிருபான்தெற்கு புகர்கதிர்மேற்கீராறும்
தங்குசேய்வடக்கீராறுஞ் சார்புதனதிலீரெட்டுச்
சங்கரன்கையிற்சூலந் தரணியில்வைக்குங்கன்னல்

## சூலபரிகாரம் வெண்பா.

சூலத்திசையிற் சொற்பயணம்போகவெனின்
சீலத்துடனுண்டு செல்வடக்குப்பாலாம்
தயிர்கிழக்குத்தெற்குத் தயிலமாமேற்குச்
செயிர்தீர்ந்தவெல்ல மெனச்செப்பு.

## வார குளிகன்.

| பகல். | | இரவு. | |
|---|---|---|---|
| ஞாயிறு | ௨௬வ | ஞாயிறு | ௧௧வ |
| திங்கள் | ௨௨½ | திங்கள் | ௭½ |
| செவ்வாய் | ௧௮¾ | செவ்வாய் | ௩¾ |
| புதன் | ௧௫ | புதன் | ௨௬வ |
| வியாழம் | ௧௧வ | வியாழம் | ௨௨½ |
| வெள்ளி | ௭½ | வெள்ளி | ௧௮¾ |
| சனி | ௩¾ | சனி | ௧௫ |

## பகற்குளிகன்.

ஞாயிறுகூர்ந்தமேழாநன்மதிக் காருஞ்செவவாய்க்
கேயவைந்தாகும்புந்தி கீரிரண்டாபொன்மூன்றும்
தூயநற்புகர்க்கிரண்டாச் சுன்னினுகொன்றதாகும்
ஆயவிம்மூகூர்த்தத்தேசடே யற்றிடுங்குளிகனல்லி

## இராக்குளிகன்.

கதிரவன்றனக்குமூன்றுங் கவின்மதிக்கிரண்டதாகுஞ்
சதிர்பெறுசெவ்வாய்க்கொன்றுஞ் சாற்றியபுகர்க்கேழாகு
மதிவளர்பொன்னுக்காறு மன்புகர்க்கைந்தாநான்கு
கதிர்மகற்காமுகூர்த்தங் காட்டியபகல்போற்கொள்ளே.

இந்நாழிகைகளோடுமுடியும்.

## திதிச்சூலம்.

| | |
|---|---|
| பிரதமை நவமி | கிழக்கு |
| துதியை சத்தமி | தென்கிழக்கு |
| திரிதியை ஏகாதசி | தெற்கு |
| சதுர்த்தி துவாதசி | தென்மேற்கு |
| சஷ்டி அமாவாசியை | மேற்கு |
| தசமி பௌர்ணமி | வடமேற்கு |
| அஷ்டமி சதுர்த்தசி | வடக்கு |
| பஞ்சமி திரயோதசி | வடகிழக்கு |

நட்சத்திர சூலம்.

| | |
|---|---|
| அவிட்டம் கேட்டை | கிழக்கு |
| அச்சுவனி திருவோணம் | தெற்கு |
| பூசம் ரோகணி | வடக்கு |

சிலர் நட்சத்திரம் 27-க்கும் சூலமுண்டென்பர்.

விருத்தம்.

சந்திரன்விதைசெய்பூசல் சனிதபங்கதிர்சேவித்தன்
மந்திரமணமாய்கல்வி மயிர்வெள்ளிவாரநன்மூம்
அந்தமில்முடியேவித்தை யரும்பொருள்கன்னிதா
னம்வந்துறுபகைநோய்தீர்க வருவதேகாலமாமே.

வாரவிசேஷம்.

| | |
|---|---|
| ஞாயிறு | உத்தியோகஞ்செய்ய |
| திங்கள் | விதைவிதைக்க |
| செவ்வாய் | போர்செய்ய |
| புதன் | வித்தியாரம்பஞ்செய்ய |
| வியாழம் | விவாகஞ்செய்ய |
| வெள்ளி | மயிர்சழிக்க |
| சனி | தவஞ்செய்ய உத்தமம். |

வாரமுக்குணவேளை

திங்கள் வியாழம் சாத்துவீகம்
வெள்ளி செவ்வாய் இராசதம்
புதன் ஞாயிறு சனி தாமதமாம்
உதயாதி ௫ஜ நாழிகைவரையிற் கொள்க.

கலிவிருத்தம்.

புந்திவியாழம் புகர்க்கிருகண்ணும்
இந்துவருக்க ரிவர்க்கொருகண்ணும்

செந்துவர்வாயாய் செய்சனிக்கில்லை
அந்தணரோதி யனறந்தனர்மாதோ

நாள்விழிப்பு.

புதன் வியாழம்வெள்ளி இருகண்ணுள்ள நாள்கள்
ஞாயிறு திங்கள் ஒருகண்ணுள்ள நாள்கள்
செவ்வாய் சனி குருட்டு நாள்களாம்

பய நாள்.

திருவாதிரை ஆயிலியம் கேட்டை மூலம்-4.

மிருத்துநாள்.

மிருகசிரம் சித்திரை அனுஷம் ரேவதி 4.

துரிதநாள்.

அசுபதி அஸ்தம் மூலம்-3.

ஸ்திரநாள்.

உத்திரம் ஊத்திராடம் உத்திரட்டாதி ரேவதி ௪.

உக்கிரநாள்.

பரணி மகம் பூரம் பூராடம் பூரட்டாதி-5.

சர நாள்.

சோதி திருவோணம் புனர்பூசம் அவிட்டம் சதயம்-5.

சுபாவநாள்.

கார்த்திகை விசாகம்-2.

உச்சநிலைநாள்

மிருகசிர்ம் சித்திரை அவட்டம்-3.

கீழ்நிலைநாள்.

| | | |
|---|---|---|
| அச்சுவினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |

### இடைநிலைநாள்.

| | | |
|---|---|---|
| உரோகணி | அஸ்தம் | திருவோணம் |
| திருவாதிரை | சோதி | சதயம் |
| புநர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயிலியம் | கேட்டை | ரேவதி |

### கீழ்நோக்குநாள்

| | | |
|---|---|---|
| உரோகணி | உத்திரம் | அவிட்டம் |
| திருவாதிரை | உத்திராடம் | சதயம் |
| பூசம் | திருவோணம் | உத்திரட்டாதி |

### மேனோக்குநாள்.

| | | |
|---|---|---|
| பரணி | மகம் | மூலம் |
| கார்த்திகை | பூரம் | பூராடம் |
| ஆயிலியம் | விசாகம் | பூரட்டாதி |

### சமனோக்குநாள்

| | | |
|---|---|---|
| அச்சுவினி | அஸ்தம் | அனுஷம் |
| மிருகசிரம் | சித்திரை | கேட்டை |
| புநர்பூசம் | சோதி | ரேவதி |

### ஜலநாள்.

| | | |
|---|---|---|
| உரோகணி | ஆயிலியம் | விசாகம் |
| மிருகசிரம் | அஸ்தம் | கேட்டை |
| புநர்பூசம் | சித்திரை | பூராடம் |
| பூசம் | சோதி | திருவோணம் |

### சுஷ்கநாள்.

| | | |
|---|---|---|
| அச்சுவினி | பூரம் | அவிட்டம் |
| பரணி | உத்திரம் | சதயம் |
| கார்த்திகை | அனுஷம் | பூரட்டாதி |
| திருவாதிரை | மூலம் | உத்திரட்டாதி |
| மகம் | உத்திராடம் | ரேவதி |

### புருஷ நாள்.

| | | |
|---|---|---|
| அச்சுவினி | உத்திரம் | பூராடம் |
| பரணி | சித்திரை | உத்திராடம் |
| உரோகணி | சோதி | பூரட்டாதி |
| ஆயிலியம் | கேட்டை | |
| மகம் | மூலம் | |

### பெண்ணாள்.

| | | |
|---|---|---|
| கார்த்திகை | பூரம் | திருவோணம் |
| திருவாதிரை | அஸ்தம் | அவிட்டம் |
| புனர்பூசம் | விசாகம் | உத்திரட்டாதி |
| பூசம் | அனுஷம் | ரேவதி |

அலிநாள் — மிருகசிரம்-சதயம்

அமங்கலநாள் — புனர்பூசம்-பூசம்

### சதாசிவநாள்.

| | | |
|---|---|---|
| உரோகணி | அஸ்தம் | திருவோணம் |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| உத்திரம் | உத்திராடம் | ரேவதி |

### ஜன்மானுஜன்மநாள்,

| | | |
|---|---|---|
| அச்சுவினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| உரோகணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசிரம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சோதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயிலியம் | கேட்டை | ரேவதி |

### கணக்கவி.

தேரடுப்புத்திரங்கள் செங்கைமுப்பூரமக்கள்
பாரமான்றலைபூசங்கள் புனைவிளக்கோணந்தோணி

மூரிமாவத்தந்தேவர் முறங்கேட்டைபயறுமூலம்
ஆரலபாம்பவிட்டஞ்செக்கு மகங்கணமரகர்தாமே.

| நட்சத்தி. | மிருகசிரம். | பட்சி. | மரம். | கணம். |
|---|---|---|---|---|
| அச்சுவினி | குதிரை | இராசாளி | எட்டி | தேவகண |
| பரணி | யானை | காக்கை | செல்வி | மனுஷ |
| கார்த்திகை | ஆடு | மயில் | அத்தி | இரா |
| உரோகணி | பாம்பு | ஆந்தை | நாவல் | மனு |
| மிருகசிரம் | சாரை | கோழி | கருங்காலி | தேவ |
| திருவாதி | நாய் | அன்றில் | செங்கருங் | மனு |
| புநர்பூசம் | பெண்பூனை | அன்னம் | மூங்கில் | தேவ |
| பூசம் | கடா | நீர்க்காக் | அரசு | தேவ |
| ஆயிலியம் | ஆண்பூனை | கிச்கிலி | புன்னை | இரா |
| மகம் | ஆணெலி | ஆண்கழு | ஆல் | இரா |
| பூரம் | பெருசாளி | பெண்கழு | பலாசு | மனுஷ |
| உத்திரம் | எருது | சிள்வண்டு | அலரி | மனுஷ |
| அஸ்தம் | எருமை | மருந்து | ஆத்தி | தேவ |
| சித்திரை | ஆண்புலி | மரஙகொ | வில்வம் | இரா |
| சோதி | கடா | ஈ | மருது | தேவ |
| விசாகம் | பெண்புலி | செவ்வாத் | களா | இரா |
| அனுஷம் | பெண்மா | வானம்பா | மகிழ் | தேவகண |
| கேட்டை | கலை | சக்கரவா | பிராய் | இரா |
| மூலம் | பெண்ஞை | செம்போத் | மரா | இரா |
| பூராடம் | ஆண்குரங் | கவுதாரி | வஞ்சி | மனுஷ |
| உத்திராட | மலட்டுப்ப | வலியன் | பலா | மனுஷ |
| திருவோண | பெண்குரங் | நாரை | எருக்கு | தேவ |
| அவிட்டம் | காமதேனு | வண்டே | வன்னி | இரா |
| சதயம் | பெண்குத்தி | அண்டங் | கடம்பு | இரா |
| பூரட்டாதி | புருஷமி | உள்ளான் | தேமா | மனு |
| உத்திரட் | பாற்பசு | கோட்டா | வேம்பு | மனு |
| ரேவதி | பெண்யா | வல்லூறு | இலுப்பை | தேவ |

காலற்றனவுடலற்றன தலையற்றனநாளிற்
கோலக்குயமடவார்தமைக் கூடின்மலடாவார்
மாலுக்கொருமனைமாளிகை கோலினதுபாழாம்
ஞாலத்தவர்வழிபோகினு நலமெய்திடாவமே.

| காலற்றநாள். | உடலற்றநாள். | தலையற்றநாள். |
|---|---|---|
| கார்த்திகை | மிருகசிரம் | புனர்பூசம் |
| உத்திரம் | சித்திரை | விசாகம் |
| உத்திராடம் | அவிட்டம் | பூரட்டாதி |

இவ்வொன்பதுநாளும் புணர்ச்சிக்கும் மனை முகூர்த்தத்துக்கும் யாத்திரைக்கும் ஆகாவாம்.

நட்சத்திரங்கள் அதிதேவதைகள்.

| | | | |
|---|---|---|---|
| அச்சுவினி | சரஸ்வதி | சோதி | வாயு |
| பரணி | துர்க்கை | விசாகம் | குமரன் |
| கார்த்திகை | அக்கினி | அனுஷம் | இலக்குமி |
| உரோகணி | பிரமன் | கேட்டை | இந்திரன் |
| மிருகசிரம் | சந்திரன் | மூலம் | அசுரர் |
| திருவாதிரை | பரமசிவன் | பூராடம் | வருணன் |
| புனர்பூசம் | அதிதி | உத்திராடம் | கணபதி |
| பூசம் | பிரகஸ்பதி | திருவோணம் | விஷ்ணு |
| ஆயிலியம் | ஆதிசேஷன் | அவிட்டம் | வசுக்கள் |
| மகம் | சுக்கிரன் | சதயம் | இயமன் |
| பூரம் | பார்வதி | பூரட்டாதி | குபேரன் |
| உத்திரம் | சூரியன் | உத்திரட்டாதி | காமதேனு |
| அஸ்தம் | சாத்தா | ரேவதி | சனி |
| சித்திரை | விஸ்வகர்மா | | |

நட்சத்திரங்களின் பாக்கள்.

கார்த்திகைமுதல் ஆயிலியம்வரைக்கும் எழுநட்சத்திரங்களுக்கும் வெண்பாவும்.

மகம்முதல் விசாகம்வரைக்கும் எழு நட்சத்திரங்களுக்கும் ஆசிரியப்பாவும்,

அனுஷமுதல் அவிட்டம்வரையில் எழு நட்சத்திரங்களுக்கும் கலிப்பாவும்.

சதயமுதல் பரணிவரையில் ஆறுநட்சத்திரங் களுக்கும் வஞ்சிப்பாவும் ஆகும்.

## இராசியில் நட்சத்திரநிலை

| | |
|---|---|
| அச்சுவினி பரணி கார்த்திகைமுதற்காலும் | மேஷம் |
| கார்த்திகை பின்முக்காலும் உரோகிணியும் மிருகசிரத்துமுன்னரையும் | ரிஷபம் |
| மிருகசிரத்துப் பின்னரையும் திருவாதிரையும் புனர்பூசத்து முன்முக்காலும் | மிதுனம் |
| புனர்பூசத்துப் பிற்காலும் பூசமும் ஆயிலியமும் | கர்க்கடகம் |
| மகம் பூரம் உத்திரத்து முதற்காலும் | சிங்கம் |
| உத்திரத்துப்பின்முக்காலும் அத்தமும் சித்திரைமுன்னரையும் | கன்னி |
| சித்திரைப்பின்னரையும் சோதியும் விசாகத்துமுன்முக்காலும் | துலாம் |
| விசாகத்துக்குப் பிற்காலும் அனுஷமும் கேட்டையும் | விருச்சிகம் |
| மூலம் பூராடம் உத்திராடத்து முதற்காலும் | தனுசு |
| உத்திராடத்துப் பின்முக்காலும் திருவோணமும் அவிட்டத்து முன்னரையும் | மகரம் |
| அவிட்டத்துப் பின்னரையும் சதயமும் பூரட்டாதி முன்முக்காலும் | கும்பம் |
| பூரட்டாதிபிற்காலும் உத்திரட்டாதியும் ரேவதியும் | மீனம் |

## தனிஷ்டாபஞ்சமி.

| | மாதம் |
|---|---|
| அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதியென்னும் பிதிர்பாகமாகிய தனிஷ்டா பஞ்சமிக்கு | 6 |
| விகற்பபாகமாகிய ரோகணிக்கு | 4 |
| கார்த்திகை உத்திரத்துக்கு | 3 |
| மிருகசிரம் சித்திரை புனர்பூசம் விசாகம் உத்திராடத்துக்கு | 2 |

புள்ளுமுதல்ரேவதியோ ரைந்துநாளும்
புனிதபிதிர்பாகமதா மாறுமாதம்
துள்ளுமான்றலைநடுநாள் மழைவிசாகஞ்
சொல்லாடியைந்துக்கு மிரண்டாமாறல்
நள்ளுமுத்திரத்துக்கு மூன்றும்பார்க்கு
நான்காகுமிவைவிகற்ப பாகமென்பர்
விள்ளுமிவற்றினிலிறந்தால் வீட்டைமூட
வேண்டுமென்றேமேலோர்க ளறைந்தாரன்றே.

6 மாதம் நாள் பிதிர்பாகம் 3. திரியாதி
4 சதுர்பவாதி 2 வதுவபாதியென்றுபெயர்

## பரிகாரம்.

வெண்கலக்கிண்ணத்தில் நல்லெண்ணெவிட்டு தானஞ்செய்து அதற்குச்சொன்ன காலம்வரை சாயங்காலத்தில் கற்பூரதீபாரத்திசெய்யவும் தனிஷ்டாபஞ்சமிதோஷம் சிலதேசத்தார் அனுஷ்டிக்கிறதில்லை.

—

## அமிருதாதியோகங்கள்-

| நட்சத்திரி | ஞா. | திங். | செ. | புத. | வி. | வெ. | சனி. |
|---|---|---|---|---|---|---|---|
| அசுவனி | சித்த | சித்த | சித்த் | மர | அமி | அமி | சித்த |
| பரணி | பிர | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த |
| கார்த்தி | சித்த | மரண | சித்த | அமி | மர | சித்த | அமி |
| ரோகணி | சித்த | அமி | அமி | சித்த | மர | மரண | சித்த |
| மிருகசீர | சித்த | சித்த | சித்த | சித்த | மர | சித்த | சித்த |
| திருவாதி | சித்த | சித்த | மர | சித்த | மர | சித்த | சித்த |
| புனர்பூச | சித்த | அமி | சித்த | சித்த | அமி | சித்த | சித்த |
| பூசம் | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த | மரண | சித்த |
| ஆயிலியம் | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த | மரண | மரண |
| மகம் | மரண | மரண | சித்த | சித்ச | அழி | மரண | அமி |
| பூரம் | சித்த | சித்த | சித்த | அமி | சித்த | சிதத | சித்த |
| உத்திரம் | அமி | சித்த | அமி | அமி | மர | சித்த | மரண |
| அஸ்தம் | சித்த | சித்த | சித்த | மர | சித்த | அமி | மரண |
| சித்திரை | சித்த | பிர | சித்த | சித்த | சித்த | சித்த | மரண |
| சுவாதி | சித்த | அமி | சித்த | சித்த | அமி | சித்த | சித்த |
| விசாகம் | மரண | மரண | மர | சித்த | சித்த | சித்த | சித்த |
| அனுஷம் | மரண | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த | சித்த |
| கேட்டை | மரண | சித்த | மர | சித்த | பிர | மரண | சித்த |
| மூலம் | அமி | சித்த | அமி | மர | சித்த | அமி | சித்த |
| பூராடம் | சித்த | மரண | சித்த | அமி | சித்த | பிர | சித்த |
| உத்திரா | அமி | மரண | பிர | அமி | சித்த | சித்த | சித்த |
| ஸ்ரீவணம் | அமி | அமி | சித்த | சித்த | சித்த | மரண | சித்த |
| அவிட்ட | மரண | சித்த | சித்த | பிர | சித்த | சித்த | சித்த |
| சதயம் | சித்த | சித்த | மர | சித்த | மர | சித்த | அமி |
| பூரட்டா | சித்த | சித்த | மர | அமி | சித்த | சித்த | மரண |
| உத்திரட் | அமி | சித்த | அமி | சித்த | சித்த | சித்த | சித்த |
| ரேவதி | அமி | சித்த | சித்த | மர | சித்த | சித்த | பிர |

அமி-அமிர்தயோகம். சித் - சித்தயோகம். மர - மரண யோகம். பிர-பரபலாரிஷ்டம்.

விருத்தம்.

பலமுடை மூலமோண மிரேவதியத்தம்பாரில்
நலமுடையுத்திரங்கள் மூன்றுநன்குருகுங்கண்ணீற்
றுலவியவனுஷங்கேட்டை கொடுநசம்விசாகம்விட்டம்
சலமுடையருக்கன்வாரஞ் சார்ந்திடின்மரணந்தானே.

தானமாக்றலையேசோதி சகடுருள்புநர்தமோணம்
ஆனநாட்டிங்கள்சேரி லமுதமாம்யோகமாகும்
கானபாமகம்விசாகங் கார்த்திகையுத்திராடம்
மானனுய்பூரட்டாதி மதிவரின்மரணமன்றே.

அன்றிரோகணிமூல மரிவனுத்திரத்திற்செவ்வாய்
நின்றிலடிமுதயோக நிறைந்தவான்சதயஞ்செங்கை
வென்றிகொள்விசாகம்பூரட் டாதியைவிரும்பிநாளும்
கன்றியசெவவாய்நின்றற் கருமங்கணுசெங்காலே

காணுமுப்பூரமாம சார்த்திகையுத்திரத்திற்
பூணுறிமடவாய்புந்தி வந்திடிற்புகழ்வாசால
ஆணியாமவிட்டமூல மிரேவதிசுதிரையத்தம்
சேணுறுபந்திவத்தாற் செய்யுமக்கருமந்தீதே.

கரும்பொருசோதிபூச மசுபதிமகத்திற்கற்றோர்
விரும்பியேயவியாழநின்றால் விளம்புவாரமுதமென்றே
திருந்துமான்றலைபார்செக்குச் செங்கையுத்திரத்தோடாரல்
சுரும்பமாகுழலாய்பொன்னன் வந்திடிற்றுயரஞ்சொல்லே

சொல்லருமூலமத் மிரேவதிதுரகன்சுங்கன்
புல்லிடிலமுதயோகம் பூசம்ரோகணியேகேட்டை
மல்குபேரோணமாயில் மகத்தினில்வெள்ளிவந்தால்
அல்லுறுங்குழலாய்தீதென் றுரைந்தனர்தமிழையார்தோர்

ஆய்ந்தசிர்மகமேசோதி யாரல்பார்பதயங்காரி
சேர்ந்திடிலமுதயோகஞ் சித்திரைபுரட்டைதாதம்
வாய்ர்தவுத்திரத்தோடாயில் சனிவரின்மரணமென்க
சேர்ந்ததிற்சொல்லாநாள்கள் சித்தயோகப்பேர்செப்பே.

### அமுர்தசித்தயோகம்.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையில் | அஸ்தமும் |
| திங்கட்கிழமையில் | மிருகசிரமும் |
| செவ்வாய்க்கிழமையில் | அச்சுவினியும் |
| புதன்கிழமையில் | அனுஷமும் |
| வியாழக்கிழமையில் | பூசமும் |
| வெள்ளிக்கிழமையில் | ரேவதியும் |
| சனிக்கிழமையில் | ரோகணியும்வருவன. |

### விருத்தம்.

யோகநன்றிரவியத்த உயர்மதிவான் பேரானன்
வேதவங்காரன் சென்னிமேதை சேரனுஷவிண்ணே
ஏகமந்திரிசேர்பூச மிரு புகாவாரந்தோணி
மாகவான்சனியுரோணி சித்தியென்மயிலையன்னாய்

### திதியமுதயோகம்

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையிம் | பிரதமையும் சஷ்டியும் |
| திங்கட்கிழமையில் | துதியையும் சத்தமியும் |
| செவ்வாய்க்கிழமையில் | சதுர்த்தசியும் |
| புதன்கிழமையில் | அஷ்டமியும் திரிதிகையும் திரயோதசியும் |
| வியாழக்கிழமையில் | நவமியும் |
| வெள்ளிக்கிழமையில் | ஏகாதசியும் |
| சனிக்கிழமையில் | சதுர்த்தசியும் வருவன. |

### விருத்தம்.

செப்பியகுருவுகொன்பானான்கு சன்பன்னான் செய்
வெப்புறுகதிருகொன்றோ டாறுபன்னொன் றுவெள்
கொப்புடைமதிகுமின்னே யேழிரண்டியர்ந்தபுந்தி
கப்பதின்மூனாறுமூன்று மெட்டிநெல்லமுதயோகம்

### சுபயோகம்.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையில் | அஷ்டமியும் |
| திங்கட்கிழமையில் | நவமியும் |

செவ்வாய்கிழமையில் சஷ்டியும்
புதன்கிழமையில் திரிதியையும்
வியாழக்கிழமையில் ஏகாதசியும்
வெள்ளிக்கிழமையில் திரயோதசியும்
சனிக்கிழமையில் சதுர்த்தசியும் வருவன

விருத்தம்.

அன்னமேபரிதிக்கோரெட் டம்புலிக்கொன்பான்சேய்க்குமூ
மன்னியவிருமூன்றுகு மாலவற்கொருமூன்றுகும் [ண்
பொன்னவன்றனக்குபபதி னுன்றுபகர்க்குப்பன்
றின்னல்செய்சனிக்குப்பன்னுன்கிவைசுபயோகமென்றே.

நாசயோகம்.

ஞாயிற்றுக்கிழமையில் சதுர்த்தசியும்
திங்கட்கிழமையில் சஷ்டியும்
செவ்வாய்க்கிழமையிலும்
சனிக்கிழமையிலும் சத்தமியும்
புதன்கிழமையில் துதியையும்
வியாழக்கிழமையில் அஷ்டமியும்
வெள்ளிக்கிழமையில் நவமியும்வருவன.

விருத்தம்.

என்றுநீடிருளைச்சீறு மிந்துவுக்காறுவெள்ளிக்
கொன்றியநவமிமேதை கிரண்டொளியவற்குநாள்
பொன்றனக்கெட்டுநீலன்பூமனுக்கேழுபொல்லாக்
கன்றிடுநாசயோக மென்றறிகதிர்வேற்கண்ணுய்.

ஞாயிற்றுக்கிழமையில் பஞ்சமியும் கார்த்திகையும
திங்கட்கிழமையில் துதிகையும் சித்திரையும்
செவ்வாய்க்கிழமையில் பூரணையும் ரோகணியும்
புதன்கிழமையில் சத்தமியும் பரணியும்
வியாழக்கிழமையில் திரியோதசியும் அனுஷமும்
வெள்ளிக்கிழமையில் சஷ்டியும் திருவோணமும்
சனிக்கிழமையில் அஷ்டமியும் ரேவதியும் வருவன.

விருத்தம்.

கதிரவற்கைந்தோராடல் கனக்கற்கேழ்பரணிகாரி
எதிருமெட்டோடுதோணி எரிக்குமுன்னுவாவுரோணி
புதியபொன்றனக்குப்பன் மூன்றனுஷமாம்புகர்க்காரோணம்
மதியவற்கிரண்டாம்பக்கஞ் சித்திரைமருவினசம்.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையில் | விசாகமும் |
| திங்கட்கிழமையில் | சதையமும் |
| செவ்வாய்க்கிழமையில் | அவிட்டமும் |
| புதன்கிழமையில் | ரேவதியும் |
| வியாழக்கிழமையில் | ரோகணியும் |
| வெள்ளிக்கிழமையில் | பூசமும் |
| சனிக்கிழமையில் | உத்திரமும் வருவன. |

மருவியகதிர்விசாக மதிவருசதையஞ்செவ்வாய்
பொருவியவிட்டம்புத்தி ரேவதிபொன்னுரோணி
பெருகவிபூசங்காரி யுத்திரம்பேணிவந்தால்
அருளிலாநாசமென்று ரரியநூலறிந்துரைத்தோர்.

அக்கினியோகம்.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையில் | துவாதசியும் |
| திங்கட்கிழமையில் | சஷ்டியும் |
| செவ்வாய்க்கிழமையில் | சத்தமியும் |
| புதன்கிழமையில் | அஷ்டமியும் |
| வியாழக்கிழமையில் | நவமியும் |
| வெள்ளிக்கிழமையில் | தசமியும் |
| சனிக்கிழமையில் | ஏகாதசியும் வருவன. |

விருத்தம்.

பிரசைவண்டிங்கட்காறு பெரியசேய்க்கேழுமாவுக்
குரைசெய்தாரெட்டுப் பொன்னுக்கொன்பதுபுகர்க்குப்பத்து

பரியசுன்னுக்குப் பன்னொன்றருக்கற் கீராறுபக்கம்
விரைசெய்பூங்குழலாயங்கி யோகமென்றிசைத்தார்மேலோர்.

தத்தயோகம்.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையில் | துவாதசியும் |
| திங்கட்கிழமையில் | ஏகாதசியும் |
| செவ்வாய்க்கிழமையில் | பஞ்சமியும் |
| புதன்கிழமையில் | துதியையும் |
| வியாழக்கிழமையில் | சஷ்டியும் |
| வெள்ளிக்கிழமையில் | அஷ்டமியும் |
| சனிக்கிழமையில் | நவமியும் வருவன. |

விருத்தம்.

கொடுங்கதிர்க்கீராறொன்ற குளிர்மதிதனக்குப்பன்னொன்
றடுஞ்செவ்வாய்க்கைந்துமேதைக் கிரண்டுபொன்னவனுக்கா
நெடும்புகர்க்கெட்டுநீலற்கொன்பது நிகழ்ந்தபக்கம் [று
படர்ந்தவைதத்தயோகந் தீதென்பர்பலருமன்றே.

அனந்தாதி யோகங்களாவன.

| | | | |
|---|---|---|---|
| அனந்தகம் | தனலாபம் | உற்பாதம் | துக்கம் |
| காலதண்டம் | காரியவிதி | மிருத்தியு | மரணம் |
| தர்மம் | காரியசித்தி | காரணம் | சம்பத்து |
| பிரசாபதி | இஷ்டசித்தி | சித்தம் | சகலசித்தி |
| சௌமியம் | தனலாபம் | சுபம் | சுபம் |
| துரவாஞ்சம் | விக்கினம் | அமுதம் | லாபம் |
| ஸ்ரீவச்சம் | சகலலாபம் | முசலம் | அசவுக்கியம் |
| வச்சிரம் | கலகம் | கதா | அசுபம் |
| முத்தகம் | விக்கினம் | மாதங்கம் | கஷ்டம் |
| சத்திரம் | சுபம் | ராக்ஷசம் | காரியநஷ்டம் |
| மித்திரம் | பூலாபம் | கரம் | சீக்கிரசித்தி |
| மானசம் | சன்மானம் | திரம் | தீர்க்கசித்தி |
| பத்மம் | மித்திரலாபம் | வர்த்தமானம் | அதிக |
| லம்பம் | போசனலாபம் | | லாபம் |

| | |
|---|---|
| ஞாயிறுக்கு | அச்சுவினி முதலாகவும் |
| திங்கட்கு | மிருகசிர முதலாகவும் |
| செவ்வாய்க்கு | ஆயிலிய முதலாகவும் |
| புதனுக்கு | அஸ்த முதலாகவும் |
| வியாழத்துக்கு | அனுஷ முதலாகவும் |
| வெள்ளிக்கு | உத்திராட முதலாகவும் |
| சனிக்கு | சதய முதலாகவும் |

அச்சுவினிமுதல் வரிசையாகக் கொள்ளவேண்டும், இதற்கு ஐந்தாநாள் யோகமென்றுபேர்.

சகட யோகம்.

குருநின்ற ராசிக்கு ஆறும் எட்டாம் பனிரண்டாம் ராசிகளிற் சந்திரன் நிற்பது.

விருத்தம்.

மேலெழும் வியாழநின்ற ராசிக்கா றீராறெட்டில், மாலைவெண் மதியஞ்சேர வந்தநாட் சகடயோகம், பாலகன்பிறக்கிற்சாவாம் பழிபடுமணத்தைச்செய்யின்,ஞாலமேவழியிற்போயின்நலமில்லை நறுமென்கொம்பே.

கசரயோகம்.

சூரியன்நின்ற நாள்முதல் சந்திரன் நின்றநாள்வரை எண்ணி 6ல் கழித்து நின்றசேடம் 3 4 5 6, ஆகிய 4ம், சுபகாரியத்துக்கு விலக்காகும். இவற்றுள் 9 உபநயனத்துக்கும், 4 விவாகத்துக்கும், 3 சீமந்தத்துக்கும், 5 யாத்திரைக்கும் விலக்காகும். மற்ற சுபங்களுக்கும் பரியாயமாகும்.

வாரசூனியம்.

நாளிறைநேர்முறங்கன்லேர்நாழிபுன்னமனு
நாரிமன்மாந்தகனுநாவாய்தீபுண்மா

வேள்பிதிர்தேட்கடையிரவும் வேய்புனல்பாரோட
விதுவுவிதுபுள்புன்முறம்வெயில்குடந்தேரும்வேய்

கோளிறைதார்குளமீறுங்கோனேரன்முறமற்
கோன்பனையுமிவைவாரகுன்யமலர்க்கோமான்
வாளுதயத்திரயம்பிராதவிசிளத்தூள்கவிபொன்
மான்மதிநன்கவமவரிற்சரோருகனல்லவனே.

ஞாயிற்றுக்கிழமையில் அனுஷமும் கேட்டையும் மகமும் விசாகமும் பரணியும் மிருகசிரமும்.

திங்கட்கிழமையில் பூராடமும் அனுஷமும் மகமும் பூரட்டாதியும் கார்த்திகையும் விசாகமும்.

செவ்வாய்க் கிழமையில் அவிட்டமும் திருவோணமும் சதையமும் கேட்டையையும் திருவாதிரையும்.

புதன்கிழமையில் மூலமும் திருவோணமும் கார்த்திகையும் அவிட்டமும் அச்சுவினியும் பரணியும்.

வியாழக்கிழமையில் மிருகசிரமும் பூராடமும் ரேவதியும் புனர்பூசமும் பூசமும்.

வெள்ளிக்கிழமையில்-பூசமும்-விசாகமும்ரோகணியும்-அவிட்டமும் மிருகசிரமும்-அஸ்தமும்-அனுஷமும்.

சனிக்கிழமையில் அஸ்தமும்- பூசமும்-புனர்பூசமும்-உத்திரமும்-ரேவதியும் வருவன.

முகூர்த்தத்திரயம்.

சூரியோதயம்-பிராதகாலமுகூர்த்தம்.
மத்தியானம்-அவிச்சின்முகூர்த்தம்.
அஸ்தமனம்-கோதூளிமுகூர்த்தம்.
இவை முகூர்த்தத் திரயமாம்.

### சுப அசுபவாரம்.

வெள்ளி, வியாழன், புதன், திங்கள், இவை சுபவாரம். மற்றவை அசுபவாரம். இவற்றுள் ஞாயிறு உத்தமம்.

### கிழமை பிறந்தநாள்.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையில் | பரணியும் |
| திங்கட்கிழமையில் | சித்திரையும் |
| செவ்வாய்க்கிழமையில் | உத்திராடமும் |
| புதன்கிழமையில் | அவிட்டமும் |
| வியாழக்கிழமையில் | கேட்டையும் |
| வெள்ளிக்கிழமையிற் | பூராடமும் |
| சனிக்கிழமையில் | ரேவதியும் வருவன |

### விருத்தம்.

வந்திக்குங்கதிர்க்குக்கங்குன் மதிக்குச்சித்திரைசேய்க்காடி, புந்திக்குவிட்டம்பொன்மேற் கேட்டையாம்புகர்பூராடஞ், சிந்திக்குஞ் சனிக்குத்தோனி கிழமைகள்பிறந்தநாளாம், சிந்திக்குங்கருமமெல்லாந் தீமையாய்விளையுமாதே.

### ஆதித்த பார்வை.

சூரியன் நின்றநாளுக்கு முன் மூன்று பின்மூன்றுநாள்களும் குருட்டுநாள்களாம்.

அதற்கு முன்னான்கு பின்னான்கு நாள்களும் ஒருகண் பார்வையுள்ள நாள்களாம்.

மற்றநாள்கள் இருகண்பார்வையுள்ளனவாம்.

### விருத்தம்.

மேதருகதிரோனின்றநாளுமற்றதன்மேன்மூன்றுங், கோதறுபின்னின்மூன்றுங் குருட்டுநாளென்றுகொள்க, ஓதியவதற்குப்பின்முன் நான்குநாளொருகண்காணும், ஏதமினின்றநாள்க ளிருகண்ணுண்டருக்கற்கென்றே.

## சந்திர பார்வை.

ஞாயிற்றுக்கிழமைமுதல் அன்றையவரையிற் சென்ற கிழமையை மூன்றிற் பெருக்கி வந்ததொகையை அச்சுவினி முதலாகக்கழித்து நின்ற நட்சத்திரத்தில் ஒன்பது நக்ஷத்திரம் சந்திரனுக்குஒரு கண்பார்வையுடைய நாளென்றும்.

அதற்குமேல் பன்னிரண்டு நட்சத்திரம் இரு கண் பார்வையுடைய நாளென்றும்.

அதற்குமேல் ஆறு நட்சத்திரமுங் குருட்டு நாளென்று மறிந்துகொள்க.

## விருத்தம்.

அருக்கனார்கிழமையாதி சென்றவக்கிழமை யாய்ந்து, பெருக்கிமூன்றதனின்பேற்றை மாமுதற் கழித்துப்பின்னே, இருக்குநாளொன்பானோர்கண் பன்னிரண்டிருகண்காணுங், தருக்கிலாப் பின்னு ளாறுங் குருட்டுநாட்சந்திரற்கே.

அமரபக்ஷத்து ஏகாதசிமுதல் மூன்று திதிகளும் பூர்வபக்கத்துப் பிரதமைமுதல் நான்கு திதிகளும், குருட்டுத் திதிகளாம்.

பூர்வபக்கத்துப் பஞ்சமிமுதல் மூன்று திதிகளும் சதுர்த்தசியும் பூரணையும் அமரபக்கத்துப் பிரதமையும், அஷ்டமிமுதல் மூன்று திதிகளும், ஒருகண்ணுள்ளவைகளாம்.

துதியைமுதல் ஆறுதிதிகளும் பூர்வபக்கத்து அஷ்டமிமுதல் ஆறு திதிகளும் இரண்டு கண்ணுள்ளவைகளாம்.

விருத்தம்.

சந்தித்தபிற்பக்கத்தின் நசமிவிட்டதன்பின் னேந்தும், முந்துற்றவாதிநான்குங் குருடுபின்னெ ருமூன்றோர்கண், பின்புற்றவாறுங்காணும் பின்னி ன்மூன்றொருகண்காணும், சிந்தித்தவாறுங்காணு ஞ் செப்புமூன்றொருகண்காணும்.

சந்திரனுக்கு ஒருகண்ணிருந்தாலும் உத்தம ம். சூரியனுக்கு ஒரு கண்ணிருந்தாலும் ஆகாது. இரண்டுகண்ணுள்ள நாள்களில் சுபகாரியம் செய் யலாம்.

விருத்தம்.

ஒருகண்ணுண்டேனுந்திங்கட் குத்தமங்கதி ரோற்காகா, இருகண்ணுண்டானபக்கம் யாவர்க் குன்பமெய்தும், இருகண்ணுமில்லாநாளி லியற் றியகருமந்தீதாம், விரவியசுற்றத்தோடு கெடுமெ னவிளம்பினரே.

விஷ்டிதோஷம்

பூர்வபக்கச்சதுர்த்தசியில்5-ம்சாமம்மேற்கிலேயும்
அஷ்டமியில் 2-ம்சாமம் தென்கிழக்கிலேயும்
ஏகாதசியில் 7-ம்சாமம் வடக்கிலேயும்
பூரணையில் 4-ம்சாமம் தென்மேற்கிலேயும்

அமரபக்கத்திரிதிகையில்6-ம் சாமம்வடமேற்கிலே [யும்
சத்தமியில் 3-ம்சாமம் வடகிழக்கிலேயும்
தசமியில் 8-ம்சாமம் வடகிழக்கிலேயும்
சதுர்த்தசியில் முதற்சாமம் கிழக்கிலேயும்.

விஷ்டியுண்ணுதலால் இச்சாமங்களில் சுபகாரிய ங்களும் இத்திசையில் யாத்திரையுஞ்செய்யலாகாது

விருத்தம்.

மன்னுமுற்சதுர்த்தியினி லைந்தாஞ்சாமம்
மருவியஷ்டமியிரண்டுபன்னொன்றேழாம்

முன்னிலுவாநாற்சாமம்பிற்பக்கத்தின்
மூன்றிலிருமூன்றேழின்மூன்ருஞ்சாமம்
பன்னியபிற்பத்தினிலேயெட்டாஞ்சாமம்
பதினென்கின்முதற்சாமம்பகர்ந்தவிஷ்டி
இன்னதலையச்சாமமென்றுமற்றை
இரவிமுதற்றிசைகடீதென்றுமாமே.

பஞ்சகோள் நின்றதோஷம்.

சூரியன் நின்றநட்சத்திரத்திற்கு 7-ம் நட்சத்திரம் உற்பாதமென்றும் 10-ம் நட்சத்திரம் தாரகமென்றும், 15-ம் நட்சத்திரம் பிரமதண்டமென்றும், 21-ம் நட்சத்திரம் காலனென்றும்பெயராம்.

செவ்வாய் நின்ற நட்சத்திரத்திற்கு 7-ம் நட்சத்திரம் சூலமென்றும், 10-ம் நட்சத்திரம் சக்ரமென்றும், 15-ம் நட்சத்திரம் காலனென்றும்பெயராம்.

புதன்நின்ற நட்சத்திரத்திற்கு 8-ம் நட்சத்திரமும், 18-ம் நட்சத்திரமும், 24-ம் நட்சத்திரமும், கண்டமென்று பெயராம்.

சுக்கிரன்நின்ற நட்சத்திரத்திற்கு 7-ம் நட்சத்திரமும், 9-ம் நட்சத்திரமும் வியாழம் நின்றநக்ஷத்திரத்துக்கு 7-ம் நட்சத்திரமும், 9-ம் நட்சத்திரமும் கொடுமை என்று பெயராம்.

சனிநின்ற நட்சத்திரத்திற்கு 5-ம் நட்சத்திரமும், 6-ம் நட்சத்திரமும், 10-ம் நட்சத்திரமும், 11-ம் நட்சத்திரமும், 12-ம் நட்சத்திரமும் பந்தமென்று பெயராம்.

இராகு கேது நின்றநட்சத்திரங்களுக்கு 7 ம் நட்சத்திரம் பரிகமென்றும் பெயராம். இவை ஆகாவாம்.

## திரிதினஸ்பிர்க்கு.

ஒரு திதியாவது ஒருநட்சத்திரமாவது ஒரு யோகமாவது மூன்றுநாளிற் கலந்திருப்பது.

## அவமாகம்.

மூன்று திதியாவது மூன்றுநட்சத்திரமாவது மூன்றுயோகமாவது ஒருநாளிற்கலந்திருப்பது.

## ஆகுலம்.

வருஷக்கடையில் 15 நாளும் மாதக்கடையில் 3 நாளும் நட்சத்திரமுடிவில் 2 நாழிகையுமாம்.

## அபிசித்துநட்சத்திரம்.

உத்திராடத்துமுடிவில் 15 நாழிகையும் திருவோணத்துமுடிவில் 4 நாழிகையும், 4 விநடியும். ஆக 9 நாழிகையும் 4 விநாடியுமாம்.

## அக்கினிநாள்.

பரணி 3 ம் பாதமுதல் உரோகணி முதற்பாதம் வரையிலும் சூரியன் நிற்கு நட்சத்திரமாம்.

## அஷ்டமராசிக்கூறு.

சன்மநட்சத்திரத்துக்கு 16 ம் நட்சத்திர முதல் 18 ம் நட்சத்திரம் வரையிலுமுள்ள நட்சத்திரமாம்.

## கலைஞானபாத நட்சத்தியம்.

சன்மநட்சத்திரத்துக்கு 16 ம் நட்சத்திரம் 4 ம் பாதமாம்.

### வைகாசிக நட்சத்திரம்.

சன்மநட்சத்திரத்துக்கு 22 ம் நட்சத்திரம் 4 ம் பாதமாம்.

### கண்டாந்த நாழிகை.

அச்சுவினி-மகம்-மூலம்-முதற்காலும்.
ஆயில்யம்-கேட்டை-ரேவதி நான்காம் காலுமாம்.

### அர்த்தமூலநாழிகை.

மூலநட்சத்திரத்தின் முதலில் 2-நாழிகையாம்.

### பாடாவரிநக்ஷத்திரம்.

| | | |
|---|---|---|
| அச்சுவினி | திருவோணம் | மூலம் |
| பரணி | அனுஷம் | சோதி |
| சதையம் | கேட்டை | விசாகம் |

### கூடைகதோஷம்.

அமாவாசியை முடிவிலும், பிரதமை முதலிலும் தியாச்சியம் வருங்காலம்.

### கிராணதோஷம்.

கிராணம்பிடித்தாலும் அதற்கு முன்மூன்று பின்மூன்று நாள்களுமாம்.

### மிருத வேலை.

பூர்வான்னமாகிய 6-நாழிகைக்குள் மேஷம் விருச்சிகம் 6-க்குமேல், பாரான்னமாகிய 12-நாழிகைக்குள் கன்னிகர்க்கடகம்மிதுனம் 12-க்குமேல்.

மத்தியான்னமாகிய 18-நாழிகைக்குள் சிங்கம்கும்பம் 18-க்கு மேல்.

அபரான்னமாகிய 24-நாழிகைக்குள் ரிஷபம்-துலாம் 24-க்குமேல்.

சாயான்னமாகிய 30-நாழிகைக்குள் மகரம் மீனம் வருவன.

## கர்த்தாரியோகம்

லக்கினத்துக்கு இரண்டிலும் பனிரண்டிலும் பாபிகளிருந்தால் காரியகர்த்தாவுக்கு ஆகாது.

## உஷ்ணம்.

அசுபதி-ரோகணி-புநர்பூசம்-மகம் - அஸ்தம்-5-ம். முதலில் 7½-நாழிகைக்குமேல் 15-நாழிகை வரையும்.

பரணி-மிருகசிரம்-பூசம்-பூரம்-சித்திரை 5-ம் அந்தத்தில் 5-நாழிகைவரையும்.

கார்த்திகை-திருவாதிரை-ஆயிலியம்-சோதி-உத்திரம் 5-ம் 2 -நாழிகைக்குமேல், 30-நாழிகை வரையும்.

விசாகம்-மூலம்-திருவோணம்-பூரட்டாதி 4 ம் ஆதியில் 8-நாழிகைவரையும்.

அனுஷம்-பூராடம்-உத்திரட்டாதி அவிட்டம் 4-ம் அந்தத்தில் 8-நாழிகைவரையும்.

கேட்டை-ரேவதி-உத்திராடம் - சதயம் 4-ம், 20-நாழிகைக்குமேல் 30-நாழிகைவரையும் உஷ்ணமாம்.

## இலாடம்.

சூரியன்நின்ற நாள்முதல் மூலம்வரை எண்ணிக்கண்ட தொகையை பூராடமுதல் எண்ணிக்கண்ட நட்சத்திரமாம்.

## வைதிருதி.

இலாடநாளுக்கு 14-ம் நாளாம்.

## முகூர்த்ததோஷகாலம்.

பூகம்பமுண்டானமாதம் மலமாதம், நட்சத்திரமுதிருமாதம் கிராணதோஷம் குளிகன் தொட்டலக்கினம் 58-12-ல் சந்திரனிருக்கும் லக்கினம் பாபர் இருக்கும் லக்கினம் பாபர்பார்க்கும் லக்கினம், பாபர்விட்ட லக்கினம் குருசுக்கிரர் சம சத்தலக்கினம், குரு சுக்கிரர் மகாஸ்த மானத்துக்கு முன்னேழு பின்னேழுநாள் இவர்கள் வக்கிராஸ்தமானத்துக்கு முன் மூன்று பின்மூன்றுநாள் இவர்கள் அஸ்தமானநாள் சாயான்னகாலம் சந்தியாகாலம் கண்டாந்தம் உஷ்ணம். தியாச்சியந்தொட்ட லக்கினம் பவம். பாலவம் கரசை பத்திரைநீங்கிய கரணங்கள் மிஷ்டிதோஷம். இருத்தை அஷ்டமி இலாடம் ஏகார்க்களம் வைதிருதி ஐசிரசு ஆகுலம் முதலியவாகச் சொல்லப்படும் தோஷங்கள் சுபகாரியங்களுக்கு விலக்காகும்.

## முகூர்த்தவயது.

விவாகம் பிள்ளைக்குஒற்றிற்றவயதும், பெண்ணுக்கு இரட்டித்தவுயதாயு மிருக்கவேண்டும்.

நக்ஷத்திர தாத்கால ஜீவஜீவன் சூலம் மகாசூலம்
சலாவேதைபாதுள்ள நக்ஷத்திரம்மலடு
அல்லது வயிரமுள்ள நக்ஷத்திரம்.

தபனனுறுநாட்கிடமொன் றேழேகநான்காய்ச்
சாவதரைச்சாதலுயிர் சாற்றுவர்மற்றவைக்குஞ்
சுபர்விதுநேர்நாட்சூலம் பவர்க்குமகாசூற்பேர்
சுசிமுதனலேழ்வரைநான் முகத்திடமேற்றெடிலா

மூபயவரைகோணுறமற் றைவரைமுற்போல
வுறிலதுசலாவேதை யிவர்களுறிருளுட்டீ
மூபயமுதனுழிமுதன் மூன்றுதைநேரா று
மொழிவதிப்பாலப்பாற்பன் மூன்றுமற்றுருகுவறே.

ரவிநின்ற நக்ஷத்திரமும் அதற்கு இடம் வலம் ஒவ்வொன்றும் மாரணம், இதன்மேல் இடம் வலம் எவ்வேழும் அர்த்தப்பிராணன் இதன்மேல் இடம்வலம் ஒவ்வொன்றும் மாரணம், இதன்மேல் இடம்வலம் நந்நான்கு முழுச்சீவன் கிழமேல் 7-வரையும் தென்வடல் 7-வரையுங் கீறி இடப்பாலுச்சவரையில் கார்த்திகை முதலாக நக்ஷத்திரங்களை வைத்து மதிநின்ற நக்ஷத்திரம் வரைக்கும் எதிர்வரை நக்ஷத்திரத்தில் சுபர்நிற்கில் சூலம், பாபர் நிற்கில் மகாசூலம், கிழமேல் 5-வரையும் தென்வடல் 5-வரையுமாகக்கீறி கோண் நிலாவ இரண்டு வரை கீறி இடப்பாலுச்சவரையில் கார்த்திகை முதலாக நக்ஷத்திரங்களை வைத்து மதிநின்ற நக்ஷத்திரவரைக்கு எதிர்வரை நக்ஷத்திரத்தில் கிரகங்கள் நிற்கில் சலாவேதை, ரோகணி கார்த்திகை பூராடம்-உத்திராடம்-திருவோணம்-பூரட்டாதி- உத்திரட்டாதி ரேவதி பூசம் ஆயிலியம் மகம் பூரம் உத்திரம் அஸ்தம் இவை 14 ம்பாலுள்ள, நக்ஷத்திரம் அசுபதி பரணி மிருகசிரம் திருவாதிரை புனர்பூசம் சித்திரை சோதி விசாகம் அனுஷம் கேட்டை மூலம் அவிட்டம் சதையம் இவை 13 ம் மலடு அல்லது வயிரமுள்ள நட்சத்திரம்.

## சூலம்மகாசூலம்சக்கரம்,




## சலாவேதைசக்கரம்,



நித்தியக்கிரகவேதை, தாற்காலியக்கிரகவேதை, சமுகதெக்ஷவாமவேதைசாங்காதியம்சமுதாயிகம் ஆதானம், தேசம், மானதம், சாதி, அபிஷேகம்,

பம்மனனுக்காவணந்தேர்மான்றலையாழ்தார்முப்
பணியனனேரீதுமித்யம்பானுவுக்குச்சுடர்கோன்
கம்மிருவான்கைமுனரத்திசைச்சிகிநேரிடமாய்
காண்பதவரவர்க்காயிற்றுற்கால்யங்கவுரி
சம்முகமன்றேர்வலமற்றிவையிடமப்பரிநேர்
தால்வேவதைமுறமனவுண்சதையமுதற்சதுர்த்த
மிம்மகியோதயமாமேற்சாங்காதிசமுதா
யிகமாதானந்தேசமனமினம்ராச்சியமே.

| | |
|---|---|
| மதி நின்ற நாளுக்கு | 7-ல் செவ்வாயும், |
| செவ்வாய் நின்ற நாளுக்கு | 4-ல் புதனும், |
| புதன் நின்ற நாளுக்கு | 5-ல் குருவும், |
| குரு நின்ற நாளுக்கு | 6-ல் சுக்கிரனும், |
| சுக்கிரன் நின்ற நாளுக்கு | 8-ல் சனியும், |
| சனி நின்ற நாளுக்கு | 9-ல் ரவியும், |
| ரவி நின்ற நாளுக்கு | 9-ல் ராகு-கேதுவும், |
| ராகு கேது நின்ற நாளுக்கு | 6-ல் மதியும் நிற்கில் நித்திய கிரகவேதையாம். |

| | |
|---|---|
| ரவி நின்ற நாளுக்கு | 15-ல் கேது |
| கேது நின்ற நாளுக்கு | 18-ல் புதன் |
| புதன் நின்ற நாளுக்கு | 17-ல் சனி |
| சனி நின்ற நாளுக்கு | 12-ல் குரு |
| குரு நின்ற நாளுக்கு | 12-ல் ராகு |
| ராகு நின்ற நாளுக்கு | 13-ல் செவ்வாய் |
| செவ்வாய் நின்ற நாளுக்கு | 12-ல் மதி |
| மதி நின்ற நாளுக்கு | 12-ல் ரவி நிற்பது தற்கால கிரகவேதையாம். |

ஒவ்வொரு நட்சத்திரத்துக்கும் நாலாம் நக்ஷத்திரம் வாமவேதையும், 11-ம் நட்சத்திரம் சமூகவேதையும், 18-ம் நட்சத்திரம் தட்சணவேதையுமாக வரும்.

| நட்சத்திரம். | சமுகவேதை. | தக்ஷணவேதை | வாமவேதை |
|---|---|---|---|
| அசுபதிக்கு | பூரம் | கேட்டை | ரோகணி |
| பரணிக்கு | உத்திரம் | மூலம் | மிருகசிரம் |
| கார்த்திகைக்கு | அஸ்தம் | பூராடம் | திருவாதி |
| ரோகணிக்கு | சித்திரை | உத்திராடம் | புனர்பூசம் |
| மிருகசிரத்துக்கு | சுவாதி | திருவோண | பூசம் |
| திருவாதிரைக்கு | விசாகம் | அவிட்டம் | ஆயிலியம் |
| புனர்பூசத்துக்கு | அனுஷம் | சதயம் | மகம் |
| பூசத்துக்கு | கேட்டை | பூரட்டாதி | பூரம் |
| ஆயிலியத்துக்கு | மூலம் | உத்திரட்டா | உத்திரம் |
| மகத்துக்கு | பூராடம் | ரேவதி | அஸ்தம் |
| பூரத்துக்கு | உத்திராட | அசுபதி | சித்திரை |
| உத்திரத்துக்கு | திருவோண | பரணி | சுவாதி |
| அஸ்தத்துக்கு | அவிட்டம் | கார்த்திகை | விசாகம் |
| சித்திரைக்கு | சதயம் | ரோகணி | அனுஷம் |
| சுவாதிக்கு | பூரட்டாதி | மிருகசிரம் | கேட்டை |
| விசாகத்துக்கு | உத்திட்டா | திருவாதிரை | மூலம் |
| அனுஷத்துக்கு | ரேவதி | புனர்பூசம் | பூராடம் |
| கேட்டைக்கு | அசுபதி | பூசம் | உத்திராடம் |
| மூலத்துக்கு | பரணி | ஆயிலியம் | திருவோணம் |
| பூராடத்துக்கு | கார்த்திகை | மகம் | அவிட்டம் |
| உத்திராடத்துக் | ரோகணி | பூரம் | சதயம் |
| திருவோணத்து | மிருகசிரம் | உத்திரம் | பூரட்டாதி |
| அவிட்டத்துக்கு | திருவாதி | அஸ்தம் | உத்திரட்டா |
| சதயத்துக்கு | புனர்பூசம் | சித்திரை | ரேவதி |
| பூரட்டாதிக்கு | பூசம் | சுவாதி | அசுபதி |
| உத்திரட்டாதி | ஆயிலியம் | விசாகம் | பரணி |
| ரேவதிக்கு | மகம் | அனுஷம் | கார்த்திகை |

ஜென்ம நட்சத்திரத்துக்கு 16-ம் நட்சத்திரம் சாங்காதியம், 18-சமுதாயிகம், 19-ஆதானம் 21-தேசம், 25-மானதம், 21-சாதி, 27-அபிஷேகம்.

கிரகவுதைப்பு அல்லது லப்தை கிரகவேதை கிரகவேதையின்தொகை, கிரகவேதையின்பெயர்.

தினகரனேரேறரித்தீவேப்பினர்பின்மூன்மூன்
றெகித்தலல்லின்மதிவேய்தார்சேலையுள்ளோர்நீப
மனன்முடியாலீரும்வேயாடிசுடர்மகமா
மறவிமன்றூராமகிலேயும்மிதுவாமதியாள்
புனலனையேருங்கணுமாமுதற்றுகைவைதினனே
போதன்மகித்துடிசூல்பூசவ்வேள்சூன்பொய்கே
தனல்கதைதோஷம்மாஞ் சக்கரமெமன்கண்டரு
சாநேர்விக்கொடுமை குறைபாசவிபமாமே. [ஞ்

சூரியன்-செவ்வாய்-வியாழன்-சனி இவர்களுக்குப் பிரதட்சணமாகவும் சந்திரன்-புதன்-சுக்கிரன் ராகு கேது இவர்களுக்கு அப்பிரதட்சணமாகவும், எண்ணிக்கொள்க.

| | |
|---|---|
| சூரியன் நின்ற நாளுக்கு | 12-ம் நாளும், |
| சந்திரன் நின்ற நாளுக்கு | 22-ம் நாளும், |
| செவ்வாய் நின்ற நாளுக்கு | 3-ம் நாளும், |
| புதன் நின்ற நாளுக்கு | 7-ம் நாளும், |
| வியாழம் நின்ற நாளுக்கு | 6-ம் நாளும், |
| சுக்கிரன் நின்ற நாளுக்கு | 5-ம் நாளும், |
| சனி நின்ற நாளுக்கு | 8-ம் நாளும், |
| ராகு-கேது நின்ற நாளுக்கு | 9-ம் நாளும், |
| | உதைப்பாகும். |

சந்திரன்நீங்கலாக ரவிநின்றநாளுக்கு 5-7-8-9-14-23-10-15-18-21-22-27-ம் நாளும்,

| | |
|---|---|
| சேய் நின்ற நாளுக்கு | 7-21-15-10-ம் நாளும், |
| புதன் நின்ற நாளுக்கு | 24-18-8-ம் நாளும், |
| வியாழம் நின்ற நாளுக்கு | 9-7-ம் நாளும், |
| வெள்ளி நின்ற நாளுக்கு | 9-7-ம் நாளும், |

சனி நின்ற நாளுக்கு 5-6-20-11-10-ம் நாளும்,
ராகு-கேது நின்ற நாளுக்கு 7-ம் நாளும்,
வேதையாகும் ரவிவேதையாகும்.

ரவிவேதை 11-க்கும் பிரமம், பூகம்பம், சூலம், பூசல், படை, சூனியம், பொய்,கேது, அனல், தண்டம், தோஷம் என்றும்.

சேய்வேதை 4-க்கும், சக்கரம், காலன், கண்டம், சூலம், என்றும்.

புதவேதை 3-க்கு மரணமென்றும்,
குருவேதை 2-க்கு கொடுமையென்றும்,
வெள்ளிவேதை 2-க்கு விரணம் என்றும்,
சனிவேதை 5-க்கும் பாசபந்தனமென்றும்,
ராகு-கேது வேதை 1-க்குநிபம்என்றும்பெயராம்

ஜன்மானுஜன்மங்களில் கூடாதகாரியமும் கூடுங்காரியமும்

விருத்தம்.

கற்பிணைள்மூன்றிலெண்ணெய் கடிமணம்சிரார்த்தபோக்கு, வற்புறுபிணிமருந்து மயிர்வினை மருவலாகா, விற்புகலுழுதல்விற்றல் விருந்துண்ணலறங்கள்செய்தல்,பொற்பணிமகுடமாடை புனைதலாம் புகலுமாதே.

ஜனனவார நட்சத்திரத்திதிகளில் எண்ணெயிட, விவாகஞ்செய்ய, நூதனமாகத்திதிசெய்ய, யாத்திரைபோக, மருந்துகொள்ள, க்ஷவரம் செய்துகொள்ளலாகாது.

உழவுசெய்ய, விதைவிதைக்க, விருந்துசெய்ய,தருமஞ்செய்ய, ஆபரணம்பூண,முடிசூட்டிகோடியுடுக்க உத்தமம்.

## கூடாநாள் விருத்தம்.

ஆதிரைபரணி கார்த்திகை யாயிலியமுப்பூரங்
கேட்டை, தீதுறுவிசாகஞ்சோதி சித்திரைமகமி

ராகும், மாதனகொண்டார் தாராவழிநடைபட்டார்மீளார், பாய்தனிற் படுத்தார்தேரூர் பாம்பின்வாய்த் தேரைதானே

விருத்தம்.

மாலவன்றனுதயமாயிரங்குற்றம்போக்கும்
வன்புகரோன்பதினாயிரங்குற்றமாய்க்கும்
சிலமறையோனூறுயிரங்குற்றநீக்கும்
செப்பரியசுபயோகநூறுகுற்றஞ்செருக்கும்
சோலையிளங்குயிலனையாய் சொல்லமுதயோகம்
தோற்றரியதீமையெல்லாஞ்சொல்லாமலோட்டு
கோலவிளங்கதிர்கண்டபனிபோலத்தேயுங்
குருவெள்ளிபுதனேக்கக்குற்றமெல்லாந்தானே

தோஷநிவாரணம்.

புதன் லக்கினத்திலிருந்தால் 1000-குற்றம்நீங்கும்
சுக்கிரனிருந்தால் 10000-குற்றம் நீங்கும்,
குருவிருந்தால் 1000000-குற்றம் நீங்கும்,
சுகயோகம் 100-குற்றம் நீங்கும்,
அமுதயோகம் சகலகுற்றமு நீங்கும்,
குருசுக்கிரன்புதன் பார்வைசகலகுற்றமும்நீங்கும்

நக்ஷத்திரயோகம்.

வனவசன்முதல்முறநீர் புள்ளீரிரதர்பூசம்
வாவியிவைதொட்டுதைய மானதினத்தளவா
கினதையெழுவர்ச்சிதல் யோகமிருத்தைகே
டிறலமிர்தசுடசித்தபரிகமிருவினைப்பேர்
தனதுறனசொருவரைநேர் நிருத்தியதிற்குறுகாய்
சாற்றும்வரைபதின்மூன்றுத் தரித்தல்சிரமாகக்
கனன்மதலூழ்க்கெதிர்நாளில் யாருநினுமேகார்க்
களமிருநாழிகைநாளீ ருகுலமாதவனே.

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறில் | விசாகம் | வியாழனில் | ரோகணி |
| திங்களில் | பூராடம் | வெள்ளியில் | பூசம் |
| செவ்வாயில் | அவிட்டம் | சனியில் | உத்திரம் |
| புதனில் | ரேவதி | | |

ஆகிய இந்த நட்சத்திரத்திரம் தொட்டு நாள நக்ஷத்திரம் வரை எண்ணிக்கண்ட தொகையை 7-க்குக்கொடுக்க வந்தமிச்சம்,

| | | | |
|---|---|---|---|
| ஆகில் | இருத்தையோக | 5-ஆகில் | சுபம் |
| 2-ஆகில் | நாசம் | 6-ஆகில் | சித்தம் |
| 3-ஆகில் | மரணம் | 7-ஆகில் | பரிகம் |
| 4-ஆகில் | அமிர்தம் | | |

அசுபசுபங்கூடில் விஷயோகப்,ஓர்வரையினை நேர்நிறுத்தி குறுக்காக 13-வரை சீறி உச்சிவரையில் கார்த்திகைமுதலாக நட்சத்திரவரைக்கும் எதிர்வரை நட்சத்திரத்திற் கிரகங்கள் நிற்கில் அது ஏகார்க்களம், நட்சத்திர அந்தியம் 2-நாழிகையும் ஆகுலம்.

## ஏகார்க்கள சக்கரம்.



ஏகார்க்களம்.

அன்றைய சூரியஸ்புடத்தை 12-இராசியில் வாங்கி நின்ற சேடத்தில் கண்ட நாளும் அதற்கு 2-7-70-11-14-16-18-20-ஆம் நாள்களுமாகும்.

ஐசிரசு.

விதிபாதயோகத்தில் பிற்பாதியாம். இவை சுபகாரியங்களுக்கு விலக்கு குளிகன் விட்டலக்கினமும் தியாச்சியம்விட்டலக்கினமும் சுபகாரியங்களுக்கு ஆகும், முகூர்த்தத்துக்குகிருஷ்ணஷ்டமி ஆகும்.

வளர்பிறை.

| | | | |
|---|---|---|---|
| பிரதமை | ... | கிமுஸ்துக்கி | பவம் |
| துதியை | நவமி | பாலவம் | கவுலவம் |
| திரிதியை | தசமி | தைதுலே | கரசை |
| சதுர்த்தி | ஏகாதசி | வனசை | பத்திரை |
| பஞ்சமி | துவாதசி | பவம் | பாலவம் |
| சஷ்டி | திரயோதசி | கவுலவம் | தைதுலே |
| சப்தமி | சதுர்த்தசி | கரசை | வனசை |
| அஷ்டமி | பௌர்ணமி | பத்திரை | பவம் |

தேய்பிறை.

| | | | |
|---|---|---|---|
| பிரதமை | அஷ்டமி | பாலவம் | கவுலவம் |
| துதியை | நவமி | தைதுலே | கரசை |
| திரிதியை | தசமி | வனசை | பத்திரை |
| சதுர்த்தி | ஏகாதசி | பவம் | பாலவம் |
| பஞ்சமி | துவாதசி | கவுலவம் | தைதுலே |
| சஷ்டி | திரயோதசி | கரசை | வனசை |
| சப்தமி | சதுர்த்தசி | பத்திரை | சகுனி |
| ... | அமாவாசை | சதுஷ்பாத | நாகவம் |

இப்படித்திதியை இரண்டாகப் பிரித்து முற்பங்கு ஒருகரணமும் பிற்பங்குங்கு ஒருகரணமுங் கொள்ளவும்.

## காலவோரை.

| ஞாயிற்றுக்கிழமையில். | | திங்கட்கிழமையில். | |
|---|---|---|---|
| 1-வது | சூரியவோரை | 1-வது | சந்திரவோரை |
| 2-வது | சுக்கிரவோரை | 2-வது | சனிவோரை |
| 3-வது | புதவோரை | 3-வது | வியாழவோரை |
| 4 வது | சந்திரவோரை | 4-வது | செவ்வாய்ஓரை |
| 5-வது | சனிவோரை | 5-வது | சூரியவோரை |
| 6-வது | வியாழவோரை | 6-வது | சுக்கிரவோரை |
| 7-வது | அகாரகவோரை | 7-வது | புதவோரை |

இந்தப்படி மற்றக்கிழமைகளுக்கும் அந்தந்த வார ஓரைமுதலாக ஆறுவது வாரவோரை அடுத்துவரப் பார்த்துக்கொள்ளவும்.

நாள் 1-க்கு ஓரை 24, ஓரை 1-க்கு நாழிகை 2½, இவற்றுள் சூரியவோரையும் சனியோரையும் ஆகாவாம்.

### கவி.

அருக்கன்புகர்புந்தி யிந்துதுன்மந்தனே டந்தனன்சேய், இருக்குங் கடிகை யிரண்டரை யாமி வைநாடிடிலோ, மரிக்குமணஞ்செயுமாலையுஞ்சாத்து மகிழ்ந்திருந்து, சிரிக்குஞ் சிலுகிடுஞ் செல்வமுண்டாமெனத் தேர்ந்துகொள்ளே.

### வாரத்தியாச்சியம்

| | |
|---|---|
| ஞாயிறுக்கு | 32-நாழிகைக்குமேலு |
| திங்களுக்கும்-புதனுக்கும் | 42-க்குமே[illegible]ம் |
| செவ்வாய்க்கும்-வியாழத்துக்கும் | 31-க்கு[illegible]ம் |
| வெள்ளிக்கு | 21-க்கு[illegible]லும் |
| சனிக்கு | 14-க்[illegible]மும் |

மூனேமுக்கா-நாழிகை தியா[illegible]யமம்.

நக்ஷத்திரப்பார்வை தெக்ஷணவேதை வாமவேதை

கர்னவேதை நாற்கோணவேதை சமுகவேதை.

இயமுறந்தார்வேய்முடியா னென்றினநோக்கயன்று
 ரிரைசோதிமகமதிநாட் கெரிசுடர்கண்டார்சேய்க்
கயநடவிவிதுப்புதனே ரசிதனளவுளநாட்
 கவுண்டீபமவுணுகநோய்முகன்குருநாட்கதிக
முயலகனேர்தாராளவான்முதற்கலையும்பணேநேர்
 மூன்றரியும்பரணிசுடர் முறமுமியமுடித்தீ
பயல்வலமற்றதுகவுணற் கோணமற்றுனனமாய்ப்
 பவுமனெமனுறல்பரிநேர் பகர்வதிதற்காமே.

ரவிநின்ற நக்ஷத்திரம் 2[illegible]-16-8-7-21-11-ஆம் நக்ஷத்திரத்தையும்.

மதிநின்ற நக்ஷத்திரம் 4-8-18-15-10-ஆம் நக்ஷத்திரத்தையும்.

செவ்வாய்நின்ற நக்ஷத்திரம் 3-15-7-8-ஆம் நக்ஷத்திரத்தையும்.

புதன்-வியாழன்- சுக்கிரன்-சனிநின்ற நக்ஷத்திரங்கள்-3 5-ஆம் நக்ஷத்திரத்தையும் பார்க்கும்.

சனிநின்ற நக்ஷத்திரத்துக்கு 19-15-ம்

வியாழன்நின்ற நக்ஷத்திரத்துக்கு 19-10-ம் அதிகப்பார்வை.

சனிசேய்நின்ற நக்ஷத்திரத்துக்கு 5-6-7-8-12-13-14-வது நக்ஷத்திரம் தெக்ஷணவேதை

17-18-19-22-வது நக்ஷத்திரம் வாமவேதை

2-15-16 வது நக்ஷத்திரம் கர்னவேதை

29-21-3-20-வது நக்ஷத்திரம் நாற்கோணவேதை

4-9-10-11-23-24-25-27-வது நக்ஷத்திரம்சமுகவேதை

நக்ஷத்திரங்களுக்கு இருப்பிடம் நக்ஷத்திரதேசம்·

பரிமுதலூர்தருவனங்கா டிச்சால்கட்டிலின்கீழ்
பாகணிலாத்தேர்க்கீழ்நெற்குதிர்மனைகுப்பைநெல்
லரியலதுகதிர்வெறும்வீ டயங்கரைசெய்பருத்தி
யங்கணம்பாழ்வசனங்கடைலாயங்கூரையாடை
நிருமலஞ்செய்துறைகோவி லாலைசெக்குமறுகு
நெருப்பிடத்தில்பூஞ்சோலை நிகழ்த்துவதீறளவு
மருவுமிடப்பேர்க்கிதன்மேற் லேசமதற்கதன்பேர்
வைத்ததற்கக்ஷரப்பெயராய்வழுத்துகமாமுதற்கே

அசுபதிக்கு-ஊர்
பரணிக்கு-தரு
கார்த்திகைக்கு-வனம்
ரோகணிக்கு-காடிச்சா
மிருகசிரத்துக்கு - கட்டி
லின்கீழ்
திருவாதிரைக்கு-நிற்குந்
தேரின்கீழ்
புனர்பூசத்துக்கு நெற்கு
பூசத்துக்கு-மனை [திர்
ஆயிலியத்துக்கு-குப்பை
மகத்துக்கு-நெல்லரி அல்
லது-நெற்கதிர்
பூரத்துக்கு-வெறுவீடு
உத்திரத்துக்கு-ஜலம்
அஸ்தத்துக்-ஜலக்கரை
சித்திரைக்கு-வயல்

சோதிக்கு-பருத்தி
விசாகத்துக்கு முற்றம்
அநுசத்துக்குபாழ்வன
கேட்டைக்கு-கடை.
மூலத்துக்-குதிரைலாய
பூராடத்துக்கு-கூரை
உத்திராடத்துக்கு - வ
ண்ணான் துறை
திருவோணத்துக்கு
கோவில்
அவிட்டத்துக்கு-ஆலை
சதையத்துக்கு-செக்கு
பூரட்டாதிக்கு-தெரு
உத்திரட்டாதிக்கு- அக்
கினி-மூலைக்கிரகம்
ரேவதிக்கு-பூஞ்சோலை
இருப்பிடமாம்.

நக்ஷத்திர நாமங்களிற் சொல்லியபடி அந்தந்தஅக்ஷரங்களை முதலில் வைத்து அசுபதி முதலானவற்றிற்குத் தேசஞ்சொல்லுக.

நக்ஷத்திர சத்துரு மித்துரு பஞ்சபக்ஷி கெண்டாந்தம்

விதவைநக்ஷத்திரம்.

நான்கெனுமீன்று ரூழபார் நாவாய்மாலரச
 னக்கனிவைநட்பிவைக்கா மற்றதற்காம்வான்கோன்
மான்கணிமீறிம்மூன்றுக் கொன்றினுக்கோர்நான்காய்
 வரலிடநேர்பரணிமுதன் மற்றவைக்குப்பகையா
மான்கடவுணேராறைத் தாறைந்தீதாந்தை
 யக்கமென்றுயுதக்காறே கைவலியாளுகு
மூன்களுணவோர்கோணத் தாதியதற்கிறி [குளவோ
 றுறுங்கால்கெண்டாந்தம் விண்ணோர்தார்விகலைக்

| | | |
|---|---|---|
| மூலம் | ரோகணி | உத்திரட்டாதி |
| பூசம் | ரேவதி | திருவாதிரை |
| அஸ்தம் | திருவோணம் | |

இவை ௮-ம் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று மித்திரமாம்.

| | |
|---|---|
| கேட்டைக்கும் | பரணிக்கும் |
| அனுடத்துக்கும் | கார்த்திகைக்கும் |
| விசாகத்துக்கும் | ரோகணிக்கும் |
| சோதிக்கும் | மிருகசிரத்துக்கும் |
| அவிட்டத்துக்கும் | திருவாதிரைக்கும் |
| திருவோணத்துக்கும் | புனர்பூசத்துக்கும் |
| உத்திராடத்துக்கும் | பூசத்துக்கும் |
| பூராடத்துக்கும் | ஆயிலியத்துக்கும் |
| ரேவதிக்கும் | மகத்துக்கும் |
| உத்திரட்டாதிக்கும் | பூரத்துக்கும் |
| பூரட்டாதிக்கும் | உத்திரத்துக்கும் |
| சதையத்துக்கும் | அத்தத்துக்கும் |

பகையாம்.

| | |
|---|---|
| அசுபதிக்கு | சித்திரைமூலமும் |
| சித்திரைக்கு | அசுபதிமூலமும் |
| மூலத்துக்கு | அசுபதிசித்திரையும் |

| | | |
|---|---|---|
| திருவாதிரை | பூசம் | மகம் |
| புனர்பூசம் | ஆயிலியம் | பூரம் |

இவை 6-ம் ஆந்தை.

| | | |
|---|---|---|
| உத்திரம் | சித்திரை | விசாகம் |
| அஸ்தம் | சோதி | |

இவை 5-ம் காகம்.

| | | |
|---|---|---|
| அனுஷம் | மூலம் | உத்திராடம் |
| கேட்டை | பூராடம் | திருவோணம் |

இவை 6-ம் கோழி.

| | | |
|---|---|---|
| அவிட்டம் | பூரட்டாதி | ரேவதி |
| சதையம் | உத்திரட்டாதி | |

இவை 5-ம் மயில்.

| | | |
|---|---|---|
| அசுபதி | கார்த்திகை | மிருகசிரம் |
| பரணி | ரோகணி | |

இவை 5-ம் வல்லூறு

அசுபதி-மகம்-மூலத்தின் முதற்பாதமும்.

ஆயிலியம்-கேட்டை-ரேவதியின் நாலாம்பாதமும் கெண்டாந்தம்.

புனர்பூசமும்-பூசமும் விதவை நக்ஷத்திரம்.

நக்ஷத்திர யோகம் நக்ஷத்திர அவமிருத்து
அனற்சிகை குருதோஷம்.

அவ்வகிவாத்தியமுமடைப் பவுணருமால்குளமு
மற்கிறைதீபமுநேர்முன் னடிமுதலாய்ரோக
மிவ்வடிதொட்டுளமூன்ற தவமிருத்தப்பரிநே [று
ரேழரைக்கேழரையந்தத்தைதந்திருபத்தொன்றே

சவ்வுவதொன்பானிவைநேர் சோதிவரைமுன்பின்
காண்பதுவெட்டிருபதின்மேற் கதுவுதல்பத்திவைநேர்
வவ்விணைற்சிகையிதுவாப் பிரதமையிவ்விடையின்
மருவும்விடகடிகையினுட் குகுமலையத்தவனே.

| | |
|---|---|
| ஆயிலியம் | உத்திரட்டாதியின் முதற்பாதமும் |
| பரணி | மூலத்தின் 2-ம் பாதமும் |
| திருவோணம் | உத்திரத்தின் 3-ம் பாதமும் |
| மிருகசிரம் | சோதியின் 4-ம் பாதமும் |
| ரோகணி ஆயிலியம் | உத்திரட்டாதியின் 3-ம் பாதமும் |
| பரணி | மூலத்தின் 4-ம் பாதமும் |
| அவிட்டம் | அஸ்தத்தின் முதற்பாதமும் |
| திருவாதிரை | விசாகத்தின் 2-ம் பாதமும் |

அவமிருத்து

அசுபதி - ரோகணி - புனர்பூசம் - மகம் அஸ்தத்தில் $7\frac{1}{2}$-நாழிகைக்குமேல் $7\frac{1}{2}$-நாழிகையும்,

பரணி-மிருகசிரம்-பூசம்-பூரம் சித்திரையில் 55 - க்கு மேல் 5-நாழிகையும்,

கார்த்திகை-திருவாதிரை-ஆயிலியம்-உத்திரம்-சோதியில் 21-க்குமேல் 6-நாழிகையும்,

விசாகம்-மூலம் - திருவோணம் - பூரட்டாதியில் ஆதி 8-நாழிகையும்,

அனுஷம் - பூராடம் - அவிட்டம் - உத்திரட்டாதியில் இறுதி 8-நாழிகையும்,

கேட்டை உத்திராடம்-சதையம் - ரேவதியில் 20-க்கு மேல் 10-நாழிகையும் அனற்சிகை

அமாவாசை அந்தியமும் பிரதமை ஆதியுமாக வரும் நக்ஷத்திரத்தில் விஷகடிகை பொருந்தில் அது குருதோஷம்.

கீழ் அல்லது பூமிநிலை நக்ஷத்திரம், உச்சநிலை நக்ஷத்திரம், இடைநிலை நக்ஷத்திரமும், ஜலசுஷ்க நக்ஷத்திரம்.

ஆருவதின்பாற்கோணென்பது மதிக்கோண்மூன்
மல்லதுநேர்கீழ்மேன் மற்றதுவாமம்புலிமால்
வாகனன்கைமுதனுன்கு மால்கணுக்கீர்மூன்று
மாகவிவையீராறு மறலெனன்மற்றதுவாங்
கோகனகனற்றிலைச நேர் குறித்தவரைக்கிடையிற்
குறுக்குயரமும்மூன்றாய் குறுகமுடிக்கனலீ
தேகமுதற்றிசைநான்கு மிடையிலிருமூன்று
மிகழ்தலிதுசாற்பூர்த்திப் பெயரிதுவென்பார்.

| | | |
|---|---|---|
| பரணி | அசுபதி | கார்த்திகை |
| பூரம் | மகம் | உத்திரம் |
| பூராடம் | மூலம் | உத்திராடம் |

இவை 9-ம் கீழ்நிலை நக்ஷத்திரம்.

| | | |
|---|---|---|
| மிருகசிரம் | சித்திரை | அவிட்டம் |

இவை 3-ம் உச்சநிலை நக்ஷத்திரம்.

| | | |
|---|---|---|
| ரோகணி | சதையம் | அனுஷம் |
| அஸ்தம் | புனர்பூசம் | உத்திரட்டாதி |
| திருவோணம் | விசாகம் | ஆயிலியம் |
| திருவாதிரை | பூரட்டாதி | கேட்டை |
| சோதி | பூசம் | ரேவதி |

இவை 15-ம் இடைநிலை நக்ஷத்திரம்.

| | | |
|---|---|---|
| மிருகசிரம் | சோதி | சதையம் |
| கேட்டை | விசாகம் | புனர்பூசம் |
| அஸ்தம் | திருவோணம் | பூசம் |
| சித்திரை | அவிட்டம் | ஆயிலியம் |

இவை 12-ம் ஜல நக்ஷத்திரம்.

| | | |
|---|---|---|
| அசுபதி | மகம் | பூராடம் |
| பரணி | பூரம் | உத்திராடம் |
| கார்த்திகை | உத்திரம் | பூரட்டாதி |
| ரோகணி | அனுஷம் | உத்திரட்டாதி |
| திருவாதிரை | மூலம் | ரேவதி |

இவை 15-ம் சுஷ்கநக்ஷத்திரம்.

கீழ்மேல் ஒருவரையும் தென்வடல் ஒருவரையு மாகக்கீறி, கோணிலாவ 9-வரை நேர்குறுக்காகக் கீறி, உச்சிவரையில் கார்த்திகை முதலாக நக்ஷத்திரங் களைவைத்து ரவிநின்ற நக்ஷத்திரத் திசைவரை நக்ஷத் திரத்தில் கிரகமிருக்கில் நாற்றிசை நட்சத்திரமும் விலக்கப்படுவன, கோண்வரை 9-னுமுள்ள நக்ஷத்தி ரங்களில் ரவியும் கிரகங்களுங் கலக்கில் அக்கோண் வரை நக்ஷத்திரம் 6-ம் விலக்கப்படுவன, இது கும்ப விர்த்தி.

## கும்பபூர்த்தி சக்கரம்.



வேதக்கயிறு சுமங்களரச்சுஸ் திரீ தீர்க்கப்பொருத்தம்.

பரைக்கோண்மாறிக்கிறிக் குறுக்கொருநான்காய்த்
பாற்கோணுநந்நான்காய்ப்பற்றுவரைக்கிடப்பார்
சிரப்பான்மாலைத்திருவர்தினமுமொருவரையிற்
சேருதலாகாதிதுவேதக்கயிறுசேஷ
ணரிக்கோண்டார்க்கோண்டைப்படிக்கோண்மால்யாழ்கோ
ணடிமருங்குலசுடுகௌமம்புலிக்கோண்சிரசாய்ப்
பொருத்தான்பெண்ணுளொருகோணுறிலவரச்சென்னப்
புகல்பதின்மூன்றிவணுண்மேற்புல்லியடர்க்கமுமே.

மூக்கோணம் மூனை மேலாகக்கீறி, குறுக்காக நாலுவரைகீறி, இருகோணங்களுக்கு மேலாக நந்நான்குவரைகீறி, இடப்பாலுச்சவரையில் அசுபதிமுதல் நக்ஷத்திரங்களை வைத்து, ஆண்பெண் நக்ஷத்திரம் ஒருவரையில் வரில் ஆகாது இதுவேதக்கயிறு.

| | | |
|---|---|---|
| ஆயிலியம் | ரேவதி | மகம் |
| கேட்டை | அசுபதி | மூலம் |

இவை 6-ம் பாதக்கயிறு.

| | | |
|---|---|---|
| பூசம் | உத்திரட்டாதி | பூரம் |
| அனுஷம் | பரணி | பூராடம் |

இவை 6-ம் இடைக்கயிறு.

| | | |
|---|---|---|
| கார்த்திகை | உத்திராடம் | விசாகம் |
| உத்திரம் | புனர்பூசம் | பூரட்டாதி |

இவை 6-ம் வயிற்றுக்கயிறு.

| | | |
|---|---|---|
| ரோகணி | திருவோணம் | சோதி |
| அஸ்தம் | திருவாதிரை | சதையம் |

இவை 6-ம் கண்டக்கயிறு.

| | | |
|---|---|---|
| மிருகசிரம் | சித்திரை | அவிட்டம் |

இவை 3-ம் முடிக்கயிறு.

ஆண் பெண் நக்ஷத்திரம் ஒருகயிற்றில் வரில் ஆகாது பெண் நட்சத்திரந்தொட்டு 13-நக்ஷத்திரத்துக்குமேல் புருஷன் நக்ஷத்திரம் வரில் ஸ்திரீ தீர்க்கம்.

வேதக்கயிறு,




சுமங்களரசு,



## அமுர்தகடிகை.

மூலம், அஸ்தத்தில் 45-நாழிகைக்குமேலும்,
ஆயிலியத்தில் 50-நாழிகைக்குமேலும்,
ரோகணியும் 52-நாழிகைக்குமேலும்,
பூராடத்தில் 44-நாழிகைக்குமேலும்
அசுபதியில் 42-நாழிகைக்குமேலும்,
திருவாதிரையில் 35-நாழிகைக்குமேலும்,
பூரத்தில் 34-நாழிகை குமேலும்,
பரணி,உத்திரட்டாதியில் 48-நாழிகைக்குமேலும்,
கார்த்திகை, புனர்பூசம், மகம், ரேவதியில் 54-நாழிகைக்கு மேலும்,
பூசம், சித்திரை, உத்திராடத்தில் 44-நாழிகைக்கு மேலும்,
உத்திரம் சதையத்தில் 42-நாழிகைக்குமேலும்,
அனுடம், திருவோணம்அவிட்டத்தில், 34-நாழிகைக் குமேலும்,
பூரட்டாதியில் 40-நாழிகைக்கு மேலும்,
4-நாழிகை அமுர்தமிருக்கும்.

மாகேந்திரநக்ஷத்திரம்நக்ஷத்திரமண்டலம்பாமதினம்
மூம்மூன்றுயனுஜெனனத்ஸதந்துதரமேறின்
மொழிவதுமாகேந்திரம் யாழ்மூலமெமன்முரசீ
றம்மான்கம்மும்மாலவேய்தேர் புலளியவசித்
தாடியுமாவகிபுள்வெயிலான் சுடராடையுநே
ரிம்மூன் றுமண்டலநீர்மாகேந்திரம்வாயு
வென்பதனன்மற்றதர் காமிதமிலருக்கிடை
பம்மாம்ஸவுணருறுந்தினமாதம் வருடம்
படுபொழுதிறுபயஸமமூன் றுடெப்பவமாகுவதே.

பெண் நட்சத்திரத்துக்குமேல் 4-7-10-13-16-19-22-25-புருடன் நாளாகில் அதுமாத்திரம்.

| | |
|---|---|
| திருவாதிரை | ரேவதி |
| மூலம் | பூராடம் |
| சதயம் | மிருகசிரம் |
| உத்திரட்டாதி | |

இவை 7-ம் வருணமண்டலம்.

| | |
|---|---|
| திருவோணம் | கேட்டை |
| புனர்பூசம் | அவசித்து |
| ரோகணி | உத்திராடம் |
| அனுஷம் | |

இவை 7-ம் மாகேந்திரமண்டலம்.

| | |
|---|---|
| அசுபதி | உத்திரம் |
| ஆயிலியம் | சோதி |
| அவிட்டம் | சித்திரை |
| அஸ்தம் | |

இவை 7-ம் வாயுமண்டலம்.

| | |
|---|---|
| பரணி | பூரம் |
| கார்த்திகை | விசாகம் |
| பூசம் | பூரட்டாதி |
| மகம் | |

இவை 7-ம் அக்கினிமண்டலம்.

பாவர் மத்தியதினமும், பாவரிருக்கிறதினமும், மாதாந்தியம் 2 தினமும், வருடாந்தியம் 15-தினமும் பாவதினம்.

நக்ஷத்திரவடிவு நக்ஷத்திரத்தொகை,
நக்ஷத்திரத் திசைச்சூலம்.

மாச்சிரசவ்வடுபுகற்றை யூற்றுறேங்காய்க்கண்
மண்மணியாவணம்புடற் பூவம்மிறுகங்கைமான்
கோசுடரம்முறமுடப்புல் லீட்டிபொற்கானங்கோ
குவித்ததவிட்டுக்கூட்டங் கொத்தோடத்துருவா

முச்சிவைமூக்குளநாற்கான் மற்றதுநேர்வேய்மா
முறந்தீயாறன்மதிமான் மூன்றீராறத்தேர்
தேச்சுடராடைக்கேகபவீப்பன்மறைமற்றுந்
திசைச்சூற்புட்கோன்மாமாறேர்தையென்றுத்திரமே

| | |
|---|---|
| அசுபதி 6-ம் | குதிரைத்தலைபோல் |
| பரணி 3-ம் | அடுப்பு ,, |
| கார்த்திகை 6-ம் | கற்றை |
| ரோகணி 12-ம் | ஊற்றல் |
| மிருகசிரம் 3-ம் | தேங்காய்க்கண் |
| திருவாதிரை 1-ம் | இராசமணி |
| புனர்பூசம் 6-ம் | கடைவீதி |
| பூசம் 4-ம் | புடலம்பூ |
| ஆயிலியம் 4-ம் | அம்மி |
| மகம் 4-ம் | நுகம் |
| பூரம்-உத்திரம் 4-ம் | கட்டிற்கால் |
| அத்தம் 4-ம் | கைத்தாளம் |
| சித்திரை 1-ம் | புலிக்கண் |
| சோதி 1-ம் | தீபம் |
| விசாகம் 6-ம் | சுளகு |
| அனுஷம் 4-ம் | முடப்பனை |
| கேட்டை 4-ம் | ஈட்டி |
| மூலம் 4-ம் | பொற்காலம் |
| பூராடம் உத்திராடம் 4-ம் | கட்டிற்கால் |
| திருவோணம் 3-ம் | முழக்கோல் |
| அவிட்டம் பலவுந் | தவிட்டுக்கூட்டம் |
| சதையம் 4-ம் | பூங்கொத்து |
| பூரட்டாதி உத்திரட்டாதி 4-ம் | கட்டிற்கால் |
| ரேவதி 4-ம் | ஓடம் |

அவிட்டம்-கேட்டை சிழ்த்திசைச்சூலம்
அசுபதி-திருவோணம் தென்திசைச்சூலம்
ரோகணி-பூசம் மேற்றிசைச்சூலம்
அஸ்தம்-உத்திரம் வடதிசைக்சூலம்

## சென்மாதி நட்சத்திரப்பெயர் அவற்றிற்கதிபதி,

## நட்சத்திரகுலம்.

என்றருகன்பணிகுருக்கே திந்தசிதன்சிதன்சேய்க்
சிகத்துதயமுதற்சென்ம சம்பவிபச்சேமம்
பின்றகுப்ரத்தியாரமச்சா தகம்வதைமித்திரமிப்
பேர்ப்பரம்மிவைநோக்காங் குலப்பேர்பேசிடிற்றீ
யொன்றுமைத்ரயமுங்தேர்ப்புல் லோடநுகமும்மூன்
னும்பரவசித்தினனுந் தாரொடுத்ரங்களுஞ்சே
டன்றினக்கோண்குருகுமதிக் கோன்மனுமற்றதுநால்
வரசுரர்வேடர்கீழ்மேல் வாரமதிப்பதுவே.

## சென்ம நக்ஷத்திரத்துக்குப் பெயர்.

சென்மன்-அதற்கு, அதிபதி ஆதித்தன்
2-வதுக்கு-சம்பத்து, அதிபதி புதன்
3-வதுக்கு-விபத்து, அதிபதி ராகு
4-வதுக்கு-க்ஷேமம், அதிபதி வியாழன்
5-வதுக்கு-பிரத்தியாரம், அதிபதி கேது
6-வதுக்கு-சாதகம், அதிபதி சந்திரன்
7-வதுக்கு-வதை, அதிபனி சனி
8-வதுக்கு-மயித்திரம், அதிபதி சுக்கிரன்
9-வதுக்கு-பரமமயித்திரம், அதிபதிசெவ்வாய்

இவற்றை அனுதிரிஜெமன்மங்களுக்கும் நேராக வைத்துக்கொள்க.

கார்த்திகை-பூர்த்திரையம் 4-ம் பிரமகுலம்,

ரோகணி-அனுஷம்-ரேவதி மகம் 4-ம், } க்ஷத்திரியகுலம்,

| | |
|---|---|
| அசுபதி-புனர்பூசம்- அவசித்து அஸ்தம் 4-ம் | வைசியகுலம், |
| பூசம்-உத்திரத்திரையம் 4-ம் | சூத்திரகுலம் |
| திருவாதிரை-சோதி-சதையம் மூலம் 4-ம் | இராட்சதகுலம், |
| மிருகசிரம்-சித்திரை-அவிட்டம்-கேட்டை 4-ம் | வேடர்குலம், |
| பரணி-ஆயிலியம் திருவோணம்-விசாகம் 4-ம் | நீசகுலம். |

விதி லபித முகூர்த்தம்.

மதிபொனுஞ்சுன்மாலேனனும் புகர்புதனுஞ்சிதனே
மன்னில்துமேமைதகுருவற்றதும் பெண்ணரிமா
னதிபருமாதவனிலதும்பகற்கிரவுக்கான்மீ
னரிக்காசருஞ்சிலை சாலசப்பதிப்போலது
முதுமகனும்வெயிறாதனிற்றதுங்கோல்விலரு
மூத்தவனில்லலரிச்சியும் மொழிதன்முடவோன்
விதுவுமதிசெயகால மற்றதுநாயிறுநேர்
வேளையுளவிவ்விபரம் விதில்பிதத்தியல்பே.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | 2-4-5-6-ம் ஜாமமும், |
| திங்கட்கிழமை | 1-4-5-7-8-ம் ஜாமமும், |
| செவ்வாய்க்கிழமை | 4-5-7-8-ம் ஜாமமும், |
| புதன்கிழமை | 2-3-4-6-7-8-ம் ஜாமமும், |
| வியாழக்கிழமை | 1-4-7-8-ம் ஜாமமும், |
| வெள்ளிக்கிழமை | 3-5-7-8-ம் ஜாமமும், |
| சனிக்கிழமை | 2-5-6-7-8-ம் ஜாமமும், |

அதிசய முகூர்த்தம்.
மற்ற ஜாமங்கள் அபஜெயமுகூர்த்தம்
இவை பகற்காலத்துக்காம்

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | 1-2 6-ம் ஜாமமும், |
| திங்கட்கிழமை | 2-4-6-8-ம் ஜாமமும், |
| செவ்வாய்க்கிழமை | 4-6-7-ம் ஜாமமும், |
| புதன்கிழமை | 2-6-7-ம் ஜாமமும், |
| வியாழக்கிழமை | 1-4-5-6-7-ம் ஜாமமும், |
| வெள்ளிக்கிழமை | 1-2-4-5-6-7-ம் ஜாமமும், |
| சனிக்கிழமை | 3-4-7-8-ம் ஜாமமும், |

அதிசயமுகூர்த்தம்.
மற்றஜாமங்கள் அபஜெயமுகூர்த்தம்.
இவை இராக்காலத்துக்காம்

இவற்றிற்கெல்லாம் ஒரு ஜாமம் $3\frac{3}{4}$-நாழிகையாகக் கொள்க

மாசத்துருவம், வருடத்துருவம், தினத்துருவம், தன்னியநாள்.

பரணிகுருகுதையாடி கண்முடியாழ்மூலம்
பரன்பனிதார்நாழியடுப்பசுரர்கரும்பருக்கன்
சுரர்படிராவாடைகலைதோகைபுற்புள்ளிவைநேர்
துரகமுதலாயிரண்டாய் சொல்லொருமாசமுமாய்
வருடமுமைப்பசிமுதலாய்க்கெதநடப்போடுபய
மானதெழுவர்க்கீயவான்மாதத்துதையந்
தருதினநேரினனளவிம்முத்தொகைசொன்மிகிலே
தள்ளிதுவென்மாதமிரண்டாவதன்யநாட்கே.

| | |
|---|---|
| சித்திரைமாதத்துக்கு | 2-19, |
| வைகாசிமாதத்துக்கு | 8-21, |
| ஆனிமாதத்துக்கு | 7-21, |
| ஆடிமாதத்துக்கு | 6-16, |
| ஆவணிமாதத்துக்கு | 6-17, |
| புரட்டாசிமாதத்துக்கு | 8-25, |

| | |
|---|---|
| ஐப்பசிமாதத்துக்கு | 2-19, |
| கார்த்திகைமாதத்துக்கு | 7-9, |
| மார்கழிமாதத்துக்கு | 7-25, |
| தைமாதத்துக்கு | 2-14, |
| மாசிமாதத்துக்கு | 14-23, |
| பங்குனிமாதத்துக்கு | 17-23, |

இவை மாதத்துருவம்.

ஐப்பிசி வருடாதியாக நடப்புடனே கெதமுங்கூட்டி இதனுடன் 1-ம் கூட்டி ஏழுக்குக்கொடுக்கவந்த சேடம் வருடத்துருவம்.

மாதம்பிறந்த வாரமுதல் ஞாயிறுவரை எண்ணிக் கண்டதொகை தினத்துருவம்.

இந்த 3- துருவமுங் கூட்டிச் சொல்வது தன்னியநாள்.

இத்தொகை நாளது மாதாந்தியத் தெய்திக்கு அதிகப்படில் எவ்வேழு தள்ளிச்சொல்லுக. இப்படி தன்னிய நாள் மாசம் இரண்டுதரம்வரும்,

இவை பகற்காம்,

காலன் அர்த்தப்பிரமான் எமகண்டன் குளிகன் இவர்கள் உதயமாகுங்காலே.

சரோருகன்மால்பொன்ன சிதனுக்குளநாற்றனைய
தாதையுதையத்திருநாழிகையுதையத்தவரராய்
விரோதகெதியாய்க்கடிகைநான்காய்மேன்மேலு
மேற்கொளுவாற்கிவைபோன்மேயதொருநான்கா
வரோதயமேல்வருவது தொட்டுரைதிடுவரோரை
வாரமுதனேராரும் வாரம்நடத்துவராற்
சிரோதயநேர்தாமசாத்திகமொடுராசதமாந்
தெசக்காலேமுக்காலுற்றிடுங்சனல்சொற்றிடலே

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | பகல் 2-ம் நாழிகையிலும் |
| சனிக்கிழமை | பகல் 6-லும், |
| வெள்ளிக்கிழமை | பகல் 10-லும், |
| வியாழக்கிழமை | பகல் 14-லும், |
| புதன்கிழமை | பகல் 18-லும் |
| செவ்வாய்க்கிழமை | பகல் 22-லும், |
| திங்கட்கிழமை | பகல் 26-லும், |

காலன் உதயமாவான

| | |
|---|---|
| புதன்கிழமை | பகல் 2-ம்நாழிகையிலும், |
| செவ்வாய்க்கிழமை | பகல் 6-லும், |
| திங்கட்கிழமை | பகல் 10-லும், |
| ஞாயிற்றுக்கிழமை | பகல் 14-லும், |
| சனிக்கிழமை | பகல் 18-லும், |
| வெள்ளிக்கிழமை | பகல் 22-லும், |
| வியாழக்கிழமை | பகல் 26-லும், |

அர்த்தப்பிரகான் உதயமாவான்,

| | |
|---|---|
| வியாழக்கிழமை | பகல் 2-ம் நாழிகையிலும், |
| புதன்கிழமை | பகல் 6-லும், |
| செவ்வாய்க்கிழமை | பகல் 10-லும, |
| திங்கட்கிழமை | பகல் 14-லும், |
| ஞாயிற்றுக்கிழமை | பகல் 18-லுல், |
| சனிக்கிழமை | பகல் 22-லும், |
| வெள்ளிக்கிழமை | பகல் 26-லும், |

எமகண்டகன் உதயமாவான்

| | |
|---|---|
| சனிக்கிழமை | பகல் 2-ம் நாழிகையிலும் |
| வெள்ளிக்கிழமை | பகல் 6-லும், |
| வியாழக்கிழமை | பகல் 10-லும், |

| | |
|---|---|
| புதன்கிழமை | பகல் 14-லும், |
| செவ்வாய்க்கிழமை | பகல் 18-லும, |
| திங்கட்கிழமை | பகல் 22-லும், |
| ஞாயிற்றுக்கிழமை | பகல் 26-லும், |

குளிகன் உதயமாவான்

| | |
|---|---|
| புதன்கிழமை | ராத்திரி 2-ம்நாழிகையில் |
| செவ்வாய்க்கிழமை | ராத்திரி 6-லும், |
| திங்கட்கிழமை | ராத்திரி 10-லும், |
| ஞாயிற்றுக்கிழமை | ராத்திரி 14-லும், |
| சனிக்கிழமை | ராத்திரி 18-லும், |
| வெள்ளிக்கிழமை | ராத்திரி 22-லும், |
| வியாழக்கிழமை | ராத்திரி 26-லும், |

காலன் உதயமாவான்

| | |
|---|---|
| சனிக்கிழமை | ராத்திரி 2-ம் நாழிகையிலும் |
| வெள்ளிக்கிழமை | ராத்திரி 6-லும், |
| வியாழக்கிழமை | ராத்திரி 10-லும், |
| புதன்கிழமை | ராத்திரி 14-லும், |
| செவ்வாய்க்கிழமை | ராத்திரி 18-லும், |
| திங்கட்கிழமை | ராத்திரி 22-லும், |
| ஞாயிற்றுக்கிழமை | ராத்திரி 26-லும், |

அர்த்தப்பிரகரன் உதயமாவான்

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமை | ராத்திரி 2-ம் நாழிகையிலும் |
| சனிக்கிழமை | ராத்திரி 6-லும், |
| வெள்ளிக்கிழமை | ராத்திரி 10-லும், |
| வியாழக்கிழமை | ராத்திரி 14-லும் |
| புதன்கிழமை | ராத்திரி 18-லும், |

| | |
|---|---|
| செவ்வாய்க்கிழமை | ராத்திரி 22-லும், |
| திங்கட்கிழமை | ராத்திரி 26-லும் |

எமகண்டன் உதயமாவான்.

| | |
|---|---|
| செவ்வாய்க்கிழமை | ராத்திரி 2-ம்நாழிகையிலும் |
| திங்கட்கிழமை | ராத்திரி 6-லும், |
| ஞாயிற்றுக்கிழமை | ராத்திரி 10-லும், |
| சனிக்கிழமை | ராத்திரி 14-லும், |
| வெள்ளிக்கிழமை | ராத்திரி 18-லும், |
| வியாழக்கிழமை | ராத்திரி 22-லும், |
| புதன்கிழமை | ராத்திரி 26-லும், |

குளிகன் உதயமாவான்.

## திதித்தியாச்சியம்.

| | | | |
|---|---|---|---|
| பிரதமைக்கு | 24 | நவமிக்கு | 5 |
| துதியைக்கு | 12 | தசமிக்கு | 33 |
| திரிதியைக்கு | 55 | ஏகாதசிக்கு | 1 |
| சதுர்த்திக்கு | 5 | துவாதசிக்கு | 15 |
| பஞ்சமிக்கு | 54 | திரியோதசிக்கு | 66 |
| சஷ்டிக்கு | 51 | சதுர்த்தசிக்கு | 7 |
| சப்தமிக்கு | 31 | பூரணைக்கு | 29 |
| அஷ்டமிக்கு | 20 | அமாவாசியைக்கு | 6 |

## லக்கினத்தியாச்சியம்

| | | |
|---|---|---|
| மேஷம் | மிதுனம் | கர்க்கடகம் |
| ரிஷபம் | சிங்கம் | விருச்சிகம் |
| கன்னி | துலாம் | மகரம் |
| தனுசு | கும்பம் | மீனம் |
| இவை 4-ம் முதலில் ½-நாழிகை. | இவை 4-ம் நடுவில் ½-நாழிகை. | இவை 4-ம்கடைசியில் ½-நாழிகை |

## நக்ஷத்திர தியாச்சியத்துவரும்.

| | | | |
|---|---|---|---|
| அச்சுவினி | 50 | சுவாதி | 14 |
| பரணி | 24 | விசாகம் | 14 |
| கார்த்திகை | 30 | அனுஷம் | 10 |
| உரோகணி | 40 | கேட்டை | 14 |
| மிருகசிரம் | 14 | மூலம் | 20-56 |
| திருவாதிரை | 11-21 | பூராடம் | 24 |
| புனர்பூசம் | 30 | உத்திராடம் | 20 |
| பூசம் | 20 | திருவோணம் | 10 |
| ஆயிலியம் | 32 | அவிட்டம் | 10 |
| மகம் | 30 | சதையம் | 18 |
| பூரம் | 20 | பூரட்டாதி | 16 |
| உத்திரம் | 1- | உத்திரட்டாதி | 24 |
| அஸ்தம் | 22 | ரேவதி | 30 |
| சித்திரை | 20 | | |

இந்த நாழிகைக்குமேல் 4-நாழிகை தியாச்சியம்.

### தியாச்சியகவி.

சொல்லுகலைமுபாழல் மகந்தோணி முப்பான்
சோறறிவன்பூராட நாலாறுகும்
நல்லமகசிரக்கேட்டை விசாகனுஞ்சோதி
நவின்றிடுவாய்பன்னுன்கு நடுநாள்பூரம்
வெல்லுகுருநாளாடி யிருபானான்கு
மேவுமேதள்புள்ளோணம் விளங்கும்பத்து
வல்லசெககோடுத்திரமீ ரொன்பதாகும்
வருபரிணியைம்பான்பாரோச நாற்பானுமே
ஆதிரையோபன்னொன்று மிருபத்தொன்றும்
அத்தமிருபத்துடனே யாமிரண்டு
தீதுபுரியாயிலிய முப்பானிரண்டு
செப்பிடுபூரட்டாதி பீடென்றே

ஓதிடுமூலம்மிருபா னென்னல்பின்னும்
ஒப்பரியவந்தத்தி னொன்றென்முன்னும்
வேதமுணர்ந்தோர்நான்கு கடிகைதன்னை
விஷமென்றே சுபந்தனக்குவிலக்கினரே

## யோகினிநிலை.

| வளர்பிறையில் | | தேய்பிறையில் | |
|---|---|---|---|
| பிரதமை | ஏகாதசி | சஷ்டி | கிழக்கு |
| துதியை | துவாதசி | சப்தமி | வடக்கு |
| திரிதியை | திரயோதசி | அஷ்டமி | தென்கிழக் |
| சதுர்த்தி | சதுர்த்தசி | நவமி | தென்மேற் |
| பஞ்சமி | பூரணை | தசமி | தெற்கு |
| சஷ்டி | பிரதமை | ஏகாதசி | மேற்கு |
| சப்தமி | துதியை | துவாதசி | வடமேற்கு |
| அஷ்டமி | திரிதியை | திரியோதசி | வடகிழக்கு |
| நவமி | சதுர்த்தி | சதுர்த்தசி | ஆகாசம் |
| தசமி | பஞ்சமி | அமாவாசி | பூமி |

பிரயாணஞ் செய்யும்போது பின் பக்கத்திலும் இடது பக்கத்திலும் யோகினி இருக்கலாம். ஆகாசத்திலும் பூமியிலும் இருந்தால்மத்திமபக்ஷமாம்.

## யோகினிபரிகாரம்

### கவி

இந்திரன்வாயுகூற்ற னீசானன்வருணனங்கி
அந்தமாங்குபேரன்றனன்றோ டாகியநிருதியிரு
வுந்தியவுதயங்கொட்டே யோர்திசைமுன்றேமுக்கால்
சந்ததங்கடிகைநீக்கிச் சாருமேயோகினிதிக்கிறமே.

இந்தக்கிரமப்படி. 1-2-3-4-5-6-7-8-முகூர்த்தங்கள் தள்ளி அவசியம் பிரயாணம் போகவேண்டில் யோகினி திக்கில பிரயாணம்போகலாம்.

நாமநட்சத்திர எழுத்துகள்

| | | | | |
|---|---|---|---|---|
| சு | சே | சோ | ல | அச்சுவினி |
| லீ | லு | லே | லோ | பரணி |
| அ | ஈ | உ | எ | கார்த்திகை |
| ஒ | வா | வீ | வு | ரோகணி |
| வே | வோ | கா | கி | மிருகசிரம் |
| கூ | க்க | ஙு | ச | திருவாதிரை |
| கே | கோ | ஹ | ஹி | புனர்பூசம் |
| கு | ஹே | ஹோ | ட | பூசம் |
| டீ | டு | டே | டோ | ஆயில்யம் |
| மா | மீ | மூ | மே | மகம் |
| மோ | டா | டி | டு | பூரம் |
| டே | டொ | பா | பி | உத்தரம் |
| பூ | ஷ | ணா | ட்டா | அஸ்தம் |
| பே | போ | ரா | ரி | சித்திரை |
| ரு | ரே | ரோ | த | சோதி |
| தி | து | தே | தோ | விசாகம் |
| நா | நீ | நு | நே | அனுஷம் |
| நோ | யா | இ | யூ | கேட்டை |
| எ | யோ | ப்பா | பபி | மூலம் |
| பூ | தா | ப | ட | பூராடம் |
| பே | போ | ஜ | ஜி | உத்திராடம் |
| ஜு | ஜே | ஜோ | க | திருவோணம் |
| க | கி | கு | கே | அவிட்டம் |
| கோ | சா | சி | சு | சதையம் |
| சே | சோ | தா | தி | பூரட்டாதி |
| து | ஸ | த்தா | தி | உத்திரட் |
| தே | தோ | ச்சா | ச்சி | ரேவதி |

இதுவும் நாமநக்ஷத்திரம்

கவி

அம்முதலோ நான்குதும் வல்விருநான் குள்ள திங்கு
வாகவிரண்டிருமூன்று மெம்முதலாய மூன்று

மம்முதலாறல்லதும்பந் நான்கிரண்டல்லதூஉந் தவ்வாக
விரண்டேழுநக்ஷத்திரவாயாறு

கெம்முதலோர்மூன்றுயயூ வுகரமுதலைந்து
நின்றதும்க் கவிஞன்கு ஞெம்முதலோர்மூன்றுந்
தொம்முதலோர்மூன்றது நெம்முதன்மூன்றும்யா
சொல்சவிஞலவைகொரு மூன்றலுமீன்றெட்டுவே

| | |
|---|---|
| அ-ஆ-இ-ஈ-4-ம் | கார்த்திகை, |
| வ-வா-வி-வீ-4-ம் | ரோகணி, |
| வெ-வே-வை-வௌ-4-ம் | மிருகசிரம், |
| கு-கூ 2-ம் | திருவாதிரை, |
| கெ-கே-கை 3-ம் | புனர்பூசம், |
| கொ-கோ-கௌ 3-ம் | பூசம், |
| மெ-மே-மை 3-ம் | ஆயிலியம், |
| ம-மா-மி-மீ-மு-மூ 6-ம் | மகம், |
| மொ-மோ-மௌ 3-ம் | பூரம், |
| ப-பா-பி-பீ 4-ம் | உத்திரம், |
| பு-பூ 2-ம் | அஸ்தம், |
| பெ-பே-பை-பொ-போ-பௌ | 6-ம் சித்திரை, |
| த-தா 2-ம் | சோதி, |
| தி-தீ-து-தூ-தெ-தே-தை 7-ம் | விசாகம், |
| ந-நா-நி-நீ-நு-நூ 6-ம் | அனுஷம், |
| நெ-நே-நை 3-ம் | கேட்டை, |
| யு-யூ 2-ம் | மூலம், |
| உ-ஊ-எ-ஏ-ஐ 5-ம் | பூராடம், |
| ஒ-ஓ-ஔ 3-ம் | உத்திராடம், |
| க-கா-கி-கீ 4-ம் | திருவோணம், |
| ஞ ஞா ஞி 3-ம் | அவிட்டம், |

| | |
|---|---|
| தொ-தோ-தௌ 3-ம் | சதையம், |
| நொ-நோ-நௌ 3-ம் | பூரட்டாதி, |
| யா 1-ம் | உத்திரட்டாதி, |
| ச-சா-சி-சீ 4-ம் | ரேவதி, |
| சு-சூ-செ-சே-சை 5-ம் | அசுபதி, |
| சொ-சோ சௌ 3-ம் | பரணி. |

## பகல் நாழிகை பார்க்க வகை

அந்தந்த மாதத்துக்குள்ள பகல் நாழிகையை பாதிசெய்து ஏழிற்பெருக்கிக் கொண்டு அடியளந்த அவச்சாயை பாதச்சாயை நீக்கி நின்ற அடியின்மேல் ஏழுகூட்டிக்கொண்டு இதற்கு முன் பெருக்கிவைத்த தொகையைக்கொடுத்து வந்த ஈவை உச்சிக்குமுன் சென்ற நாழிகையாகவும், உச்சிக்குப்பின் இருப்பு நாழிகையாகவும் கொள்க.

## அவச்சாயை அடிகள்

| | 1-வது, | 2-வது, | 3-வது, |
|---|---|---|---|
| சித்திரை-ஆவணி | 1 | $\frac{1}{2}$ | 0 |
| வைகாசி-புரட்டாசி | 0 | $\frac{1}{2}$ | 1 |
| ஆனி-ஐப்பசி | 1 | $1\frac{1}{2}$ | 2 |
| ஆடி-பங்குனி | 2 | $1\frac{1}{2}$ | 1 |
| கார்த்திகை | 2 | $2\frac{1}{2}$ | 3 |
| மார்கழி | 3 | $3\frac{1}{2}$ | 4 |
| தை | 4 | $3\frac{1}{2}$ | 3 |
| மாசி | 3 | $1\frac{1}{2}$ | 2 |

மாதத்தை மூன்று பங்காக்கி பங்கொன்றுக்கு மேற்கணக்குப்படி அவச்சாயை தள்ளிக் கொள்ளவும் பாதச்சாயை எப்போதும் அரையடியாம்.

மாதத்துப் பகல்நாழிகை

| | | | |
|---|---|---|---|
| சித்திரை | 30 | ஆனி-ஆவணி | $31\frac{1}{4}$ |
| வைகாசி | $30\frac{3}{4}$ | ஆடி | $31\frac{1}{2}$ |
| புரட்டாசி | $30\frac{3}{4}$ | மார்கழி-மாசி | $28\frac{3}{4}$ |
| கார்த்திகை பங்குனி | $29\frac{1}{4}$ | தை | $28\frac{1}{2}$ |

கவி.

சித்திரையுமைப்பசியுஞ் சீரொக்கும்சித்திரைவிட்
டைப்பசிமுன்னைந்துமருக்கேறு-ஐமைப்பசிக்குப்
பின்னைந்துமாசம்பிசகாமல் ராவேறும்
மின்னேவிடு பூ முடி.

வி-டி-$\frac{3}{4}$, மு-டு-$1\frac{1}{4}$, பூ-$1\frac{1}{2}$ நாழிகையாம்.

கவி.

பகர்ந்தபகல்நாழிகையைப் பாதிசெய்து
பாதிதனையேழதனிற் பெருக்கிப்பாரில்
நிகழ்ந்தவடியளந்தவச்சாய் பாதச்சாய்நீக்கி
நின்றவடிமேலேழுங் கூட்டியேற்றித்
திகழ்ந்தமுதற்றொகையதனை யிதனுக்கீந்து
சிறந்தபலன் சென்றநாழிகையாம்பின்மேல்
புகழ்ந்திரவிபடுங்கடிகை யிவைதானென்று
பொலன்குழையாய்பகர்ந்திடலை பொருந்தச்சொல்லே

| சித்திரை ஆவணி | வைகாசி ஆடி | ஆனி | புரட்டாசி | ஐப்பசி மாசி | கார்த்திகை தை | பங்குனி மார்கழி | நாழிகை |
|---|---|---|---|---|---|---|---|
| அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி | அடி |
| 64 | 67 | 68 | 63 | 64 | 67 | 64 | 1 |
| 6 | 33½ | 34 | 32 | 32 | 34 | 34 | 2 |
| 21 | 22 | 22 | 25 | 21 | 22 | 23 | 3 |
| 15 | 16 | 16 | 15 | 14 | 14 | 17 | 4 |
| 12 | 12 | 13 | 12 | 12 | 13 | 13 | 5 |
| 9¼ | 9½ | 11 | 9¾ | 9 | 11 | 11 | 6 |
| 7½ | 8 | 8¼ | 7½ | 7 | 8½ | 8½ | 7 |
| 9½ | 9½ | 9¾ | 6 | 6 | 7¼ | 7¼ | 8 |
| 5 | 5¼ | 5½ | 5 | 5 | 6½ | 6⅛ | 9 |
| 4 | 4¼ | 4½ | 4 | 4¼ | 5¼ | 5½ | 10 |
| 3½ | 3½ | 3½ | 3 | 3¾ | 4⅛ | 5 | 11 |
| 2½ | 2¾ | 3¼ | 2¼ | 3¼ | 4 | 4¼ | 12 |
| 1 | 2¼ | 2½ | 1¾ | 2½ | 3¾ | 48 | 13 |
| 1 | 1½ | 2¼ | 1¼ | 2⅛ | 3½ | 4⅛ | 41 |
| ½ | 1¼ | 1¾ | ¾ | 2 | 3½ | 3¾ | 15 |

15-நாழிகை வரையிற் சென்ற நாழிகையாகவும் 15-நாழிகைக்குமேல் இருப்புநாழிகையாகவும் கொள்ளவேண்டும்.

உதயகால மணியறியும் விதம்

கலி

இரவுபுதயமறியவெனினியன்ற விராவின்கன்றினை
விரல்முந்நான் கெனிற்றுக்கிமீட்டு முன்னுனிய விலெஞ்சி
உரைசேர்மறநாட்பகலகசுக் கூட்டமணிய சேடம
வரையாதறுபானிருக்கியது போற்செய்யமணியுறு.

வருமாறு.

| முன்னுளிரவின் பிரமாணம் | | அன்றைய அகசுப்பிரமாணம் | | இரண்டின் மொத்தம் | |
|---|---|---|---|---|---|
| நாழி | விநாடி | நாழி | விநாடி | நாழி | விநாடி |
| 31 | 47 | 31 | 48 | 63 | 35 |
| ஏகஜாதி | | ஏகஜாதி | | ஏகஜாதி | |
| 1907 | | 1908 | | 3815. | |

பவவூ வைகாசிமீ 21உ-ல், சூரியோதயமான

மணி மினிட் செய்முறை.

| முன்னுளிரவின் பிரமாணம். | | அன்றைய அகசுப்பிரமாணம் | | இரண்டின்மொத்தம் | |
|---|---|---|---|---|---|
| நாழி | விநாடி | நாழி | விநாடி | நாழி | விநாடி |
| 28 | 13 | 31 | 48 | 60 | 1 |
| மொத்தவிநாடி | | மொத்தவிநாடி | | மொத்தவிநாடி | |
| 1693 | | 1608 | | 3601 | |

1693 ஐ-12-ல் பெருக்குக மணி மினிட்
3601-ல் பாகிக்க 5 38
1693 2311
12 60
3601)20316(5 3601)138660(38
18005 10803
சேடம் 2311 30630
28808
1822

இராநாழிகை பார்க்கவகை.

அச்சுவினி அரமீன் குதிரைத்தலைபோல்
மெச்சிமிக கத்தி இருகடிகையதாம்
பரணிமும்மீ னடுப்புப்போல

திரண்மிருகடகத் தொருநாற்காலாம்
கார்த்திகையறுமீ னேற்றரியேகம்
உரோகணியிற்றால் பன்னிருமீனும்
முரண்மிகுசிங்கம் மூன்றேகாலாம்
மான்றலைமூன்றுந் தேங்காய்க்கண்போல்
ஆன்றசிங்கத் தைந்தேகாலே
ஆதிரையொருமணி யாயிழையொன்றரை
ஓதியபுனர்த மோடங்கோலரை
பூசம்புடலம் பூவதுபோல
வீசங்கோவி விரண் டரையாகும்
ஆயிலியநான்கு மம்மிபோல
மாயிருகோவி னுமேலகாலே
மகமொருநான்கு முடநாகம்போல
ககருக்தெளி வொன்றரையாகும்
பூரமுத்திரம் பொற்காற்கட்டில்
ஊர்தேண்மூன்றே பொன்சிலையரையே
அத்தமைம்மீன் கைத்தலம்போல
முத்தீன்றனுவின் மூன்றெனப்படுமே
சித்திரையிருமீன் சிறுபுலிக்கண்போல்
அத்தனுவதனி லைந்தெனப்படுமே
சோதிதுலக்கத் தொருமணியென்ப
சாதிமாரத் தொன்றரைசாற்றும்
விசாகமாறு மிடாழ்ந்துறவாம்
வசெயறுமகரத் தாகுநாற்நாடிகை
அனுஷமாறு முடப்பனைபோல
குனிபுந்தும்பத் தரையாகுமே
கேட்டைநான்கு மீட்டிபோல
ஓட்டைக் குடத்தி லொன்றரையாகும்
மூலமாறு மெக்காளம்போலச் -

சாலுங்குடத்திற் சதுரமாமே
பூராடமுத்திராடம் பூங்காலுலாம்
சிராமீனத் தோரரைநான்கே
ஓணமூன்று முழக்கோல்போல
காணுமாட்டில் மூன்றெனப்படுமே
அவிட்டச்சக்கரத் தாறுமேறரை
தவிட்டுச்சதயந் தனியேறிரண்டரை
பூரட்டாதியு முத்திரட்டாதியும்
ஓராமிதுனத் தொன்றரைநான்கே
ரேவதிமொய்ம்மீன் தோணிபோல
ஒவறுகடகத் தொருமுக்காலே.

இன்னுமொருவிதம்.

சித்திரைக்குப்பூசமுதல் சிராவணிக்கனுஷம்
அத்தனுசுக்குத்திரட்டாதியாம்-நித்தநித்தம்
ஏனுச்சமானதும் ரெண்டேகாலிற்பெருக்கி
மாதமைந்துதள்ளி மதி.

| | |
|---|---|
| சித்திரைமுதல்-ஆடிவரையும் | பூசமுதலாகவும் |
| ஆவணிமுதல்-கார்த்திகை வரையும் | அனுஷமுதலாகவும் |
| மார்கழிமுதல்-பங்குனி வரையும் | உத்திரட்டாதி முதலாகவும் |

அப்போது உச்சமானநக்ஷத்திரம்வரை எண்ணி $2\frac{1}{4}$-யில் பெருக்கிச் சென்றமாதம் 1-க்கு 5-நாழிகையாக அன்றுவரை ஈவுப்படி தள்ளிக்கண்டது அப்போதுதையநாழிகையாம்.

வெண்பா.

ஆனதிருவாதிரையேர் டாறிரண்டுநல்லுச்சம்
ஊனமிலாக்கேட்டைமுத லொன்பதுவும்-மானே

வருவதுச்சமென்றறிவாய் மற்றையமீரறும்
பிரிவதுச்சமென்றெண்ணிப் பேசு.

நக்ஷத்திரம் உச்சமாகுநாழிகை.

அசுவதி-ரோகணி-பூசம்-சித்திரை - சோதி-விசாகம்-ரேவதி 7-ம், 2-நாழிகை.

பரணி-கார்த்திகை-மிருகசிரம்- பூராடம்-குருவோணம் 5-ம், 27-நாழிகை.

திருவாதிரை-ஆயிலியம் 2-ம், $1\frac{1}{2}$-நாழிகை.

மகம்-அஸ்தம்-உத்திராடம்-பூரட்டாதி 4-ம், $2\frac{1}{2}$-நாழிகை.

அனுஷம்-அவிட்டம் 2-ம், $1\frac{3}{4}$-நாழிகை.

புனர்பூசம்-$3\frac{1}{2}$-நாழிகை, உத்திரம்-$3\frac{1}{4}$-நாழிகை.

மூலம்-4-நாழிகை.

பூரம்-கேட்டை 2-ம், 1-நாழிகை.

சதையம்-பூரட்டாதி 2-ம், $2\frac{3}{4}$-நாழிகை.

ஆகூ நாழிகை 60.

கவி.

தோணிபார்குதிரைபூசஞ் சோதிசித்திரைவிசாகம்
காணிருகடிகையத்தங் கடைகுளமுரசமாசி [றும்
பூணுறுமாதேரெண்டோடரையுங்கேட்டையொன்
மாணுறுசெங்கைபாம்பு மருவுமொன்றரைகழைக்

கன்னல்மூன்றரையளக்கர் மகசிரமோணநீர்நாள்
தன்னடுப்பிரண்டேகாலாங் தோமறுமவிட்டம்பெண்
ணே,மன்னுமூன்றேமுக்காலாம் வருணநாள்புரட்டைரெ
ண்டோ, டுன்னுமுக்காலாமூல நான்குபங்குனிமூன்றே
கால்.

சரமவாரவுண்.

இடத்திங்குமான்மதிபாற் கவன்பூர்வபக்ஷத்
தினிற்குருவின்மற்றதின்மற் றியங்குகனலேந்தாய்
நடத்துகலையிந்திரவி ரண்டொடன்றகலையாய்
நாமமிடபிங்கலையச் சுழிமுனைப்பேர்நவில்வார் [ங்
கடத்தவிவையொன்றினுக்கைம்பூதமுநேர்நடக்கு
காவல்வலமுமிடமுமறு காற்கொருகால்கழிவாய்
விடத்தகுமவ்வாரமுதற் பகலிரவுக்கிவர்கள்
வீடளவுநேரிடமாய் மேவுவதாணெனுமே.

புதன்-திங்கள்-வெள்ளி பூர்வபக்ஷத்து வியாழன்.

இந்தவாரங்களில் இடதுபுறத்தில் சரம்ஓடும்.
ஞாயிறு-செவ்வாய்-சனி-அமரபக்ஷத்துவியாழன்

இந்தவாரங்களில் வலதுபுறத்தில் சரம்ஓடும்.
இவைஒவ்வொன்றுக்கும்5-நாழிகைநேர்நடக்கும்.

இடம்-சந்திரகலை. வலம்-சூரியகலை, இவை இரண்டுங்கூடினது அக்கினிகலை, இவைமூன்றுக்கு முறையே இடை-பிங்கலை-சுழிமுனையென்றும் பெயராம்.

இடைபிங்கலை ஒவ்வொன்றுக்கும் ஐம்பூதமும் நேர்நடக்கும், இப்பூதங்கள் இடதுக்குவலமும் வலத்துக்கு இடமுமாக நடக்கும்.

பிருதிவியின்கூறு $1\frac{1}{2}$-நாழிகையும்,
அப்புவின்கூறு $1\frac{1}{4}$-நாழிகையும்,
தேயுவின்கூறு 1-நாழிகையும்,
வாயுவின்கூறு $\frac{3}{4}$-நாழிகையும்,
ஆகாயத்தின்கூறு $\frac{1}{2}$-நாழிகைரிமாகநேர்நடக்கும்.

பகற்காலத்தில், ஞாயிறு சிம்மலக்கினத்திலும்,
புதன்-கன்னியிலும்,
வெள்ளி-துலாத்திலும்,
செவ்வாய்-விருச்சிகத்திலும்,
வியாழம்-தனுசிலும்,
சனி-மகரத்திலும் உண்ணும்.

இராத்திரியில், திங்கள்-கடகத்திலும்,
புதன்-மிதுனத்திலும்,
வெள்ளி-இடபத்திலும்,
செவ்வாய்-மேஷத்திலும்,
வியாழம்-மீனத்திலும்,
சனி-கும்பத்திலும் உண்ணும்.

இவை வாரவூண்

பஞ்சபக்ஷிக்குரியதொழில், அத்தொழிலுக்குரிய நாழிகை, அத்தொழில்நடக்குங்காலம், அத்தொழில் ஸ்தூலத்திற் சூக்ஷமம், பஞ்சபக்ஷியின்பெயர், அவற்றிற்குரிய அட்சரங்கள், வெற்றி, தோர்வை, அறியும் வகை, அப்பட்சிகட்கு வகை.

ஊணடையாதிக்கமுறக் கம்மரணமைந்துக் [ப்
கும்மிரவும்பகலுமொருதொழிற்கறுநாழிகையாம்
பூணுமறுகாணுங்காலெண்மூக்காலிருகால்
பொசிப்புமுதலுட்கிரியை புகல்வாரிக்கிரியை
காணிதல்வல்லூறுந்தை காகங்கேதனம்வா
கனமாமீதகரமுதற் கடையொகரம்வரையா
மாணவனுக்கோரெழுத்தேன் மூப்புயரமிளமை
யதிபெலம்பேரனுபுனர்நண் ணலரதற்காவதுவே.

ஊண்-நடை-அரசு-தூக்கம்-சாவு இவைபஞ்சபக்ஷிக்குரியதொழில் இத்தொழில்கள், ஒவ்வொன்றும் அவ்வாறு நாழிகையாயிரவும்பகலும்நடக்கும்

ஊண் $1\frac{1}{8}$-நாழிகை, நடை-$1\frac{1}{4}$, அரசு-2, தூக்கம்-$\frac{3}{4}$, சாவி-$\frac{1}{4}$, இவை ஸ்தூலத்திற் சூக்ஷமத்தொழிலாம்.

வல்லூறு-ஆந்தை-காகம்-கோழி-மயில்இவை மேற்கூறிய தொழிலுக்குரிய பஞ்சபக்ஷியாம்.

அகரமும்-ஆகாரமும் இவையேறியஉயிர்மெய்யும் வல்லூறு.

இகரமும்-ஈகாரமும் இவையேறிய உயிர்மெய்யும் ஆந்தை.

உகரமும்-ஊகாரமும் இவையேறிய உயிர்மெய்யும் காகம்.

எகரமும்-ஏகாரமும் இவையேறிய உயிர்மெய்யும் கோழி.

ஒகரமும்-ஓகாரமும் இவையேறிய உயிர்மெய்யும் மயிலாம்.

இருவர் அக்ஷரமும் ஒன்றாகில் ஊணில் மூப்புடையவனும், நடையில்வளர்ந்தவனும், அரசில் இளையவனும், தூக்கத்தில் அதிபெலவானும் காவில் அதிகப்பேருடையவனும் வெற்றிகொள்வான்.

வல்லூறுக்கு-ஆந்தையும்,
ஆந்தைக்குக்-காகமும்,
காகத்துக்குக்-கோழியும்,
கோழிக்கு-மயிலும்,
மயிலுக்கு-வல்லூறும் பகையாம்.

பஞ்சபக்ஷி நடப்புபடுபக்ஷி.

ஆரன்முதற்சனிவரைநேராம்வலியான்காக,மவலமவ்வாரணங்கொடிதொட்டாதியந்தபொசிப்பாங், சூரியனுக்கனலின்மதிக் கருணையனைப்போற், றொழிலதற்குத்தெற்குவடக்கி தற்கிடைவிட்டு

ணவா, மாரணநித்திரைநடை கோவையெவைக்கும்வினையா, வகுத்துரைப்பர்பொன் முதல்வல்லூருந்தைமாரு, யிரிருநாண்மற்றவைநேரிறப் பிவைபோன்மயில்வைத், திடமாகப்புதன்முதனே ரெய்துவதீதினுக்கே.

செவ்வாய்முதற் சனிவரைபூர்வபக்ஷம், பகல்முதற்சாமம் வல்லூறு முதல்நேர் உண்ணும், இப்பக்ஷத்தில் இராத்திரி முதற்சாமம், காகமுதல்நேர் உண்ணும்.

அமரபக்ஷத்துப் பகல்முதற்சாமம்,கோழிமுதல் இடமாக நேர் உண்ணும், அமரபக்ஷம்இராத்திரிமுதற்சாமம் காகமுதலிடமாக நேர்உண்ணும்.

ஞாயிறுக்கு செவ்வாயைப்போல்,எப்பொழுதுஞ்சொல்லுக, திங்களுக்குப் பூருவபக்ஷத்திற் புதனைப்போலவும், அமரபக்ஷத்திற் சனியைப்போலவுஞ் சொல்லுக.

பூருவபக்ஷம் பகல் முதற்சாமம் மரணமான பக்ஷியை இரண்டாஞ்சாமத்துக்குஊண்பக்ஷியாக வைத்து வலமாக நேர்நடத்துக, இந்தப்படிமரணமானபக்ஷியை ஊண்பக்ஷியாகவைத்து மற்றச்சாமங்களுக்கும் நடத்துக.

பூருவபக்ஷம் இராத்திரி முதற்சாமம் நித்திரைசெய்தபக்ஷியை இரண்டாஞ்சாமத்துக்குஊண்பக்ஷியாகவைத்து பக்ஷிஇடமாகநேர்நடத்துக, இந்தப்படி நித்திரைசெய்தபட்சியை ஊண்பட்சியாகவைத்து மற்றச்சாமங்களுக்கும்நடத்துக.

அமரபக்ஷம் பகல் முதற்சாமம் நடந்தபக்ஷியை இரண்டாஞ்சாமத்துக்கு ஊண்பக்ஷியாகவைத்து வலமாக ஒன்றுவிட்டு நேர்நடத்துக இந்தப்படிநடந்த பக்ஷியை ஊண்பக்ஷியாகவைத்து மற்றச் சாமங்களுக்கும் நடத்துக.

அமரபக்ஷம் இராத்திரி முதற்சாமம் அரசுசெய்தபக்ஷியை இரண்டாஞ்சாமத்துக்கு ஊண்பக்ஷியாகவைத்து இடமாக ஒன்றுவிட்டு நேர்நடத்துக, இந்தப்படி அரசுசெய்தபக்ஷியை ஊண்பக்ஷியாகவைத்து மற்றச்சாமங்களுக்கும் நடத்துக.

பூருவபக்ஷம் வியாழக்கிழமை சனிக்கிழமையில் வல்லூறும், வெள்ளி ஞாயிறில் ஆந்தையும், திங்களிற் காகமும் செவ்வாயிற் கோழியும் புதனில் மயிலும் மரிக்கும்.

அமரபக்ஷம் புதன் வெள்ளியில் மயிலும், வியாழன் சனியிற் கோழியும், ஞாயிறில்காகமும், திங்களில் ஆந்தையும், செவ்வாயில் வல்லூறும் மரிக்கும், இவை படுபக்ஷியாம்.

---

அக்ஷரங்களுக்குரிய பக்ஷிகள்.

| எழுத்து | அ-அ | இ-ஈ | உ-ஊ | எ-ஏ | ஏ-ஒ |
|---|---|---|---|---|---|
| பக்ஷி | வல்லூறு | ஆந்தை | காகம் | கோழி | மயில் |

## பூர்வபக்ஷம் அமரபக்ஷம் வாரங்களேழில் இராப்பகல் பத்துசாமங்களிலும் பஞ்சபக்ஷிகள் இயற்றுந் தொழில்களை யுணர்த்தும் சூக்ஷ்ம சக்கரம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பூருவ பக்கம் | பகல் | வெள்ளி | வியாழம் | புதன் | செ ஞா | தி சனி | வாரம் | அமர பக்கம் |
| வாரம் | கு | ஊ 3 | நடை 5 | அர 2 | தூக் 4 | சாவு 1 | கு | பகல் |
| செ-ஞா | அர 1 | அ | இ | உ | எ | ஒ | ஊ 3 | வியா |
| வியா | சாவு 4 | உ | எ | ஒ | அ | இ | சாவு 5 | சனி |
| சனி | நடை 2 | ஒ | அ | இ | உ | எ | ஊ 2 | திங்புத |
| திங்-பு | தூக்சம் | இ | உ | எ | ஒ | அ | அரசு 4 | வெள் |
| வெள் | ஊண் 9 | எ | ஒ | அ | இ | உ | நடை 1 | செ-ஞா |
| இரவு | கு | தூக் 1 | நடை 4 | சாவு 2 | அர 5 | ஊ 3 | கு | வாரம் |
| அமரபக்கம். | வாரம் | தி சனி | வெள்ளி | வியாழம் | புதன் | செ ஞா | இரவு | பூருவ பக்கம் |

### படுபக்ஷி

| பக்ஷம் | ஞாயி | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழம் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| பூருவ | இ | உ | எ | ஒ | அ | இ | அ |
| அபர | உ | இ | அ | ஒ | எ | ஒ | எ |

ரவிப்பாய்ச்சல், நாற்றிசைச்சூலம்,

மூலைச்சூலம், இச்சூலத்துக்கு நாழிகை.

எய்தும்ரவிப்பாய்ச்சலெற்கா லெமனிசிநோரதுபா
ணிதற்குமுப்பானேறவிருபானொருபானிலைத்த
லையிரண்டைநான்கேறல் பாதியுறவிவ்வநே
ரவர்களுமுற்றிடல்சோம னசிதனுமந்தணனும்
வெய்யவன்பார்க்கவனுமனல் மேதையுநாற்றிசைச்சூல்
விளம்புவரத்திசைமுதற்கோண் விட்டனுகோணா
வைகுவதவ்வயதுளநாழிகையாகுமதிகம் [முமாய்
வரினுதயத்தேறுமிரா வீற்றன்மற்றதுவே.

சனிக்கிழமைராத்திரி 30, ஞாயிற்றுக்கிழமை பகல் 30, ஆக நாழிகை 60-ம் தென்றிசையிலும்.

ஞாயிற்றுக்கிழமைராத்திரி-30, திங்கள் ராப் பகல் 60, ஆகநாழிகை 90-ம், தென்மேற்றிசையிலும்.

செவ்வாய் பகல் 30, ராத்திரி 10, ஆக நாழிகை 40-ம் மேற்றிசையிலும்.

செவ்வாய்க்கிழமை ராத்திரி 20, புதன்கிழமை பகல் 30, ஆகநாழிகை 50-ம் வடமேற்றிசையிலும்.

புதன்கிழமை ராத்திரி 30, வியாழக்கிழமை பகல் 30, ராத்திரி 10, ஆக நாழிகை 70-ம், வடதிசையிலும்.

வியாழக்கிழமை ராத்திரி 20, வெள்ளிக்கிழமைபகல் ராத்திரி 60, ஆக நாழிகை 80-ம் வடகிழக்கிலும்.

சனிக்கிழமை பகல் 30-நாழிகை கீழ்த்திசையிலும் ரவிப்பாய்ச்சலாம்.

| | |
|---|---|
| திங்கள்-சனி | கிழக்கும், |
| வியாழன் | தெற்கும், |
| வெள்ளி-ஞாயிறு | மேற்கும், |
| செவ்வாய்-புதன் | வடக்கும், |

நாற்றிசைச்சூலமாம்.

| | |
|---|---|
| திங்கள்-சனி | தென்மேற்கும், |
| வியாழன் | வடமேற்கும், |
| வெள்ளி-ஞாயிறு | வடகிழக்கும், |
| செவ்வாய் புதன் | தென்கிழக்கும், |

இச்சூலத்துக்கு மூலைச்சூலமாம்.

அந்தந்தவாராதிபன்வயதை நாழிகையாகக்கொள்க .

ஆதலால், ஞாயிறுக்கு 50-நாழிகை திங்களுக்கு 70, செவ்வாய்க்கு 16, புதனுக்கு [illegible]0, வியாழனுக்கு 30, வெள்ளிக்கு 7, சனிக்கு-100 இவற்றுள் திங்கள்-சனிக்கு இராப்பகல் 60 - நாழிகைவரையும் சனிக்கு உதையந்தொட்டு 10-நாழிகைவரையும் அதிகச்சூலமாம்.

வாரவர்க்கம், அல்லது அவஸ்தை சுவாலாதிக்கிரகம், அவமாகதோஷம்.

ஈறிடமற்றிடையாதிச் சிந்துசுதனுஞ்சரற்
கிறைபுதனுமாகமற்றோர்க் கெய்துகயிக்கடிகை
யாறுளதாய்வாலிப குமாரதருணகிழ
மாமிருதமாகவர வவரவர்ப்பேர்வாரந்
தோறுமுளதாமின்னோர் சுவாலைதுமஞ்சாயை
தார்வயங்குபற்பமங்காரக மிதெண்சாமழுஞ்சுற்
றேறிவருந்தினந்திதியோகம்மிவைரண்டுறின்மூன்
றிவையிலொவ்வொன்றுறுங்கிழமையவமாகமெனு

திங்கள்-வெள்ளியில் உதையந்தொட்டு அப்பிரதக்ஷணமாகவும் சனி-புதனில் அத்தமனந்தொட்டு நேராகவும் ஞாயிறு-செவ்வாய்-வியாழனில் உதயந்தொட்டு நேராகவும், வாலிப-குமார-தருண-விருத்த-மாரணமென்றுவைத்து ஒவ்வொன்றுக்கும் அவ்வாறு நாழிகையாக நேர்நடத்துக.

இவை வார அவஸ்தையாம்.

| | |
|---|---|
| கீழ்திசையில் முதற்சாமஞ் | சுவாலை, |
| தென்கீழ்திசையில் 2-ம் சாமம் | தூமம், |
| தென்றிசையில் 3-ம் சாமம் | சாயை, |
| தென்மேற்றிசையில் 4-ம் சாமம் | சேறு, |
| மேற்றிசையில் 5-ம் சாமம் | ஜலம், |
| வடமேற்றிசையில் 6-ம் சாமம் | பூமி |
| வடதிசையில் 7-ம் சாமம் | பற்பம், |
| வடகீழ்த்திசையில் 8-ம் சாமம் | அங்காரகன், |

இவை சுவாலாதிக்கிரகமாம்.

இவற்றிற்கெல்லாம் சாமம் ஒன்றுக்கு 7½-நாழிகையாகக் கொள்க. நக்ஷத்திரம்-திதி-யோகம் இவை 3-ம் ஒரு கிழமையில இரண்டாக வரினும் அல்லது இந்த மூன்றிலொன்று திரையமாக வரினும் அவமாக தோஷமாம்.

## வாரலக்கினம் பஞ்சகதோஷம்.

மாகமுஞ்சாலவனுமீன்வருடையும்பெண்சிலையு
மைதுனராசியுமரிதேளுமலதம்வாயசமாப்
பாகன்முதனேர்வாரலக்கினமிப்பெயர்நாட்[ருபா
பக்கமுஞ்சேர்தெட்டொருநான்கினர்பதினைந்தொ

ஞாகவொவ்வொன் றுடனவத்துகீயிலிருமூன்றென்
டுறத்தெட்டோர்நான்கு கரவவமிருத்தக்கினிரோ
கோகடபஞ்சகம்பிணி மன்றீயின்னேர்பிருகு
குருச்சோரமிக்கத்தாங் குற்றமின்மற்றதற்கே.

சனிக்கு மகரமும்,
ஞாயிறுக்கு கும்பமும்-கடகமும்,
திங்களுக்கு மீனமும்-மேஷமும்,
செவ்வாய்க்கு கன்னியும்-தனுசும்,
புதனுக்கு மிதுனமும்,
வியாழனுக்கு சிங்கமும்-விருச்சிகமும்,
வெள்ளிக்கு இடப-துலாமும்,
லக்கினமாம்.

வாரம்-லக்கினம்-நக்ஷத்திரம்-திதிஇவைநாலுங்கூட்டி இதனுடனெட்டுங்கூட்டிஒன்பதிற்கழிக்க ஆறுமிச்சங்காணில் சோரபஞ்சகம்.

நாலுகூட்டி ஒன்பதிற் கழிக்க ஒன்றுமிச்சங்காணில் மிருத்துபஞ்சகம்.

பன்னிரண்டு கூட்டி ஒன்பதிற்கழிக்க இரண்டுமிச்சங்காணில் அக்கினிபஞ்சகம்.

பதினைந்து கூட்டி ஒன்பதிற்கழிக்கஎட்டுமிச்சங்காணில் ரோகபஞ்சகம்.

பத்துக்கூட்டி ஒன்பதிற்கழிக்க நாலுமிச்சங்காணில் ராசபஞ்சகம்.

இவற்றுள் ஞாயிறில் ரோகபஞ்சகமும் திங்களில் ராசபஞ்சகமும் செவ்வாயில் அக்கினி பஞ்சகமும், வெள்ளி-வியாழத்தில் சோரபஞ்சகமும், சனி-புதனில் மிருத்துபஞ்சகமும் வரில் பஞ்சகதோஷஞ்சொல்லுக, மற்றதுவரில் பஞ்சகதோஷமில்லையென்க.

ரவிமுதலானவர்களுக்கு.

ஆட்சி-உச்சம்-நீச்சம்-பகை-நட்பு-வீடு

அரியவலவனிரவிமதிக் கருண்ணிரசதஞ்சே
யமரர்குருசனியவர்கட் கவலமவலமாக

வீருபுறமுமொவ்வொரின்னே ரிதிற்சனிசேய்க்கிடமற்
றெய்துதன்மற்றவர்க்காட்சி யில்லனுமற்றிலமா
மொருவிடைபெண்கயல்களைநண் டோர்துலைமுன்போன
ருச்சமிவைக்கேழவம்பாம் புக்குறவாடரியாக்
தெரிவையிலானலவனுச்சஞ் சிகிக்கிவைநேர்மிக்குத்
தீதிலவர்பகைநீசந் திர்க்குமின்மித்திரமே.

மூலத்திரிகோணம்.

| | |
|---|---|
| சூரியனுக்கு | சிங்கமும் |
| சந்திரனுக்கு | கடகமும் |
| செவ்வாய்க்கு | மேஷமும் |
| புதனுக்கு | கன்னியும் |
| குருவுக்கு | தனுசும் |
| சுக்கிரனுக்கு | துலாமும் |
| சனிக்கும்-இராகுக்கும் | கும்பமும் |
| கேதுக்கு | சிங்கமும் |
| குளிகனுக்கு | மீனமும் |
| | ஆகும். |

| இராசிகளில் கிரகநட்பாக்ஷி யுச்சநீசம் பகைவிடுதி. | மே | ரிஷ | மிது | கட | சிங் | கன் | துல | விரு | தனு | மக | கும் | மீன | கிரக நட்பு | கிரக சமன் | கிரக பகை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூ | உ | | | | ஆ | | நீ | ந | | ப | ப | | சந் அகு | புத | சு-சனி |
| சந் | | உ | | ஆ | | | | நீ | ந | | | | சூ பு | அங்குரு சுக் ச | பகை யில்லை |
| அ | ஆ | | | நீ | ந | | | வி | ப | உ | | ப | சூ சந் கு | சுக்சனி | புத |
| புத | ந | ப | வி | | | ஆ உ | ப | | | | | நீ | சூரி சுக் | அ கு ச | சந் |
| கு | ப் | | | உ | | | | ப | ஆ | நீ | ந | வி | சூ சந் அ | ச னி | புத சுக் |
| சு | | ஆ | ப | | | நீ | ஆ ந | | | | | உ | பு சனி | அ கு | சூ சந் |
| ச | நீ | ந | | | ப | | உ | | | வி | ஆ | | பு சு | கு | சூ சந் அ |
| இ | ந | உ | | உ | ந | ஆ | | | | | | | | | |
| கே | | | | | | | ந | உ | | உ | ந | ஆ | | | |

அந்தந்தக் கிரகங்களின் மூலத்திரி கோணராசிகளுக்கு 2-4 5-8 9-12 ஆகிய இடங்களுக்குடையவர்களும், உச்சவீட்டுக் குடையவனும் மித்திரர்களாம் ஈங்கு மூலத்திரிகோணதியாய்ச் சொன்ன கணக்குகளுடைய இராசிகளிலேயே 2 - இராசிகளுக்கு ஒருவனே அதிபதியானுல் அவன் மித்ரனுவன்.

மித்திரர்களுக்குச் சொன்ன 2-இராசிகளில் 1-உச்சராசியானுலும். 2-இராசியாதிபதியைப் போலவே மித்திரனுவான் ஒரு இராசிக்குடையவன் சமன், மற்ற 3-6-7-10 - 11 ஆகிய இடங்களுடையவர்கள் சத்துரு ஆவார்கள்.

— —

நட்டமுட்டி சிந்தனைக்கு கட்பிரகஷியுக்தம் நீச்சம்பகை.

| | மே | ரிஷ | மிது | சட | சிங் | கன் | துலா | விரு | தனு | மகர | கும் | மீன | கிரகநட்பு. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சூ | உ | | | | ஆ | | நீ | | ந | | | ந | குரு |
| சந் | | உ | ந | ஆ | | ந | | நீ | ந | | | ந | புத குரு |
| அங் | ஆ | ந | ந | நீ | | ந | ந | ஆ | | உ | | | புத சுக் |
| புத | ந | ந | ஆ | ந | | ஆ உ | ந | ந | ந | ந | ந | நீ | சந் அங் குரு சுக் சனி |
| குரு | | ந | ந | உ | ந | ந | ந | | ஆ | நீ | ந | ஆ | சூரி சந் புத சுக் |
| சுக் | | ஆ | ந | நீ | | | ஆ | ந | ந | ந | ந | உ | அங் புத குரு சனி |
| சனி | நீ | | ந | | | ந | உ | | ந | ஆ | ஆ | ந | பு.சு.சு. |
| இரா | ப | நீ | ந | ப | ப | ந | ந | உ | ந | ஆ | ஆ | ந | |

சொல்லாத மற்றவர் பகையென்றறிக இவர்கள் ஆட்சி வீடுகளே பகைவீடுகளாம்.

ஆ-ஆதி. உ-உச்சம். ந-நட்பு.
நீ-நீச்சம். ப-பகை. வி-விடுதி-வீடு.

பார்வை கேந்திரம் பணபரம் ஆபோக்லீபம்.
திரிகோணம் உபஜெயம் சரதிரஉபயம்.
ஆண் பெண் இராசி ஜலராசி சுஷ்கராசி

---

திரசரமாறல்லதது வார்க்குமெதிர்விழிம்பாஞ்
சேய்க்கனேயெட்டசிதனுக்குத் திரிதேசந்தேசிகனுக்
குரநவமீப்பார்வையுமாங் கேந்திரமொன்றறலவே
யொருபதிதற்கடுத்ததெலாம் பணபரமறறிவைபோல்
வரலதுவாபோக்கிலீப மறைதலெட்டாறெடுக்க
மகவழங்கோணுபஜெயநோய் வல்லணன்மானமுமாஞ்
சரதிரமற்றுபயமுநேர் தகர்முதலாண்பெண்ணேர்
சாலலவக்கோண்கலைப்பின் சலப்பெயர்மற்றளிவே.

திமுஞ்சாமு மாதிப்பாக்கும்
உபயம் உபயத்தைப் பார்க்கும்
சூரியாதி கேதுவரை சகலரும் 7-மிடத்தைப் பார்ப்பார்கள்.

செவ்வாய்க்கு 4-8-ம்
சனிக்கு 3-10-ம்  அதிகப்பார்வை.
குருவுக்கு 5-9-ம்

1-4-7-10-கேந்திரம்  6-8-12-மறைவு
2-5-8-11-பணபரம்  5-9-திரிகோணம்
3-6-9-12-ஆபோக்லீபம்  3-6-10-11-உபஜெயம்

மேஷம் கடகம் துலாம் மகரம்
இவை 4-ம் சரராசி.

ரிஷபம் சிங்கம் விருச்சிகம் கும்பம்
இவை 4-ம் திரராசி.

மிதுனம் கன்னி தனுசு மீனம்
இவை 4-ம் உபயராசி.

மேஷம் மிதுனம் சிங்கம் துலாம் தனுசு கும்பம்
இவை 6-ம் ஆண் அல்லது ஓஜராசி.

ரிஷபம் கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம்
இவை6-ம் பெண் அல்லது யுக்மராசி.

கும்பமும் கடகக்கோணும் மகரத்திற்
பின்னரையும் ஜலராசி.

மேடக்கோணும் ரிஷபகன்னியும் மிதுன
துலாமும் மகரத்தில் முன்னரையும்
சுஷ்கராசி.

---

இராசித்தானம் இராசிநிலம் இராசிச்சூழிகை
மாரகஸ்தானம்.

---

சலமலைகான் விளையுணத்தண் டலைமொடுஆர்வயல்கற்
சாரணகரோடமொடு மா வணப்பால்கூவல்
சொலைபுரிபோர்க்களமொடிவூர்க்கொல்லையலைக்கரையாவ்
குடமுதற்றேள்சேர்பசைபெண்கோத்து கோண்மாண் கழப [பா

மலைவன் விடைப்பாண்டரிக்கோ ணரத்தமைமீனமுஞ்சா
லானுமடமீன் றலையும் யாழுரிதேள்சலையுஞ்
சிலையலவனுலைகோந் திருகால் கால்கால்கால்
செலவேள் கண்ணையமிவை மாரகத்தினிடமே.

| | |
|---|---|
| கும்பத்துக்கு | ஜலமும் |
| மீனத்துக்கு | சமுத்திரமும் |
| மேஷத்துக்கு | காடும் |
| ரிஷபத்துக்கு | விளைவனமும் |
| மிதுனத்துக்கு | சோலையும் பட்டணமும் |
| கடகத்துக்கு | வயலும் |
| சிங்கத்துக்கு | மலைச்சார்பும் |
| கன்னிக்கு | நகரமும் |
| துலாத்துக்கு | ஆற்றோடமும் கடைவீதியும் |

| | |
|---|---|
| விருச்சிகத்திற்கு | கிணறும் |
| தனுசுக்கு | போர்க்களமும் ஊரடுத்த கொல்லையும் |
| மகரத்துக்கு | சமுத்திரக்கரையுந் தானமாம். |
| விருச்சிகம்-மீனம் | பச்சை |
| கன்னி | துலாக்கோண் |
| மகரம் | கருப்பு |
| இடபகடகம் | வெளுப்பு |
| சிங்கக்கோண் | சிவப்பாம் |

| | |
|---|---|
| மேஷம்-மீனம் | ௪வ-நாழிகை |
| கும்பம்-இடபம் | ௪ரு-நாழிகை |
| கன்னி துலாம் | ௫-நாழிகை |
| மிதுனம்-சிங்கம்-விருச்சிகம்-மகரம் | ௫வ நாழிகை |
| தனுசு-கடகம் | ௫உ-நாழிகை |

2-7-11 மாசகண்தானம்.

---

இராசிவடிவம் இராசிக்கால்

ஒற்றை இராசி-இரட்டை இராசி.

---

இடபயரியாடலவன் றேட்டிலைமற்றனல்கே
லெடுத்துடையவொருமீன்வால் வவ்வுமொருமீன்சேன்
மடவரனெற்கதிரனற்கை வைத்தவண்மானிடமாய்
வரல்சிலையிற்கரமரைக்குக் கீழ்புரவியுருவங்
கடலினுடலமிழ்ந்திடக்கம் முறப்பேறல்கலையாழ்
காரிகையோர்புருடனுடன் கலப்புறல்யாழ்கதையாய்
விடையரிக்கோணுற்கான்மீன் மான்பறவைகுளிர்தேன்
வெகுகான்மற்றுபயமைபே ரொற்றைமற்றதெனுமே

இடபம் சிங்கம் மேடம் கடகம் விருச்சிகம்

இவைக்கிவையே வடிவம்

கும்பம் கும்பஞ்சுமந்த புருடன்
துலாம் துலாக்கோல் பிடித்தபுருடன்

மீனம் ஒருமீன்வாலை யொருமீன் கவ்விக்கொண்டு இரட்டைமீனாகச் சஞ்சரிப்பது.

கன்னி கன்னிகையாகி கதிர்க்குலையும் அக்கினியுங்கையில் வைத்திருப்பவள்.

தனுசு அரைக்குமேற் புருடனாக கையிற்பிடித்த வில்லுமாகி அரைக்கீழ் குதிரையுருவமாக விருப்பது.

மகரம் உடல்முழுதுஞ் சமுத்திரத்தி லமிழ்ந்திக் கிடக்கச் சிரசேரூபமாகக் கடற்றீரத்திற் சஞ்சரிப்பது.

மிதுனம் வீணைபிடித்தபெண்ணும் கதைபிடித்த புருஷனுமாகச் சதா மைதுனசம்பந்தமாக விருப்பது இவைராசி வடிவமாம்.

இடபமுஞ் சிங்கக்கோணும் நாலுகாலுடையன.
மீனமும் மகரமும் இறகேகாலாகச் சஞ்சரிக்கும்
கடகமும் விருச்சிகமும் வெகுகாலையுடையன.

மிதுனம் கன்னி துலாம் கும்பம் இவை 4-ம் இரண்டு காலையுடையன.

மேஷம் மிதுனம் சிங்கம் துலாம் தனுசு கும்பம் இவை 6-ம் ஒற்றைஇராசி.

ரிஷபம் கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம்இவை 6-ம் இரட்டை இராசி.

---

இராசியினது உருவிகிர்தி இராசிக்குலம் இராசிவீதி
சத்திரம் தாதுமூல ஜீவராசிபார்வை இராத்திரி
ராசி பகல்ராசி சந்திராசி இராசி உவையம்
இராசிகொண்டாந்தம் திரிகாலராசி.

---

ஒற்றையரியானலவன் றேளொருமற்றுபய
  வுருமீன்விற்சால்விடைக்கோ ணுறுங்குலநான்காகுஞ்
சிற்றிடை கோல்சேலாடுக் கான்முதற்றேண்முதலாய்ச்
  சேவயப்யாழ்த்தெருகுடைத்தா தும்மூலஞ்சீவன்
சொற்றகர்நேர்நோக்கனன் றுதைவேளற்பகன்மற்
  றுஞ்சொலுவாரிமுதனுன் குங்குடமுஞ்சுறமீன்.
மற்றதுமுன்னிடைவெரிராந் தேள்சிலைமுச்சந்தி
  வரிலதுகெண்டாந்தமைநேர் கழிதல்செய்தல்வரனே.

சிங்கம் கடகம் மேஷம்
இடபம் விருச்சிகம்

இவை ஒற்றித்தவுருவாம்.

மிதுனம் துலாம் மகரம் மீனம்
கன்னி தனுசு கும்பம்

இவை இரட்டித்த வுருவாம்.

| | |
|---|---|
| கடகக்கோண் | பிராமணகுலம் |
| மேடக்கோண் | க்ஷத்திரியகுலம் |
| மிதுனக்கோண் | வைசுயகுலம் |
| இடபக்கோண் | சூத்திரகுலம் |

| | |
|---|---|
| கன்னி துலாம் மீனம் மேடம் | இவை இடபவீதி |
| இடபம் மிதுனம் கட்கம் சிங்கம் | அவைமேடவீதி |
| விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் | இவை மிதுனவீதி |

இவ்வீதியே சத்திரமுமாமென்ப.

| | |
|---|---|
| மேஷம் கடகம் துலாம் மகரம் | இவைதாதுராசி |
| ரிஷபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் | இவைமூலராசி |

மிதுனங் கன்னி தனுசு மீனம் இவைஜீவராசி

தாதுவுக்கு 11-ம் மூலத்துக்கு 9-ம் ஜீவனுக்கு 7-ம் பார்வையாம்.

மேஷம் கடகம் துலாம் மகரம் இவை இராத்திரிராசி.

இடபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் இவைபகல் இராசி

மிதுனம் கன்னி தனுசு மீனம் இவைசந்திராசி

சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் கும்பம் இவை சிரோதையம்.

மகரம் மீனம் குறுக்குதையமாம்.

மேஷம் ரிஷபம் மிதுனம் கடகம் தனுசு பிரிஷ்டோதையமாம்.

கடகக்கோ ணந்தியமும் சிங்கக்கோணுதியும் செண்டாந்தம்.

மேஷம் கடகம் துலாம் மகரம் இவை இறந்தகாலராசி.

ரிஷபம் சிங்கம் விருச்சிகம் கும்பம இவை நிகழ்காலராசி.

மிதுனம் கன்னி தனுசு மீனம் இவை எதிர்காலராசியாம்.

---

தறிக்கால் அதோமுகராசி ஊர்த்தமுகராசி

புறமுகராசி.

---

அல்லிறைநேர்சாலரைமுக் கால்கதைவீருடா

மெரிபணர் தமுக்காலான் கான்மைவிற்றேள்யாழாங்

வில்லசங்கார்கோலரைசா லீருந்தேள்விற்கோன்

மீன்கடைசேல்பெண்மான்கால் விடையரையாமிரவி

யில்லொருமுக்கால்கால்சா றுலையீருன் குளிரா
   மீறுமுக்கால்கான் மான்சே விடபமரையரியாழ்
வல்விகலைதேண்மீனு மற்றவருந்தறிக்கால்
   வான்குபின்னேர்முகமின்ஞர்மனை கடைமுன்பவைக்கே.

சந்திரனுக்கு கும்பத்தில் 2-ம் கால், மிதுனம் 3-ம்கால், மேஷம் 4-ம் காலும்.

செவ்வாய்க்கு சிங்கம் கன்னி 4-ம்கால், இடபம் 3-ம் கால், மேடம் தனுசு விருச்சிகம் மிதுனம் முதற்காலும்.

புதனுக்கு தனுசு மேடம் கடகம் துலாய் 2-ம் கால் கும்பம் 4-ம் காலும்.

வியாழனுக்கு விருச்சிகம் தனுசு துலாம் மீனம் 4-ம் கால் மீனம் கன்னி மகரம் முதற்கால் இடபம் 2-ம் காலும்.

சுக்கிரனுக்கு சிங்கம் மேஷம் 3-ம் கால் கும்பம துலாம் முதற்கால் இடபம் கடகம் 4-ம் காலும்.

சனிக்கு மகரம் 4-ம் கால் மீனம் 3-ம் கால் இடபம் முதற்கால் சிங்கம் மிதுனம் கன்னி மகரம் விருச்சிகம் மீனம் 2-ம் காலும்.

ரவிக்கு கன்னி துலாம் விருச்சிகம் தனுசு மகரம்கும்பம் கடகம் 3-ம் கால் கடகம் சிங்கம் முதற்கால், மிதுனம் 4-ம்காலும் தறிக்காலிடமாம்.

ரவிநின்றராசி அதோமுகராசி அதற்குப்பின்புள்ள ராசி ஊர்த்தமுகராசி அதற்கு முன்புள்ளராசிபுரமுகாசி அவ்லது திரியங்கமுகராசி யென்று வைத்து நோ்நடத்துக.

———

## இராசிஉண்ணல் இராசிவிழிப்பு இராசிக்கவிப்பு சந்திரகெதி இராசிக்குருடு வெளிராசி உள்ராசி இடைராசி.

---

கடைநான்கைமுதன்முதலுண் பதுராசிக்கானேர்க்
    ககம்விழிப்புக்குரைப்பதமிப் படிகாற்பேர்க்குளதா
கடவாகியுதையமிரண் டரைநாழிகைநேர்
    நடத்திநடப்பதைக்கவிப்பா நடப்பிருப்பூடுதலோ
திடல்சேய்நோய்களிகேடு லெங்கனமைதுனநித்
    திரையூண்பைநேரிவை சந்திரகெதிக்காமிருண்மற்
றடைமீன்சாலரிமுதனுன் கும்மலவுங்குருடா
    மசம்வெளியுள்ளிடையென நேறறைகுவர்மாதவனே.

மேஷத்தின் முதற்கால் மீனத்தின் 4-ம் காலை யுண்ணும்.

2-ம் கால் 3-ம் காலை யுண்ணும்.

3-ம் காலை 2-ம் காலையுண்ணும்.

4-ம் கால் முதற்காலை யுண்ணும்.

இந்தபபடி இராசிதோறும் ஆதியந்தந்தமாகநடத்துவது இராசியூணு ர்.

மேஷத்தின் முதற்கால் கும்பம் 4-ம் காலை

வ-பார்வை பார்க்கும்

2-ம் கால் 3-ம் காலை உ-பார்வை பார்க்கும்

3-ம் கால் 2-ம் காலை ஆ-பார்வை பார்க்கும்

4-ம் கால் 1-ம் காலை முழுப்பார்வை பார்க்கும்

ரிஷபத்தின் முதற்கால் மகரத்து 4-ம் காலை

வ-பார்வை பார்க்கும்

2-ம் கால் 3-ம் காலை உ-பார்லவை பார்க்கும்.

3-ம் கால் 2-ம் காலை $\frac{3}{4}$ பார்வை பார்க்கும்
4-ம் கால் 1-ம் காலை முழுப்பார்வை பார்க்கும்,
மிதுனம் முதல்கால்
தனுசு 4-ம் காலை } $\frac{1}{2}$ பார்வை பார்க்கும்
2-ம் கால் 3-ம் காலை $\frac{1}{2}$ பார்வை பார்க்கும்
3-ம் கால் 2-ம் காலை $\frac{3}{4}$ பார்வை பார்க்கும்
4-ம் கால் முதற்காலை முழுப்பார்வை பார்க்கும்

இந்தப்படி மற்றதாதுமூல ஜீவராசிகளுக்குஞ்சர திர உபயங்களுக்கும் பார்வையறிந்துகொள்க.

உதையராசி தொட்டு $2\frac{1}{2}$ நாழிகை நேராகநடப்புராசியைக்கவிப்பது இராசிக்கவிப்பாம்.

| | | |
|---|---|---|
| மேஷத்தில் | சந்திரன் | நடை |
| இடபத்தில் | ,, | இருப்பு |
| மிதுனத்தில் | ,, | பூசல் |
| கடகத்தில் | ,, | வேதமோதல் |
| சிங்கத்தில் | ,, | புத்திரப்பேரு |
| கன்னியில் | ,, | ரோகம் |
| துலாத்தில் | ,, | கெர்ச்சிதம் |
| விருச்சிகத்தில் | ,, | கேடு |
| தனுசில் | ,, | லெங்கனம் |
| மகரத்தில் | ,, | மைதுனம் |
| கும்பத்தில் | ,, | நித்திரை |
| மீனத்தில் | ,, | பொசிப்பு |

இவை சந்திரகெதியாம்.

சிங்கம்-கன்னி-துலாம்-விருச்சிகம்-கும்பம்-மீனம்

இவை ராக்குருடு.

மேஷம்-ரிஷபம்-மிதுனம்-கடகம்-தனுசு-மகரம்,

இவை பகற்குருடு.

மேஷம்-கடகம்-துலாம்-மகரம்
இவை வெளிராசி.

ரிஷபம்-சிங்கம்-விருச்சிகம் கும்பம்
இவை உள்ராசி.

மிதுனம்-கன்னி-தனுசு-மீனம்
இவை இடைராசி.

---

### தசவர்க்கம்.

மாதுவிதுமற்றிரவி மாறுமிரண்டோரை
வருவதுதன்முக்கோணத் ரேக்காணமதமாம்
போதுபுருடன்னேர்மற் றதற்கேழாமொருவாப்
புரவிமுதற்கானேரோன் பதாவம்பெண்புருடர்க்
கோதுதனேர்தசமதுநேரா ட்டுரைத்தறுவாதசஞ்சே
யூழ்சுதன்பொன்மால்சிதனுக்குண்மகனெட்டேனழந்
திழமுதனேரிடமற் றெய்த்துதறீங்கிசமா
பிதுபோச்சட்டியாங்கிசத்துக் கோரறுபதிபல்லே.

### தசவர்க்கம்.

1-வது. கிரகமிருக்கிற ராசிவர்க்கமாம்.

2-வது. சூரியசந்திரவோரை

கிரகமிருந்தராசியை 2-கூறிட்டது ஒரை. ஆண் ராசிக்கு 15-பாகைக்குள் சூரியவோரையாகவும் பெண்ராசிக்கு 15-க்குள் சந்திர வோரையாகவும், 30-க்குள் சூரியவோரையாகவுங் கொள்க.

3 வது திரைக்காணம்.

கிரகமிருந்த ராசியை 3-கூறிட்டது
திரைக்காணம்.

10-பாகைக்குள் அந்த லக்கினமாகவும், 20-பாகைக்குள் 5-ம்லக்கினமாகவும் 30-பாகைக்குள் 9-ம்லக்கினமாகவுங் கொள்க.

4-வது. சத்தமாங்கிசம்.

கிரகமிருந்தராசியை 7-கூறிட்டது.

சத்தமாங்கிசம்.

ஆண்ராசிக்கு உதயமுதல் நேரும் பெண்ராசிக்கு 7-ம் ராசிமுதல் நேருமாகக்கொள்ளவும்.

5-வது. நவாங்கிசம்.

கிரகமிருந்தராசியை 9-கூறிட்டதுநவாங்கிசம் அந்தந்தகிரகங்களின் அங்கிசலக்கினமாககொள்க.

6-வது. தசாங்கிசம்.

கிரகமிருந்த ராசியை 10-கூறிட்டது.

தசாங்கிசம்.

ஆண் ராசிக்கு உதயமுதல் நேரும் பெண்ராசிக்கு 7-ம் ராசிமுதல் நேருமாகக்கொள்க.

7-வது. துவாதசாங்கிசம்.

கிரகமிருந்த ராசியை 12-கூறிட்டது.

துவாதசாங்கிசம்.

ஆண்ராசிக்கும் பெண்ராசிக்கும் உதயமுதல்நேரேகொள்க.

8-வது. கலாங்கிசம்.

கிரகமிருக்தராசி 16-கூறிட்டதுகலாங்கிசம்.

கூறு 1-க்கு பாகை 1-ம், கலை 52½-யுமாம்.

ஆண்ராசிக்கு மேஷமுதல் நேராக 12--ராசியும் பிரமன், மாயோன், ருத்திரன், ரவியாகவும்.

பெண்ராசிக்கு ரவி, ருத்திரன், மாயோன், பிரமனாகவும், மேஷம் வடையிடமாகக் கொள்க.

6-வது. திரிம்சாங்கிசம்.

திரிம்சாங்கிசம் ஆண்ராசிக்கு.

| | |
|---|---|
| 5-பாகைக்குள் | செவ்வாயாகவும் |
| 10-பாகைக்குள் | சனியாகவும் |
| 18-பாகைக்குள் | குருவாகவும் |
| 25-பாகைக்குள் | புதனாகவும் |
| 30-பாகைக்குள் | சுக்கிரனாகவும் |

பெண்ராசிக்கு.

| | |
|---|---|
| 5 - பாகைக்குள் | சுக்கிரனாகவும் |
| 10-பாகைக்குள் | புதனாகவும் |
| 18-பாகைக்குள் | குருவாகவும் |
| 25-பாகைக்குள் | சனியாகவும் |
| 30-பாகைக்குள் | செவ்வாயாகவுங்கொள்க. |

10-வது. சஷ்டியாங்கிசம்.

கிரகமிருந்தராசியை 60-கூறிட்டது சஷ்டியாங்கிசம். கூறு 1-க்கு 30- கலையாம். இதுவும். ஆண்ராசிக்கு நேராகவும், பெண்ராசிக்குக் கடை சிமுதலாகவுங் கொள்க.

சஷ்டியாம்சப்பெயர்.

கோரபவுண்டேவராளகைக்குமன் றற்சிரியை

கோடையினசனக்கோபங்கொடுவிடர்த்தீகோதத்

ஞூர்தன்ம்பலாந்தபிரோதபுரிபாவ
மதிதேவங்கணநாதமெமனரவம்பிரத
மேர்மிருதுகோமளம்ப்ரபலம்வாசமீச
மியமபிறைதிகாம்பரம்வாணிறைசவினைதநாசம்
பாரதிபமலர்சனிசேப்பவர்த்தகந்திக்கோரம்
பார்ப்பான்சேய்சுதமமிர்தபூரணம்பான்மதியே.

### தேவதாமசப்பெயர்.

மதிமபக்லம்பாக்கிபங்கொணுசம்லெருமானம்
வங்கிசுக்ரேடுற்பாதமறலியுநமகிழ்மாய்
வதிதளமற்பகல்கூழுகங்கொதக்ஷணகுருர
மாதண்டமமலமதிசுபமலகதிதங்
ததிமுனரோதகிசுழல்சந்த்ராங்கமருபத்றகாஞ்
சாற்றுசுராங்கிசம்பாரிசாதமொமோபித்தமம்பின்
னுதிதருகோபுரமிநகாசனம்பாராவதம்வா
னுலகம்வைசேடிகமைராவதபிவைபேர்க்குளதே.

1-கோரம்
2-இராக்கதம்
3-தேவம்
4-குபேரம்
5-இராக்கதபோகம்
6-கின்னரம்
7-இட்டகுலகோபம்
8-விடம்
9-அக்கினி
10-அங்களம்
11-மாபராந்தகம்
12-பிரோதபுரிபாவம்
13-அதிதேவம்
14-கணேசம்
15-காலன்
16-சர்ப்பம்
17-அமிர்தம்
18-அபிராமம்
19-மிருது
20-கோமளம்
21-பிரபலம்
22-சுவாசம்
23-ஈசம்
24-வாகீசம்
25-திகம்பரம்
26-தேவேந்திரம்

| | |
|---|---|
| 27-கவிதை | 44-காலரூபம் |
| 28-நாசம் | 45-சௌமியம் |
| 29-பூபதி | 46-மிருதம் |
| 30-கலம் | 47-சுசீதளம் |
| 31-சனிசுதம் | 48-திமிரம் |
| 32-பவர்த்தகம் | 49-திவா |
| 33-அக்கினிகோரம் | 50-சந்திரமுகம் |
| 34-எமகண்டம் | 51-பிரதேக்ஷணம் |
| 35-சுதம் | 52-காலாக்கினி |
| 36-அமிர்தபூரணம் | 53-சண்டம் |
| 37-சந்திரம் | 54-நிருமலம் |
| 38-அம்சம், மதிமயக்கம் | 55-சுபம் |
| 39-சௌபாக்கியம் | 56-அசுபம் |
| 40-குலநாசம் | 57-அதீதம் |
| 41-முக்கியம் | 58-பயோததி |
| 42-வங்கிசநாசம் | 59-சுழல் |
| 43-உத்பாதம் | 60-சந்திரதேசம். |

தேவதாமச இயல்பு, இராசித்துற்பொசுப்பு.

கரேசம், இராசிக்கதிர், அசுபசுப இராசி.

வைப்புதையமூதலறுந்தங்கிஷமீறளவும்
வருஞ்சுபம்ரண்டாய்த்தேவரங்கிஷநேர்வருமா
லிப்பதியிற்சாற்கொண்டுமீன்கோண்மான்பின்
னிவைக்கெருவைகேழன்மற்றதரவூணீரிருபா
னத்புரமுக்கோணதுகரேசமெனலாமீ
னத்தினம்பெண்விற்றமையனுன்கலைபாறரிவே
டப்பினவெட்டிவைகதிர்க்காமக்கதிர்நேருவர்க
டம்மில்சுபஞ்சுபமிவ்வந்திபஞ்சாற்றுதலே.

பூவோதைப லக்கினமுதல் சஷ்டியாம்சிசம்வரை
யிருள்ள 9-வர்க்கத்தில்,

2-சுபவர்க்கமேறில் பாரிசாதாமசம்
3-சுபவர்க்கமேறில் உத்தமாம்சம்
4-சுபவர்க்கமேறில் கோபுராம்சம்
5-சுபவர்க்கமேறில் சிங்காசனம்பம்
6-சுபவர்க்கமேறில் பாராவதாம்சம்
7-சுபவர்க்கமேறில் தேவலோகாம்சம்
8-சுபவர்க்கமேறில் வைசேடிகாம்சம்
9-சுபவர்க்கமேறில் ஐராவதாம்சம்.

சிங்கம்-கும்பம்-மிதுனம்-துலாம்-இவற்றின் நடுகூறு கழுகுபண்ணும்.

மீனக்கோண்-மகரம் இவற்றின் பிற்கூறு பன்றியுண்ணும்.

மேடம்-தனுசு-கன்னி-இடபம் இவற்றின் முற்கூறு பாம்பு உண்ணும்.

இவை இராசித்துற்பொசிப்பாம்.

சென்மலக்கினத் திரேகாணத்துக்கு 21-ம், திரேகாணம் கரேசமாம்.

| | |
|---|---|
| மீனத்துக்கு | கதிர்-27 |
| தனுசு-கன்னிக்குக் | கதிர்-11 |
| இடபம்-மகரத்துக்குக் | கதிர் -6 |
| சிங்கத்துக்குக் | கதிர் - 7 |

மேடம்-மிதுனம்-கடகம்-துலாம்-விருச்சிகம்-கும்பம்-இவற்றிற்கு 8-ஆம் இராசியாதிபதி பதிந்த இராசிக்கு அசுபசுபஞ்சொல்லுக.

## புதனோட்டம், இராசியாம்சம் தேகராசி

புட்பகராம்சம், அவமிருத்து, நிதனன் அனித்தியன்

சாற்புதனேர்நந்நான்காய்த்தபன் னுடன்முன்பின்
றரித்தல்சரமுதற்கதுவுந்தந்தைதனைபருகே
ராப்புகல்வதங்கிசமைநேர்பாடல்கர்ணா
டகமூவர்கேரளங்கொன்மலையசிந்தாச்சால
மேற்பதெழில்கோசலமுன்னேர்முடி[illegible]செமன்க
ணைப்தல்புட்கராங்கிசமிப்பாகைசிகியிற்கோ
ணீர்புரமிருத்துபயவீமளனிக்காணேர்
நிற்பனிவனில்லதிபனிதனனனித்தியனே.

கும்பம்-மீனம்-மேடம்-ரிஷபம் இந்த 4-ராசியிலும் புதன் ரவியுடன் கூடி நடப்பன்.

மிதுனம்-கடகம்-சிங்கம்-கன்னி இவை 4-லும்புதன் ரவிக்குமுன் நடப்பன்.

துலாம-விருச்சிகம்-தனுசு-மகரம் இவை 4-லும் புதன் ரவிக்குப்பின நடப்பன்.

சுரத்துக்கு அது முதல் நேரும்

திரத்துக்கு 9-ம் ராசிமுதல் நேரும்

உபையத்துக்கு 5-ம் ராசிமுதல் நேருமாக நடத்துவது ராசியாம்சகமாம்.

| | | |
|---|---|---|
| மேஷத்துக்கு | தேசம் | பாடலம் |
| இடபத்துக்கு | ,, | கர்ணாடகம் |
| மிதுனத்துக்கு | ,, | சேரணாடு |
| கடகத்துக்கு | ,, | சோழணாடு |
| சிங்கத்துக்கு | ,, | பாண்டிநாடு |
| கன்னிக்கு | ,, | கேரளம் |

| | | |
|---|---|---|
| துலகத்துக்கு | தேசம் | கொல்லம் |
| விருச்சிகத்துக்கு | ,, | மலையம் |
| தனுசுககு | ,, | சிந்துதேசம் |
| மகரத்துக்கு | ,, | பாஞ்சாலம் |
| கும்பத்துக்கு | ,, | யவனம் |
| மீனத்துத்கு | ,, | கோசலமாம். |

| | |
|---|---|
| மேஷம்-சிங்கம்-தனுசில் | பாகை 21-ம் |
| ரிஷபம்-கன்னி-மகரத்தில் | பாகை 14-ம் |
| மிதுனம்-துலாம்-கும்பத்தில் | பாகை 24-ம் |
| கடகம்-விருச்சிகம்-மீனத்தில் | பாகை 7-ம். |

ஆ நடத்துவது புட்கராம்சமாம்.

கேது நின்ற ராசித்திரிகோண உபையரந்தம் அவமிருத்துவாம் இவன் இக்கால் நேர்நிற்பன் இவனின்ற இராசியாதிபதிக்கு நிதனனென்றும், அனித்தியனென்றும் பேராம்.

சயனராகு, க்ஷணிகராகு க்ஷணிமாதித்தன்,
க்ஷணிகசந்திரன், நிற்கும்ராசி, நடக்கும்ராசி
இருக்கும்ராசி, கெர்ப்பத்துவாரவான்
மியாசி, துற்பெலராசி, பெலராசி, அதிபெலராசி.

நித்திரைமாசுணமானேர்மூன்றிவைபெண்ணிடமாய்
நேர்கமுகங்களமகடுநிதம்பமவ்வாலிவைநேர்
வைத்திவைபோல்வில்லவளைமைவலமுமாக
வகுததவபகற்கிவைவிகிர்திப்போவரன்மற்றதற்கா
மித்தலநேரோரைாயளவெய்துதலச்சணிக
மீதினனுக்கிடஞ்சில்நேரிவற்கெதிரிந்துவுக்கா
மத்தனுநேர்நிறறனடையிருத்தல்கெர்ப்பத்வார
லதுவரந்தகர்முந்நேரதிபெலப்பேர்க்காமே.

| | |
|---|---|
| மகரத்தில் | சிரமும் |
| கும்பத்தில் | முகமும் |
| மீனத்தில் | கண்டமும் |
| கன்னியில் | வயிறும் |
| சிங்கத்தில் | யோனியும் |
| கடகத்தில் | வாலுபாகவும் |

| | |
|---|---|
| தனுசில் | சிரமும் |
| விருச்சிகத்தில் | முகமும் |
| துலாத்தில் | கண்டமும் |
| மேடத்தில் | வயிறும் |
| இடபத்தில் | யோனியும் |
| மிதுனத்தில் | வாலுமாகவும் |

பகற்காலத்தில் ராகு சயனித்திருப்பன்.

| | |
|---|---|
| கடகத்தில் | சிரமும் |
| சிங்கத்தில் | முகமும் |
| கன்னியில் | கண்டமும் |
| மீனத்தில் | வயிறும் |
| கும்பத்தில் | யோனியும் |
| மகரத்தில் | வாலுமாகவும் |

| | |
|---|---|
| மிதுனத்தில் | சிரமும் |
| இடபத்தல் | முகமும் |
| மேடத்தில் | கண்டமும் |
| துலாத்தில் | வயிறும் |
| விருச்சிகத்தில் | யோனியும் |
| தனுசில் | வாலுமாகவும் |

இராக்காலத்தில் ராகு சயனித்திருப்பன்.

| | | |
|---|---|---|
| மகரம் | சிங்கம் | துலாம் |
| கும்பம் | கடகம் | மேடம் |
| மீனம் | தனுசு | இடபம் |
| கன்னி | விருச்சிகம் | மிதுனம் |

இவ்விராசிகளில் நேராய் 2½-நாழிகையாகவை த்து நடத்துவது க்ஷணிகராகு.

| | | |
|---|---|---|
| தனுசு | சிங்கம் | மேஷம் |
| விருச்சிகம் | கடகம் | மீனம் |
| துலாம் | மிதுனம் | கும்பம் |
| கன்னி | ரிஷபம் | மகரம் |

இவ்விராசிகளில் நேராக 2½-நாழிகை வைத்து நடத்துவது க்ஷணிகாதித்தன்.

| | | |
|---|---|---|
| மிதுனம் | கும்பம் | துலாம் |
| ரிஷபம் | மகரம் | கன்னி |
| மேஷம் | தனுசு | சிங்கம் |
| மீனம் | விருச்சிகம் | கடகம் |

இவ்விராசிகளில் நேராக 2½-நாழிகைவைத்து நடத்துவது க்ஷணிகசந்திரன்.

தனுசு-மீனம்-மிதுனம்-கன்னி
இவை நிற்கும் ராசி.

மகரம்-மேஷம்-கடகம்-துலாம்
இவை நடக்கும் ராசி.

கும்பம்-ரிஷபம்-சிங்கம்-விருச்சிகம்
இவை இருக்கும் ராசி.

தனுசு-மீனம்-மிதுனம்-கன்னி
இவை கெர்ப்ப ராசி.

மகரம்-மேஷம்-கடகம்-துலாம்
இவை துவார ராசி.

கும்பம்-ரிஷபம்-சிங்கம்-விருச்சிகம்
இவை வான்மீய ராசி.

மேஷம்-கடகம்-துலாம்-மகரம்
இவை துற்பெல ராசி

ரிஷபம்-சிங்கம்-விருச்சிகம்-கும்பம்
இவை பெல ராசி.

மிதுனம்-கன்னி-தனுசு-மீனம்
இவை அதிபெல ராசி.

ஏகாதிபத்தியம், சகடயோகம், சமசப்தமம்,

மாமககாலம், மலமாசம், பானுமத்தியம்,

அதிபதிப்பேர்க்கவரவருக்கமைத்தமனைக்கதுவா
மலவனுக்கேறந்தணனில்லரிக்கெனலற்கதிபன்
பதனநிதிக்கெனிற்சகடயோகமெனலேழ்
பானுவிதுவல்லவர்கள் பற்றல்சமசத்த
நிதியழியுற்றிடுநாண்மாமகப்பேரிந்திரவி
நிற்பதொருராசியில்ரண்டுதாரநெடுமோதம்
புதனிடபத்திரைநடுவம்புயனுறிற்பேரிவைப்பேர் (லே
புகல்வரிதன்மேற்றிதிப்பேர்க்குளவியல்போது

மேட விருச்சிகமும்-இடப துலாமும்
மிதுன கன்னியும்-கடக இடபமும்
சிங்க தனுசும்-தனுசு மீனமும்
மகாகும்பமும் ஏகாதிபத்தியமாம்,

குருவுக்கு 6-8-12-ல் மதிநிற்கில் சகடயோகம்

ரவி மதி நீங்கலாக மற்றவர்கள் 7-க்கு 7-ஆக வரில்,
சமசப்தமாம்.

சிங்கத்தில்குருவிறுக்கு நாள்மாமககாலம்
ரவிநிற்கும்ராசியில் மதிபிரண்டுதரம்வரில்மலமாசம்
புதசுக்கிரனுக்கிடையில் ரவிநிற்கில்பானுமத்திபம்

## திதிதேவதை காளகூடயோகம்.

திதிக்கதிபர் துர்க்கைவிசுவத்ததிபதிமாச்
சிரசினன்றேனிறைகுகனாழ் செல்விசொற்றுய்சீற்றத்
தூதித்தவனம்பிகைமால்கம்முருத்திரனீர்தனத
னாதைகனலவுணர்சுராருலகுதையன்முனிவோ
ரதித்தெருண்மனமன்பொன்னசிதன்சிதனந்தீச
னைவரின்மற்றவர்பூர்வபக்ஷமுதற்கவைநேர
விதிப்பர்சுபதினத்தினனேர்பஞ்சமிதொட்டேன
மேவிலிதற்கோதல்கோடுவிடகூடப்பெயரே.

### பூர்வபக்ஷத்துப்

| | | |
|---|---|---|
| பிரதமை | ,, | துர்க்கை |
| துதியை | ,, | விசுவதேவன் |
| திரிதியை | ,, | சந்திரன் |
| சதுர்த்தி | ,, | விக்கினேஸ்வரன் |
| பஞ்சமி | ,, | தேவேந்திரன் |
| சஷ்டி | ,, | சுப்பிரமணியன் |
| சத்தமி | ,, | சூரியன் |
| அஷ்டமி | ,, | இலக்குமி |
| நவமி | ,, | சரஸ்வதி |
| தசமி | ,, | வீரபத்திரர் |
| ஏகாதசி | ,, | பார்வதி |
| துவாதசி | ,, | விஷ்ணு |

| | | |
|---|---|---|
| திரையோதசி | ,, | பிரமா |
| சதுர்த்தசி | ,, | உருத்திரன் |
| பௌரணை | ,, | வருணன் |

| | | |
|---|---|---|
| பிரதமை | அமரபக்ஷத்துப் | குபேரன் |
| துதியை | ,, | வாயு |
| திரிதியை | ,, | அக்கினி |
| சதுர்த்தி | ,, | அசுரர் |
| பஞ்சமி | ,, | தேவர்கள் |
| சஷ்டி | ,, | அங்காரகன் |
| சப்தமி | ,, | முனிவோர் |
| அஷ்டமி | ,, | சேஷன் |
| நவமி | ,, | நமன் |
| தசமி | ,, | வியாழன் |
| ஏகாதசி | ,, | சனி |
| துவாதசி | ,, | சுக்கிரன் |
| திரையோதசி | ,, | நந்திஸ்வரன் |
| சதுர்த்தசி | ,, | மகேஸ்வரன் |
| அமாவாசி | ,, | சதாசிவன் |

இவை திதிதேவதையாம்.

| | | |
|---|---|---|
| பஞ்சமியில் | ஞாயிறு | அத்தமும் |
| சஷ்டியில் | திங்கள் | திருவோணமும் |
| சத்தமியில் | செவ்வாய் | அசுபதியும் |
| அஷ்டமியில் | புதன | அனுஷமும் |
| நவமியில் | வியாழன் | பூசமும் |
| தசமியில் | வெள்ளி | ரேவதியும் |
| ஏகாதசியில் | சனி | ரோகணியும்வரில் |

காளகூடயோகமாம்.

## திதித்தீது.

ஒதிஙேந்கேழுப்பிரண்டெட்டும்மாறொன்பானெட்
டும்மிதிலாறற்றொருபானுற்றதும்பத்தோடொன்
றுதிகமொன்பானேழுமாறிரண்டோர்நான்கு
மாறேகதசமுமல்லாதயானிறைவுமடுப்பே
ஸ்ரீதுமனுசம்பதின்மூன்றும்மிருமூன்றூரியு
மிரேவதியெட்டைந்தனவிரண்டுடையுமிவைநேர்
பூதலநந்தனனேர்வாரத்துறிலித்திதியும்
பூரணைபேர்க்காதியுமீறும்புகலிலவமே.

| | |
|---|---|
| செவ்வாயில் | பஞ்சமி-சத்தமியும் |
| புதனில் | அட்டமி-துதியையும் |
| வியாழனில் | நவமி-அட்டமி-சஷ்டியும் |
| வெள்ளியில் | தசமி-அட்டமி-நவமியும் |
| சனியில் | நவமி-சத்தமி-ஏகாதசியும் |
| ஞாயிறில் | சதுர்த்தி-துவாதசியும் |
| திங்களில் | ஏகாதசி-சஷ்டியும்வரில்-தீதாம். |

இவையல்லாமலும்

| | |
|---|---|
| செவ்வாயில் | ரோகணி-பூரணையும் |
| புதனில் | பரணி-சத்தமியும் |
| வியாழனில் | அனுஷம்-திரையோதசியும் |
| வெள்ளியில் | திருவோணம்-சஷ்டியும் |
| சனியில் | ரேவதி-அஷ்டமியும் |
| ஞாயிறில் | கார்த்திகை-பஞ்சமியும் |
| திங்களில் | சித்திரை-துதியையும்வரில்-தீதாம். |

நந்தையும இருத்தையும் ஆகாது.

## பூமிசுக்கிரநிலை.

| | |
|---|---|
| பிரதமை | கிழக்கில் |
| துதியை | தென்கிழக்கில் |
| திரிதியை | தெற்கில் |
| சதுர்த்தி | தென்மேற்கில் |
| பஞ்சமி | மேற்கில் |
| சஷ்டி | வடமேற்கில் |
| சப்தமி | வடக்கில் |
| அஷ்டமி | வடகிழக்கில் |
| நவமி | ஆகாசத்தில் |
| தசமி | பூமியில் |

பூமி சுக்கிரனிலையாம்.

இந்தப்படி மற்றிருபதும் நேர்நடத்துக.

## திதிவிஷநிலை.

| | |
|---|---|
| அமரபக்ஷம் சதுர்த்தி முதற்சாமம் | கிழக்கிலும் |
| பூர்வபக்ஷம் அஷ்டமி 2-ம் சாமம் | தென்கிழக்கிலும் |
| அமரபக்ஷம் சத்தமி 3-ம் சாமம் | தெற்கிலும் |
| பூரணை 4-ம் சாமம் | தென்மேற்கிலும் |
| பூர்வபக்ஷம் சதுர்த்தி 5-ம் சாமம் | மேற்கிலும் |
| அமரபக்ஷம் திரிதியை 6-ம் சாமம் | வடமேற்கிலும் |
| பூர்வபக்ஷம் ஏகாதசி 7-ம் சாமம் | வடக்கிலும் |
| அமரபக்ஷம் தசமி 8-ம் சாமம் | வடகிழக்கிலும் |

விஷநிலையாம்.

யோகினிக்குப் பின்னும் வலமும்
பூமி சுக்கிரனுக்குப் பின்னும் இடமும்
ஆகுமென்ப, மற்றனவையாகாவென்ப.

திதிகெண்டாந்தம்.

பஞ்சமி - சஷ்டி-தசமி-ஏகாதசி-உவாபிரதமை இவை அந்தம் ஆதிசந்தி திதிகெண்டாந்தம்.

அமரபக்ஷத்து ஏகாதசி-துவாதசி-திரையோதசி-சதுர்த்தசி-அமாவாசி, பூர்வபக்ஷத்துப்பிரதமை-துதியை-திரிதியை-சதுர்த்தி இவை 6-ம் குருடு.

இதன்மேல் பூர்வபக்ஷம் பஞ்சமி-சஷ்டி-சத்தமி இவை 3-ம ஒருகண்.

இதன்மேல் பூர்வபக்ஷம் அஷ்டமி-நவமி-தசமி-ஏகாதசி-துவாதசி-திரையோதசி இவை 6-ம் இருகண்.

இதன்மேல் பூர்வபக்ஷம் சதுர்த்தசி-பூரணை-அமரபக்ஷத்துப் பிரதமை இவை 3-ம் ஒருகண்.

இதன்மேல் அமரபக்ஷம துதியை-திரிதியை-சதுர்த்தி-பஞ்சமி-சஷ்டி-சப்தமி இவை 6-ம் இருகண்.

இதன்மேல் அமரபக்ஷம் அஷ்டமி - நவமி-தசமி - இவை 3-ம் ஒருகண் குருடு.

உடனுதயராசி மீனமாம்.

தலையுதயம் பகல் வலியையுடைய ராசியாம்.

காலுதயம் இராவலியையுடைய ராசியாம்.

சட்கராசி.

மிதுனம்-சிங்கம்-கன்னி ஆக-3.

## ஜலராசிக்கூறு.

| | | |
|---|---|---|
| விருச்சிகம் | கும்பம் | மகரம் |
| துலாம் | ரிஷபம் | மீனம் |
| மேஷம் | தனுசு | கர்க்கடகம் |
| இவை 3-ம் வ. | இவை 3-ம் ஒ. | இவை 3-ம் க. |

## நவக்கிரகங்கள்.

| | | |
|---|---|---|
| சூரியன் | புதன் | சனி |
| சந்திரன் | வியாழம் | இராகு |
| செவ்வாய் | வெள்ளி | கேது |

## கிரகபுத்திரர்.

| | |
|---|---|
| காலன் | விஷகடிகன் |
| சுலக்கியானபாதன் | குளிகன் |
| கரேசன் | அமுதகடிகன் |
| அர்த்தப்பிரகரணன் | அவமிருத்து |
| யமகண்டன் | ஆக-9. |

| குஜாதிபஞ்சக்கிரகங்கள் | | தூமாதிபஞ்சக்கிரகங்கள் | |
|---|---|---|---|
| குஜன் | சுக்கிரன் | தூமன் | இந்திரதனு |
| புதன் | சனி | விதிபாதன் | தூமகேது |
| குரு | ஆக-5. | பரிவேடம் | ஆக-5. |

| வாரங்கள். | யமகண்ட காலம். ஆதி | வரை | அர்த்தப்பிரகாலம். ஆதி | வரை | காலநேமி காலம். ஆதி | வரை |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | கரு | கஅஷ | ககவ | கரு | 0 | ஙஷ |
| திங்கள் | ககவ | கரு | எஒ | ககவ | உஉஒ | உசுவ |
| செவ்வாய் | எஒ | ககவ | ஙஷ | எஒ | கஅஷ | உஉஒ |
| புதன் | ஙஷ | எஒ | 0 | ஙஷ | கரு | கஅஷ |
| வியாழம் | 0 | ஙஷ | உஉஒ | உசுவ | ககவ | கரு |
| வெள்ளி | உஉஒ | உசுவ | கஅஷ | உஉஒ | எஒ | ககவ |
| சனி | கஅஷ | உஉஒ | கரு | கஅஷ | ஙஷ | எஒ |

| ஆண் | பெண் | அலி |
|---|---|---|
| சூரியன் | சந்திரன் | புதன் |
| செவ்வாய் | சுக்கிரன் | சனி |
| குரு | இராகு | கேது |
| ஆக-3. | ஆக-3. | ஆக-3. |

கிரகநிறம்

| | | |
|---|---|---|
| சந்திரன் | சூரியன் | புதன்-பச்சை |
| சுக்கிரன் | செவ்வாய் | குரு-மஞ்சள் |
| வெள்ளை | கேது | சனி, ராகு } கறுமை |
| | சிகப்பு | |

கிரகவடிவம்.

| நெடியர் | குறியர் | சமனானவர் |
|---|---|---|
| புதன் | | |
| குரு | சந்திரன் | சூரியன் |
| இராகு | செவ்வாய் | சுக்கிரன் |
| கேது | சனி | |

கிரகசாதி.

| பிரம்ம | க்ஷத்திரிய | வைசிய |
|---|---|---|
| குரு | சூரியன் | சந்திரன் |
| சுக்கிரன் | செவ்வாய் | புதன் |

| சூத்திர | சங்கிரமசாதி |
|---|---|
| சனி | இராகு |
| | கேது |

சந்திரனைப் பிரம்மஜாதி யென்றும், சுக்கிரனைச் சூத்திரஜாதி யென்றும் சிலர் சொல்லுவார்.

கிரகபாஷை.

| | | | |
|---|---|---|---|
| சூரியன், குரு, சுக்கிரன் } | சமஸ்கிருதமும் தெலுங்கும். | செவ்வாய் | மந்திரம் |
| | | புதன் | ஜோதிஷம் |
| | | சனி-இராகு-கேது | அன்னியபாஷை. |
| சந்திரன் | தமிழ் | | |

## கிரககுணம்.

### குரூரக்கிரகங்கள்.

| | |
|---|---|
| சூரியன் | சனி |
| க்ஷீணச்சந்திரன் | இராகு |
| செவ்வாய் | கேது |

### சௌமியக்கிரகங்கள்.

| | |
|---|---|
| விருதிச்சந்திரன் | குரு |
| புதன | சுக்கிரன் |

### கிரகத்திரயம்.

சரக்கிரகங்கள் சந்திரன்-செவ்வாய்-இராகு-கேது
ஸ்திரகிரகங்கள் சூரியன்-சுக்கிரன்
உபயகிரகங்கள புதன்-குரு-சனி

### சாத்துவிகாதிகுணக்கிரகம்.

| | |
|---|---|
| சாத்மீகர் | சந்திரன்-குரு |
| இராஜசர் | சுக்கிரன்-செவ்வாய |
| தாமசர் | புதன-சூரியன்-இராகு |

### முப்பிணிக்கிரகம்.

| | |
|---|---|
| வாதக்கிரகங்கள் | குரு-புதன்-சனி |
| பித்தக்கிரகங்கள் | சூரியன்-செவ்வாய்-இராகு-கேது |
| சேத்துமக்கிரகங்கள் | சுக்கிரன்-சந்திரன் |

### கிரகதிக்கு.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | நடு | சனி | மேற்கு |
| சுக்கிரன் | கிழக்கு | கேது | வடமேற்கு |
| சந்திரன் | தென்கிழக்கு | குரு | வடக்கு |
| செவ்வாய் | தெற்கு | புதன் | வடகிழக்கு |
| இராகு | தென்மேற்கு | | |

## கிரக ஆசனம்.

| | |
|---|---|
| சூரியனுக்கு | வட்டவடிவம் |
| சந்திரனுக்கு | சவுக்கவடிவம் |
| செவ்வாய்க்கு | திரிகோணவடிவம் |
| புதனுக்கு | அம்புவடிவம் |
| குருவுக்கு | நீண்டசவுக்கவடிவம் |
| சுக்கிரனுக்கு | ஐங்கோணவடிவம் |
| சனிக்கு | வில்வவடிவம் |
| இராகுக்கு | கொடிவடிவம் |
| கேதுக்கு | முச்சில்வடிவம் |

## கிரகவுலோகம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியனுக்கு | தம்பாக்கு | சுக்கிரனுக்கு | வெள்ளி |
| சந்திரனுக்கு | ஈயம | சனிக்கு | இரும்பு |
| செவ்வாய்க்கு | செம்பு | இராகுக்கு | கருங்கல் |
| புதனுக்கு | பித்தளை | கேதுக்கு | துருக்கல் |
| குருவுக்கு | பொன் | | |

## கிரகரத்னம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியனுக்கு | மாணிக்கம் | சுக்கிரனுக்கு | வைரம் |
| சந்திரனுக்கு | முத்து | சனிக்கு | நீலம் |
| செவ்வாய்க்கு | பவளம் | இராகுக்கு | கோமேதகம் |
| புதனுக்கு | பச்சை | கேதுக்கு | வைடூரியம் |
| குருவுக்கு | புஷ்பராகம் | | |

## கிரகதானியம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியனுக்கு | கோதுமை | சுக்கிரனுக்கு | மொச்சை |
| சந்திரனுக்கு | பச்சையமு | சனிக்கு | எள்ளு |
| செவ்வாய்க்கு | துவரை | இராகுக்கு | உளுந்து |
| புதனுக்கு | பச்சைப்பயறு | கேதுக்கு | கொள்ளு |
| குருவுக்கு | கடலை | | |

## கிரகபுஷ்பம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியனுக்கு | செந்தாமரை | சுக்கிரனுக்கு | வெண்டாம |
| சந்திரனுக்கு | வெள்ளலரி | சனிக்கு | கருங்குவளை |
| செவ்வாய்க்கு | சண்பகம் | இராகுக்கு | மந்தாரை |
| புதனுக்கு | வெண்காந்தள் | கேதுக்கு | செவ்வல்லி |
| குருவுக்கு | முல்லை | | |

## கிரகசமித்து

| | | | |
|---|---|---|---|
| சூரியனுக்கு | எருக்கு | சுக்கிரனுக்கு | அத்தி |
| சந்திரனுக்கு | முருக்கு | சனிக்கு | வன்னி |
| செவ்வாய்க்கு | கருங்காலி | இராகுக்கு | அறுகு |
| புதனுக்கு | நாயுருவி | கேதுக்கு | தருப்பை |
| குருவுக்கு | அரசு | | |

## கிரகவூண்.

சூரியன்—செவ்வாய் சுடுகையாகப்புசிப்பர்
சந்திரன்—குரு-சுக்கிரன் குளிர்ச்சியாகப்புசிப்பர்
புதன்—சனி-இராகு-கேது சீதோஷ்ணமாகப்புசிப்பர்

## கிரகசுவை.

சுக்கிரனுக்கும்-சந்திரனுக்கும்-குருவுக்கும்-தித்திப்பு.

| | | | |
|---|---|---|---|
| சூரியனுக்கு | கார்ப்பு | சனிக்கு | கைப்பு |
| செவ்வாய்க்கு | துவர்ப்பு | இராகு-கேது | புளிப்பு |
| புதனுக்கு | உவர்ப்பு | | |

## கிரகவாகனம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியனுக்கு | மயில் தேர் | குருவுக்கு | யானை |
| சந்திரனுக்கு | நரி முத்து [விமானம் | சுக்கிரனுக்கு | கருடன் |
| | | சனிக்கு | காகம் |
| செவ்வாய்க்கு | அன்னம் | இராகுக்கு | ஆடு |
| புதனுக்கு | குதிரை | கேதுககு | சிங்கம் |

## பஞ்சபூதக்கிரகம்.

| | |
|---|---|
| பிரிதிவுக்கிரகம் | செவ்வாய் |
| அப்புக்கிரகம் | சந்திரன்-சுக்கிரன் |
| தேயுக்கிரகம் | குரு-சூரியன் |
| வாயுக்கிரகம் | புதன் |
| ஆகாசக்கிரகம் | சனி-இராகு-கேது |

## கிரகதேவதை.

| | |
|---|---|
| குரு-சுக்கிரன் | பிரமன் |
| சந்திரன்-புதன் | விஷ்ணு |
| சூரியன்-செவ்வாய் | உருத்திரன |
| சனி | அன்னியதேவதை |

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | சிவன் | சுக்கிரன் | வள்ளியம்மை |
| சந்திரன் | பார்வதி | சனி | இயமன் |
| செவ்வாய் | கந்தசாமி | இராகு | பத்திரகாளி |
| புதன் | விஷ்ணு | கேது | இந்திரன் |
| குரு | பிரமன் | | என்பர்சிலர் |

## நவக்கிரகதேயம்.

சூரிய-சந்திரர்களுக்கு உலகெல்லாஞ்சொந்தம்.

இப்பாதகண்டத்தில்

சனி-இராகுகளுக்கு இமையமலைமுதல் கேகயநாடுவரையிலும்.

புதனுக்கு-கேகயநாடுமுதல் விந்தமலைவரையிலும்.

குருவுக்கு-விந்தமலைமுதல் கௌதமைநதிவரையும்.

சுக்கிரனுக்கு-கௌதமைநதிமுதல் கிருஷ்ணாநதிவரையிலும்.

செவ்வாய்க்கு-கிருஷ்ணாநதிமுதல் இலங்கைவரையிலும்.

## கிரகங்களின் ஆட்சிவீடு.

| | |
|---|---|
| சூரியனுக்கு | சிங்கமும் |
| சந்திரனுக்கு | கர்க்கடகமும் |

செவ்வாய்க்கு மேஷமும்-விருச்சிகமும்
புதனுக்கு மிதுனமும்-கன்னியும்
குருவுக்கு தனுசும்-மீனமும்
சுக்கிரனுக்கு ரிஷபமும்-துலாமும்
சனிக்கு மகரமும்-கும்பமும்
இராகுக்கு கன்னியும்
கேதுக்கு மீனமும்
குளிகனுக்கு மீனமும்
ஆட்சிவீடாம்.

## உச்சவீடு.

| | | | |
|---|---|---|---|
| சூரியனுக்கு | மேஷமும் | சனிக்கு | துலாமும் |
| சந்திரனுக்கு | ரிஷபமும் | இராகுக்கு | ரிஷபமும் |
| செவ்வாய்க்கு | மகரமும் | | கர்க்கடகமும் |
| புதனுக்கு | கன்னியும | கேதுக்கும் குளிகனுக்கும் | |
| குருவுக்கு | கர்க்கடகமும் | விருச்சிகமும் மகரமும் | |
| சுக்கிரனுக்கு | மீனமும் | உச்சவீடாம். | |

## தூமாதிகிரகங்களின் உச்சவீடு.

தூமனுக்கும்-தூமகேதுக்கும் சிங்கமும்
இந்திரனுக்கு விருச்சிகமும்-தனுசும்
பரிவேடத்துக்கு மிதுனமும்
விதிபாதனுக்கு கும்பமும்
நட்பத்துககு கும்பமும்
உச்சவீடாம.

## நீசபங்கராஜயோகம்.

நீசவீடு-நீசரிருந்தவீட்டுக்குடையோன் ஆட்சியுச்சம்பெற்றாவது சந்திரகேந்திரம்பெறுவது இருக்கின் நீசம்பங்கமாய் இராஜயோகம் உண்டாகும்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உச்சராசியை 30-பங்காக்கு | சூரியன் | மேடம் | 10 | பா-வ-உச் | 10-ம் | பா-பரமோ | 20 | பா-மித் | பாக | சுவக்ஷேத்திரம் |
| | சந்திர | இடபம் | 3 | — | 3-ம் | — | 27 | மூல | | |
| | செவ்வா | மகரம் | 28 | — | 28-ம் | — | 2 | மித் | | |
| | புத ன | கன்னி | 15 | — | 15-ம் | — | 5 | மூல | | |
| | குரு | கடகம் | 2 | — | 5-ம் | — | 25 | மித் | 10 | |
| | சுக்கிர | மீனய் | 27 | — | 27-ம் | — | 3 | மித் | | |
| | சனி | துலாம் | 20 | — | 20-ம் | — | 10 | மித் | | |
| நீச்சராசியை 30-பங்காக்கு | சூரியன் | துலாம் | 10 | நீச்சம் | 10-ம் | பரம-நீசச | 20 | பா-சத்துரு | | |
| | சந்திர | விருச்சி | 3 | — | 3-ம் | — | 27 | — | | |
| | செவ்வா | கர்க்கட | 28 | — | 28-ம் | — | 2 | — | | |
| | புதன் | மீனம் | 15 | — | 15-ம் | — | 15 | — | | |
| | குரு | மகரம் | 5 | — | 5-ம் | — | 25 | — | | |
| | சுக்கிர | கன்னி | 27 | — | 27-ம் | — | 3 | — | | |
| | சனி | மேடம் | 20 | — | 2c-ம் | — | 10 | — | | |
| மூலத்திரிகோண ராசியை-30 பங்காக்கு | சூரியன் | சிங்கம் | 20 | பா-வரை | | மூல | 10 | ப-சு-க்ஷேத்திர | | |
| | சந்திர | விருச்சி | 3 | — | | உச்சம் | 27 | மூலத்திரிகோ | | |
| | செவ் | மேட | 12 | — | | மூல | 18 | சு-க்ஷேத்திரம் | | |
| | புதன் | கன்னி | 15 | — | 5 | — | 10 | சு-க்ஷேத்திரம் | | |
| | குரு | தனுசு | 10 | — | | — | 20 | சு-க்ஷேத்திரம் | | |
| | சுக்கிர | துலா | 15 | — | | — | 10 | சு-க்ஷேத்திரம் | | |
| | சனி | கும்பம் | 20 | — | | ... | 10 | சு-க்ஷேத்திரம் | | |

க வி.

நீசனிருந்தில்லோ னிலையுச்ச மெய்திடினு
மேசில் சசிகேந்திரத்தி லெய்திட்டாற் பூசிதமாய்
தேசமெங்குங் கீர்த்தித் திரைகட லோடுங்கப்ப
னேசமுடனுள்வா னிலம்.

கிரகாங்கங்கள்.

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய்க்கு | தலை | குருவுக்கு | வயிறு |
| சுக்கிரனுக்கு | முகம் | சனிக்கு | தொடை |
| புதனுக்கு | கழுத்து | இராகுக்கு | முழங்கால் |
| சந்திரனுக்கு | தோள் | கேதுக்கு | உள்ளங்கால் |
| சூரியனுக்கு | மார்பு | | ஆகுமென்பதாம். |

இராசி கிரகபார்வை.

திரமுஞ்சரமு மாறிப்பார்க்கும்
உபயம் உபயத்தைப்பார்க்கும்.

க வி.

சேயநான்கேழெட்டினையுஞ் சிவனைந்தேழொன்ப தையும், ஏய்சனிமூன்றேழுடனீரைந்தினையும் தூய் குளிகன், பன்னிரண்டோதேழினையும் பாம்பேழீ ரைந்தைமற்ற. துன்னுகோளேழினை நோக்கும்.

12-பாவக விவரங்கள்.

இலக்கணம்-உதயம்-கீர்த்தி - மூர்த்தி - தேகம்நிறம்-
தலை.

2. நேத்திரம்-வாக்கு-தனம்-முகம்-குடும்பம்.

3. சகோதரம்-வெற்றி - கேள்வி-காது - தைரியம்-
அடிமை,

4. தாய்-வாகனம்-பூமி-பந்து-சுகம்:கல்வி-நீர் - வீடு
வியாபாரம்.

5. புதல்வர்—உளம் புத்தி - முத்தி-விஸ்தாரம் - மானம்-பிதாமாதுலன்-பிரபுத்துவம்.
6, சத்துரு-ரோகம்-விரணம்-ரணம்-சோரம்-சிறைபிரதாபம்.
7. களத்திரம்—காமம்—மாரகம்,
8. ஆயுள்-தீர்க்கவியாதி—மரணம்— அபயமிருத்தியு
9. பிதா—தருமம்—பாக்கியம்—குரு.
10. கருமம்—ஜீவனம்—ஆசாரம்.
11. லாபம் மூத்தோன்.
12. விரயம்—சயனம்—மோக்ஷம்—அந்தியகாலநோய்

விசேடபாவங்களைப்பெருநூலில் அறிக.

காரகர்கள்

சூரியன்—பிதுர்காரகன்—சரீரகாரகன்
சந்திரன்—மாதுர்காரகன்
செவ்வாய்—சகோதரகாரகன்
புதன்—வித்தியாகாரகன்
குரு—புத்திரகாரகன்
சுக்கிரன்—களத்திரகாரகன்-வாகனகாரகன்
சனி ஆயுசுகாரகன்
இராகு—பிதாமககாரகன்-போககாரகன் போககாரகன்
கேது—மாதாமககாரகன்-ஞானகாரகன்-மோக்ஷகாரகன்
இரவில்-சனி—பிதுர்காரகன்
பகலில்-சூரியன் பிதுர்காரகன
இரவில்—சந்திர மாதுர்காரகன்
பகலில்-சுக்கிரன்—மாதுர்காரகன்

விசேடகாரகத்துவங்கள் பெருநூலிலறிக.

## இராசிகளிற் கிரகநிற்குங்காலம்.

சூரியன்-சுக்கிரன்—புதன் மாதம் 1-ம்
செவ்வாய் மாதம் ஒண்ணரையும்
குரு வருஷம் 1—ம்
சனி வருஷம் இரண்டரையும்
இராகு-கேது தனித்தனி வருஷம் 1½-ம்
சந்திரன் நாள் 2¼—ம், ஆக நிற்கும்,

## கவி.

குறித்தகதிரோன் புகர்புந்தி
குலவிநிற்கு மொருமாதம்
செறுத்தமதிநா ளிரண்டேகால்
செவ்வாய்மாத மொண்ணரையாம்
கறுத்தச்சனியாண் டிரண்டரையாங்
கனகஞோராண்டரவிரண்டும்
நிறுத்தவாண்டொன் றரையாக
விராசியொன் றில் நின்றிடுமே.

## கிரகவலி காலம்.

செவ்வாய்—சனி-சந்திரனுக்கு இரவிலும்,
சூரியன்—குரு-சுக்கிரனுக்குப் பகலிலும்,
புதனுக்கு எப்போதும் பலமுண்டாகும்.

இப்படியே அந்தந்தக் கிரகங்களுக்குச்சொந்த வாரங்களிலும், மாதங்களிலும், ஓரைகளிலும் பலமுண்டாகும்

இலககினத்துக்கு 4-ம், அதிபதிபலவான்
4-க்கு 7-ம் அதிபதி பலவான்
7-க்கு 10—ம் அதிபதி பலவான்

3-க்கு 6-ம் அதிபதி பலவான்
6-க்கு 11-ம் அதிபதி பலவானும்

கேந்திராதி பத்தியதோஷம் பாபர்க்கில்லை சுபர்க்குண்டு

கேந்திரதோஷம் பாபர்க்குண்டு சுபர்க்கில்லை.

## நட்புவீடு.

சூரியனுக்கு தனுசு மீனமும்
சந்திரனுக்கு கன்னி தனுசு மீனமும்
செவ்வாய்க்கு ரிஷபம்-மிதுனம்-கன்னி-துலாமும்
புதனுக்கு மேஷம்-ரிஷபம்-கர்க்கடகம்-துலாம்-விருச்சிகம்-மகரம்-கும்பமும்,
குருவுக்கு ரிஷபம்-மிதுனம்-சிங்கம்-கன்னி-துலாம் கும்பமும்,
சுக்கிரனுக்கு மேஷம்-மிதுனம்-விருச்சிகம் - தனுசு மகரம்-கும்பமும்,
சனிக்கு ரிஷபம்-மிதுனம்-கன்னி-தனுசு-மீனமும்,
இராகுக்கு மேஷமும்-சிங்கமும்,
கேதுக்கும்-குளிகனுக்கும்-துலாம்-கும்பமும்.

நட்புவீடுகளாம்.

## பகை வீடு

சூரியனுக்கு ரிஷபம்-மிதுனம்-கர்க்கடகம்-கன்னிவிருச்சிகம்-மகரம்-கும்பமும்
சந்திரனுக்கு மேஷம்-மிதுனம்-சிங்கம்-துலாம்- மகரம்-கும்பமும்,
செவ்வாய்க்கு சிங்கம்-தனுசு-கும்பம்-மீனமும்,
புதனுக்கு சிங்கமும் தனுசும்,

குருவுக்கு மேஷமும்-விருச்சிகமும்
சுக்கிரனுக்கு கர்க்கடகமும், சிங்கமும்,
சனிக்கு கர்க்கடகம்—சிங்கம்—விருச்சிகமும்,
இராகுக்கு மிதுனம்—துலாம்—தனுசு—கும்பம்-மீனம்
கேதுக்கும்—குளிகனுக்கும்-மேஷம்—மிதுனம்-சிங்கம்-
கன்னி தனுசும் பகைவீடாம்,

## இராசிகளுக்குக் கிரகபலன்.

| ராசி | பாபர் | சுபர் | மாரகர் | யோகர் |
|---|---|---|---|---|
| மேஷம் | ச-சு-பு | கு—ர | ச-பு | ச-சம்மகு |
| ரிஷபம் | கு-சு-ம | ச—ர | கு-சு-ம | சனி |
| மிதுனம் | செ-கு-ர | சு | செ-கு-ர | |
| கர்க்கடகம் | சு—ச-ம | செ-கு | சு-ச-ம | செ |
| சிங்கம் | சு-பு | செ | சு-பு | செ |
| கன்னி | செ-கு-ம | சு | செ-கு-ம | சு-பு |
| துலாம் | கு-ர-செ | ச-பு | கு—ர—செ | ம-பு |
| விருச்சிகம் | பு·செ-சு | ம | பு-செ-சு | ர—ம |
| தனுசு | சு | செ-ர | ம-சு-கு-ச | ர-பு |
| மகரம் | கு-ம-செ | சு-பு | கு-ம-செ-ர | சு |
| கும்பம் | கு·ம-செ | சு | ம—செ-ர—பு-ச | சு |
| மீனம் | ச-சு-பு-ர | செ-ம | ச-சு-பு—ர | செ—கு |

## மறுமையிலடையுமிடம்,

12-ம் அதிபதியோடு குருவாவது சுக்கிரனாவது இவ்விருவருமாவது கூடின் தெய்வலோகம்,

சூரியன் கூடின் இராஜலோகம்
சந்திரன் கூடில் பிதுர்லோகம்
செவ்வாய் கூடில் வீரசொர்க்கம்,

சனியாவது பாம்புகளாவது சனியுடன் பாம்புகளிலொருவருமாயாவது கூடின் இயமலோகம்.

புதன் கூடின் வேண்டுமென்று விரும்புமிடங்களில் சேர்வர்,

## கிரகநித்தியகதி.

| கிரகம் | பாகை | கலை | விகலை. |
|---|---|---|---|
| சூரியன் | 0 | 59 | 8 |
| சந்திரன் | 13 | 19 | 33 |
| செவ்வாய் | 0 | 31 | 26 |
| புதன் | 4 | 5 | 33 |
| குரு | 0 | 4 | 59 |
| சுக்கிரன் | 1 | 36 | 8 |
| சனி | 0 | 2 | 0 |
| இராகு | 0 | 3 | 11 |
| துங்கன் | 0 | 5 | 41 |

இந்த நித்தியாதிகளை ஒரேஜாதியாக விகலையாக்கி உதயாதி ஜனனகாலவரை கழிந்தநாழிகை விநாடிகளை ஒரேஜாதியாக விநாடியாக்கி ஒன்றுக்கொன்று பெருக்கின பெருக்குத்தொகை விதர்ப்பரைகளாகும், இதை மேலினமாகமாற்றிக் கண்டராசி பாகை கலைகளை கிரகஸ்புடஞ்செய்கையில் அந்தந்தக்கிரகங்களின் ஸபுடங்களில் லத்துருவங்கூட்டுவதற்கு முன் கூட்டவும்.

விதர்ப்பரை–60–க்கு-தர்ப்பரை–1.
தர்ப்பரை–60–க்கு–விகலை–1.
விகலை–60–க்கு–கலை–1.
கலை–60–க்கு பாகை–1.
பாகை–30–க்கு இராசி-1. எனவறிக.

## கிரகங்களின்பலம் காலமுமிடமும்.

அசுபர்க்கு தக்ஷணாயனத்திலும் அமரபட்சத்திலும் சுபர்க்கு உத்தராயனத்திலும் பூர்வபட்சத்திலும் பலம்.

புதனும் குருவும் லக்கினத்திலும்,
சுக்கிரனும் சந்திரனும் நாலிலும்,
சனியும் இராகும் ஏழிலும்,
சூரியன் செவ்வாய் பத்திலும் வலியராம்.

ஒன்று உதயம், நான்கு—கீழ், ஏழு—அர்த்தமனம், பத்து—உச்சம்.

புதனுக்கு செவ்வாய் வலியன்
செவ்வாய்க்கு சனி வலியன்
சனிக்கு குரு வயியன்
குருவுக்கு சுக்கிரன் வலியன்
சுககிரனுக்கு சந்திரன் வலியன்
சந்திரனுக்கு சூரியன் வலியன்
சூரியனுக்கு இராகு வலியனும்.

## கிரகங்களின் சுபக்கணக்கு.

| | |
|---|---|
| பூரணசந்திரன்-குரு | முழுச்சுபர் |
| சுக்கிரன் | முக்காற்சுபன் |
| புதன் | அரைச்சுபன் |
| குறைந்தசந்திரன் | காற்சுபன் |
| சந்திரன் அமாவாசையிற்புதனோடுகூடின் | முக்காற்சுபர் |

## கிரகங்களின் பாபக்கணக்கு.

| | |
|---|---|
| சனி-இராகு | முழுப்பாவர் |
| செவ்வாய் | முக்காற்பாவி |
| சூரியன் | அரைப்பாவி |
| பாம்புகளோடுகூடிய புதனு-மதியும் | காற்பாவர் |

இராகுவோடுகூடிய குரு முழுப்பாவியாம்

## நட்பாட்சியுச்சபலன்.

உச்சம்-$1\frac{1}{4}$, கேந்திரம்-1. ஆட்சி-$\frac{3}{4}$, நீச்ரம்-$\frac{1}{4}$, பலமாகும்.

## திசைகள் விபரம்.

1. மகாதிசை,

| | |
|---|---|
| அச்சுவினி-மகம்மூலம் | கேதுதிசை வரு 7, |
| பரணி-பூரம்-பூராடம் | சுக்கிரதிசை வரு 20 |
| கார்த்திகை-உத்திரம் உத்திராடம் | சூரியதிசை வரு 6. |
| உரோகணி-அஸதம்-திருவோணம் | சந்திரதிசை வரு 10. |
| மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம் | குசன்திசை வரு 7. |
| திருவாதிரை-சோதி-சதையம் | இராகுதிசை- வரு 18. |
| புனர்பூசம்-விசாகம்-பூரட்டாதி | குருதிசை வரு 16. |
| பூசம்-அனுஷம்-உத்திரட்டாதி | சனிதிசை வரு 19. |
| ஆயிலியம்-கேட்டை-ரேவதி | புததிதிசைவரு 17. |

ஆக மகாதிசை-9-க்கு வரு 120.

6 சற்பன்னதிசை சென்ம நட்சத்திரத்துக்கு 6-வது நட்சத்திரத்திசை

2. மிருத்தியுதிசை 3-வது நட்சத்திரதிசை

4. பிராணதிசை சூரியஸ்புடத்தில் கண்ட நட்சத்திரதிசை

5. ஆதானதிசை 8-வது நட்சத்திரதிசை

6, வாமதிசை இடமாக 4-ம்-நட்சத்திரதிசை.

7. உடுதிசை சந்திர சூரியருடைய ஸபுடங்களைக் கூட்டிக்கண்ட நட்சத்திரதிசை.

8. நிரியாணதிசை சனிஸபுடத்திற்கண்ட நட்சத்திரதிசை

9. மகாபிராணதிசை சந்திரசூரியலக்கின ஸபுடங்களுக்கு கூட்டிக்கண்ட நட்சத்திரதிசை

10. குளிக நிரியாணதிசை குளிகஸபுடத்தை-9-ல் பெருக்கி, விகலை 60 - க்கு 1-ம், கலை - 60-க்கு 1-ம்-பாகை 30-க்கு 4-மாகக்கோடிகூட்டி இராசித்தானத்தில் நின்ற இராசிகளை 12ல் கழித்து இராசி பாகைகலை விகலையாகவிறுத்திச் சந்திர ஸபுடங் கூட்டிக்கண்ட நட்சத்திர திசையுமாக மகாதிசைபோல கொள்க.

## 16. காலச்சக்கரதிசை.

| | |
|---|---|
| மேஷ-விருச்சிகம் | செவ்வாய்திசை வருடம் 7. |
| ரிஷபம் துலாம் | சுக்கிரதிசை வருடம் 16. |
| மிதுன-கன்னி | புதன்திசை வருடம் 9. |
| கர்க்கடகம் | சந்திரதிசை வருடம் 12. |

| | |
|---|---|
| சிங்கம் | சூரியதிசைவருஷம் 5. |
| தனுசு—மீனம் | குருதிசைவருஷம் 10. |
| மகரக்கும்பம் | சனிதிசைவருஷம் 4. |
| | ஆக வருஷம்-118 |

வலவோட்டு நட்சத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| அச்சுவினி | ஆயிலியம் | பூராடம் |
| பரணி | அஸதம் | உத்திராடம் |
| கார்த்திகை | சித்திரை | பூரட்டாதி |
| புனர்பூசம் | சோதி | உத்திரட்டாதி |
| பூசம் | மூலம் | ரேவதி |

இடவோட்டுநட்சத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| உரோகணி | பூரம் | கேட்டை |
| மிருகசிரம் | உத்திரம் | திருவோணம் |
| திருவாதிரை | விசாகம் | அவிட்டம் |
| மகம் | அனுஷம் | சதையம் |

ஆக-15.

வலவோட்டு நட்சத்திரங்கள் மூன்றின்பாதம் 12-க்கும், மேஷமுதல் வலமாகவும், இடவோட்டுநட்சத்திரங்கள் 12-க்கும், விருச்சிகமுதல் இடமாகவும் கொள்ளவேண்டும்.

காலசக்காபுத்திகளின்விபரம்.

வலவோட்டுநட்சத்திரங்களுள்.

| | |
|---|---|
| அச்சுவினி | சோதி |
| கார்த்திகை | மூலம் |
| புனர்பூசம் | உத்திராடம் |

ஆயிலியம் பூரட்டாதி
அஸதம் ரேவதி
என்னும் பத்துநட்சத்திரங்களுக்கும்

1—ம் பாதம்—மேஷம்—ரிஷபம்—மிதுனம்—கர்க்கடகம்—சிங்கம்—கன்னி—துலாம்—விருச்சிகம்— தனுசு— இவை 9—க்கு வருஷம்—100.

2—ம் பாதம்—மகரம்—கும்பம்—மீனம்—விருச்சிகம்துலாம்—கன்னி—கர்க்கடகம் — சிங்கம்—மிதுனம் இவை 9—க்கு வருஷம்-85.

3-ம் பாதம்—ரிஷபம்—மேஷம் மீனம்—கும்பம்— மகரம் தனுசு—மேஷம்—ரிஷபம்—மிதுனம் இவை—9-க்கு வருஷம் 83.

4—ம் பாதம்—கர்க்கடகம்—சிங்கம்—கன்னி—துலாம்விருச்சிகம்—தனுசு—மகரம்—கும்பம் மீனம் இவை 9-க்கு வருஷம் 86.

இதுவும் வலவோட்டுநாள்களுள்.

பரணி பூசம் சித்திரை பூராடம் உத்திரட்டாதியென்னும் ஐந்துநட்சத்திரங்களுக்கும்.

1—ம் பாதம்—விருச்சிகம் துலாம் கன்னி கர்க்கடகம் சிங்கம மிதுனம ரிஷபம மேஷம மீனமஇவை 9-க்கு வருஷம 100.

2—ம் பாதம்—கும்பம மகரம தனுசு மேஷம ரிஷபம மிதுனம கர்க்கடகம சிங்கம கன்னி இவை 9-க்கு வருஷம் 85.

3-ம்பாதம்:-துலாம்-விருச்சிகம்-தனுசு - மகரம் - கும்பம்-மீனம்-விருச்சிகம்-துலாம்-கன்னி இவை 9-க்கு வருஷம்-83.

4-ம்பாதம்:-கர்க்கடகம்-சிங்கம்-மிதுனம்-ரிஷபம்-மேஷம்-மீனம்-கும்பம்-மகரம் - தனுசு இவை 9-க்கு வருஷம்-86.

## இடவோட்டு நாள்களுள்.

உரோகணி-மகம்-விசாகம்-திருவோணம் என்னும் நான்கு நட்சத்திரங்களுக்கும்.

1-ம்பாதம்:-தனுசு-மகரம்-கும்பம்-மீனம்-மேஷம்-ரிஷபம்-மிதுனம்-சிங்கம - கர்க்கடகம் இவை 9-க்கு வருஷம்-86.

2-ம்பாதம்:-கன்னி-துலாம்-விருச்சிகம்-மீனம் - கும்பம்-மகரம்-தனுசு-விருச்சிகம்-துலாம் இவை 9-க்கு வருஷம்-83.

3-ம்பாதம்:-கன்னி-சிங்கம்-கர்க்கடகம்-மிதுனம்-ரிஷபம்-மேஷம்-தனுசு-மகரம்-கும்பம் இவை 9-க்கு வருஷம்-85.

4-ம்பாதம்:-மீனம்-மேஷம்-ரிஷபம்-மிதுனம்-சிங்கம் - கர்க்கடகம்-கன்னி-துலாம்-விருச்சிகம் இவை 9-க்கு வருஷம்-100.

## இதுவும் இடவோட்டு நாள்களுள்:

மிருகசிரம்-திருவாதிரை-பூரம்-உத்திரம்-அனுஷம்-கேட்டை-அவிட்டம்-சதையம் என்னும் எட்டு நட்சத்திரங்களுக்கும்.

1-ம்பாதம்:-மீனம்-கும்பம்-மகரம்-தனுசு-விருச்சிகம்-துலாம்-கன்னி-சிங்கம்-கர்க்கடகம் இவை 9-க்கு வருஷம்-86.

2-ம்பாதம்:-மிதுனம்-ரிஷபம்-மேஷம் - தனுசு-மகரம்-கும்பம்-மீனம்-மேஷம்-ரிஷபம் இவை 9-க்கு வருஷம்-83

3-ம்பாதம்:-மிதுனம்-சிங்கம் — கர்க்கடகம் - கன்னி - துலாம்-விருச்சிகம்-மீனம் - கும்பம் - மகரம் இவை 9-க்கு வருஷம்-85.

4-ம்பாதம்:-தனுசு-விருச்சிகம்-துலாம் - கன்னி - சிங்கம் - கர்க்கடகம் - மிதுனம-ரிஷபம-மேஷம் இவை 9-க்கு வருஷம்-100

இவ்வாறு அந்தந்தராசியின் அதிபதிகளுக்கு கால சக்கரதிசைக்குச் சொல்லியிருக்கிற வருஷக்கணக்கின்படி கொள்ளவேண்டும்

மகாதிசைக்குப் போதகன் முதலியோர்.

| மகாதிசை. | போதகன் | வேதகன். | பர்சகன். | காரகன் |
|---|---|---|---|---|
| சூரியதிசைக்கு | செவ்வா | சுக்கிரன் | சனி | குரு |
| சந்திரதிசைக் | செவ்வா | சூரியன் | சுக்கிரன் | சனி |
| செவ்வாய்தி | சந்திரன் | புதன் | சூரியன் | சனி |
| புதன்திசைக் | குரு | செவ்வா | சந்திரன் | சுக்கிரன் |
| குருதிசைக்கு | செவ்வா | சூரியன் | சனி | சந்திரன் |
| சுக்கிரதிசைக் | குரு | சனி | புதன் | சூரியன் |
| சனிதிசைக்கு | சந்திரன் | செவ்வா | சுக்கிரன் | குரு |

இராகு கேதுகளுக்கு இவை இல்லையாம்.

க வி.

கூறுபலனைக் கொடுவென்பான் போதகனும் [ன்
வேறுபண்ணித் தட்டுவிப்பான் வேதகனும தேறுபல
கூட்டுவிப்பான் பாசகனுங் கோலமகா திசைக்கே
ஈட்டுபொருள் காரசனீ வான்.

கோட்சாரத்தில் பார்வைகாலம்.

சூரியனுக்குநாள்-5
புதனுக்கும்-சுக்கிரனுக்கும்-தனித்தனிநாள்-7.
செவ்வாய்க்குநாள்-8.
குருவுக்குமாதம்-2.
இராகு-கேதுக்கு-தனித்தனிமாதம்-3.
சனிக்குமாதம்-6.
சந்திரனுக்குநாழிகை-3.

க வி.

கோசாரப்பார்வைபுந்தி புகர்க்குநாளேழதாகும்
காசறுசேய்க்கோரெட்டுக் கதிர்க்குநாளைந்ததாகு
மாசில்பொன்னிரண்டுதிங்கண் மாசுணமதிமூன்றாகு
வீசகன்மாதமாறும் விரிதிங்கள்மூன்றுகன்னல்.

கோட்சாரபலன்

சூரியன் 1-4-5-7-8-9-12-ல் நின்றால் நல்ல பலனைக் கொடான்.

க வி.

சூரியஜன்மந்தன்னிற் றலங்கியநாளேழைந்தில்
பாரியவெட்டொன்பானிற் பகர்ந்தபன்னிரண்டினின்
காரியக்கேடலைச்சல் கண்வலிதலைநோக்காடு [றால்
வீரியவெறுவீடாக்கி விடுவிட்டோட்டுமன்றே.

சந்திரன் 2-4 6-8-12-ல் நின்றால் நல்ல பலன்கொடான்.

கவி.

பனிமதியிரண்டினன்கிற் பரிவிலாவாறிலெட்டிற்
கனமறுபன்னிரண்டிற் கதிக்கவீற்றிருந்தானகில்
இனியநற்பெண்டீர்மக்க ளிபலபறக்கேடுதுக்கம்
தனமதைச்செலவழித்தல் தான்கொடுத்திடுவன்றனே

செவ்வாய் 1-2-4-8-10-12-ல் நின்றால் நல்ல பலனைக்கொடான்.

கவி.

நிலமகன்ஜன்மந்தன்னி னிலவியவிரண்டினன்கில்
நலமறுமெட்டிற்பத்தி னட்டுபன்னிரண்டிநின்றால்
பலவிதக்கேடுபெண்டீர் பதிபொருளைசம்வெப்பு
குலவியவாயுதத்தாற் குணகுலப்பதியும்போக்கும்.

புதன் 1-3-5-7-8-9-12-ல் நின்றால் நல்ல பலனைக்கொடான்.

கவி.

புந்திதான்ஜன்மந்தன்னிற் புதியமூன்றைந்திலேழில்
உந்தியவெட்டொன்பானி லுகந்தபன்னிரண்டிநின்ற
சிந்தைபேதகமாம்வித்தை திரவியங்களவுபோகும்[ல்
கொந்தலர்குழலாள்சேதங் கோளினல்குற்றமாமே.

குரு 1-3-4-8-10-12-ல் நின்றால் நல்ல பலன் கொடான்.

கவி.

பொன்னவன் ஜன்மந்தன்னிற் பொருந்திய மூன்றினன்கில், வின்னமா மெட்டிற்பத்தில் விளங்குபன்

னிரண்டிநின்றால், தன்னுடன் பிறந்தார்குற்றந் தானியமாடுமக்கள், வின்னமாம் பதியும்விட்டு வெறுப்பதாயிருக்குந்தானே.

ஜென்மராமர்வனத்திலேசீதையைச்சிறைவைத்ததும்
தீதிலாதொருமூன்றிலேதுரியோதனன்படைமாண்ட
இன்மையெட்டினில்வாலிபட்டழிந்துபோனதும்தும்
ஈசனொருபத்திலேதலையோட்டிலேயிரந்துண்டதும்
தருமபுத்திரர்நாலிலேவனவாசமப்படிப்போனதும்
சத்தியமாமுனியாறிலேயிருகாலிலேதளைபூண்டதும்
வன்மையுற்றிடராவணன்முடி பன்னிரண்டில்வீழ்ந்த
மன்னுமாகுருசாரிமாமனைவாழ்விலாமுறுமென்பவே.

சுக்கிரன் 3-6-8-12-ல் நின்றால் நல்ல பலன் கொடான்.

க வி.

சுக்கிரன்மூன்றிலாறில் துலங்குமெட்டாமீராறில்
உக்கிரமாகவேதா னுகந்தநட்பின்றிநின்றால்
மக்கள்நல்மாடுபெண்டீர் வரிசையாயுரைத்தாற்கேடு
சிக்கியபொருள்கணுசந் திரவியங்களவுபோமே.

சனி 1-2-4-5-8-10-12-ல் நின்றால் நல்ல பலன்கொடான்.

க வி.

மூடவன்றான் ஜன்மமைந்தில் முன்னிய விரண்டு நான்கில், திடமறு மெட்டிற்பத்திற் சேர்ந்தபன் னிரண்டினின்றால், உடன்மன்னர் பொருள்மாடாடு பெண்டணி மக்கள்சேதம், அருமையும் பதியுமவிட்டே யாசரா லலைச்சலாமே

இராகு-கேது 1-3-4-6-8-10-12-ல் நின்றால் நல்ல பலன் கொடான்.

க வி.

ராகுவுங்கொடியகேதும் நலமிலாச்சென்மந்தன்னில்
எகமாமூன்றினன்கி லெழிலாறிலெட்டிற்பத்தில்
வேகமாம்பன்னிரண்டில் வேண்டியேவந்துநின்றால்
வாகுநேர்மொழியாள்மக்கள் பதியுடனழியுந்தானே.

இதுவும் கோட்சாரபலன்.

பாலர் ஒப்புக்கொண்ட ஷை பலன்கள்.

சூரியன் 3-6-10-11-ல் வரின் சுபபலன்.

க வி.

நாயிறுமூன்றுமாறு நற்பதினொன்றும்பத்தும்
ஏயுறுமிவ்விடங்க ளிருந்திடிற்செல்வமுண்டாம்
ஈய்தலுமிறக்கமுண்டாம் எதிரியைவெல்லலாகும்
சேயதுதரிக்கும்பெருந் தீருநோய்தீருந்தானே

சூரியன் 1-2-4-5-7-8-9-12-ல் வரின் துர்ப்பலன்.

க வி.

சூரியஜன்மமைந்திற் றுலங்கியநான்கிரண்டில்[ன்றால்
பாரியவேழெட்டொன்பான் பகர்ந்தபன்னிரண்டினி
காரியக்கேடலைச்சல் கனவுகண்தலைநோயுண்டாம்
வீரியவெதுப்புநோய்கள் வீடுவிட்டோட்டுமன்றே.

சந்திரன் 1-3-6-7-10-11-ல் வரின் சுபபலன்.

க வி.

சந்திரன்மூன்றொன்றாறுஞ் சார்பத்துப்பன்னொன்றே
இந்திரன்போலவாழ்வ ரெதிரிமார்பாணியாவன்[மூம்
தந்திரவாதியாவன் சந்தானபாக்கியனவன்
மந்திரவாதியாவன் வயித்தியவாதனுமே.

2-4-5-8-9-12-ல் வரின் துர்ப்பலன்.

க வி.

பிறைபனிரெண்டொன்பானெட்டிரண்டுநான்கை
ந்தினிற்கின், சிறையுளான்கிலேசமுள்ளான் திருடுவ
ன் தீங்குசெய்வான், மிறையிலானன்றயில்லா னிட்டு
ரனீதியில்லான், முறையிலான்வணக்கமிலான் மூதே
விக்குறையுளாவான்.

செவ்வாய் 3 6-11-ல் வரின் சுபபலன்.

க வி

தன்பதிஒன்றுமாறுந் தன்னுடன்மூன்றும்வீட்டில்
திண்குசனிற்கிற்றீர்க்கவயதுடனீகையுள்ளான் [ம்
பெண்கலியாணமுண்டாம் பிள்ளைப்பாக்கியமுண்டா
மண்மனைபயிருமுண்டாம் வாழ்வுகள்மிகவுண்டாமே.

செவ்வாய் 1-2-4-5-7-8-9-10-12-ல் வரின் துர்ப்பலன்

க வி.

எழுகுசன்பன்னொன்றாறு மூன்றலாவிடங்கள்சேரிற்
றொழுகழுவிலங்குதூண்டில் தூக்குமேவருவதோடு
இழுபறிமானபங்கமில்லாததொடுவழக்கு
அழுகையுமேன்மேற்றுக்கமாங்குசனாலுண்டாமே.

இராகு 3-6-11-ல் வரின் சுபபலன்.

க வி.

இராகுபன்னொன்றுமூன் றாறதாமிடத்திற்சேரின்
பாகுதேன்பழமும்பாலும் பற்றறாத்தனமுமுண்டாம்
ஆகுங்காரியங்களுண்டாமன்னதானமுமுண்டாம்மே
வாகுவைபாட்டியுண்டாம் வாத்துமேல்வாத்துண்டா

இராகு 1-2-4-5-7-8-9-10-12-ல் வரின் துர்ப்பலன்.

க வி.

ஐந்துபத்தொன்றீராறே மூராமிரண்டீரிரண்டோ
டொன்பதுமெட்டுமோயி னுடம்பினிற்பிணியுண்டா
மன்னருள்போகும்பார்த்த வயித்தியனாலேமோச
தன்பதிபோக்கும்நல்ல சகோதரஞ்சத்துருவாமே.

குரு 2 5 7 9 11 ல் வரின் சுபபலன்.

க வி.

பெருபதினொன்றைந்தேழ்பே ரொன்பதாமிரண்டி
ற்றேவ, குருவரிற்செல்வஞ்சீரூர் குதிரைவெண்குடை
தீவாத்தி, தருமமுந்தானமுண்டு தாய்தந்தைதுணையு
மூண்டு, அருமையும்பெருமையுண்டா மரசர்சேவை
யுமுண்டாமே.

குரு 1 3 4 6 8 10 12 ல் வரின் துர்ப்பலன்.

க வி.

பத்துடன்மூன்றுநான்கு பன்னிரண்டெட்டோடுற்ற
மத்திமமாறிலொன்றின் மன்னவனிருந்தகாலை
சித்தமுமலைச்சறத்து நீட்டூரம்வாதபித்தம்
பெற்றவள்பிறப்புப்பிள்ளை பெண்சாதிபகையுமாவர்.

சனி 3 6 11 ல் வரின் சுபபலன்.

க வி.

ஆறுபன்னொன்பான்மூன்றி லந்தகனிருக்கிற்பாக்கிய
கூறுபேருருமுண்டாங்குறைவிலாச்செல்வமுண்டாம்
ஏறுபல்லாக்குமுண்டா மிடம்பொருளேவலுண்டாம்
காறுபாலட்டலக்குமி கடாக்ஷமுமுண்டாமன்றே.

சனி 1 2 4 5 7 8 9 10 12ல் வரின் துர்ப்பலன்.

கவி.

பனிரெண்டேழெட்டொன்பான் பத்தைந்துநான் கிரண்டொன்றிற்ருள, சனியனேயிருந்தானட்டந் தனமுயிர்ச்சேதமாகும், தனிச்சிறைமானபங்கந் தன்னறிவாலேமோசம், மனேவிட்டுமோடுவிட்டு மறுநகரேகுவாரே.

புதன் 2 6 8 10 11 ல் வரின் சுபபலன்.

கவி.

பதுவுடனிரண்டெட்டாறு பன்னென்றுமாமிட்டதிற், புதனிருந்தக்கான்மென்மேல் புத்தியுமியோகமுண்டாம், சுதனுமேல்சுதனுமுண்டாஞ் சுற்றமுஞ்சுகமுமுண்டாம், ரதகத்துரகஞ்சேனே நாலுமேமிகவுண்டாமே.

புதன் 1 3 4 5 7 9 12 ல் வரின் துர்ப்பலன்.

கவி.

சாலொன்பதொன்றுமூன்று சார்ந்துமேழைந்தீராறு
நாலினிற்புதனிருந்தால் நலமில்லேமிடியுந்துன்பம்
தோலினிலரிப்புமுண்டாந் துக்கமுந்தூதுமுண்டாம்
கிலினிற்பிடிப்புமுண்டாங் கிளமானபங்கமென்றே.

கேது 3 6 11 ல் வரின் சுபபலன்.

கவி

நீழ்பதினென்றுமாறு நேர்மூன்றிற்கேதிருந்தால்
தாழ்விலாப்பயிருமுண்டு,தனபாக்கியமதிகமுண்டு[பா
சூழ்புவியெங்குமபோஞ் சொன்னசொல்சற்றுந்தப்
வாழ்வின்மேல்வாழ்வுண்டாகி மகராசனுவான்ருனே.

கேது 1 2 4 5 7 8 9 10 12 ல் வரின் துர்ப்பலன்.

க வி.

கேதுநான்கைந்தெட்டொன்பான் கிட்டியீரைந்தி
ரண்டேழ், தீதுபன்னிரண்டிலொன்றிற் சசித்திரள்கி
ளையுந்திதாம், சூதுடன்மயிர்களைந்து சுடுபட்டுச்சொ
ரூபமாறிச், சேதுடன்காசிதேசந் தேசாந்திரம்போ
வன்றனே.

சுக்கிர்ன் 1 2 3 4 5 8 9 11 12 ல் வரின் சுபபலன்.

க வி.

வெள்ளியோ ராறுமேழும் விளங்குபத் தலாவிடத்
தில், அள்ளிய செம்பொனுண்டா மன்னதா னங்க
ளுண்டாம், வெள்ளியுஞ் செம்புமுண்டாம் வித்தை
யும் பத்தியுண்டாப், தெள்ளிவ மொழியுமென்மேற்
றிறமையுந் திருவுண்டாமே.

சுக்கிரன் 6 7 10 ல் வரின் துர்ப்பலன்.

க வி.

உக்கிரமாறுமேழு மோர்பதுபதிகடன்னில்
சுக்கிரனிருந்தக்காலே துன்பமுந்தொல்லையுண்டாம்
துக்குறிமனக்கிலேசஞ்சோர்வுடன்சொறியுமுண்டா
வக்கிரம்பிடித்தாபோலேமயக்கமேமிகவுண்டாமே.[ம்

கோட்சாரவேதை.

சந்திரலக்கனத்துக்கு சூரியன் 5 லும், சந்திரன் 8 லும, செவ்வாய் 7 லும், புதன் 4 லும், குரு 3 லும், சுக்கிரன் 6 லும், சனி 1 லும், ராகு 9 லும் கேது 2 லும இருந்தால் கோசாரத்தில் நல்லபலனைக் கொடுக்கமாட்டார்கள்.

இதுவும் சந்திரலக்கனத்துக்கு 11 3 10 6 ல் சூரியனிருக்க முறையே 5 9 4 12 ல் கிரகமில்லாமலிருந்தால் தானிருந்த ராசிப்பலனைக் கொடுப்பார்.

1 3 6 7 10 11 ல் சந்திரனிருக்க முறையே 5 6 12 2 4 8 ல் கிரகமில்லாம லிருந்தால் தானிருந்த ராசிப் பலனைக் கொடுப்பார்.

3 6 11 ல் செவ்வாய் சனி ராகு இருக்கமுறையே 12 6 5 ல் கிரகமில்லாமலிருந்தால் தானிருந்தராசிப் பலனைக்கொடுப்பார்.

2 4 6 8 10 11 ல் புதனிருக்கமுறையே 5 3 9 1 8 12 ல் கிரகமில்லாமலிருந்தால் தானிருந்தராசிப் பலனைக்கொடுப்பார்.

11 9 7 5 2 ல் குருவிருக்க முறையே 8 10 3 4 12 ல் கிரகமில்லாமலிருந்தால் தானிருந்தராசிப்பலனைக் கொடுப்பார்.

11 12 2 8 1 4 3 5 9 ல் சுக்கிரனிருக்க முறையே 3 6 7 5 8 10 1 9 11 ல் கிரகமிலலாமலிருந்தால் தானிருந்த ராசிப்பலனைக் கொடுப்பார்.

## விபரீதவேதை.

சந்திரலக்கனத்துக்கு 5 9 4 12 ல் சூரியனிருக்க முறையே 11 3 10 9 ல வேறு கிரகமிருந்தால் சூரியன் நலலபலனைக் கொடுப்பார்.

இவ்வாறே மற்றக்கிரகங்களுக்கும் கோசார விபரீதவேதை பார்த்துக்கொள்ளவும்

சூரியனும் செவ்வாயும் முற்பக்கிலும்
குருவும் சுக்கிரனும் நடுப்பக்கிலும்

சனியும் சந்திரனும் கடைப்பங்கிலும்
புதனும் பாம்புகளும் எப்போதும் பலன்தருவார்.

### மாதாபிதாவுக்கு அரிஷ்டநாள்.

பூராடம் 1ங்காலும், பூசத்தின் 2ங்காலும், 3ங்காலும், சித்திரையின் 1ங்காலும், 2ங்காலும், உத்திரத்தின் 1ங்காலும் மாதாபிதாவுக் கரிஷ்டமாம்.

### பிதாவுக்கு அரிஷ்டநாள்.

அயிலியம் பூராடம் 3 ங்காலும், உத்திராடம் ரேவதி 2 ங்காலும், உத்திரம் அனுஷம் முதற்காலும், அவிட்டம் 4 ங்காலும் பிதாவுக்கரிஷ்டமாம்.

### மாதாவுக்கு அரிஷ்டநாள்.

பூசம் ஆயிலியம் மகம் சித்திரை பூராடம் உத்திராடம் ரேவதி முதற்காலும், உத்திரம் விசாகம் 2 ங்காலும் மாதாவுக்கரிஷ்டமாம்.

### பாட்டனுக்கு அரிஷ்டநாள்.

சித்திரை முதற்காலும், விசாகம் அனுஷம் மூலம் 4 ங்காலும் பாட்டனுக்கரிஷ்டமாம்.

### அம்மானுக்கு அரிஷ்டநாள்.

ரோகணிநக்ஷத்திரமுழுமையும் சதையம் பூரட்டாதி முதற்காலும், மகம் 2 ங்காலும், அனுஷம மூலம் 3 ங்காலும், பூராடம் 4 ங்காலும், அம்மானுக் கரிஷ்டமாம்.

### பூமிவசியநாள்.

பரணி திருவோணம் விசாகம் அஸ்தம் இந்நக்ஷத்திரங்களில்நாலாம்பாதமும், கடகலக்கனமும்செவ்வா

க்கிழமையுங் கூடிய காலத்தில் மண்ணைத்தின்றால்பூமி பலிதமும் பூஸ்திதியும் உண்டாகும்.

கவி.

விருத்துவான்பரணியோணம் விசாகமோடத்தநாளில்
கருத்துட னுலாங்காலில் கடகம்வந் துற்றபோது
திருத்திய சேய்நாள் மண்ணைத்தின் றிடச்செல்வமிஞ்சி
பொருத்தமும் புகழுமுண்டாய்ப்பூமியுந்தன்னதாமே

விவாகம்.

ஆடி-மார்கழி-புரட்டாசி-மாசி மாதங்கள் தவிற மற்றமாதங்களில் சுபர்வாரங்களில் உவா - இருத்தை அஷ்டமி நீங்கிய திதிகளில் மிதுனம்-கும்பம்-கர்க்கடகம்-ரிஷபம்-தனுசு-கன்னி-துலாம் என்னும் ராசிகளில் மூலம்-ரேவதி-மகம்-சோதி-மிருகசிரம்- ரோகணி-அனுஷம்-உத்திர மூன்றும் அஸ்தம் இந்த நட்சத்திரங்களில் 3-11-ல் பாபக்கிரகங்களும் குரு-சுக்கிரன் புதன் 6-8 அல்லாத மற்றஇடங்களில் பலதிருக்க அல்லது ஒன்று ஏழுக்குடையவர் பலக்க குருபார்க்க 2-3-ற் சந்திரனும்இருக்க 7-ம் 8-ம் இடங்கள் சுத்தமாகிய லக்கனம்விவாகத்துக்கு உத்தமம்.

விவாக நாள்.

சூடுமாயோனுள்மூலம் ரேவதிமகமேசோதி
ஓடுமான்றலையுரோணி யனுஷமூத்திரங்களத்தம்
கூடியநன்றுவாவோடிருத்தையட்டமிதீபோர்நாள்
ஆடிமார்கழிபுரட்டை மாசிதள்ளன்னமன்றய்
அன்னமேமிதுனக்கும்ப மலவனேடிடபம்வில்லு [லர்
கன்னிகோனன்றீராறு மூன்றினிற்கொடுகோனல்

பொன்னவனெட்டிற்றீயன்புகல்புதனெட்டோர்காரீ
இன்னவரேழிற்றீயர் மதிநல்லயிரண்டின்மூன்றே.

## விவாக சக்கரம்.

எட்டுக்கோணமாக ஒருசக்கரங்கீறி அந்தச்சக்கரத்தினடுவில் சூரியன்நிற்கும் நட்சத்திரத்தையும்அதற்குமுன் நட்சத்திரத்தையும் பின் நட்சத்திரத்தையும் வைத்து தனக்கு எதிரைக் கிழக்காகக்கொண்டு வலமாக திக்கொன்றுக்கு மும்மூன்றுநட்சத்திரமாக எண்ணிக் கொண்டு வரும்போதுநடுவிலும் அக்கினிமூலையிலும் தெற்கிலும் மேற்கிலும் வாயுமூலையிலும்இருக்கும் நட்சத்திரங்கள் 15-ம் ஆகா மற்ற 12-நட்சத்திரங்களும் உத்தமம்.

### கவி.

தினசரனிருந்த நாண்முன்பின்னாளுஞ்
சேர்ந்திடு நடுவினில்வலமாம்
அனலவன்மூலை முதல்தாமெட்டித்
கடைவுடன் மும்மூன்றுநாளாய்
மன்னுறவெண்ணி லக்கினிதெற்கு
வருணனும் வாயுவுநடுவும்
எனவருபதினைந் தென்னுமந்நாட்க
டெனவிளம்பினர் மேலோர்.

### கவி.

வட்டமதிவிரவிநின்ற முன்னும்பின்னும்
வளமாகவிவாகமது முடிபிற்றீதாம்
திட்டமுடன்கிழக்கிலுள்ள மூன்றுநான்று
கிரள்வன்னிமூலைபது தீதேயாகும்

நட்டமதுதானுகும் யமனுர்மூலை
நலமுண்டாகிருதியது மேற்குச்சாவு
தொட்டபிணிநீங்காது வாயுமூலை
சுகம்பெறலாம்தடக்குமீ சானன்றுனே.

விசேஷகம்.

ருதுநாள் மூன்றும், ஞாயிறு-செவ்வாய்-சனி பூரணை-அமாவாசியை-அஷ்டமி-இருத்தை-சென்மநட்சத்திரம்-சென்மவாரம்-பரணி - திருவாதிரை- ஆயிலியம்-மகம்-முப்பூரம்-சித்திரை-சோதி-விசாகம் ஆகாவாம், 1-4-10-ல் சந்திரனும், 1-5-9-ல், குரு-சுக்கிரனும், 7-9-ல் புதனும், 3-6-11-ல் பாபக்கிரகங்களும் இருப்பதும் சரராசியும் லக்கனசுத்தமும் உத்தமம்.

கவி.

திங்களிற்றிங்கண்முன்னுள் சென்மநாளேகாதேசி
மங்கையர்மூன்றுநாளும் வளர்பிறைமறைந்தநாளும்
பொங்குறுநவமிநாளும் பூவையைப்புணர்வீராயின்
அங்கமேநோவாமற்று மாருயிரிழப்பர்தாமே.

சீமந்தம்.

4-6-8 என்னும் இரட்டித்தமாதங்களில் வளர்பிறையில் சுபாவாரங்களில் அமாவாசிபைபூரணை நவமிநீங்கிய ஒற்றைத்திதிகளில் ரோகணி-மிருகசிரம்-மூன்றுத்திரம்-அஸ்தம்-பூசம்முதலிய நட்சத்திரங்களில்சிங்கம்-விருச்சிகம்நீங்கிய இராசிகளில் ஏறுபொழுதில்ஆகாசம் நிர்மலமாக இருக்கும்போது அஷ்டம்சுத்தமான லக்கினத்தில் மயோன் பலியாகிய சீமந்தஞ்செய்யலாம், பிராமணருக்கு 3-ம் மாதமுமாம்.

## கவி.

சொல்லுநான் காறெண்டிங்க டோணிமான்றலே பாரோணம்,—புல்லுமுத் திரங்களத்தம் பூசங்கள் புகழ்கோள்வாரம்,—நல்லவா மிரட்டைபக்கநவமியோடுவாதேன்சிங்கள்,—அல்லவாஞ் சீமந்தத்திற கட்டம் சித்திநன்றாம்.

## கிரகப்பிரவேசம்

ஆனி-ஆடி-புரட்டாசி-மார்கழி- மாசி - பங்குனி மாதங்களும், ஞாயிறு-செவ்வாய்-வியாழமும், அச்சுவினி-மிருகசிரம்-புநர்பூசம் - அஸ்தம்-சித்திரை-சோதி-மூன்றுத்திரங்கள்-அனுஷம் - திருவோணந்தவிரமற்ற நட்சத்திரங்களும், விருச்சிகம்-கும்பமும்இருத்தையும் ஆகாவாம். அஷ்டம் சுத்தமுள்ளலக்கனம் உத்தமம்.

## நாமகரணம்.

பிராமணருக்குப்பிறந்த 12-ம் நாளும் மற்றவர்களுக்கு 30-ம்நாளும், சரராசியும், அஷ்டமசுத்தராசியும் உத்தமம்.

அச்சுவினி-பரணி-கார்த்திகை- திருவாதிரை- ஆயிலியம்-பூரம்-சித்திரை- விசாகம்-கேட்டை-பூராடம்-பூரட்டாதி- அமாவாசியை - பூரணையும்-ஒற்றைத்திதியும்-பாபாவாரங்களும் பிற்பகலும் பகைநீசக்கிரகபார்வையும் ஆகாவாம்.

## காதுகுத்த.

பிறந்த 12-ம், 16ம், நாள்களும்,6-ம்,7-ம்,மாதங்களும்சுபர்வாரங்களும் திருவோண நீங்கியமற்றமுழு நக்ஷத்திரங்களும்-பஞ்சமி-சஷ்டி சத்தமி துவாதசி- திரியோ

த்தி முற்பக்கச் சதுர்த்தசியும், 2-3-7-9-11-ல், சந்திரனும்,3-11-ல், பாபக்கிரகங்களும்-இருப்பது உத்தமம். குரு 6-8-10-லும், சுக்கிரன்-6-7-8-லும் புதன்-8-லும் இருந்தாலாகாது.

காணு நாறேழாந்திங்கள் கருநாளீ ராறிரெட்டு, ஓணமான்றலேபூசங்களவிட்டமுத்திரங்களத்தம், தோணி சித்திரையேசெங்கை சுபர்வாரம்பன்மூன்றிராம், ஞாணியாமிரண்டுமூன்றைந்தாலேழ் காதணிதல்நன்று.

ஆளரிகுளந்தேள்தீதா மாடுமாணுமிரண்டு, நாக்ஷருபக்கஞ்சேருங் கிழமைகள்நணுகிற்றீதாம், கோளவைபெட்டினீக்கிக் கொடுங்கதிருச்சிமுன்னே, வாள்விழி மாதேசொன்னோம் வைத்திடுகா துவல்லே.

வல்லிமூன்றிரண்டைந்தொன்பான் பன்னொன்றேழ்மதிபநல்ல,புல்லர்மூன்றாறுபன்னொன்றழகியர்பொன்பத்தாறும், சொல்லியவெட்டுந்தீயன் சுகங்கனெட்டாறேழ்பொல்லான், நல்லனெட்டேழிற்புந்திகாதிட நவிலுங்காலே.

## அன்னப் பிராசனஞ்செய்ய.

பிறந்த 6-ம்-மாதம், 8-ம்-மாதம், 12-ம்-மாதம்,வளர்பிறையிலே வியாழம் - வெள்ளி-புதனும், ரேவதி-ரோகணி-அஸ்தம்-புனர்பூசம் - அச்சுவினிமூன்றுத்திரங்கள்-சித்திரை, சதையம்-திருவோணம்-மிருகசிரம்-அவிட்டம்-சோதி-அனுஷமும், 1-2-ம் இடம் சுத்தமும் உத்தமம், பூரணை அமாவாசியை நவமி இரட்டித்ததிதிகள் தவிரமற்றத்திதிகள் ஆகாவாம்.

### அரைநாண் பூட்ட.

பிறந்தமுந்நூற்றறுபதாநாளில் ஸ்நானஞ்செய்வி த்துப் புநர்யாகஞ்செய்து பொன்னரை நாண்பூட்டுத லும்கோடி வஸ்திரந்தரிப்பதும் உத்தமம்.

### மயிற் கழிக்க,

பிறந்த 3-ம் வருடம் 5-ம் வருடமும், ஆடி-புரட்டா சி-மார்கழி-மாசி நீங்கிய மற்றமாதங்களும், ஞாயிறு-செவ்வாய்-சனிவாரமொழிந்த மற்றவாரங்களும், இருத்தை-அஷ்டமி-உவா-பிரதமையொழிந்தமற்றதிதிகளும், அஸ்தம்-சித்திரை - சோதி- உத்திராடம்-திருவோணம்-அவிட்டம்-சதையம்-மிருகசிரம் - புநர்பூசம்-பூசம்-உத்திரட்டாதி - ரேவதி- அச்சுவினி ரோகணி நக்ஷத்திரங்களும், கன்னி-துலாம்-ரிஷபம், மிதுனம்-மீனம்-கர்க்கடகஇராசிகளும்-9-ம் இடம் சுத்தமான லக்கனமும் உத்தமம்.

சந்திரன் 1-6-12-லும், சுக்கிரன் 7-லும்,குரு-12-லும், 8-ல் எல்லாக்கிரகங்களும் இருக்கலாகாது-3-6-11-ல் பாபக்கிரகங்களிருக்கலாம். தாயாரிருந்தால் சுக்கிரவாரத்திலாகாது.

### கவி.

ஆடிபுரட்டாசி யைப்பசிமார்கழி
தேடியஞாயிறு செவ்வாய்சனிதனில்
கூடியரோமங் குறைத்திடவல்லிரேல்
மாடுமக்களு மைந்தருமாள்வரே.

தாயபொன்வெள்ளிமூடன் தக்ஷணவயனமாசி, ஆய நற்பிறந்தநாட்க ளஷ்டமராசிக்கூறு, தூய்கதிர் சனி

செவ்வாய்நாள்தொன்மணம் புணர்ந்தவாண்டு, நாய
கிகர்ப்பநாளு நன்மயிர்கழிக்கொண்ணாதே.

### வருந்தோஷம்.

இரவியறுதிங்க ளெண்டிங்கள் செவ்வாய்
பரவுசனி பன்னிரண்டு திங்கள்—கருதுமயிர்
பூதலத்திலே விருந்தாற் பொல்லாங் கெல்லாமருவும்
மாதவத்தோர் சொன்ன மறை.

### வித்தியாரம்பம்.

பிறந்த 5-ம்௵ம் உத்தராயணத்தில் சனி - செவ்வாய்தவிர மற்றவாரங்களில்பிரதமை - இருத்தைதிரயோதசி-அஷ்டமி-உவா-துவாதசிநீங்கியமற்றதிதிகளில் புருஷராசியில்அனுஷம்-அச்சுவினி-புனர்பூசம்-பூசம்-ஆதிரை-திருவோணம்- அவிட்டம்சதையம்-அஸ்தம்-சித்திரை-சோதி மூன்றுத்திரங்கள் ரேவதி-ரோகணி நக்ஷத்திரங்களில் 6-7-10-12 நீங்கியவிடத்தில் சந்திரனும், 6-நீங்கியவிடத்தில் புதனும். 8-நீங்கியவிடத்தில் எல்லாக்கிரகங்களும்இருப்பதும் 4-ம் இடம்சுத்தமும் உத்தமம்.

### ஓதாதகாலம்.

அட்டமியிலோதினு லாசானுக்காகாது
சிட்டருக்குப்பன்னான்கு தீதாகும்—கெட்டவுவா
வித்தைக்குநாசம் விளங்குபிரதமையிற்,
பித்தரும்பேசார் பிழை.

### ஓலையெழுத வரிக்கணக்கு.

அடியார்க்கிரண்டுவரி யன்பர்க்குமூன்றாங்
கொடியோர்க்கு நான்காகக்கூறு—முடிபுனைந்த
வேந்தர்க்கோரைந்துவரி வேதியர்க்கோராறும்
சூழ்ந்தபனை யோலைச் சுருள்.

## உபநயனம்.

பிறந்த 7-ம்வீடும் சுபர்வாரங்களில் வளர்பிறை
யில் இருத்தை அஷ்டமி-ஏகாதசி-பிரதமை உவாநீங்கி
ய மற்றதிதிகளும் அனுஷம்-அத்தம் உத்திரங்கள்மூன்
றும் மிருகசிரம்-ரோகணி-அச்சுவினி சித்திரை-புனர்
பூசம்-பூசம்-ரேவதிநட்சத்திரங்களும் பாபக்கிரகங்களி
ன் ஆட்சி நீங்கிய 8-ம் இடம் சுத்தமாகியலக்கினமும்
உபநயனஞ்செய்ய உத்தமம்.

## மூடிசூட்ட பாகைபோட.

வளர்பிறையில் சுபர்வாரங்களும்.மிருகசிரம்ரோ
கணி-அச்சுவினி-உத்திரங்கள் மூன்றும், புநர்பூசம்-பூ
சம்-அஸ்தம் - சித்திரை-சோதி-அனுஷம்-அவிட்டம்-
திருவோணம்-ரேவதி நக்ஷத்திரங்களும்பஞ்சமி-சத்த
மி, திரயோதசி - துவாதசி-திரிதிகைதிதிகளும், கன்
னி-துலாம் நீங்கிய 11-ம் இடம் சுத்தமானலக்கினமு
ம் உத்தமம்.

## கோடியுடுக்க.

புதன்-வியாழம்-வெள்ளியும் உத்திரங்கள் மூன்
றும், அச்சுவினி-ரேவதி-ரோகணி புநர்பூசம்-பூசம்-அ
ஸ்தம்-சித்திரை-சோதி-விசாகம்-அனுஷம் - அவிட்ட
மும், 6-ம் இடம் சுத்தமும் இவை உத்தமம், இருத்தை
யும் சரராசியும் ஆகாவாம்.

## கவி.

காரியிலழுக்கதாகுங் கதிரவன்பீடைகாட்டும்
மாரியினைலயுந்திங்கள் வன்புதன்கந்தையாகும்
வீரியமில்லைச்செவ்வாய் வெள்ளியில்மடந்தைசேர்வள்
சூரியவியாழநன்றாங் குலவியவாடைசாத்த.

பூட்டுமுததிரங்கள்தோணி புரவிபாரிருபூசங்கள்
ஈட்டியவத்தமாதி யைந்துமேலவிட்டநற்கோள்
சூட்டியவாரநன்றுந் துயரமெட்டிருத்தைசிங்கம்
கோட்டியசரங்கணீக்கி நின்றநாள்கூரைசாத்தே.

ஞாயிற்றுக்கிழமை கடகம்-கும்பம்,
திங்கட்கிழமை மீனம்-மேஷம்,
செவ்வாய்க்கிழமை தனுசு-கன்னி,
புதன்கிழமை மிதுனம்,
வியாழக்கிழமை சிங்கம்-இடபம்,
வெள்ளிக்கிழமை துலாம்-விருச்சிகம்,
சனிக்கிழமை மகரம்.

இவை கூடியகாலத்தில் கோடிசாத்தல் நலமென ச்சிலர் சொல்லுவர்.

## கவி.

பரிதியிற்கடகங்கும்பம்பார்மதிமீனமேஷம்
குருதியிற்றனுசுகன்னிகோள் புதன்மிதுனமாகும்
சுருதிபொன்னரியும்புல்லுஞ்சுக்கிரன் றுலாமுங்தேளு
வருசனிமகரமாகும் வாரத்திற்கோடிசாத்தே.(ம்

## வாகனமேற ஆயுதம்பிடிக்க.

வளர்பிறையில் நந்தை-பூரணை-ஞாயிறு-திங்கள்-புதன்-வியாழம்-கர்க்கடகம்-சிங்கம்-மிதுனம்-கன்னி-தனுசு-மீனம்-மிருகசிரம்-உத்திரங்கள் மூன்றும், மகம்-அஸ்தம்-புநர்பூசம்- திருவோணம்-சித்திரை-ரோகணி-சோதி-ரேவதி உத்தமம்.

## ஆபரணம்பூண.

வளர்பிறையில் சுபர்வாரஉதயம்-நந்தை-பூரணை-ரிஷபம்-மிதுனம்-கன்னி-தனுசு-மீனம்-அச்சுவினி-அஸ்தம்-சித்திரை-அனுஷம்-பூசம்-மிருகசிரம்-ரோகணி-ரேவதி உத்தமம்.

## உழவுசெய்ய.

சித்திரைமாசத்தில் பூர்வபக்கத்தில் சனி ஞாயிறு தவிற மற்றவாரங்களும் இரட்டித்ததிதிகளும்நவமியுந் தவிற மற்றத்திதிகளும், ரிஷபம்-மிதுனம்கர்க்கடக லக்கனங்களும் ரோகணி-மூலம்-உத்திரங்கள் மூன்றும் ரேவதி-புனர்பூசம்-பூசம் அஸ்தநக்ஷத்திரங்களும்பொன்னேரென்னும் உழவு நாட்கொள்ள உத்தமம்.

## வயற்சூலம்.

நாலுகோணமாக ஒரு சதுரங்கீறி நாலுமூலையினும் சூலமிட்டுக்கிழக்கில் 3-வரையும் தெற்கில்5-வரையும் மேற்கில் 5-வரையும் வடக்கில் 2வரையுங் கீறில் 27-முனையாகும், ஈசானமூலையில் சூரியன்விட்டநாளைவைத்து வலமாக எண்ணச் சூலத்தில் உள்ளநாள் 12-ம் உழவுசெய்ய ஆகாவாதி மற்ற 15-ம் உததமம்.

## கலப்பைச் சக்கரம்.

ஆறுமூலையுள்ள ஒரு சதுரங்கீறி 6-மூலைகளிலும் சூலமிட 18-மனையாம், சதுரத்தின்கிழக்கு-மேற்கின் நடுபக்கங்களிலும் ஐவ்வைந்து வறி கீறில் 28 - முனையாம், இடதுபக்கத்தின் நடுமுனைச்சூலத்தின் நடுவில் ரவிநின்ற நாளைவைத்து அபிசித்துடன் வலமாகஎண்ண ரவிநின்ற நாளும் முன்பின்னு

ள்களும் பயிர்தீயும் பின்னெட்டு நாளும் நல்லது, அதன்பின் 9-நாளும் உழவுகுண்டை ஒயும் மற்றநாள் 7-ம் சுகம்.

பணிச்சக்கரம்.

சர்ப்பமெழுதி சிரசில்-3 கழுத்தில்-3 முதுகில்-12 வாலில்-9 வயற்றில்-3 ஆக 27-வரை கீறி சிரசில் சுக்கிரனின்ற நாளைவைத்து நேரே எண்ண சிரம் 3-ம் பயிர்தீயும் கழுத்துமூணும் நீர்ச்சாவி, முதுகு 12-ம் விர்த்தி, வால் 6-ம் அற்பவிளைவு வயிறு 3-ம் நாசமாகும் இப்படிவிதைக்குநாள்பார்க்கவும்.

சிலர் இராகு நின்ற நாளை வயிற்றின் கடையில் வைத்து அப்பிரதக்ஷிணமாக எண்ணும்போது 6-5-6 வது நட்சத்திரம் கறுப்புத்தானியம் விதைக்க நல்லதென்றும் 7-முதல் 12-வரையுள்ள 6-ம், நல்லபயிர்செய்யஉத்தமமென்றும் மற்றவைகள் ஆகாதென்றுஞ் சொல்வர்.

விதைக்க.

சுபர்வாரங்களில் உழவுக்குச்சொன்ன விதிப்படி நெல்முதலான கதிர்த்தானியங்களுக்குத் திருவோண முதலாகச் சொன்ன 9-நாள்களும்.

மஞ்சள் முதலான கிழங்குகளுக்கு பரணி முதலாகச்சொன்ன 9-நாள்களும்.

பயறுமுதலான காய் தானியங்களுக்கு சோதி முதலாகச்சொன்ன 9-நாள்களும் உத்தமம்.

பஞ்சமி - சத்தமி-திரயோதசி-ஏகாதசி-திரிதியை உத்தமம்.

தசமி-துதிபை-சஷ்டி மத்திபம் மற்றத்திதிகள் அதமம்.

ரிஷப-கர்க்கடக-சிங்க-மகர - மீன-உத்தமம்.
மிதுனம்-கும்பம்-துலாம்-மத்திமம்.
மற்றராசிகள் அதமம்.

அஷ்டம் சுத்தமானலக்கனத்தில் அந்தந்தப்பயிருக்குச்சொன்ன நாள்களில்பயிர்செய்ய உத்தமம்.

நாகவம் கிமுஸ் துக்ன கரணங்களாகாவாம்.

ஞாயிறு உதயம் நெல்லுவிதைக்க,
சனியுச்சி-எள்ளுவிதைக்க,

செவ்வாய் உதயம் கொள்ளும்-வரகும் விதைக்க உத்ததம்.

அச்சுவினி கரும்புநட,
ஆயில்யம்-மூலம் வெற்றிலைதோட்டம்போட,
அனுஷமும்-சதையமும் எள்ளுவிதைக்க,
ரோகணி மரம்வைக்க,
பரணி கத்தரி முதலானவை நட,
சித்திரை பயறு விதைக்க உத்தமம்.

கிமுஸ் துக்னமும்வனசையும்கவுலவமும் ஆகாவாம்.

ஆவணிமாசத்தில் சிங்கத்தில் சூரியன்பிரவேசித்த 355-நாழிகை அல்லது 6-நாளும், அக்கினிநக்ஷத்திரமும் விதைவிதைக்க லாகாவாம். இதற்குநாட்டாச்சாலென்று பெயராம்.

## கலி.

ஓணமாதிரை பூசமுரோகணி
நீணிவுத்திர மூன்று சதயமும்
ஆணியான வவிட்டதோடொன்பதும்
பூணலாகுமே ளேக்கும் பயிருக்கே.

பரணிகார்த்திகை பாம்பு விசாகமும்
முரணுமூல முப்பூர மகத்துடன்
கிரணமான கிழங்கு பதித்திடத்
தரணியிற்றழைத் தோங்கிடு நாள்களே.

சோதிசித்திரை சோம ஞெடுபரி
ஆதியத்த மனுஷமி ரேவதி
நீதிகேட்டை நிகழ்புநர் பூசமும்
வீதியாக விளக்கிப் படருமே.

## கதிரறுக்க.

திங்கள்-புதன்-வியாழம்-சனி-மகம் - ரோகணிவிசாகம்-திருவாதிரை-திருவோணம்-அஸ்தம்-பரணி-ரிஷபம்-கர்க்கடகம்-சிங்கம்-விருச்சிகம்-உத்தமம், இருத்தை ஆகாது.

## தானியமிட, தானியமெடுக்க.

வளர்பிறை சனியும்-வியாழமும் - அஸ்தம்-திருவாதிரை-மகம்-ரோகணி-அனுஷம்-பரணி-உத்திரங்கள் மூன்றும், திருவோணம்-மிருகசிரநட்சத்திரங்களும் ஸ்திரராசி உபயராசிகளும் உத்தமம், இருத்தையாகாது.

கருப்பவதியும் கன்னிகையும் அமங்கலையும்அல்லாத சுமங்கலிகளால் பூசித்து களஞ்சியத்தில்போடும்படிசெய்வது உத்தமம், இந்தப்படி யேதானியமெடுப்பது உத்தமம்.

பிரதிஷ்டைபண்ண.

மாசிமாதம்- தேய்பிறை- குருட்டுநாள்- நவமிஉவா இரட்டித்ததிதிகள்-குரு-சுக்கிராஸ்தமனம்- சகடயோகம்-விஷ்டிதோஷம்-சரராசிகள்செய்யுங் கர்த்தாவின் ராசிக்கு-6-8-12-ம்ராசிகளும் ஆகாவாம்.

கவி.

கண்ணிலா நாட்கள்மாசி கடியபிற்பக்கமோன் பான், எண்ணுவா விரட்டைப்பக்க மிரும்புகர்செம் பொன்மூடம், தண்ணிய கடகம்விட்டி சரராசிதலையாயின்ற, அண்ணல்தன் ஞெரைக்காரெடிடீராறுபிரதிஷ்டைக்காகா.

விருந்துண்ண.

வளர்பிறையில் வெள்ளி - சனி-திங்கள்-புதன் அச்சுவினி-ரோகணி-மிருகசிரம்-புனர்பூசம்-பூசம்உத்திரங்கள்-மூன்றும், அஸ்தம்-சித்திரை-அனுஷம்திருவோணம்-அவிட்ட-சதயம்-விசாகம்-உத்தமம்.

இருத்தையும் உவாவும்-மேஷமும் - விருச்சிகமும் மீனமும் ஆகாவாம்.

கவி.

வெள்ளிசனி திங்கள் விருந்துண் புதனுகும்
கள்ளவியாழங் கசப்பிக்கும்—தெள்ளுகதிர்
தீராப்பகை காட்டுஞ் செவ்வாய் தனக்குமேச
வாராப் பகையும் வரும்.

பரிகாரம்.

செவ்வாய்க்கு பாலாந் தினகரற்கு நெய்யாகும் மெய்
யாம்வியாழம் வெந்நீராகும்—ஐபாகேள் இந்நாளை

ருவிருந்தை யிட்டிடவேண் டிட்டாய்சொன்னோம்பரி காரந்தான்.

மருந்துண்ண.

ஞாயிறு-வியாழம்-அமரபக்கத்திதிகளும் உத்தமமாம் ஜன்மானுஜன்மம்-ஜனனதிதி-ஜனனவாரம்-திருவாதிரை முதலாக விலக்கப்பட்ட நக்ஷத்திரங்களும் ஆகாவாம்.

பல்லகோல அகமெடுக்க.

தைமாதம் கிழக்குவாயிலும்,

சித்திரை-வைகாசிமாதங்களில் தெற்குவாடையும்,

ஆவணிமாதம் மேற்குவாடையிலும்,

ஐப்பசி-கார்த்திகை மாதங்களில் வடக்குவாடையிலும் அகமெடுக்க உத்தமம்.

மற்றமாதங்கள் வீடுகட்ட ஆகாவாம்.

இடபம்-மிதுனம்-கர்க்கடகத்துக்கு கிழக்குவாசலும்-வடக்குவாசலும்.

சிங்கம்-கன்னி-துலாத்துக்கு-கிழக்குவாசலும் - தெற்குவாசலும்,

விருச்சிகம்-தனுசு-மகரத்துக்கு மேற்கு வாசலும்-தெற்குவாசலும்.

கும்பம்மேஷத்துக்கு-வடக்குவாசலும் - மேற்குவாசலும் பொருந்தும்.

ரோகணி-ரேவதி-பூசம்-மிருகசிரம்-அனுஷம் அஸ்தம்-உத்திரங்கள் மூன்றும் உத்தமம், புநர்பூசம்-பூசம்-பூசம்-மூலம்-அவிட்டம்-சோதி-சதையம் மத்திமம், மற்றவை ஆகாவாம்.

பாபர் வாரங்களும் உவா-இருத்தை-அஷ்டமியும்-சராசிகளும் ஆகா, முக்கியம் 12-ம் இடம்சுத்தம் வேண்டும்.

சிங்கம் விருச்சிகத்தில் குருவும்,
கும்பத்தில் சுக்கிரனும்-சந்திரனும்
ரிஷபத்தில் புதனும்-சுக்கிரனும்,
இருக்குங்காலமாகில் விசேஷ உத்தமம்.

## கிணறுவெட்ட கரைகட்ட.

ஐப்பசிமாதம் 10-க்குமேல் 20-தேதிக்குள்உத்திரமூன்றும், கேட்டை-ரேவதி-சித்திரை-ரோகணி-திருவோணம் அஸ்தம்-மிருகசிரம்-பூராடம்-மகம்-பஞ்சமி-சத்தமி-திரிதியை-ஏகாதசி-திரயோதசி-பிரதமை-கும்பம்-மீனம்-மகரம்-ரிஷபம்-கர்க்கடகம்-சுபர்வாரங்களும் கிணறுவெட்டஉத்தமம்.

சித்திரை மாசத்தில் முன்சொன்னபடிகூடியநாளில் கரைகட்ட உத்தமம்.

## கிணறு விழுமிடமறிய.

கண்டநிலத்தை 12-பங்கு பண்ணிக் கிழக்குமேற்கு நீண்டமனையாயின் கிழக்கின்நடும்பங்குமேஷமாகவும், தெற்கு-வடக்கு-நீண்டமனையாயின்தெற்கின் நடுப்பங்கு மேஷமாயுங்கொண்டு, மேஷத்தில்சூரியனை வைத்து வலமாக சூரியன்-சந்திரன்செவ்வாய-புதன்-குரு-சுக்கிரன்-சனி இராகு-கேதுபிரமன்-விஷ்ணு-ருத்திரன் என மீனம்வரை எண்ணில்சூரியனில் பாராகும், சந்திரனில் வெகுநீராகும், செவ்வாயில் அற்பநீராகும், புதனில் சிறுஊற்றாகும், குருவில் பாராகும், சுக்கிரனில் வெகுநீராகும், சனியில கரைவிழும்,இராகுவில்உவர்நீராகும், கேதுவில் அற்பநீராம், பிரமனி

ல்பாரையாம் விஷ்ணுவில் குழிகுண்டுமிருகரையுமா
ம், ருத்திரனில்வெகுநீராம்.

கவி.

கண்டிலந்தனைப்பன்னிருகூறதாக்கிக்
கதிராதியுருத்திரன்வரை வலமாவெண்ணக்
கொண்டரவிபாராகும்வெகுநீராகும்
கூறற்பநீராகும்வெகுநீராகும்
திண்டிறல்சேர்பாராகும்வெகுநீராகும்
செய்திடுநற்கரைவீழுமுவர்நீராகும்
உண்டற்பநீராகும்பாரையாகும்
உடைகரையுங்குழியுண்டாம்வெகுநீராமே.

யாத்திரை.

செவ்வாய்க்கிழமையும் ரோகணிமுதல் ஐந்துந
ட்சத்திரமும் நக்கையும் கிழக்கிலும்

உத்திரமும்-அஸ்தமும்- திங்களும்-சனியும்பத்தி
ரையும் தெற்கிலும்,

அநுஷம்-கேட்டை-மூலம் - உத்திராடம் - திரு
வோணம் 5-நட்சத்திரங்களும் சயையும், வியாழக்கிழ
மையும் மேற்கிலும்,

அவிட்டம்-சதையம்- உத்திரட்டாதி - ரேவதிஅ
ச்சுவினி 5-நட்சத்திரங்களும் பூரணை - ஞாயிறும்-வெ
ள்ளியும்-வடக்கிலும்.

யாத்திரை செய்ய உத்தமம்.

பரணி-கார்த்திகை-திருவாதிரை-பூரங்கள் மூன்
றும், ஆயிலியம்-கேட்டை-சித்திரை-விசாகம்சோதி-
மகம்-இருத்தை-பிரதமை-அஷ்டமி-உவாஞாயிறு-செ

வ்வாய்-புதன்-ஸ்திரராசிகளும், விஷ்டிதோஷம்-விதீபாதம்-பரிவேடம்-கிராணகாலமும்சூலமும்,சங்கிரமம்-தூமம்-இடி-மின்னல்-மழைபொழிதல்-இடறல் -தும்மல்பெண்சாதி தூரகாலம் இவையுண்டாகுபோது யாத்திரைசெய்யலாகாது.

சென்மலக்கனத்துக்கு-2-3-6-11-இராசிகளும் முக்கியமாய் ஐந்தாமிடஞ் சுத்தமிருக்கும் ராசிகளும் பிரயாணத்துக்கு உத்தமம்.

பெண்களுக்குஆடி-புரட்டாசி-மாசி-வெள்ளிபுதன்-விலக்கப்பட்டன.

அன்றையத் திதிவார நக்ஷத்திரங்களை அவ்வவ்வாதியாகக் கணக்கிட்டுக் கண்டதொகையை 2-ல் பெருக்கி7-க்குக்கொடுத்துமிச்சங்காணில்மகிச்சி,3-ல் பெருக்கி 8-க்குக்கொடுத்து மிச்சங்காணில் இன்பம் மூன்தொகையை 4-ல், பெருக்கி 6-க்குக்கொடுத்துமிச்சங்காணில் சுபம், மூன்றிலும் சேடங்காணில் உத்தமம், 2-ல் காணில் மத்திமம் ஒன்றில் காணில், பரியம், சேடமில்லாவிடின் யாத்திரை போகலாகாது.

## யாத்திரைச் சூலம்.

3-சூலமெழுதிஒவ்வொன்றின் அடிக்காம்பின்நடுவில் 6-முனை தோன்றும், இடதுபக்கத்துச்சூலத்தினடுவில் யாத்திரைநாளைவைத்து வலமிடமாககீழுமேலும் ஜனன நாள்வரையெண்ண நடுவரை12-லும்வரின்உத்தமம், வெளிப்பக்கம் 6-வரையிலும் வரின் பறவைபோலலைவான். சூலமுனை 6-லும் வரின் மரணம்.

## கவி.

இலைதெரியச் சூலங்கள் மூன்றாகீறி
இடைச்சூலத் தியாத்திரைநாள் தன்னைவைத்து
வலமிடமா யிருபத்தேழ் நாளுமெண்ணில்
வழிப்போவான் பிறந்தநாள் நடுவீராறேல்
மலமிகவே யுண்டாகும் பக்கவாறில்
பறவைபோ லலைந்திடுவான் பகர்ந்தசூலம்
தலையளவே யாமாயிற் சாவான்றிண்ணம்
சத்தியமா யிந்நூலைச் சாற்றினோமே.

வினவுறு விண்டுவில்லு விதிபாதமூர்கோள்வட்டம்
நுனிவுறுகிராணஞ்சூலம் தூபசங்கிராந்திதூரம்
வனிதைகேளிடித்தல்மின்னல் மழைபெய்தலிடறல்து
இனையவைசெய்யபோகிலெய்திடுநாசந்தானே.

ஆடுகன்னி விண்மிதுன மல்வற்படுத்துவிக்கும்
நீடுமகர நினைவழிக்கும்—நாடுங்கால்
மீனநினை வாக்கு மிகுமழைபாங் கும்பத்தில்
ஊனமில்லா லக்கனத்தை யோது.

விற்பகையை வெல்விக்கு மேலா மெருதசுபம்
எப்பகையும் வெல்லு மிருங்கடகம்—சொற்பெரிய
மன்னனுஞ் சிங்கம் மகிழ்வாம் விருச்சிகத்தில்
தன்னுடப்பிற் காட்டுந் தழும்பு.

## இராசி விசேஷம்.

| | | | |
|---|---|---|---|
| விவாகத்துக்கு | மேஷம் | வீடுகட்ட | துலாம் |
| திதிகொடுக்க | ரிஷபம் | உழவுக்கு | விருச்சிகம் |
| யாத்திரைக்கு | மிதுனம் | கிணறுவெட்ட | தனுசு |
| மரம்வைக்க | கர்க்கடகம் | கப்பல்யாத்திரை | மகரம் |
| குருவைக்காண | சிங்கம் | மயிர்கழிக்க | கும்பம் |
| புணர்ச்சிக்கு | கன்னி | வித்தியாரம்பத்து | மீனம் |

மடசுத்தம்.

| | | | |
|---|---|---|---|
| குடிபுக | 12-ம் | விவாகத்துக்கு | 7-ம் |
| முடிசூட்ட | 11-ம் | கோடியுடுக்க | 6-ம் |
| அன்னபிராசனத் | 10-ம் | யாத்திரைக்கு | 5-ம் |
| மயிர்கழிக்க | 9-ம் | வித்தியாரம்பத்துக்கு | 4-ம் |
| உபநயனத்துக்கு | 8-ம் | பொன்பூண | 2-ம் |

விஷேசத்துக்கு லக்கனமுஞ் சுத்தமாக யிருக்கவேண்டும்.

அருக்கனிலை

சனிக்கிழமை இராத்திரி 30-நாழிகையும் ஞாயிற்றுக்கிழமை பகல் 30-நாழிகையும் தெற்கிலும்,

ஞாயிற்றுக்கிழமை ராத்திரி 30-ம், திங்கட்கிழமை 6-ம் தென்மேற்கிலும்,

செவ்வாய்க்கிழமை பகல் 30-ம், இராத்திரியில் 10-ம மேற்கிலும,

மற்ற 20-ம் புதன்கிழமை பகல் 30-ம் வடமேற்கிலும.

புதன்கிழமை ராத்திரி 3-ம், வியாழக்கிழமை பகல் 30-ம, இராத்திரியில் 10-ம் வடக்கிலும,

மற்ற 20-ம், வெள்ளிக்கிழமை 60-ம் வடகிழக்கிலும்,

சனிக்கிழமை பகல் 30-ம், கிழக்கிலும் அருக்கனிருக்கும், அக்கினிமூலை பாழாம்,

திசைபோனிநிலை.

| | | | |
|---|---|---|---|
| கருடன் | கிழக்கு | பாம்பு | மேற்கு |
| பூனை | தென்கிழக்கு | எலி | வடமேற்கு |
| சிங்கம் | தெற்கு | யானை | வடக்கு |
| நாய் | தென்மேற்கு | மூசல் | வடகிழக்கு |

அருக்கனில் கருடனைவைத்து முறையேபார்க்கும்போது எதிருக்கெதிர் பகையோனியிற்கும், அவைகளுள் கருடன் திசையிலிருந்துபாம்புதிசைக்குப்போகலாம், பாம்பு திசையிலிருந்து கருடன் றிசைக்குப் போகலாகாது என்னனில் கருடன் இரை எடுக்கப் போகும். பாம்பு இரையாகவரும் ஆதலாலென்க. ஒருவன் யாத்திரைக்குப் பக்ஷிமுதலிய சகுனங்கள்பார்க்கும்போது இரையாகும். யோனித்திசையிலிருந்து இரையெடுக்கும் யோனித்திசைக்குப்போகலாகாது.

க வி.

அருக்கனிலே யிற்கருடனனதொருபூனை
நெருக்கியநற்சிங்கமொடு நின்றிலகுநேர்நாய்
தருக்கமுடனகமெலி யானைமுசலெட்டும்
இருக்குமுதலிந்திரனே ராம்பகையெதிர்த்தே.

மனை நூல்,

மனையை தச்சுமுழத்தாலளந்து குழியாக்கி அந்தக் குழியை,

8-ல் பெருக்கி 12-ல் கழித்தமிச்சம் ஆதாயம்,
9-ல் பெருக்கி 10-ல் கழித்தமிச்சம் செலவு,
4-ல் பெருக்கி 400-ல் கழித்தமிச்சம் வயது,
8-ல் பெருக்கி 17-ல் கழித்தமிச்சம் நக்ஷத்திரம்,
3-ல் பெருக்கி 8-ல் கழித்தமிச்சம் யோனி,
9-ல் பெருக்கி 7-ல் கழித்தமிச்சம் வாரம்,
9-ல் பெருக்கி 4-ல் கழித்தமிச்சம் ஜாதி,
4-ல் பெருக்கி 9-ல் கழித்தமிச்சம் அம்சம்,
9-ல் பெருக்கி 30-ல் கழித்தமிச்சம் திதி இதில்கருக்

கு உட்பட்டால் வளர்பிறையாகவும், கருக்கு மேல் தேய்பிறையாகவுங் கொள்க.

4-ல் பெருக்கி 12-ல் கழித்தமிச்சம் இராசி,
8-ல் பெருக்கி 5-ல் கழித்த மிச்சம் சூத்திரமாகக் கொள்ளவும்,

## இவற்றுள் யோனி.

| | | | |
|---|---|---|---|
| 1-க்கு | கருடன் | 5-க்கு | பாம்பு |
| 2-க்கு | பூனை | 6-க்கு | எலி |
| 3-க்கு | சிங்கம் | 7-க்கு | யானை |
| 4-க்கு | நாய் | 8-க்கு | முசல்எனக்கொள்க |

இவற்றுள் பூனை-எலி-முசல் ஆகாவாம்.

## அம்சம்.

| | | | |
|---|---|---|---|
| 1-க்கு | சோரம் | 6-க்கு | கிலீபம் |
| 2-க்கு | புத்தி | 7-க்கு | வருத்தம் |
| 3-க்கு | சத்தி | 8-க்கு | ரோகம் |
| 4-க்கு | தானியம் | 9-க்கு | சுபம் |
| 5-க்கு | இராச்சியம் | 1-6-7-8 | ஆகாவாம் |

## சூத்திரம்.

| | | | |
|---|---|---|---|
| 1-க்கு | பாலன் | 4-க்கு | கிழவன் |
| 2-க்கு | குமாரன் | 5-க்கு | மரணம் |
| 3-க்கு | இராசன் | இவற்றுள்-4-5-ஆகாவாம் | |

வீட்டின்-அகலத்தை-9-பங்காக்கி-வலத்தில்-3-பங்கும், இடத்தில்-5-பங்குதள்ளி-நின்றபங்கில்தெருவாசற்படிவைக்கவும்,வலத்தில்-2-பங்கும்இடத்தில் 3-பங்குந்தள்ளி-நின்றபங்கு-4-உள்-முற்றமாக்கவும்-நல்லது

பிராமணருக்கு தெற்கு-வடக்கு நீளமாகியசந்தி ர பத்தியாகவும்,மற்றவர்களுக்கு கிழக்கு-மேற்கு நீள மாகிய சூரிய பத்தியாகவும் முற்ற மிருக்கவேண்டும்.

கவி,

இட்டவெட்டுடன் பன்னிரண்டாக்கமாம்
ஏற்றுமொன்பதோடைந்தழிவதாம்
முட்டில்மூன்றுடனெட்டுமேயோனியாம்
மொழிந்தவெட்டுடன்மூவொன்பதாம்
விட்டிரண்டுடனேழுங்கிழமையாம்,
விடாதவொன்பதும் வேதமுஞ்சாதியாம்
சிஷ்டிநாலுமணியுமாமங்கிஷம்
சிறந்தவொன்பதுமுப்பதும்பக்கமே.
நாலிற்பெருக்கி நானூறுக்கியச்
சீலமா மாயுளேனத் தேர்.

தச்சமுழம் ஒன்றுக்குகைமுழம் இரண்டு-இதுவீ ட்டெசமானனுடைய கையாற்கொள்க.

வீட்டின் உத்தளவைத் தச்சுமுழத்தாலளந்துகுழி யாக்கி 9-ல் பெருக்கி 20-ல், கொடுத்தமிச்சத்தில் 6-த ள்ளி.

| | |
|---|---|
| 7-க்கு நாசம் | 14-க்கு பாக்கியம் |
| 8-க்கு இடையூறுநீங்கும் | 15-க்கு பொருளும்உயிருநீங்கும் |
| 9-க்கு திருக்கோடும் | 16-க்கு சுபம் |
| 10-க்கு பாலுமன்னமுண் | 17-க்கு மத்திபம் |
| 11-க்கு புத்திரஹானி | 18-க்கு குடியிலையாது |
| 12-க்கு புத்திரருண்டு | 19-க்கு பொருளழிவு |
| 13-க்கு பகைநோய்குடிநீங்கும், | 20-க்கு இன்பமுண்டு |

மிச்சம் ஆறுவரையிலுண்டா யிருக்கலாகாது, ஆ கையால் எட்டுவரும்படியாகச் செய்துக்கொள்ளவும்.

சந்திரனின்றலக்கினத்தில் அஸ்திபாரஞ்செய்து, புதனின்றலக்கினத்தில்கட்டி, சுக்கிரனின்றலக்கினத் தில்வேய்ந்து வீடுமூடி, குருவின்றலக்கினத்தில் கிரகப் பிரவேசஞ்செய்தால் இந்திரபோகமுண்டு.

கவி.

மதியுதிக்கக் காலநாட்டி மாலுதிக்கக் கட்டி
விதிவெள்ளி தானுதிக்க வேய்ந்து—பதிதனிலே
மந்திரிதா னுதிக்க மாடங் குடிபுகுந்தால்
இந்திரன்போல் வாழ்ந்திருக்கலாம்.

துறைஇரட்டித்தும், கைதூலம்முதலியன ஒற்றை யாயும், தூண்குத்து உண்டானவீடு எஜமானனுக்குக் கெடுதிதரும்.

எஜமானனுடைய லக்கனத்துக்குக் கிரகப் பிர வேசலக்கனமும் அஸ்திபாரலக்கனமும் வலமாய்6-இ ராசிக்குள்ளிருக்கின் நலம், இடமாய் 6-இராசிக்குள் ளிருக்கின் ஆகாவாம்.

வலம் 6-க்கும்-முத்தித்தனுவென்றும், இடம்6-க் கும் பேதித்தனுவென்றும் பெயர்,

கவி.

நன்னுளினில்பனைகோலி நானுரிடராசி
முன்னாகியவலமாகுதல் முத்தித்தனுவென்றும்
பின்னாகியவிடமாகுதல் பேதித்தனுவென்றும்
பொன்னுலகுமுயிராவதுதும் போமாறிதிண்ணம்.

வாசற்படிவைக்க,

வீட்டின்கலத்தை 9-கூறு செய்து வாமத்தில் 5-பங்கும், வலத்தில் 3-பங்கும் விட்டு வாசற்படிவைக்கவும்.

கிழக்கு மேற்கு வீதிக்கு வலம் கிழக்காவும்,இடம்மேற்காகவும், தெற்கு வடக்குவீதிக்குவலம்வடக்காகவும், இடம் தெற்காகவும் கொள்க.

கவி.

வீட்டினளவை விளங்கொன்பான் கூறுசெய்து
நீட்டியளந்த நிலைக்கோலால்—கூட்டிடுவாய்
வாமத்தேயைந்தும் வலத்தே யொருமூன்று
சேமத்தே வாசலிடச் செப்பு.

ஆகாதமாதம்.

ஆடித்திங்களில் ராவணன்பட்டதும்
ஆலமேய்பெரும் பாரதமார்கழி
வீடிட்டான்புரட் டாசியிரணியன்
மேவியீசனஞ் சுண்டதுமாசியில்
பாடிக்காம னெரிந்ததுபங்குனி
பார்க்குளேகினன் மாபலியானியில்
வீடிட்டில்லங் குடிபுகவேண்டினே
ரோடிட்டேயிரந் துண்பருலகினே.

நிலைச்சூலம்.

4-மூலையுள்ள ஒரு சதுரங்கீறி 4-மூலையிலும் சூலமிட்டுச் சதுரத்தின்கிழக்கில் 9-வரையும், தெற்கில் 2-வரையும்,மேற்கில் 3-வரையும்,வடக்கில் 2-வரையும்கீற

28-முனையாம், கிழக்கிலுள்ள நடுவரையில் ரவியின் நாளைவைத்து வலமாக அபிசித்துடன் எண்ணக் கிழக்கிலுள்ளவரை 9-ம் மேற்கிலுள்ளவரை 3-ம் ஆக 12-ம் ஆகிய நாள் வாசக்கால்வைக்கஆகாவாம், மற்றையநாள் 15-ம் உத்தமம்.

## சாதகப் பொருத்தம்.

லக்கனத்துக்கு 1-2-7-8-ல் பாபக்கிரகங்களிருந்தால் முழுப்பாபமென்றும்,

4-12-ல் இருந்தால் காற்பாபமென்றும் பேராம்.

மேலும் செவ்வாய் நீங்கிய பாபிகளுக்கு 4-ம் 12-ம்.

ஆட்சிவீடாயில் அரையும்,
உச்சவீடாயில் முக்காலும்,
நட்புவீடாயில் காலும்,
பகைவீடாயில் முழுமையும்,
நீச்சவீடாயில்முழுதும்குரூரமாகியபாபமாம்

பெண்சாதக பாபம் பிள்ளைசாதக பாபத்துக்குக் குறைந்திருக்கவேண்டும். சமனாயுமிருக்கலாம்அதிகப் படலாகாது.

சிலநூல்கள் சுக்கிரனின்ற ராசியைத்தொட்டும் சந்திரனின்றராசியைத்தொட்டு பார்க்கும்படிசொல்லுகின்றன.

## கவி.

திட்டஞ்சொல்பாபர்கேது சேயாவிமந்தன்ராகு
எட்டுவாசொன்றதேழி லிருந்திடின்முழுதும்பாபம்
கட்டுநான்சீருராயிற் காலதாங்குசனுக்கொன்றும்
இட்டமாய்பார்க்கவெள்ளி யிந்துலக்கனத்தைப்பார்

ஓர்பாவிமாதருக்கா ணேறிநிற்கிலெட்டிக்கும்
சீர்காலோடமைமுக்கால் சேர்சரிநன்றாகும்
நாரியர்க்குக்காற்பாவி கூடிலாண்மரணம்
சேர்சிங்கம்வில்கயல்கோல் தேளாடஞ்செப்பே.

## 1-வது நட்சத்திரப்பொருத்தம்.

பெண்ணினுடைய நாள்முதல் புருஷனுடைய நாள்வரையில் எண்ணும்போது 2-4-6-8-9-12-14-16-19-22-23-26-28-29-ம் நட்சத்திரங்க ளுத்தமம்.

பத்து நட்சத்திரமானபின் மறுபடியும்பத்தாந ட்சத்திரந்தொடங்கியும், இருபதுநட்சத்திரமானபின் மறுபடியும் இருபதா நட்சத்திரந் தொடங்கியும்எண் ணிக்கொள்ளவும்.

## 2-வது கணப்பொருத்தம்.

பெண்ணுடைய நட்சத்திரமும் புருஷனுடையநட் சத்திரமும் ஒரேகணமானால் உத்தமம்.

இராக்ஷத கணமும், தேவ கணமுமாகில் சிலுகு ண்டாம்.

இராக்ஷதகணமும், மனுஷகணமுமாகில்மரணம்

மனுஷகணமும் தேவகணமுமாகில்மத்திமம்.

## 3-வது மகேந்திரப்பொருத்தம்.

பெண்ணாள்முதல் புருஷன்நாள்வரை எண்ணும் போது 1-4-7-10-13-16-19-22-25-ஆனால்உத்தமம்

### 4-வது ஸ்திரீதீர்க்கப்பொருத்தம்.

பெண்ணாள்முதலாக வெண்ணும்போது புருஷனாள் 13-க்கு மேலானால் உத்தமம்.

### 5-வது யோனிப்பொருத்தம்.

| | |
|---|---|
| யானைக்குப் பகை | மனுஷர் |
| குதிரைக்குப்பகை | பசு |
| மானுக்கும் எருமைக்கும் பகை | புலி |
| பாம்புக்குப் பகை | ஆடு |
| குரங்குக்குப் பகை | நாய் |
| எலிக்குப் பகை | பூனையாம் |

இவையுமன்றி இரண்டும் புருஷயோனியானால் ஆகாவாம். பெண் ஸ்திரியோனியும் புருஷன் புருஷயோனியுமானால் உத்தமம் மாறியிருந்தாலாகாது.

### 6-வது இராசிப்பொருத்தம்.

பெண்ராசி முதல் புருஷன் ராசிவரை எண்ணினால் 6-இராசிக்கு மேலாயின் உத்தமம்.

### 7-வது இராசிக்கதிபதி பொருத்தம்.

பெண்ராசிக்கும் புருஷன்ராசிக்கும் அதிபதிகள் நட்பாயிருக்கில் உத்தமம்.

### 8-வது வசியப்பொருத்தம்.

| | |
|---|---|
| மேஷத்துக்கு | சிங்கமும்-விருச்சிகமும் |
| இடபத்துக்கு | கர்க்கடகமும்-துலாமும் |
| மிதுனத்துக்கு | கன்னியும் |
| கர்க்கடகத்துக்கு | விருச்சிகமும்-தனுசும் |
| சிங்கத்துக்கு | மகரமும் |
| கன்னிக்கு | ரிஷபமும்-மீனமும் |

| | |
|---|---|
| துலாத்துக்கு | மகரமும் |
| விருச்சிகத்துக்குகர்க்கடகமும் | கன்னியும் |
| தனுசுக்கு | மீனமும் |
| மகரத்துக்கு | கும்பமும் |
| கும்பத்துக்கு | மீனமும் |
| மீனத்துக்கு | மகரமும் |

வசியமாம்

## 9-வது ரச்சுப் பொருத்தம்.

நேரே மூன்று முக்கோணங்கீறி குறுக்காகநா ன்கு கீற்றுக்கீறினல் 27-பொருத்தாம்.

குறுக்காகக்கீறிய அடிவரைக்குக் காலென்றும்,
அதன்மேல்வரைக்குத் தொடையென்றும்,
அதன்மேல்வரைக் கழுதமென்றும்,
முக்கோணத்துச்சி மூன்றுக்கு தலையென்றும்,

பெயராம்.

முன்சொன்னபொருத்து 27-லும் முதல்பொரு த்தில் அச்சுவினியை வைத்து மேல்கீழாய்வலமாகமு றையேஎண்ணும்போது புருஷனுடைய நக்ஷத்திரமு ம் பெண்ணினுடைய நட்சத்திரமும் குருக்காக கீறி யவரைகளில்ஒருவரையிலிருக்கலாகா.

| | |
|---|---|
| கால்வரையில் வந்தால் | பொருளழிவு |
| தொடைவரையில் வந்தால் | மலடி |
| வயிற்றுவரையில் வந்தால் | புத்திரஆனி |
| கழுத்துவரையில் வந்தால | புருஷனிறப்பு |
| சிரசுவரையில் வந்தால் | பெண்ணிறப்பு |

இப்படிப் பார்த்துக்கொள்ளவும்.

## 10-வது வேதைப் பொருத்தம்.

ஒரு முக்கோணங்கீறி மூன்று மூலையிலும் நந் நான்கு வரைகீறில் 27-பொருந்தாம், முன்போல அச்சுவினி முதலாக எண்ணும்போது இருவர் நாளும் ஒரு குறுக்கு வரையி லிருக்கலாகாது.

## 11-வது மரபபொருத்தம்.

முன்சொன்ன மரங்களுக்குள்ளே பலாசு - புன்னை-நாவல் மகிழ்-பலா-மா-இலுப்பை- சண்பகம் எருக்கு-வஞ்சி-அரசு-ஆல்- அத்தி-மாதுளை-பிராய்என்னும் 14-ம், பாலுள்ள மரமாம்.

மற்றவை வயிரமுள்ளமரமாம்.

புருஷன் வயிரமரமும்-பெண் பால் மரமுமானல் புத்திரனுண்டு.

பெண்வயிரமரமும்- ஆண்பால்மரமுமானல் மலடு.
இருவரும் வயிரமரமானல் புத்திரசேதம்.
இருவரும் பால்மரமானல் அதிகநலம்,

## 12-வது பக்ஷிப்பொருத்தம்.

மயிலுக்கும்-கோழிக்கும் வல்லூறு பகை
வலியனுக்கு- ஆந்தை பகை
ஆந்தைக்கு-வலியன் பகை.
வல்லூறுக்கு-வலியனெழிய எல்லாம்பகை.

இப்படியே புருஷனுக்கும் பெண்ணுக்கும்உள்ள பக்ஷிகளில் பகையிலலாதிருக்க வேண்டியது.

## 13-வது ஆயுட்சோதனைப் பொருத்தம்.

பெண் நக்ஷத்திரமுதல் புருஷனுடைய நக்ஷத்திரம்வரை எண்ணின் தொகையை எழிற் பெருக்கி

இருபத்தேழிற்கிந்து நின்ற மிச்சம் புருஷன் நாள்முதல் பெண்ணாள் வரையில் எண்ணி முன்போற்பெருக்கிக் கழித்தமிச்சமும் பார்க்கும்போது பெண் நாட்குறையில பெண்முன்னும், புருஷன் நாட்குறையில் புருஷன் முன்னும் பதவியடைவரென்பதாம்.

கவி.

அன்று பெண்பிறந்தநாடோட் டாணிளௗவுமெண்
நின்றவர்நாட்கடோட்டு நேரிழைநாளீறுகச் [ணி
சென்றதையேழிற்றுக்கி யிருபத்தேழ்க்கீந்தசேடம
மன்றலங்குழலாய்தாழ்ந்தோர் மரணமுன்னென்று
[சொல்லே.

14-வது சாதிப்பொருத்தம்.

கர்க்கடகம்-மீனம்-தனுசு-மறையவாம்,
மேஷம்-விருச்சிகம்-அரசராம்,
கும்பம்-துலாம்-வைசியராம்,
இடபம்-மகரம்-சூத்திரசாதியாம்,
மிதுனம்-சிங்கம்-கன்னி அன்னியசாதியாகும்,

ஆதலால் பெண்சாதிக்குப் புருஷன்சாதி உயர்ந்திருக்கவேண்டும்.

15-வது ஊர்ப்பொருத்தம் நரச்சக்கரம்,

ஊர்ப்பெயர் முதலெழுத்துக்கும், பொருத்தங்கேட்போன் பெயர் முதலெழுத்துக்கும், நக்ஷத்திரங் கண்டுமனிதவுருவமெழுதிசிரசில்-5, முகத்தில்-3, வயிற்றில்-5, காலில்-6, கண்ணில்-1, குய்யத்தில்-1, குதத்தில்-1, மார்பில்-4, புஜத்தில்-1, ஆக 27-நக்ஷத்திரங்களுமெழுதுக, எவ்வாறெனின் தலையில் ஊர்நாளை

த்து பாதபரியந்தம் எண்ணத் தலைவன்நாள் தலை 5-ல் வரின் நன்று, முகம் 3-ல் வரின் ஆகாது, வயிறு 5-ம் உத்தமம், கால் 6-ம், கண்-குதம்குய்யம் 3-ம் ஆக 9-ம் ஆகா. மார்பு 4-ம், புஜம் 1-ம், ஆக 5-ம் உத்தமம்.

படிதன்னி லூரின் முதலுடொடக்கிப் பகர்சன்ம நாளினளவாய்,—முடியைந்து நன்று முக மூன்று தீ திமுதிர்தொந்தி யைந்துநன்று,—அடியாறிலேடு ந யனத்திலொன்று மடியோனி ரண்டுமோடாம்,—வடி மார்பினுன்கும் புயமீதி லொன்றும் மனமே மகிழ்ச்சி தருமே.

16-வது நட்சத்திரவேதைப் பொருத்தம்.

| | |
|---|---|
| அசுபதிக்கு | கேட்டை |
| பரணிக்கு | அனுஷம் |
| கார்த்திகைக்கு | விசாகம் |
| ரோகணிக்கு | சோதி |
| திருவாதிரைக்கு | திருவோணம் |
| புனர்பூசத்துக்கு | உத்திராடம் |
| பூசத்துக்கு | பூராடம் |
| ஆயிலியத்துக்கு | மூலம் |
| மகத்துக்கு | ரேவதி |
| பூரத்துக்கு | உத்திரம் |
| அஸ்தத்துக்கு | சதையம் |
| பூரட்டாதிக்கு | உத்திரட்டாதி |

இவை ஒன்றுக்கொன்று வைரம்.

மிருகசிரம்-சித்திரை-அவிட்டம் இம்மூன்றும்ஒ ன்றுக்கொன்று பரஸ்பர வைரம், புருஷனுக்கும்பெ ண்ணுக்கும் இந்நாள் பொருந்தாது.

### 17-வது சேவகன் பொருத்தம்.

தன்னுடைய நட்சத்திரமுதல் சேவகன் நட்சத்திரம்வரை எண்ணிக் கண்ட தொகையை 12-ல்கொடுத்த சேடம் 1-5-6-ஆயின் உத்தமம். 2-6-10-ஆயின் ஆகாது, 3-7-11-ஆயின் மத்திமம்.

### 18-வது கூட்டாளிப் பொருத்தம்.

தன்பெயரை ஒன்றுள்பட எழுத்தெண்ணி 10-ல் பெருக்கின தொகையுடன் கூட்டாளி பெயரை அவ்வாறெண்ணிக்கூட்ட 8-லகொடுத்த சேடம்1-3-5-7-உத்தமம் 2-4-6-8-ஆகா,

### நித்தயோகினிநிலை,

பகலை எட்டுபங்காக்கி,

| | |
|---|---|
| 1-வது கிழக்கிலும் | 5-வது மேற்கிலும் |
| 2-வது வடமேற்கிலும் | 6-வது தென்கிழக்கிலும் |
| 3-வது தெற்கிலும் | 7-வது வடக்கிலும் |
| 4-வது வடகிழக்கிலும் | 8-வது தென்மேற்கிலும் |

நித்தியயோகினி நிற்கும்.

இது யாத்திரைக்குப் பின்பக்கமும் இடது பக்கமும் இருக்கவேண்டும், இது நித்தியம்கிழக்குப் பக்கமுதலாகக் கொள்ளவும்.

### கவி.

சீர்பெறுநித்தியயோகினியதனைச்
செப்பிடிற்கிழக்குடன்வடமேற்
கேர்பெறுதெற்கோடாகுமீசானம்
எழில்பெறுமேற்குதென்கிழக்கு
பார்புகழ்வடக்குப்பகருதென்மேற்குப்
படியொருதினத்திலோர்முகூர்த்தம்

நேருடன்கிழக்கையாதியாய்க்கொண்டு
நிகழ்த்திடுயோகினிநிலையே.

திதி நக்ஷத்திர யோகங்களின் விர்த்தி க்ஷயம்.

| | | |
|---|---|---|
| நக்ஷத்திர வர்த்தனை | நாழிகை-6½ | க்ஷயம்-4¼ |
| யோக வர்த்தனை | நாழிகை-1 | க்ஷயம்-8 |
| திதி வர்த்தனை | நாழிகை-5¼ | க்ஷயம்-6½ |

வருஷமகாதிசை.

ஜனன நக்ஷத்திரமுதல் பங்குனிப்பூர்வபக்ஷப் பிரதமை யன்றையநக்ஷத்திரம் வரை எண்ணி 5-ல் பெருக்கி 9-ல் கொடுத்த மிச்சம்,

1-க்கு சூரியன் நாள் 20,
2-க்கு செவ்வாய் நாள் 28,
3-க்கு குரு நாள் 58,
4-க்கு கேது நாள் 21,
5-க்கு புதன் நாள் 56,
6-க்கு சுக்கிரன் நாள் 70,
7-க்கு சனி நாள் 36,
8-க்கு சந்திரன் நாள் 50,
9-க்கு இராகு நாள் 21,

ஆக நாள் 360.

இதில் எந்தத்திசை முதல் தோன்றுகிறதோ அது முதலாக மேற்சொன்ன முறைப்படி வருஷதிசைபார்ப்பதுமகாதிசைபோல் பலன்கொள்ளவும்.

மாதமகாதிசை.

ஜனன நக்ஷத்திரமுதல் மாதம்பிறந்த நக்ஷத்திரம் வரை எண்ணிக் கண்டதொகையை 7-ல் பெருக்கி 9-ல் கொடுத்தமிச்சம்.

1-க்கு சூரியதிசை
2-க்கு புததிசை
3-க்கு இராகுதிசை
4-க்கு குருதிசை
5-க்கு கேதுதிசை
6-க்கு சந்திரதிசை
7-க்கு சனிதிசை
8-க்கு சுக்கிரதிசை
9-க்கு செவ்வாய்திசை
யாகக் கொள்வதாம்.

கிரகங்களின்மகாதிசை வரு 1-க்கு நாள் காலாகக்கொள்வது

இவற்றின்பலன்,

சூரியதிசை நாள் $1\frac{1}{2}$-க்கு அலேச்சல், கபாலநோய்
புததிசை நாள் $4\frac{1}{4}$-க்கு இலாபம், பந்துதரிசனம்.
இராகுதிசை நாள் $4\frac{1}{2}$-க்கு நீச்சசிநேகம். [பம்.
குருதிசை நாள் 4-க்கு போசனசௌக்கியம், தனலா
கேதுதிசை நாள் $1\frac{3}{4}$-க்கு தேகபீடை.
சந்திரதிசை நாள் $2\frac{1}{2}$-க்கு சுக்கிலபக்ஷமாயின் தனலாபம், கிருஷ்ணபக்ஷமாயின் தனநஷ்டம்.
சனிதிசை நாள் $4\frac{3}{4}$-க்கு விரோதம், குடும்பகலகம் ஆயுதவிரணம்'
சுக்கிரதிசை நாள் 5-க்கு ரத்தினபரணலாபம்.
செவ்வாய்திசை நாள் $1\frac{3}{4}$-க்கு போசன அசௌக்கியம், கலகம் என்றறிவதாம்.

நித்திய மகாதிசை.

சூரியனின்ற நக்ஷத்திரமுதல் அன்றைய நக்ஷத்திரம்வரை எண்ணிக் கண்டதொகையை 2-ல் பெருக்கி-இதனோடு அவனவன் சனனநக்ஷத்திரமுதல் அன்றைய நக்ஷத்திரம் வரை எண்ணிக்கண்டதொகையும் ஞாயிறு முதல் அன்றையவாரம்-வரையுள்ள தொகையையுங்கூட்டி 9-ல் கொடுத்துவந்தமிச்சம்,

1-க்கு சூரியதிசை
2-க்கு சந்திரதிசை
3-க்கு செவ்வாய்திசை
4-க்கு இராகுதிசை
5-க்கு குருதிசை
6-க்கு சனிதிசை
7-க்கு புததிசை
8-க்கு கேதுதிசை
9-க்கு சுக்கிரதிசை

இவையாகக் கொண்டு பலன் சொல்லுவது இதுவித்திய மகாதிசையாம்.

மாதபலன்,

ஜன்ம நட்சத்திரமுதல் மாதம்பிறந்த நட்சத்திரம் வரை எண்ணிக்கண்ட தொகையை ஏழிற்பெருக்கி எட்டிற் கழித்தசேடம்,

1-க்கு ரோகம்
2-க்கு இலாபம்
3-க்கு செலவு
4-க்கு அலைச்சல்
5-க்குபோசனசௌக்கியம்
6-க்கு ஐசுவரியம்
7-க்கு கலகம்
8-க்கு கஷ்டமாம்

தினபலன்.

ஜன்மநட்சத்திரமுதல் அன்றைய நட்சத்திரம்வரை எண்ணிக்கண்ட தொகையுடன் ஞாயிறுமுதல் அன்றையவாரம் வரையிலும் பிரதமைமுதல் அன்றைத் திதிவரையிலும் கண்டதொகையைச்சேர்த்து ஒன்பதிற் கழித்தமிச்சம்.

1-க்கு வியாகூலம்
2-க்கு சுபம்
3-க்கு துர்வார்த்தை
4-க்கு பந்து
5-க்கு பெண்போகம்
6-க்கு சுபம்
7-க்கு கலகம்
8-க்கு ரோகம்
9-க்கு ஞானவாக்கியமாம்

தாராபலன்.

ஜன்ம நக்ஷத்திரமுதல் அன்றைய நக்ஷத்திரம்வரை எண்ணிக்கொண்டு வந்ததொகையை ஒன்பதிற்கழித்து நின்றமிச்சத்தில் 2-4-6-8-உத்தமம்.

| | | | |
|---|---|---|---|
| 1-வது | ஜன்மம் | 6-வது | ஜாதகம் |
| 2-வது | சம்பத்து | 7-வது | வதை |
| 3-வது | விபத்து | 8-வது | மைத்திரம் |
| 4-வது | க்ஷேமம் | 9-வது | பரமமைத்திரம் |
| 5-வது | பிரத்தியக்கு | சிலர் 9-வது தாரை சுபமென்பர். | |

சிலர் முதற்பரியாயத்தில் ஜன்மதாரையும, இரண்டாம்பரியாயத்தில் விபத்துதாரையும், மூன்றாம்பரியாயத்தில் பிரத்தியக்குதாரையும், மூன்றுபரியாயத்திலும் வதைதாரையும் ஆகாவென்பர் மற்றவை கூடுமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| 1-க்கு | சூரியனும | 6-க்கு | சந்திரனும் |
| 2-க்கு | புதனும் | 7-க்கு | சனியும் |
| 3-க்கு | ராகுவும் | 8-க்கு | சுக்கிரனும் |
| 4-க்கு | குருவும் | 9-க்கு | செவ்வாயும் |
| 5-க்கு | கேதுவும் | அதிபதியாக கொள்வது. | |

பலன் முறையே தாபம்-லாபம்-நாசம்-தைரியம்-கீர்த்தி-லபம-ஹானி-பிரமோதம்-மிருத்தியு 1-க்கு-7, 3-க்கு-3, 5-க்கும் 7-க்குப்-8, ஆக நாழிகை நீங்கிய மற்றைய நாழிகை சுபமாம்.

மயில்-குதிரை-ஆடு-யானை-காக்கை - நரி - சிங்கம்-கருடன்-அன்னம் இவை முறையே தாராவாகனங்களாகும்.

பரிகாரம்.

| | | | |
|---|---|---|---|
| 1-க்கு | சாகதானம் | 7-க்கு | எள்ளு |
| 3-க்கு | வெல்லம் | 9-க்கு | பொன் தானஞ்செய்யவும் |
| 5-க்கு | உப்பு | | |

## சந்திரபலன்.

ஜன்மராசிமுதல் அன்றையதினம் சந்திரனிருக்கிற ராசிவரைக்கும் எண்ணிக்கொண்டு வந்ததொகையின் பலன்.

| | | | |
|---|---|---|---|
| 1-க்கு | தேகசௌக்கியம் | 7-க்கு | சௌக்கியவிர்த்தி |
| 2-க்கு | தனஹானி | 8-க்கு | ரோகவிர்த்தி |
| 3-க்கு | திரவியலாபம் | 9-க்கு | காரியதாமசம் |
| 4-க்கு | ரோபகம் | 10-க்கு | உத்தியோகவிர்த் |
| 5-க்கு | காரியவிக்கினம் | 11-க்கு | இஷ்டார்த்திசித் |
| 6-க்கு | சத்துருநாசம | 12-க்கு | தனவிரயம் |

சிலர் சுக்கிலபக்ஷத்தில் 2-5-9 உத்தமமென்றும், கிருஷ்ணபக்ஷத்தில் 4-8-12 உத்தமமென்றும் சொல்லுவார்கள்.

## சித்திரைமாதப்பிறப்பின்பலன்.

### சித்திரைமாதப்பிறப்பு.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையாகில் | அற்பமழை |
| திங்களாகில் | வெள்ளங்காணும் |
| செவ்வாயாகில் | கலகமுண்டு |
| புதனாகில் | காற்றதிகம் |
| வியாழமாகில் | சுபமுண்டு |
| வெள்ளியாகில் | பெருமழையுண்டு |
| சனியாகில் | மழையில்லை |

மேலும் சஷ்டி-அஷ்டமி-உவா-இருத்தை ஆகாவாம்.

மூன்றுத்திரங்கள் அஸ்தம்-திருவோணம்-அவிட்டம்-ரேவதி-மிருகசிரம்-மூலம் உத்தமம்.

சோதி-சித்திரை-ரோகணி-சதையம்-புநர்பூசம்-பூசம்-மகம்-அச்சுவினி-அனுஷம்-மத்திபம், மற்றவை ஆகாவாம்.

### அர்க்கபலன்.

ஞாயிறுமுதல் சங்கிரமவாரம் வரையிலும், பிரதமைமுதல் சங்கிரமதிதிவரையிலும், அச்சுவினிமுதல் சங்கிரமநக்ஷத்திர வரையிலும் எண்ணி மூன்று தொகையும் கூட்டி மூன்றிற்கழித்த மிச்சம் 1-க்கு சமார்க்கம், 2-க்கு அதியார்க்கம், 3-க்கு சூனியார்க்கம், இப்படியாக மாதமாதம் தானியவிலையறியவும், ஆடிமாதம சூனியார்க்கமாகவேண்டும்.

### ஆவணிமுழக்கம் ஆவணிமூலம்

ஆவணிமீ 6௳க்கு மீறினல் நல்லமழையுண்டு.

### ஆவணிபொழுதுகட்டுங்குறி.

### கவி.

ஆவணிமூலத்துதையங் கதிர்மறையின்
மேவுமுலகில் விளைவுண்டாம்-பூவில்
வெயிலெறிக்குமாயின் வீணேயுலகில்
எரிபரக்குமென்றே யியம்பு.

### நக்ஷத்திரம் வீழுமாதங்களின்பலன்.

சித்திரை-பங்குனி-கார்த்திகை-மார்கழி-ஆவணி மாதங்களில் நக்ஷத்திரம் உதிருமாயின் அரசனுக்குப் பீடை.

தை-ஐப்பசி-ஆடி-மாசி மாதங்களில் உதிருமாயின் தானியம் குறையும்.

ஆனியில் உதிருமாயின் மந்திரிக்கரிஷ்டம்.

புரட்டாசியில் விழுமாயின் நோயுண்டாம்.

வைகாசியில் விழுமாயின் மழையில்லையென்றறிக.

கவி.

ஆடுகெயல்தேள் தனுசுசிங்க மெழுமீன்விழுமேலரச ழிவாம, கோடுமகரந்துலையலவன் கும்பமஃகங்குறைந்திடுமே, தேடுமிதுனமந்திரிசாம் தெரிவையுந்தம்பிணிபெரிதாம், ஓடுமிடபமழையில்லை யுடுவீழ்குறியென்றறிந்துரையே.

ஆடி ஐந்தாந்தேதிப்பலன்.

கவி.

ஆடிபிறந்தவைந்தாநா ளன்றுபுகனேயாமமாயின்
நாடுவிளையுமொருபோக நல்லவியாழமிருயோகம் [ம்
நீடுசெவ்வாய்கதிர்சாவி நெடியபுகர்க்குமழையுண்டா
கூடுதிங்கள்மழைமந்தன் குலவெய்யோன்பயிர்நாசம்.

ஆடிமாசம் உத்திராடக்காற்று.

ஆடிமாதம் உத்திராடநக்ஷத்திரத்தில் உதயத்தில் கிழ்காற்றடித்தால் பின்மாரியுண்டாம்.

அக்கினிமூலைக்காற்றும் தென்காற்றுமடித்தால் கலகமும் பஞ்சமுமுண்டாம்.

தென்மேற்குக்காற்றடித்தால் விளைவில்லை.

மேல்காற்றும் வடகாற்றும் அடித்தால் நல்லமழையுண்டு.

வடமேற்குக்காற்றடித்தால் மிருகபலிப்பும் வீட்டிலும் புழுவுமுண்டாகும்.

வடகிழக்கு காற்றடித்தால் முன்மாரியுண்டாம்.

அப்போது பூரணையுங்கூடினல் உத்தமம், அன்றுவுதயத்தில பொழுது கட்டினல் நல்ல மழையுண்டு.

ஆடிமாசம் பஞ்சமிக்குறி.

ஆடிமாதம் வளர்பிறைப்பஞ்சமி ஞாயிற்றுக்கிழமையில்வரில கொஞ்சமழையுண்டு.

திங்கட்கிழமையில்வரில் வெள்ளங்காணும்
செவ்வாய்க்கிழமையில்வரில் சண்டையுண்டாம்
புதன்கிழமையில்வரில் பெருங்காற்றடிக்கும்
வியாழக்கிழமையில்வரில் நல்லவிளைவு
வெள்ளிக்கிழமையில்வரில் பெருமழையுண்டு
சனிக்கிழமையில்வரில் விளைவில்லை.

## ஆடிமாசத்திதிக்குறி.

ஆடிமாதம் வளர்பிறை நவமியும் சோதிநட்சத்திரமுங்கூடினநாளில் மந்தாரமாவது, மழையாவது, காற்றுவது, குமுறலாவது, மின்னலாவது உண்டானால் முன்மழை.

தசமியும் விசாகமும் கூடினபோது இக்குறியுண்டாயின் நடுவில்மழை.

ஏகாதசியும் அனுஷமும் கூடினபோது இக்குறியுண்டாயின் பின்மழையாம்.

ஆடிமாதம் தேய்பிறைத்தசமியுடனேயாவது ஏகாதசியுடனேயாவது ரோகணி நக்ஷத்திரங் கூடினபோது பொழுது கட்டினால் நலமழையுண்டு.

## கர்ப்போட்டம்.

ஆனிமாதத்துக்கு கர்ப்போட்டநாள் ௧௦.

ஆடிமாதமுதல் கார்த்திகைமாதம்வரை மாதம் 1-க்கு நாள் ௨௦, ஆக மாதம் 5-க்கு நாள ௱௧௰.

மார்கழி மாதத்துக்கு நாள் 1.

தைமாதமுதல் வைகாசிமாதம்வரை மாதம் 5-க்கு மாதம் 1-க்கு நாழிகை 12, ஆக நாள் 1

ஆக கர்ப்போட்டநாள ௧௪௫.

இவை பூராடநக்ஷத்திரத்தில் சூரியன்வரும் நாளாம்

கவி.

பானுதனுவிற் பதின்மூன்றேமுக்கால்மேல்
ஆனிக்குக்கர்ப்ப மறுகாலாம்-மானேகேள்
நண்டுமுதற்றேளளவு நாலரைநான்மாகாணி
கொண்டதனுவுக்கொன்றே கூறு.

தைமுதல் வைகாசிவரைத் தானஞ்சாகும்மதிக்கு மெய்யாய் நாளொன்றே விளம்பு.

பரிவேடக்குறி.

ஆடிமாதம் பூரணையில் முதற்பத்து நாழிகையில் சந்திரனைப் பரிவேடமிட்டால் ஐப்பசியிலேயும், 2-ம் பத்திலிட்டால் கார்த்திகையிலேயும், 3-ம் பத்திலிட்டால் மார்கழியிலேயும் நல்லமழையுண்டு.

அன்றிராத்திரிமுழுமையும் இருட்டிருந்தால் அம்மூன்றுமாதங்களிலும் அடைமழையாம்.

கவி.

கடகமாதப்பூரணைராத்திரி
கனத்தசந்திரனைப்பரிவேடமே
இடின்முதற்பத்திலைப்பசிக்காமழை
இலங்குகார்த்திகைக்காநடுப்பத்ததே
விடியநேரங்கடைமார்கழிப்பரி
வேடமுப்பதுநாழிகையும்மிட
அடைமழையிந்தமூன்றுமுதிக்குமென்
றுய்ந்தமுத்தமிழோர்களறைந்தனர்.

சந்திரனை குரு சுக்கிரருடனே பரிவேட மிட்டால் நல்லமழையுண்டு.

செவ்வாய் சனியுடன் பரிவேடமிடில் மழையில்லை.

கிராணகாலத்தில் பரிவேடமுண்டானல் ராஜாக்க ளுக்கு ஆகாது.

## மகவோட்டம்.

மாசிமாதம் பௌர்ணமியில் சந்திரனும், மகாநக்ஷ த்திரமும் உச்சமாகும்போது,

| மதிக்கு வடக்கில் நக்ஷத்திரம். | | | | மதிக்கு தெற்கில் நக்ஷத்திரம். | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க-தள்ளில் | வ-பங்கு | நாசம் | | க-தள்ளில் | வ-பங்கு | சுபம் | |
| உ | ,, | ½ | ,, | உ | ,, | ½ | ,, |
| ங | ,, | ½ | ,, | ங | ,, | ½ | ,, |
| ச | ,, | முழு | ,, | ச | ,, | முழு | ,, |

## கவி.

காணுமாசிக்கலைமதியைக்கருதுமகமீனன்கதனில், பேணுந்தென்பான்மீன்சேரில் பெரிதாமஃகந்தானெ ன்ப, பூணிலிரண்டுமுக்காலாம்பொருந்துமூன்றிற்பா தியதாம், சேணிலவடபால்மீன்சேரில் செகத்திலன் னஞ்சிறிதாமே.

## மூன்றாம்பிறை.

பங்குனியும் சித்திரையும் தென்கோடு வரவேண்டும்.

வைகாசிமுதல் மார்கழிவரை வடகோடுவரவேண்டும்

தையும் மாசியும் சமனுக இருக்கவேண்டும் இல்லா விடிற் கலகமும் பஞ்சமும் உண்டாம்.

க வி.

மீனுடுதெற்குபர மிக்கெட்டுமேவடக்காம்
தான்மகரகும்பஞ் சரியாக-மானேகேள்
சொன்னபடிசோம னிராவெனிலோசோன்மடிவ
அன்னமரிதாய் விடும்

பிரதமை துதியையும், ஞாயிறு வியாழம் வெள்ளியும் பிறைபார்க்க நல்லது, சதுர்த்தசி ஆகாது.

வானவிற்குறி.

ஆனி ஆடி ஆவணி இந்தமாதங்களில் கிழக்கே இந்திரவில்லுண்டானல் பஞ்சமுண்டாகும்.

க வி.

ஆனியுடனாடி யாவணியித்திங்களிலே
கூனியேவான்விற் குணதிசையில-மானேகேள்
மேவினமழையறுமே விண்ணுடருக்குமே
பூவின்விழவறுந்து போம்.

சோதிமின்னல்.

ஐப்பசிமாதம் சோதிநக்ஷத்திரத்தில் சூரியன்வரும் நாளில் கிழக்கில் மின்னின் மழையுண்டு.

மழைக்குறி

வைகாசிமாதம் தேய்பிறைச்சதுர்த்தசியில் மழை பெய்யின் நல்லமழையுண்டு.

தேதிமழை

| | | | |
|---|---|---|---|
| ஆனிமாசம் | 10௳ | ஐப்பசிமாசம் | 2௳ |
| ஆடிமாசம் | 8௳ | கார்த்திகைமாசம் | 1௳ |
| ஆவணிமாசம் | 6௳ | மார்கழிமாசம் | 1௳ |
| புரட்டாசிமாசம் | 4௳ | | |

இவைகளில் மழைபெய்யின் நல்லமழையுண்டு.

## பஞ்சகம்பார்க்க.

பஞ்சகம் பார்க்கவேண்டிய காலம்வரையில் ஞாயிறுமுதலாக அன்றையவாரம் வரையும் பிரதமைமுதலாக அன்றையத்திதிவரையும் அச்சுவினிமுதல் அன்றையநக்ஷத்திரமவரையும் மேஷமுதல் அப்போதயலக்கனம்வரையும் எண்ணிக்கண்டதொகை 9 - ல் கழித்தமிச்சம் 3 5 7 9 உத்தமம், மற்ற 1 2 4 6 8 நீக்கப்படும்.

1-மிருத்தியுபஞ்சகம்
2-அக்கினிபஞ்சகம்
4-ராஜபஞ்சகம்
6-சோரபஞ்சகம்
8-ரோகபஞ்சகம்
இவ்வாறு கண்டுகொள்

அவசியமாய்ப்பார்க்கவேண்டும்போது பகலில் ராஜபஞ்சகமும், அக்கினிபஞ்சகமும், இரவில் சோரபஞ்சகமும், ரோகபஞ்சகமும், எல்லாக்கர்மங்களிலும் மிருத்தியுபஞ்சகமும் ஆகாவாம்.

புதனில் மிருத்தியு பஞ்சகமும்,
சனியில் சோர பஞ்சகமும்,
வியாழம் வெள்ளியில் இராஜ பஞ்சகமும்,
செவ்வாயில் அக்கினி பஞ்சகமும்,
ஞாயிறில் ரோகபஞ்சகமும் ஆகாவாம்.

சிலர் திங்களில் ராஜபஞ்சகமும், புதன் வியாழங்களில் சோரபஞ்சகமும, வெள்ளி சனியில் மிருத்தியுபஞ்சகமும் ஆகாவென்பர், முக்கியமாய் விவாகத்துருவங் கூட்டிப்பார்க்கவேண்டும்.

வடதேசங்களில் சுக்கில பிரதமை முதலாகக் கூட்டவேண்டுமென்பர்.

இப்படிப் பலவிதமாகக்கூறினும் தேசவழக்கப்படியே பார்க்கவேண்டுமென்பதே துணிவு.

பஞ்சிகதுருவம்.

| | | | |
|---|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமைக்கு | 15 | வியாழக்துக்கு | 8 |
| திங்களுக்கு | 10 | வெள்ளிக்கு | 8 |
| செவ்வாய்க்கு | 12 | சனிக்கு | 3 |
| புதனுக்கு | 3 | | |

இவ்வாறு துருவங்கூட்டிப் பார்க்கவும்.

கவி.

திங்கள்பத்துத் தினகரன்மூவைந்து
தங்குபொன்புகர் தானுமோரெட்டதாம்
துங்கமால்சனி மூன்றுபவீராறும்
பொங்கமாகுந் துருவம் புகன்றிடின்.

இன்னுமொருவிததுருவம்.

| | | | |
|---|---|---|---|
| மேஷசிங்கங்களுக்கு | 4 | கன்னி மீனங்கட்கு | 3 |
| இடபகர்க்கடகங்கட்கு | 5 | விருச்சிகம் தனுசு மகரங்களுக்கு | 1 |
| மிதுனத்துக்கு | 6 | | |
| துலா கும்பங்கட்கு | 2 | | |

இவ்வாறுதுருவங் கூட்டிப்பார்ப்பதும் ஒன்று.

கவி.

மரியரியொருநான்காமற் றெருதுநண்டைந்ததாகும்
பெருகியமிதுனமாறும்பெருந்துலைகுடமுமிரண்டாம்
அரிவையின்மூன்றதாகு மானதேள் தனுமானொன்றே
வருவதுபஞ்சிகத்தில் வண்மைபாந் துருவங்கூட்டே.

இன்னுமொருவிததுருவம்.

| | | | |
|---|---|---|---|
| மிருத்துபஞ்சகத்துக்கு | 4 | அக்கினிபஞ்சகத்துக் | 12 |
| சோரபஞ்சகத்துக்கு | 5 | ரோகபஞ்சகத்துக்கு | 15 |
| இராஜபஞ்சகத்துக்கு | 10 | | |

இவ்வாறு துருவங்கூட்டிப் பார்க்கவும்.

கவி

திதிவாரமிராசியுடனுண்மீன்சேர்த்து
செப்பியநான்கெட்டீரைந்திராறேட
பதிபுகழுமூவைந்துமுறையேகூட்டிப்
பகரொன்பதிற்கிந்தசேடமொனறு
விதியாறுநான்குமோரிரண்டுமெட்டும்
மிருத்திசோரம்ராஜமக்கினிரோகம்
மதிமகற்குஞ்சனிக்குநற்குருபுகர்க்கு
மவிர்திங்கள்செவ்வாய்நல்லருக்கற்காகா.

அன்றையநக்ஷத்திரம்பார்க்க.

சித்திரைமாதமுதல் சென்றமாதத்தை இரட்டித்து இதனேடு சுக்கிலபக்ஷம பிரதமைமுதல் அமாவாசியை வரையிலுஞ்சென்ற திதிகளையுங்கூட்டி 27-க்கு உட்படின் அதில் ஒன்றுதள்ளவும், 27-க்கு மேற்பட்டால் 27-ம் தள்ளி நின்றதை அசுபதிமுதல் எண்ணிக்கண்டநாள் அன்றையநாளாம்.

நக்ஷத்திரகந்தாயபலன்.

பங்குனிமாதம் பூர்வபக்கப்பிரதமையில் அன்றையதிதிவார நக்ஷத்திரயோக கரணங்களை அவ்வாதிதொட்டெண்ணிக் கண்டதொகையை 3-ல் பெருக்கி 8-ல் கொடுத்தசேடம்முதற்கந்தாயம், 7-ல் பெருக்கி 3-ல் கொடுத்தசேடம் இரண்டாங்கந்தாயம், 3-லபெருக்கி 5-ல் கொடுத்தசேடம் மூன்றுங்கந்தாயமாம்.

| | |
|---|---|
| முதல்பூச்சியம் | வியாதி |
| 2-வதுபூச்சியம் | கடன் |
| 3-வதுபூச்சியம் | சொற்பபலன் |

மூன்றுமபூச்சியம அசௌக்கியமாம
மூன்றுமபூச்சியமில்லையாயின் சௌக்கியமாம

## ஆண்பெண்ணறிய.

பெண்ணினுடைய பெயரெழுத்தை வொற்றுள்பட வெண்ணி 3-ல்பெருக்கிவளர்பிறைத்திதியாதி அன்றையவரைத் திதியுங்கூட்டி 7-க்குக்கொடுத்தமிச்சம ஒற்றையாயின் ஆண், இரட்டையாயின் பெண்ணெனறு அறிவது.

## கவி.

காரிகைகர்ப்பந்தன்னைக் கருத்தினலறியவேண்டின
பேரெழுத்தொற்றோடெண்ணிப் பெட்புடன்மூன்றி
வாருதுமாதேமுன்ன மருவாதிபக்ஷங்கூட்டி[ற்றுக்கி
ஏருமேழ்க்கீந்தசேடமிரட்டைபெண்ஒற்றையாணே.

## உதயஆரூடக்கவிப்புராசிகள்.

ஆரூடங்கேட்டராசி உதயராசியாம ஆரூடங்கேட்போன் சொன்னலக்கமுதலியவைகளின்ராசி ஆரூடராசியாம கவிப்புராசி கன்னி துலா மீனங்களுக்கு இடபமும, மிதுன கர்க்கடக சிங்கங்களுக்குமேஷமும, தனுசு மகர விருச்சிக குமபங்களுக்கு மிதுனமாகும

## கவி.

கன்னிமேகோல் மீனமாயின் கவித்திடும விடையா
மென்பர், மன்னுசெவ் வரியாழ்நண்டு வரின்மே
டங் கவிக்குமென்பர், சொன்னவிற் சுறுதேள்கும்

பங்குலவினுற் மிதுனமாகும் இன்னவாறுதயராசி க்கியம்புவர் கவிப்புத்தானே.

## ஆரூடம்.

ஆரூடராசி முதலாகச்சூரியனின்ற ராசிவரை எண்ணிக்கண்டதொகையை உதயராசி முதலாக வெண்ணிக்கண்ட ராசிநாதனைக் கொண்டு பலன் சொல்லவும்.

## கவி.

ஆரூட ராசிதொட்டே யாதித்த னளவுமெண் ணிச், சேருமத் தொகையை யப்போ சிறந்தராசி யில் வைத்தெண்ணி, நேருறுராசிநாத னின்றவனா ரூடத்தைச், சீருட னுரைப்பதென்றே செப்பினர் கணிதநூலோர்.

## இன்னுமொருவிதம்.

உதைய லக்கனந்தொட்டு அந்தலக்கனுதிபதி நின்ற இராசிவரை எண்ணின தொகை ஒற்றையா யின் உத்தமம், இரட்டையாயின் மத்திமமாம்.

## வியாதிப்படின் தீராதநாள்.

சோதிசதைய முப்பூரஞ்சொல்லுமாயிலுடன் கேட்டை, தீதாம்பரணி யாதிரைநாள் செவ்வாய் சனி ஞாயிறுவாரம், ஓதுநவமி துவாதசி யுற்றச துர்த்தி சஷ்டியினில், பேதைமடவாய் பிணிகொ ள்வோர் பிரமன்வரினும் பிழையாரே.

## வியாதிச்சக்கரம்.

ஒன்றுக்கு ளொன்றுக 3-சதுரங்கிறி 4-மூலை களிலும் 3-சதுரத்தின் மூலைகளும் சேரும்படி ஒவ்

வொருவரை கீறி 4-பக்கங்களிலும் நடுவில்மூன்று வரையும்சேரும்படிஒவ்வொருவரைகீறில் 24-பொருத்தாகும் இவற்றுடன் உள்சதுரத்தின் நடுவரை நான்கின்முனையிலும் 4-புள்ளியிட்டால் 28-ஆகும்.

இதன் கீழ்த்திசையில் சூரியனின்ற நாளைவைத்து அபிசித்துடன் வலமாக வியாதிப்பட்டவன் சநநநக்ஷத்திரவரை எண்ணிகண்டநாள் பிராணன்.

கீழ்த்திசையில் வியாதிப்பட்டவன் நாளைவைத்து முன்போல் சந்திரனின்ற நாள்வரை எண்ணிகண்டநாள் தேகம்.

கீழ்த்திசையில் கார்த்திகையை வைத்து அபிசித்துடன் இடமாக வியாதிப்பட்டவனுள்வரை எண்ணிக்கண்ட நாள் மிருத்தியு வென்றறிந்து மிருத்தியுந் தேகமும் ஒருவரையில் அல்லது ஒருபொருத்தில் வந்தாலும் மிருத்தியும் பிராணனும் முன்போல் வந்தாலும் வருத்தப்பட்டுத் தேறுவான்.

பிராணன்-தேகம்மிருத்தியு இம்மூன்றும்ஒருவரையிலாவது ஒருபொருத்திலாவது நின்றால்உடனே மரணம், மேற்சொன்ன மூன்றும் ஒருபொருத்திலிருப்பது அதிகுரூரமென்றறிக.

## திசாபுத்தி பிரிக்க.

திசாநாதனுடைய மகாதிசை வருஷத்தையும் புத்திநாதனுடைய மகாதிசை வருஷத்தையும் பெருக்கிக்கண்ட தொகையின் எண் 1-க்கு 3-நாளாக கொள்வது புத்தியாம்.

கலி.

கோள்களின் றிசையிற்புத்தி குறித்திடத்திசை யோனுண்டை, நீள்புத்தி நாதனுண்டா னேர்படப் பெருக்கிக்கண்ட, வாளமர் தொகை யொன்றிற்கு மருவுநாண் மூன்றதாகும், வாள்கடல் கொண்டை வண்டு வனசமாம்விழியினளே.

அந்தரம்பிரிக்க.

கிரகங்களின் புத்தியில் வந்த வருஷம் 1-க்கு நாள் 3-ஆகவும், மாதம் 1-க்கு கால்நாளாகவும்நாள் 1-க்கு அரைநாழிகையாகவுங்கண்டு அவ்வக்கிரகங்களின் திசாவருஷங்களில் பெருக்கினதொகை அவ்வக்கிரகங்களின் அந்தரமென்றறிவது.

கலி.

அவரவரபகாரத்தி னுண்டொன்றில் மூன்று நாளும், நவிலுமாதங் கால்நாளு நாளொன்றிற்பாதிக்கன்னல் இவைமூன்று திசையுங்கோட்கடிசை யாண்டிற் பெருக்கியுந்த தவலறு தொகையைச் சேர்க்கத் தான்வரு மந்தரந்தான்.

அந்தராந்தரம் பிரிக்க.

கிரகங்களின் அந்தரத்தில் வந்தநாள் 1-க்கு ¼-நாழிகையாகவும் நாழிகை 1-க்கு அரைவிநாடியாகவும் கண்டு அவ்வக்கிரகங்களின் திசாவருஷங்களாற் பெருக்கின தொகை அவ்வக்கிரகங்களின் அந்தராந்தரமாகும்.

கலி.

ஒருநாளைக்கோரரை நாழிகையாத்தோற்றும்
ஒருநாழிகைக்கரைவிநாடி—துருவமாம்

எந்தத்திசைக்குமிவர்வருடங் கொண்டெண்ண
அந்தமா முள்ளந் தரம்.

### சூக்ஷமம் பிரிக்க.

கிரகங்களின்நாழிகை 1-க்கு அரைவிநாடியாகவும் விநாடி 1-க்கு அரை விகலையாகவுங்கொண்டு முன்போலப்பெருக்கிக்கொள்ளவும்இதுசூக்ஷமம்.

### ருதுவாரம்.

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | புத்திரரில்லை | வியாழம் | தனமுண்டு |
| திங்கள் | பதிவிரதை | வெள்ளி | சுகமுடையாள் |
| செவ்வாய் | விதவை | சனி | தரித்திரியாம் |
| புதன் | புத்திருண்டாம் | | |

### ருது நட்சத்திரம்.

| | |
|---|---|
| அச்சுவினி | விதவை |
| பரணி | புத்திரவதி |
| கார்த்திகை | மலடி |
| ரோகணி | நன்மையுடையவன் |
| மிருகசிரம் | புருஷற்கினியன் |
| திருவாதிரை | வெறுப்புள்ளவன் |
| புனர்பூசம் | சுகமுடையவள் |
| பூசம் | சீருடையவள் |
| ஆயிலியம் | வயிறழிவு |
| மகம் | பத்தாவுக்குநல்லவள் |
| பூரம் | மலடி |
| உத்திரம் | பிரயோசனவதி |
| அஸ்தம் | நல்லவள் |
| சித்திரை | அறிவுள்ளவள் |
| சோதி | குடும்பி |

| | |
|---|---|
| விசாகம் | அமங்கலை |
| அனுஷம் | ரோகி |
| கேட்டை | பரஸ்திரி |
| மூலம் | பாலுடையவள் |
| பூராடம் | அடிமைதேடும் |
| உத்திராடம் | தர்மிஷ்டி |
| திருவோணம் | பாக்கியவதி |
| அவிட்டம் | பொருளுடையவன் |
| சதையம் | பொருளழிவு |
| பூரட்டாதி | மலடி |
| உத்திரட்டாதி | தரித்திரி |
| ரேவதி | ரோகி |

## ருதுலக்கின இடம்.

| | |
|---|---|
| மேஷம்-சிங்கம் | வீட்டிற்குப்புறத்தில் |
| ரிஷபம் | பசுத்தொழுவத்தில் |
| துலாம்-கன்னி | நால்வர்க்குநடுவில் |
| விருச்சிகம்-மிதுனம் | துயிலவிழ்த்துடுக்கையில் |
| தனுசு-கும்பம் | வீட்டிற்குள்ளே |
| கடகம்-மகரம்-மீனம் | தண்ணீர்க்கரையில் |

## ருதுலக்கின பலன்.

| | |
|---|---|
| மேஷம்-விருச்சிகம் | பரஸ்திரி |
| ரிஷபம்-தனுசு-கன்னி-மிதுனம் | விபசாரி |
| கர்க்கடகம் | ஒழுக்கமில்லாதவள் |
| சிங்கம்-கன்னி | நெறியுடையாள் |
| துலாம் | பாட்டாளி |
| மகரம் | கற்புடையாள் |
| கும்பம் | பொருளுண்டாம் |

## ஆரூடத்திற்கு.

| திக்கு. | உடை. | பலன். | சந்ததி. |
|---|---|---|---|
| கிழக்கு | வெள்ளை | சோரம்போவள் | 7 |
| தென்கிழக்கு | கறுப்பு | ,, | 1 |
| தெற்கு | நீலம் | ,, | 0 |
| தென்மேற்கு | வெள்ளை | ரோகி | 4 |
| மேற்கு | அழுக்கு | நல்லது | 6 |
| வடமேற்கு | மஞ்சட்கலந்த சிகப்பு | சக்களத்தி யுடையவள். | 6 |
| வடக்கு | துவரை வண்ணம் | செல்வமுண்டு | 0 |
| வடகிழக்கு | நல்லது | தரித்திரம் | |

## ருதுத்திதி.

| | | | |
|---|---|---|---|
| பிரதமை | கன்னி | நவமி | துக்கி |
| துதியை | அழகு | தசமி | தர்மிஷ்டி |
| திரிதியை | இன்பமுடைய | ஏகாதசி | துக்கி |
| சதுர்த்தி | சத்துருவுண்டு | துவாதசி | பலமுடையவள் |
| பஞ்சமி | புத்திரருண்டு | திரயோதசி | கோபி |
| சஷ்டி | ஆசாரமுடையவள் | சதுர்த்தசி | சோரம்போவ |
| சத்தமி | புத்திரருண்டு | அமாவாசிகை | பட்டா |
| அஷ்டமி | பெற்றிழப்பள் | பௌர்ணமி | ளி |

## கவி.

உத்திராடமாதியா மாறுமாறுமுத்தமம்
பித்தனுர்பிறந்தநாள் பிள்ளையேழுமத்திமம்
அத்தமோடுசித்திரை யனந்தவாழ்வுகுன்றிடும்
மற்றையாறுதன்னிலே மங்கைறாலிழப்பளே.

## ருதுபாவம்ருதுலக்கனத்து-ஏழில்.

| | |
|---|---|
| ரவியும்-இராகுமிருந்தால் | விதவை |
| மதியிருந்தால் | புத்திரநாசம் |

செவ்வாயிருந்தால் வேசை
புதனிருந்தால் மலடி
குருவிருந்தால் நல்லது
சுக்கிரனும்-சனியுமிருந்தால் குலவீணியாவள்
கேதுவிருந்தால் உறவுக்குவிரோதி

ஏழாமிடம் சுத்தமாயின் எல்லாருக்கும் நல்லவளாகவிருப்பாள்.

கவி.

கன்னிதிரண்டநாழிகையிற் கண்டராசிதனக்கேழில், மன்னிப்பரிதியுறவிதவை மதியாகிற்புத்திரநாசம், துன்னுஞ்சேயேல்வேசைபுதன் சொல்லுமலடியாமென்றே, பொன்னின்றிடில்நன்றாம்புகரும் பொல்லாச்சனியேல் குலவீணி.

ஈனராகுவெனில்விதவை யென்பார்கேதுவின்றிடிலோ, மானவுறவோர்க்குப்பகையேயாவாள்மகிழுமேழிடமோ, மானேசுத்தமாவிருக்கின் மற்றுள்ளோர்களனைவருக்கும், தானேநல்லவளாயிருப்பள் சம்பத்துடனே வாழ்வாளே.

அஷ்டகவர்க்குச் சக்கரம்.

அஷ்டகவர்க்குச்சக்கரம்அறிவாலழிந்துபின் [ட்
சொற்றக்கேள்காகிதத்தாற்சூழ்ந்துசக்கிரகத்தரிவெடானவொன்ருென்றிற்குக் காலங்குலந்தான்குறையூனமிலாதேசெவ்வா யோர்ந்து.

ஓர்ந்தவையொன்ருகச்சேர்த் துருகாணிமத்தியிலுநீர்ந்திசைத்துப்பின்னீராறில்லமைய-நேர்ந்துகிழிதீறுவட்டத்திலெழு தீராறிலக்கம்வரை
கூறுமென்றில்லோரைக் கொண்டு.

கொண்டதற்குமேற்பரிதி கூன்மதிசேய்மால்சீவன்
தனுசுங்கன்காரிதலை மேலாகக்கொண்டுமுனஞ்
சொன்னவட்டவர்க்கத்தைத் தோன்றத்தனித்தனி
பன்னிரண்டில் படைத்துப்பார். [யே

(இ-ள்.) அஷ்டவர்க்குச் சக்கரம் செய்யும்வகை
யாதெனில், வெள்ளைக்காகிதத்தில் வட்டவடிவாக
ஓரளவிற்கு ஒன்றைக்கத்தரித்து அதற்குத் தனித்
தனி காலங்குலங் குறைவாக ஏழுவட்டங்கள்.செய்
து அடியிற்பெருவட்டமும் அதற்குமேல் சிறுவட்
டங்களை யடுக்கி அவற்றினடுவில்திருவாணியொன்
றை உற்கவிட்டுமுடுக்கியபின்பு 12-வீடுகளமைப்ப்
பண்ணிச் சக்கரத்தின்பழுப்போல் கோடுகள்வரை
ந்து அடிப்பெருவட்டத்தில் இலக்கணமும் அதன்
மேல் வட்டங்களிலே சூரியன்-சந்திரன்-செவ்வாய்
புதன்-வியாழம்-வெள்ளி-சனி இவைகளை நிறுத்தி
முன்சொன்ன கிரகாஷ்டகத்தாக்கின்படி தனித்த
னி அந்தந்தச் சக்கரத்திலமைய ஒன்றுமுதல் பன்
னிரண்டுவீடு வரையிலும் எந்தவீட்டிற்கு எந்தவா
க்கு வருகிறதோ அந்தவீட்டில் அந்தவாக்குஅமை
யஎழுதிப்பார்க்க அஷ்டவர்க்கமும் சர்வாஷ்டவர்
க்கமும்வெகுசுத்தமாகக் கண்டுகொள்ளலாகும். ம
ற்றப்படி பழயவழக்கங்கொண்டு பலகரைவைத்து
சமுசயங்கொள்ளில் வெகுபிரயாசையடைவதுமல்
லாமல் சிலசமயத்தில் இந்தவீட்டின் பலகரை அந்
தவீட்டிலும் அந்தவீட்டின்பலகரை இந்தவீட்டிலு
ம் கலந்து கணக்குப் பிசகிப்போகும் அதிகநேரமு
ஞ்செல்லும் ஆகையால் அஷ்டவர்க்கங்களுக்குச்
சக்கரத்தை அலக்ஷியம் செய்யாமல் பார்க்கவும்,
பார்க்கும்போது ஒன்றென்னுந் துகையை சூரிய

னாகவும் இரண்டென்னுந் துகையை சந்திரனாகவும் மூன்றென்னுந்துகையை செவ்வாயாகவும்நான்கென்னுந்துகையைபுதனாகவும்ஐந்தென்னுந்துகையை வியாழனாகவும்ஆறென்னுந் துகையைவெள்ளியாகவும்ஏழென்னுந்துகையைசனியாகவும்கொள்க. அஷ்டவர்க்கமாகவும்பின்னும்ஒன்றாம்வீடுமுதல்பனிரெண்டாம் வீடுவரையில் அந்தந்தவீட்டிலமைந்திருக்கின்ற அந்தந்த வர்க்குகளைத்தனிக்கூட்டில் அதுவே அந்த இராசிக்கு சர்வாஷ்டகமாகுமென்பதாம்.

அஷ்டகவர்க்கம்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் பால் 48-க்கு விபரம். | ரவி | 1-2-4-7-8-9-10-11 | ஆக 8 |
| | மதி | 3-6-10-11 | ,, 4 |
| | குசன் | 1-2-4-7-8-9-10-11 | ,, 8 |
| | புதன் | 3-5-6-9-10-11-12 | ,, 7 |
| | குரு | 5-6-9-11 | ,, 4 |
| | புகர் | 6-7-12 | ,, 3 |
| | சனி | 1-2-4-7-8-9-10-11 | ,, 8 |
| | லக்கனம் | 3-4-6-10-11-12 | ,, 6 |

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் பால் 49-க்கு விபரம். | ரவி | 3-6-7-8-10-11 | ஆக 6 |
| | மதி | 1-3-6-7-10-11 | ,, 6 |
| | குசன் | 2-3-5-6-9-10-11 | ,, 7 |
| | புதன் | 1-3-4-5-7-8-10-11 | ,, 8 |
| | குரு | 1-4-7-8-10-11-12 | ,, 7 |
| | புகர் | 3-4-5-7-9-10-11 | ,, 7 |
| | சனி | 3-5-6-11 | ,, 4 |
| | லக்கனம் | 3-6-10-11 | ,, 4 |

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் பால் 39-க்கு விபரம். | ரவி 3-5-6-10-11 | ஆக | 5 |
| | மதி 3-6-11 | ,, | 3 |
| | குசன் 1-2-4-7 8-10-11 | ,, | 7 |
| | புதன் 3-5-6-11 | ,, | 4 |
| | குரு 6-10-11-12 | ,, | 4 |
| | புகர் 6-8-11-12 | ,, | 4 |
| | சனி 1-4-7-8-9-10-11 | ,, | 7 |
| | லக்கனம் 1-3-6 10-11 | ,, | 5 |

| | | | |
|---|---|---|---|
| புதன் பால் 54-க்கு விபரம். | ரவி 5-6-9-11-12 | ஆக | 5 |
| | மதி 2-4-6-8-10-11 | ,, | 6 |
| | குசன் 1-2-4-7-8-9-1 -11 | ,, | 8 |
| | புதன் 1-3-5-6-9-10-11-12 | ,, | 8 |
| | குரு 6-8-11-12 | ,, | 4 |
| | புகர் 1-2-3-4-5-8-9 11 | ,, | 8 |
| | சனி 1-2-4-7-8-9-10-11 | ,, | 8 |
| | லக்கனம் 1-2-4-6-8-10-11 | ,, | 7 |

| | | | |
|---|---|---|---|
| குரு பால் 56-க்கு விபரம். | ரவி 1-2-3-4-7-8-9-10-11 | ஆக | 9 |
| | மதி 2-5-7-9-11 | ,, | 5 |
| | குசன் 1-2-4-7-8-10-11 | ,, | 7 |
| | புதன் 1-2-4-5-6-9-10-11 | ,, | 8 |
| | குரு 1-2 3-4-7-8-10-11 | ,, | 8 |
| | புகர் 2-5-6-9-10-11 | ,, | 6 |
| | சனி 3-5 6-12 | ,, | 4 |
| | லக்கனம் 1-2-4-5 6-7-9-10-11 | ,, | 9 |

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் பால் 52-க்கு விபரம். | ரவி 8 11-12 | ஆக | 3 |
| | மதி 1-2-3-4-5-8 9 11-12 | ,, | 9 |
| | குசன் 3-5-6-9-11-12 | ,, | 6 |
| | புதன் 3-5-6-9-11 | ,, | 5 |
| | குரு 5-8-9-10 11 | ,, | 5 |
| | புகர் 1-2-3-4-5-8-9-10 11 | ,, | 9 |
| | சனி 3-4-5-8-9-10-11 | ,, | 7 |
| | லக்கனம் 1-2-3-4-5-8-9-11 | ,, | 8 |

| | | |
|---|---|---|
| | ரவி 1-2-4-7-8-10-11 | ஆக 7 |
| | மதி 3-6-11 | ,, 3 |
| சனி | குசன் 3-5-6-10-11-12 | ,, 6 |
| பால் | புதன் 6-8-9-10-11-12 | ,, 6 |
| 39-க்கு | குரு 5-6-11-12 | ,, 4 |
| விபரம். | புகர் 6-11-12 | ,, 3 |
| | சனி 3-5-6-11 | ,, 4 |
| | லக்கனம் 1-3-4-6-10-11 | ,, 6 |

வெண்பா.

அட்டவர்க்கவிந்திரவிக்காறெட்டாமம்புலிக்கொன்
றெட்டுசனியேய்முப்பத்தொன்பதாம்-இட்டபுதற்
கைம்பத்துநான்குகுருக் காறெட்டோடெட்டா
மைம்பத்திரண்டு புகர்க்காம்.

இந்தப்படி அந்தந்தக்கிரகங்களுக்குச் சொன்னபரலை அந்தந்தக் கிரகங்களிருக்கிற வீடுமுதலாகக்கொண்டும் லக்கனத்தைத் தொட்டும் எண்ணிப்போடுவது.

## திரிகோணசோதனை.

திரிகோணராசி மூன்றிலும் பரல் சரியாகவிருந்தால் மூன்றையும் எடுத்துப்போடவும் ஒருராசியிற் குறைந்திருந்தால் அப்படியே மற்றராசிகளின்பரலையும் குறைத்துப்போடவும் ஒருராசியிற்பரலில்லாதிருந்தால் சோதனையில்லை.

## ஏகாதிபத்தியசோதனை.

திரிகோண சோதனையான பின்பு மேஷ-விருச்சிகமும், ரிஷப-துலாமும், மிதுன கன்னியும், தனுசு-மீனமும், மகர கும்பமுமாகிய ராசிகளில் கிர

கமிருந்தராசிப்பால் குறைந்தும் கிரகமில்லாதராசி ப்பரல் அதிகமாகவும் இருந்தால் குறைந்தபடி சரி செய்யவும், சரியாகவிருந்தாலும் கிரகமில்லாத ரா சிப்பரல் குறைந்திருந்தாலும் கிரகமில்லாதராசிப் பரலை எடுத்துப்போடவும் இரண்டுராசிகளிலும் கி ரகமில்லாமலிருக்கப் பரல் ஏற்றக்குறைச்சலாக வி ருந்தால் குறைந்தபடிசரிசெய்யவும், சரியாகவிருந் தால் இரண்டுராசிபரலையும் எடுத்துபோடவும்.

இரண்டுராசியிலும் கிரகமிருந்து பரல் ஏற்றக் குறைச்சலாகவிருந்தாலும் சரியாகவிருந்தாலும் ஒ ருராசியிற் பரலில்லாமலிருந்தாலும்இரண்டுராசியி லும் கிரகமில்லாமலிருக்க ஒருராசியிற் பரலில்லா திருந்தாலும் சோதனையில்லை. கிரகமிருந்தராசியில் பரலில்லாதிருக்க மற்றொன்றில் பரலிருந்தால் அ தை எடுத்துப்போடவும்.

### இராசிகுணகாரம்.

ஏகாதிபத்தியசோதனையானபின் நின்றபரலை ரிஷப-சிங்கத்திற்குப் பத்திலும், மிதுன-விருச்சிக த்துக்கு எட்டிலும், மேஷ-துலாத்துக்கு ஏழிலும் கன்னி-மகரத்துக்கு ஐந்திலும், கர்க்கடகத்துக்கு நாலிலும், தனுசுக்கு ஒன்பதிலும்கும்பத்துக்குப்ப தினொன்றிலும், மீனத்துக்குப் பன்னிரெண்டிலும் பெருக்கிக்கண்ட மொத்தம் இராசிகுணகாரமாம்.

### கிருககுணகாரம்.

குருவிருந்தராசிபரலைபத்திலும், செவ்வாயிரு ந்த ராசிப்பரலை எட்டிலும், சுக்கிரனிருந்த ராசிப் பரலை 7-லும், மற்றக்கிரகங்கள் நின்ற ராசிப்பரலை ஐந்திலும், பெருக்கிகண்டதொகைகிரககுணளாம்,

இராசிகுணகார கிரககுணகாரத் தொகைகளை ஒன்றாகக் கூட்டினதொகை குணசமூகமாம்

இதை 7-ல் பெருக்கி 27-க்கீந்தபலன் வருஷமாகவும்,

மிச்சத்தை 12-ல் பெருக்கி 27-க் கீந்தபலன்மாசமாகவும்,

மிச்சத்தை 30-ல் பெருக்கி 27-க் கீந்தபலன்நாளாகவும்,

மிச்சத்தை 60-ல் பெருக்கி 27-க் கீந்தபலன்நாழிகையாகவுங் கொள்க.

இவ்வாறே எல்லாக்கிரங்கள் கொடுத்தவைகளை ஒன்றாகக்கூட்டிக் கண்டதொகையில் வரு-1க்கு 36-நாளும்மாதம் 1-க்கு 3-நாளும், நாள் 1-க்கு 6-நாழிகையும்நாழிகை 1-க்கு,6-விநாடியுங்கழித்துக் கண்டதொகையில் நீசக்கிரகம் அஸ்தமானக்கிரகமகொடுத்ததிற்பாதியும் பகை வீட்டிலிருந்த கிரகங்கொடுத்ததில் மூன்றிலொன்று கழித்து மற்றவிரண்டுபங்கும் நட்பு ஆசி, மூலத்திரிகோணங்களி லிருக்குங் கிரகங்கள் கொடுத்ததை முழுமையுமஉச்சக்கிரகங்கொடுத்ததை இரட்டித்துக் கொண்டும் ஒன்றாகக்கூட்டிக் கண்டதொகை சாதகனுக்கு ஸ்தூலபரமாயுளாம்செவ்வாய்-சனி-சுக்கிரன்பகை வீட்டிலிருந்தாலவர்களுக்கு மரணமில்லை, மற்றவருக்குண்டு.

இக்கிரகங்கள் தசவர்க்க மேறும்போது சுபவர்க்கமதிகமாகவிருந்தால் நல்லபலன்கொடுக்கும்பாபவர்க்கமதிகமாக விருந்தால் பலன்கொடுக்காது, இன்னும் மகாதிசை முதலான திசைகளில் 6-திசைவிடுதி ஒருகாலத்திலிருந்தாலுமாகாது இவைகளையும பிரா

ண தேக மிருத்திஸ்புடங்களின்தொகையும் ஆராய்ந்தறிந்து இஷ்டதேவதையின் வரத்தினாலும் நவக்கிரகசகாயத்தினாலும் குருகடாக்ஷத்தினாலும் நிரியாணகாலஞ்சொல்லவேண்டும்.

## அஷ்டவர்க்கபலன்.

### சர்வாஷடவர்க்க சமிதாயப்பரல்.

சர்வாஷடவர்க்கப்பரல் 337-ல் ராசி 1-க்கு
30-க்கு மேலிருந்தால் பூரணம்
25-க்கு கீழிருந்தால் மத்திமம்
20-க்கு கீழிருந்தால் அற்பமாம்.

திரிகோணசோதனைக்கு முன்கிரகம் 1-க்குராசி 1-ல்
3-பரலுக்குள்ளிருந்தால் அற்பபலன்
4-பரலிருந்தால் சமபலன்
5-முதல் 5-வரை விசேஷபலனும்

விபரம் 1-க்கு திரவியநாசம்.
2-க்கு அபிமானம், பீடை
3-க்கு சஞ்சலம். வித்தைநாசம்
4-க்கு லக்ஷ்மீகரம்
7-க்கு ஐஸ்வரியம்.
8-க்கு ராஜயோகமாம்.

பரல் குறைந்திருக்கிற ராசியில் சூரியன்வரும்போது தீமை.

பரல் குறைந்தராசி சூரியனுக்குப் பகைநீசமானல் அதிகநஷ்டம்.

பரல் அதிகப்பட்ட ராசியில் சூரியன் வரும்போது லாபம்.

லக்கினதிபதி லக்கன கேந்திரத்தில் 5 - 6 - பரலுட னிருந்தால் அதிகலாபம்.

சூரியன் 4-கிரகத்துடன் கூடி 5-6-பரலோடு நின்றால் அதிகலாபம்.

உச்சமும் ஆட்சியும் நட்புமாக இருக்குங் கிரகங்கள் 4-பரலுக்கு மேலான பரலுடன் லக்கினகேந்தி ரம் பெற்றால் அதிராஜயோகமாம்

சூரியநின்ற ராசிக்கு 9-ம் ராசியின்பரலை எண்ணிக் கண்டதொகை பிதாவின் சகோதரராம். அந்தப்பரல் பெண்கிரகங் கொடுத்ததானல் சகோதரியென்றும் புருஷக்கிரகங்கொடுத்ததானல் சகோதரனென்றும், அலிக்கரகங் கொடுத்ததானல் சகோதரமில்லையென் றுங் கொள்ளவேண்டும்.

லக்கணமுதல் 4-ராசிப்பரலைக் கூட்டிக்கண்ட தொகை முதற்கண்டமாம.

8-ம் ராசிமுதல் 8-ம் ராசிவரையிற் கூட்டிக்கண் டதொகை இரண்டாங்கண்டமாம்.

9-ம் ராசிமுதல் 12-ம் ராசிவரையிற் கண்ட தொகை இரண்டாங்கண்டமாம்.

இந்த மூன்று கண்டத்தில்

முதற்றொகை அதிகமானல் யவ்வனத்திலும்
2-வது அதிகமானல் யவ்வனத்திலும்,

3-வது அதிகமானால் வயோதிகத்திலும் சௌக்கிய மாம்.

இராவிழிப்பு ராசிப்பரலதிகமானால்இராத்திரியிலும். பகல்விழிப்பு ராசியுபரல்லதிகமானல் பகலிலும்வெற் றியுண்டு.

இப்படியே திக்குப் பரலுக்கும் ஆண்பெண்ராசி களின் பரலுக்கும் உயர்ந்ததைப்பற்றிப் பலன்சொல் லவும் 10-ம்இடம் 12-ம்இடம் பரல் குறைந்தும் 11-ம் இடம் பரல் அதிகமாகவுமிருந்தால் ராசயோகம்,

11-ல் பரல்குறைந்தும் 12-ல் அதிகமானல் வர வுக்குமிஞ்சின செலவு,

10-ல் பரல் குறைந்தும் 12-ல் அதிகமாகவுமிருந் தால்செய்தொழிலில் லாபமில்லை, இவன் யெடுத்தகா ரியமும் முகுயர்து.

---

## சூரியனஷ்டசுவர்க்கபலன்

---

சனனம லக்கினத்திலும் சந்திரலக்கினத்திலும்ப ரல் குறைந்திருந்தாலும் சூரியன் நீச்சனக விருந்தா லும் பிதாவுக்கரிஷ்டம்.

5-9-ம் ராசியில் 30-க்குக் குறைந்தபரலோடு சூரியனின்ருல் பிதாவுக்கும்,

2-5-ல் 3-பரலோடு சூரியனிருந்த 9-ல் ராகுவி ருக்கப் பிதாவுககும்.

5-வீட்டில் கிரியாணம், குறைந்த பரலோடு 5-ல்சூரியன்-சந்திரன்-செவ்வாய் சனியிருந்தால்சாதகனுடைய பிதா-மாதா சகோதரக்கு அரிஷ்டம்.

---

சந்திர ஷ்டவர்க்க பலன்,

---

சந்திரனின்ற ராசிக்கு 4-ம் ராசிப்பரலை எண்ணிக்கண்டதொகை மாதாசகோதரர் இதுவும்முன்போலப் பெண்கிரகங் கொடுத்ததும் ஆண்கிரகங்கொடுத்ததுங் கண்டுசொல்லலாம்,

லக்கினத்துக்கு 4-ம் ராசியைக்கொண்டுசொல்வது லக்கினத்திலும், சந்திரலக்கினத்திலும்பரல் அதிகமாகவிருந்து அதில் சுபரிருந்தாலும், பார்த்தாலும், அதிபதிபலத்தாலும் மாதாவுக்குத் தீர்க்காயுள்.

ஏகாதிபத்திர சோதனையானபின் சந்திரனின்ற இராசியின் பரலையும் லக்கினமுதல் 4-ராசிப்பரலையும் பெருக்கி 27-ல் கழித்தமிச்சத்தில் பூர்வபட்சத்தில் பிறந்தவனுக்கு அச்சுவினி முதலாகவும்.

அமரபட்சத்தில்பிறந்தவனுக்கு அவிட்டமுதலாகவும்,

எண்ணிக்கண்ட நட்சத்திரத்தில் சனிவருங்காலம் மாதாவுக்குப்பீடை,

சந்திரன் வருங்காலம் சுகம்.

---

## செவ்வா யஷ்டகவர்க்கபலன்.

———

செவ்வாய் நின்ற ராசிக்கு 3-ம் ராசிக்கதிபதி நின்ற ராசியின் பாலையெண்ணிச் சகோதரபலன் சொல்லவும்,

செவ்வாய்நின்ற ராசிக்கு 3-ம் ராசியின் பரலை கொண்டு இளையச்சகோதரஞ் சொல்லவும்.

இதுவு முன்போல ஆண் பெண்கிரகங்களாற் சொல்லவும்,

செவ்வாய்நின்ற ராசியின் சோததியப் பரலை3-ம் ராசிப்பரலால்பெருக்டு 27-ல் கழித்து முன்போல வளர்பிறை தேப்பிறை யறிந்து எண்ணிக்கண்ட நட்சத்திரத்தில் சனிவரச்சகோதரபீடை.

குருவரச் சகோதரசவுக்கியம்.

———

## புதனஷ்டகவர்க்க பலன்.

———

புதன் கேந்திரத்திரிகோணங்களில் 5-க்கு மேற்பட்ட பாலோடிருக்க குருபார்க்க நல்லவித்தையுண்டு.

2-க்கு அதிபதி.

5-பரலோடு பகை-நீச்சம் நீங்கினவிடத்தி விருக்க கணிதமும் சிற்பமும் வரும்

புதனிருக்கும் ராசிக் கதிபதிசுபனுய்க்கேந்திரத் திரிகோணமேற அதில் 5-பரனுக்கு மேலிருந்தால் வித்துவானும்

———

## குரு அஷ்டயுவர்க்க பலன்

---

குரு நின்ற ராசிக்கு 5-ம் ராசிப் பலன் எத்தனையோ அத்தனை புத்திருண்டு.

இதையும் முன்போலவே ஆண் பெண் சொல்லவும், லக்கினத்துக்கு 5-ம் ராசியினுலும் சொல்லலாம் குருபலவானுக யிருக்கவேண்டும்.

லக்கினத்தில் 5-ம் இடத்திலும் பாபக்கிரகமிருந்தால் புத்திரஆனி

லக்கினத்துக்கு 5-ல் மூன்றுபரலிருந்தால் அற்பபுத்திரயோகம்.

5-ம் ராசி சமுதாயப்பரலை சோத்தியப்பரலாலே பெருக்கி 27-ல் கழித்தமிச்சம் முன்போல அச்சுவினி அவிட்ட முதலாக வெண்ணிக் கண்ட நட்சத்திரத்தில் குருவருங்கால் புத்திருண்டு.

---

## சுக்கிர னஷ்டகவர்க்க பலன்.

---

சுக்கிர னின்றராசிக்கு 7-ம் ராசியில் எத்தனை பரலிருக்கிறதோ அத்தனை களத்திரமாம்.

அது சூரியன் கொடுத்த பரலாயின் பிதுர் வர்க்கத்திலும்.

சந்திரன் கொடுத்த பரலாயின் தாய் வர்க்கத்திலும்.

சனி செவ்வாய் கொடுத்த பரலாயின் அன்னியவர்க்கத்திலும் களத்திரமுண்டாம்.

லக்கினத்துக்கு 7 – ல் சுக்கிர னிருந்தால களத்திர பலன்

சனியிருந்தால் ரோககளத்திரம்

புதனிருந்தால் களத்திரயீனம்

செவ்வாய்—சூரிய னிருந்தால் காந்தருவ களத்திர மாம்.

---

## சனி அஷ்டகவர்க்க பலன்.

---

லக்கினத்துக்கு 8–ம் ராசியிலிருந்த சமுதாயப் பரலேயும் சனிநின்ற ராசியின் சோத்தியப் பரலேயும் பெருக்கிக் கண்டதொகை வருசத்தில் சாதகனுக்கு த்தத்து.

மேற்படி தொகை 27–ல் கழித்து மிச்சத்தை அச்சுவினி அவிட்ட முதலாக முன்போல் எண்ணிக் கண்ட நட்சத்திரத்தில் சனிவருங்காலம்தேகபீடை.

சனி நின்ற ராசிச் சோத்தியப்பரலேயும், லக்கினத்தின் சமுதாயப்பரலேயும் பெருக்கிக் கண்டதொகையை 27–ல் கழித்தமிச்சத்தில் முன்போற்கண்ட நட்சத்திறத்தில் சனிவருங்கால் தேகபீடை.

லக்கினமுதல் சனியிருந்த ராசிவரையினுமுள்ள ராசிகளின் சோத்தியப் பரல்களேயும் குளிகனிருக்கிறராசிமுதல் லக்கினம் வரையினுமுள்ள ராசிகளின் சோத்தியப் பரல்களேயும்பெருக்கி 27–ல் கழித்து சேடத்தைமுன்போல எண்ணிக்கண்ட நட்சத்திரத்தில்சனிவருக்காலம் நிரியாணமாம்

சோத்தியப்பரவென்று சொல்லாதவைகள்சமுதாயப்பரவாம்.

சர்வாஷ்டக வர்க்கில் 11—லும் 12—லும் குறைந்து 10—க்கு அதிகப்பட்டால் இராஜயோகமாம்.

10—ல் குறைந்து 12—ல் அதிகப்பட்டால் அதிக செலவு

11—ல் குறைந்து 10—ல் அதிகப்பட்டால் செய் தொழிலில் லாபமில்லை.

லக்கினமுதல் சனிநின்ற ராசிவரையுள்ள பரலை எண்ணிக் கண்டதொகை வருடத்தில்கண்டமுண்டு.

ஏகாதிபத்திய சோதனையானபின் 8 - லுள்ள பரலையும லக்கினப்பரலையும் பெருக்கி 27—ல் கழித்த சேடத்தை அசுபதிமுதலெண்ணிக் கண்டநட்சத்திரத்தில் சனிவரும்போது கண்டமுண்டு திரிகோண சோதனையான பின்னும் பார்ககலாம்.

வளர்பிறையிற் பிறந்தவனுக்கு அசுபதிமுதலாகவும்,

தேய்பிறையிற் பிறந்தவனுக்கு அவிட்டமுதலாகவு மெண்ணிக் காணவும்.

## தசவர்க்கம்.

1—வது கிரகமிருக்கிற ராசிவர்க்கமாம்.

2—வது சூரியசந்திரவோசை.

கிரகமிருந்த ராசியை 2—கூறிட்டது ஓரை

ஆண்ராசிக்கு 15—பாகைக்குள் சூரியவோரையாகவும் 30—பாகைக்குள் சந்திரஓரையாகவும்.

பெண்ராசிக்கு 15—க்குள் சந்திர ஓரையாகவும் 30—க்குள் சூரியவோரையாகவுங் கொள்க.

3-வது திரைக்காணம்.

கிரகமிருந்த ராசியை 3-கூறிட்டது திரைக்காணம்.

10-பாகைக்குள் அந்தலக்கினமாகவும்,

20-பாகைக்குள் 5-ம் லக்கினமாகவும்

30-பாகைக்குள் 9-ம் லக்கினமாகவுங்கொள்க.

4-வது திரிம்சாங்கிசம்.

திரிம்சாங்கிசம் ஆண்ராசிக்கு

5-பாகைக்குள் செவ்வாயாகவும்

10-பாகைக்குள் சனியாகவும்,

18-பாகைக்குள் குருவாகவும்,

25-பாகைக்குள் புதனாகவும்,

30-பாகைக்குள் சுக்கிரனாகவும்,

பெண்ராசிக்கு.

5-பாகைக்குள் சுக்கிரனாகவும்.

10-பாகைக்குள் புதனாகவும்,

18-பாகைக்குள் குருவாகவும்,

25-பாகைக்குள் சனியாகவும்,

30-பாகைக்குள் செவ்வாவாகவுங் கொள்க.

5-வது சத்தமாங்கிசம்,

கிரகமிருந்த ராசியை 7-கூறிட்டது சத்தமாங்கிசம்,

ஆண்ராசிக்கு * உதயமுதல் நேரும், பெண்ராசிக்கு 7-ம் ராசிமுதல் நேருமாகக் கொள்ளவும்

6-வது நவாங்கிசம்.

கிரகமிருந்திராசியை 9-கூறிட்டது நவாங்கிசம் அந்தகிரகங்களின் அங்கிச லக்கினமாகக்கொள்க.

---

* உதயம்—ஜன்மலக்கினம்.

7-வது தாரங்கிசம்.

கிரகமிருந்த ராசியை 10-கூறிட்டது தசாங்கிசம் ஆண்ராசிக்கு உதயமுதல்சேரும் பெண்ராசிக்கு ௯ம் ராசிமுதல் நேருமாகக்கொள்க.

8-வது துவாதசாங்கிசம்.

கிரகமிருந்த ராசியை 12-கூறிட்டது துவாத சாங்கிசம்.

ஆண்ராசிக்கும் பெண்ராசிக்கும் உதயமுதல் நேரே கொள்க.

9-வது கலாங்கிசம்

கிரகமிருந்த ராசியை 16-கூறிட்டது கலாங்கிசம், கூறு 1-க்கு பாகை 1-ம் கலை 52-யுமாம்.

ஆண்ராசிக்கு மேஷ முதல்நேராக 12-ராசியும், பிரமன்-மாயோன்-ருத்திரன்-ரவியாகவும்.

பெண்ராசிகக ரவி-ருத்திரன்-மாயோன் பிரமனாகவும் மேஷம்வரை இடமாகவுங்கொள்க.

10-வதுசஷ்டியாங்கிசம்.

கிரகமிருந்தராசியை 60-கூறிட்டது சஷ்டியாங்கிசம், கூறு 1-க்கு 30-கலையாம் இதுவும் ஆண்ராசிக்கு நேராகவும் பெண்ராசிக்குக்கடைசி முதலாகவுங் கொள்க.

| | |
|---|---|
| 1—ரோகம் | 6—கின்னரம் |
| 2—இராக்கதம் | 7—பிரஷ்டம் |
| 3—தேவபாகம் | 8—குலக்கினம் |
| 4—குபேரம் | 9—விஷம் |
| 5—ரக்ஷோகணம் | 10—கிரீசம் |

11–மாயம்
12–பிரேபுரி
13–அமரபதி
14தேவகணம்
15ஈசபாரகம்
16நலாபாகம்
17அக்கினிபாகம்
18மிருதம்
19–சகதிரம்
20–மிருத்தி
21–கோமளம்
22–பதுமம்
23–லட்சுமி
24–வாகீஸ்வரம்
25–திகம்பரம்
26–இந்திரம்
27–கலியம்
28–நாசபாகம்
29–பூமிசுரம்
30–கமலாசுரம்
31–காரகுளிகன்
32–மந்தாத்திரியம்
33–அவமிருத்து
34–காலமிருத்து
35–தபாக்கினி
36–அகோரம்
37–யமகண்டம்
38–சுதம்
39–ஞானமிர்தம்
40–பரிபூரணம்
41–விஷப்பிரதி
42–குலநாசம்
43–முக்கியம்
44–வம்சக்ஷசம்
45–உற்பாதம்
46–காலரூபம்
47–சவுமியம்
48–மிருத்துவம்
49–கசீதளம்
50–தமிஷ்டார்க்கம்
51–இந்துலோகம்
52–பிரவீணம்
53காலாக்கினி
54–தண்டாயுதம்
55–நிர்மலம்
56–சுபம்
57–அதிசீதளம்
58–சுபதாபத்தியம்
59–பிரமா
60–இந்துரேகை

இதனைத் தேவாங்கிசமறியும்விபரம்.

நவக்கிரகங்களுடைய தசவர்க்கங்களை யெல்லாந்தனித்தனிக்கூட்டி ஒவ்வொருகிரகமேறிய வர்க்கங்களில் இரண்டு சுபவர்க்கங்கண்டால் பாரிசாதம்.

3-க்கு உத்தமாங்கிசம்
4-க்கு கோபுரம்
5-க்கு சிங்காசனம்
6-க்கு பாராவதம்
7-க்கு தேவலோகம்
8-க்கு வைசேஷிதம்
9 க்கு ஐராவதம்
10-க்கு தேவேந்திரமாம்

இவற்றுள்,

1-க்கு துர்ப்பலன்
2-க்கு சுகி
3-க்கு ரோகி
4-க்கு வாகனம்-தனம். பசு விர்த்தியுடையவன்
5-க்கு செல்வன்
6-க்கு வித்தை-செல்வம் கீர்த்தியுடையோன்
7-க்கும்-8-க்கும் சைநிய பதி-லோகாதிகாரி
9-க்கு அஷ்டைஸ்வரியன்
10-க்குஇந்திரபோகி—சார்வபௌமனுகும்.

## துவாதசலக்கின விபரம்.

### 1-வது ஜன்மலக்கினம்.

இது அந்தந்த மாதராசியின் நாழிகையை அம்மாதத்தேதியின் ஈவுப்படி கழித்துநின்ற உதயாபர நாழிகை முதலாகச் சனனகாலவரை எண்ணிக்கண்ட நாழிகையில் வரும் லக்கினமாம்.

### 2-வது ஓராலக்கினம்.

இது உதயமுதல் சனனகாலவரை யெண்ணிக் கண்டநாழிகையை உதயமுதல் இராசி 1-க்கு $2\frac{1}{2}$-நாழிகையாகக் கழித்து கண்ட லக்கினமாம்.

இது ஆண்ராசிக்கு வலமாகவும் பெண்ராசிக்கு இடமாகவும் பார்த்துக்கொள்ளவும்.

### 3-வது கடிகாலக்கினம்.

இது உதயமுதல் சனனகாலவரை எண்ணிக் கண்ட நாழிகையை உதயமுதல் ராசி 1-க்கு நாழிகையொன்றுகக்கழித்துக் கண்ட லக்கினமாம்.

இதையும் முன்போல ஆண்ராசி பெண்ராசிகளுக்குச் சொன்னபடி இடம் வலமாகப் பார்த்துக் கொள்ளவும்.

### 4-வது ஆரூடலக்கினம்.

இது லக்கினமுதல் லக்கினுதிபதி நின்ற ராசிவரை எண்ணிக்கண்ட தொகை எத்தனையோ அதை லக்கினுதிபதி நின்றராசி முதலாக எண்ணிக்கண்ட லக்கினமாம்.

அவன் லக்கினத்திலும் ஏழிலுமிருந்தால் அவையே ஆரூடலக்கினமாம்.

### 5-வது நட்சத்திரலக்கினம்.

இது சென்மநட்சத்திரத்திற் சனனவரை சென்றநாழிகையை ராசி 1-க்கு 5-நாழிகையாகக் கழித்துக்கண்ட லக்கினமாம்.

அச்சுவினி-மகம்-மூலத்துக்கு இடமாகவும், மற்றவைகளுக்கு வலமாகவும், சனனலக்கினமுதல் எண்ணிக்கொள்ளவும்.

### 6-வது காரகலக்கினம்

இது உதயாதிசென்மவரை சென்றநாழிகையை ராசி 1-க்கு 5-நாழிகையாகக் கழித்துக்கண்ட தொகையை எந்தக் கிரகஸ்புடத்தில் அதிகபாகையிருக்

கிறதோ அந்தக்கிரகமிருக்கின்ற ராசிமுதலாக எண்ணிக்கண்ட லக்கினமாம்.

7-வது ஆதெரிசலக்கினம்.

இது சன்மலக்கினத்துக்கு ஏழாம் லக்கினமாம்.

8-வது ஆயுர்லக்கினம்.

இது உதயாதி சென்றநாழிகையை ராசி 1-க்கு 5-நாழிகையாகக் கழித்துக் கண்ட தொகையை சந்திரனின்ற அங்கிச லக்கினமுதலாக எண்ணிக்கண்ட லக்கினமாம்.

9-வது திரேக்காணலக்கினம்.

இது லக்கினத்தை மூன்றுகூறிட்டுச் சரத்துக்கு 5-9-1, ஆகவும் எண்ணிக்கண்ட லக்கினமாம்.

10-வது அங்கிசலக்கினம்.

இது முன்சொன்ன காரகக்கிரகத்தின் துவாதசாங்கிச லக்கினமாம்.

11-வது நவாங்கிசலக்கினம்.

இது லக்கினத்தை 9-பாக்கி எத்தனையாம் பங்கில் சனனமோ அதை அந்த ராசித்திரிகோண சரராசியாக எண்ணிக்கண்ட லக்கினம்.

12-வது பர்வலக்கினம்.

இது உதையாதிசென்மவரை சென்ற நாழிகையை ராசி 1-க்கு 5-நாழிகையாகத் தள்ளிக்கண்ட தொகையை மேஷ முதலாக எண்ணிக்கண்ட லக்கினமாம்.

## கிரகாவஸ்தை.

லக்கினத்தை 5-கூறுசெய்து 1-க்கு வாலிபம் 2-க்கு எவ்வனம், 3-க்கு கௌமாரம், 4-க்கு விருத்தம், 5-க்கு மரணம் எனக்கண்டு ஆண்ராசிக்குப் பாலன் முதலாகவும், பெண்ராசிக்கு மரணமுதலாகவுங் கொள்க. ராகு-கேதுக்கு எந்தராசிக்கு மிடமாகவே பார்த்துக்கொள்ளவும்.

சனி-ராகு-கேதுக்கு விருத்தாவஸ்தையும்

சுக்கிரனுக்கு வாலிபமும் மரணமுந்தவிற மற்றுவஸ்தையும்,

செவ்வாய்க்கு விருத்தமும், மரணந்தவிற மற்றுவஸ்தையும்,

புதனுக்கு மரணந்தவிற மற்றுவஸ்தையும்,

சூரியனுக்கும்-குருவுக்கும் மரணநீங்கிய அவஸ்தைகளும்,

சந்திரனுக்கு எவ்வனமும் உத்தமம், வாலிபமும் கௌமாரமும் மத்திமம், மற்றவை ஆகாவாம்,

## கிரகசமயம்.

மேஷமுதல் சாதகனுடைய சன்மலக்கினம் வரை எண்ணினதொகைக்கும், லக்கினமுதல் அந்தந்தக்கிரகமிருக்கிறலக்கினம்வரை எண்ணினதொகைக்கும்பெருக்கி 27-ல் கழித்து நின்றது மிச்சத்தையும் அவரவர்கள் திசாவருஷத்தையும் பெருக்கி 27-ல் கழித்துநின்ற மிச்சம் சமயமாம்.

| சமயம். | பலன். |
|---|---|
| 1—ஸ்நானம் | மத் |
| 2—அலங்காரம் | உத் |
| 3—விபூதிசந்தனமிட | உத் |
| 4—செபம் | உத் |
| 5—சிவபூசை | மத் |
| 6—ஔபாசனம் | சம |
| 7—விஷ்ணுபூசை | சம |
| 8—பிராமணபூசை | மத் |
| 9—நமஸ்காரம் | சம |
| 10—பிரதட்சணம் | உத் |
| 11—வைசுவதேயம | உத் |
| 12—அதிதிபூசை | சம |
| 13—போஜனம் | உத் |
| 14—புராணப்பிரசங் | உத் |
| 15—கோபம் | சம |
| 16—தாம்பூலம் | உத் |
| 17—இராசாங்கம் | உத் |
| 18—கிரீடம்பூணல் | உத் |
| 19—சலபானம் | மத் |
| 20—ஆலிங்கனம் | உத் |
| 21—சயனம் | மத் |
| 22—அமுதபானம் | உத் |
| 23—மதனலங்காரம் | உத் |
| 24—லீலை | உத் |
| 25—போகம் | சம |
| 26—நித்திரை | மத் |
| 27—ரத்தினபரீட்சை | உத் |

## பல்லி—காக்கை—மூஞ்சூறு—தும்மல்.

எழுவாய்மேஷம் படைபூசல்
இடபங்கடகங் குடிபோக்கும்
கழுவாய்மிதன நல்வசனம்
நண்டுவிருந்து களிப்பாகும்
கழிவேயாகுந் தனஞ்சிங்கம்
கன்னிபழங்காய் வெற்றிலையாம்
தொழுதே தூதன் றுலாமாகும்
தூங்குந்தேள்பொன் பெண்வருத்தே.
வில்லில்விருந்து மிகவுண்டு
வேண்டுமகரம் விண்ணமுதம்
நல்லகும்ப நோயுண்டாம்
நாட்டுமீனங் களிப்பாகும்
அல்லிற்சிறந்த குழன்மடவா
யறியச்சொன்னே மவனிமிசை

சொல்லும்பல்லி கொடிசூரன்
தும்மலென்றே யறிவாயே.

## பதினாறுதிக்குப் பல்லிக்காதல்.

அருக்கன்மேற் பயநாசம் ரெண்டிற்சாவு
அகன்றவர்பின் மீண்டிடுவார் மூன்றேயாகில்
உருக்கமுள்ள சாவதனைக் கேட்கநாலு
ஒருசண்டை யுண்டைந்தா முறவாமாறு
விரிதலையு மழுகுரலு மழையுநோயு
மென்மேலுந் துக்கமுமுண் டாகுமேழு
தரித்திடுபூச் சந்தனமு மணமுங்கொண்டு
தகுதியுள்ளார் கூடிவரலாகுமெட்டே.
சித்தமிக மகிழ்ச்சியுண்டோ நாலோடைந்து
தீதாக வேயுரைக்குந் தெரியும்பத்து
அத்தமிசை யாத்திரைகா ணூறேடைந்து
அகமகிழ்ச்சிக் கலியாண மாறோடாறு
பத்திவருங் காணிக்கை பதின்மூன்றிற்குப்
பறந்துவரு மிழவோலை பதினாலுக்கு
மெத்தவரு முறவின்முறை யேழுமெட்டு
மென்மேலும் யோகமுண்டாம் பதினாறுக்கே.

## ஆந்தைக்காதல்.

ஒருரையுரைக்குமாகி லுற்றதோர்சாவுஞ் சொல்லும்
ஈருரையுரைக்குமாகி லெண்ணியகருமநன்றாம்
மூவுரையுரைக்குமாகில் மோகமாமங்கைசேர்வள்
நாலுரையுரைக்குமாகில் நாழியிற்கலகஞ்சொல்லு
ஐந்துரையுரைக்குமாகிலங்கொருபயணஞ் சொல்லு
ஆறுரையுரைக்குமாகி லடுத்தவர்வரவுசொல்லும்
ஏழுரையுரைக்குமாகி லிறந்தபண்டங்கள்போகும்

எட்டுரையுரைக்குமாகில் திட்டெனச்சாவுசொல்லும்
ஒன்பதுபத்துமாகி லுத்தமமிகவுநன்றே.

### சகுனம்.

| | | |
|---|---|---|
| வலியன் | கழுகு | கீரி |
| கருடன் | உடும்பு | குரங்கு |
| கட்டுக்காடை | ஆந்தை | |

வலமிருந்து இடமாகப்போகவேண்டும்.

| | | |
|---|---|---|
| நாரை | கிளி | ஓணான் |
| விச்சுளி | கொக்கு | புள்ளிமான் |
| காக்கை | மயில் | புனுகுபூனை |
| செம்போத்து | கோழி | புலி, நரி |

இடமிருந்து வலமாகப் போகவேண்டும்.

பாம்பு—பூனை—முசல்—குறுக்காலாகாது.

### சுபசகுனங்கள்.

| | | |
|---|---|---|
| குடை | யானை | கன்னிகை |
| கொடி | குதிரை | நிறைகுடம் |
| சாமரை | பசுக்கள் | பழங்கள் |
| கரும்பு | பட்சிக்கூட்டம் | செந்தணல் |
| அக்ஷதை | சலவைவஸ்திரம் | இரட்டைபிரா |
| மாமிசம் | மங்கலவாத்தியம் | மணர் |
| தயிர் | புஷ்பம் | சாதம் |
| கள் | மணக்கோலம் | அரசன் |
| தேன் | சுபவரிசை | முத்து |
| பொரி | தாசி | —— |
| ரிஷபம் | சுமங்கலி | |

சிலர் பால் சுபசகுணமென்பர்.

## அசுபசகுனங்கள்.

| | |
|---|---|
| பயித்தியக்காரர் | கணக்கன் |
